Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 86 | சர்வதேச மின் செய்தித்தாள் | 27 நவம்பர் 2024




**“தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டுபோன வீரமரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப் பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக் கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.”**

தமிழீழ தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வெள்ளி அச்சுப் பதிப்பக நூல் வெளியீட்டாளர்கள்
Silver Print House
Digital Printing, Graphics & Publication
உங்களது தேவையே எங்களது சேவை
4775 Yarmarok Crt,
Mississauga Ontario L5R 0A6.
Contact: Muhunthan (437) 423 - 5460
மேலதிக தொடர்புகளுக்கு : முகுந்தன் சிவதாசன்
silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

# சங்கத்தமிழ்

Sangathamil

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca

2025 உலக வணிகம்
Ulaga VANIKAM
உலக வணிகம்
ULAGA VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.ca
ulagavanikam@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் பொழுதெல்லாம் எனது நெஞ்சும் கனக்கும்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# அந்தக் கணங்கள்

## மாவீரர்களின் வரலாறு தமிழீழத்தின் வரலாறு





### மேஜர் கமல்

கமல் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவன். இவனது தந்தை துரைரத்தினம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர். தந்தையது பாதை எமது தாயகத்தை மீட்டெடுக்க சரியான தீர்வாகாது என்பதை உணர்ந்த கமல். எமது இயக்கத்திலே தன்னை இணைத்துக்கொண்டு போராடத் தொடங்கினான். பயிற்சியை முடித்துவிட்டு மட்டக்களப்புக்குச் சென்று சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் பணியாற்றியிருந்தான். கிழக்கில் எமது இயக்க வளர்ச்சியில் கமலின் பங்கு மிகவும் மிகவும் குறிப்பிடக் கூடியது.

மட்டக்களப்பில் மிகவும் சிக்கலான சூழ் நிலைகளிலும் தன் தனித் திறமையினால் எத்தனையோ அரும்பெரும் காரியங்களை ஆற்றியிருக்கிறான். இவன் அங்கு பணியாற்றிய காலத்தில் ஒரு பெண்ணைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண்ணுடைய வீட்டுக்கு கமல் செல்வது வழக்கம். ஆரம்ப காலங்களில் நாட்டின் விடுதலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து கமல் பணியாற்றியது கமலின்பால் அந்தப் பெண்ணின் கவனத்தை ஈர்த்தது. கமல் வீட்டுக்குப் போகும் சமயங்களில் எல்லாம் அன்பாக உபசரித்து கமலுக்கு ஆதரவளித்து, அன்பு செலுத்தினாள்.




நாட்கள் நகரநகர இரு வரும் அன்பால் இறுகப் பிணைக்கப்பட்டனர். ஒருவரை ஒருவர் மனமார நேசித்தனர். உலக வழக்கப்படி கூறினால் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டிருந்தனர். அப்பெண் கமலின் உயர் வாழ்வுக்காக எப்போதும் கடவுளைப் பிரார்த்தித்து வந்தாள். ஆனால் ஒரு போதும் கமலின் தீவிரமான போராட்டத்திற்கு தடையாக இருந்ததில்லை.

மட்டக்களப்பில் இருந்து கமல் யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையில் நெல்லியடி முகாம் மீதான தாக்குதலில் பங்குபற்ற முன் வந்தான்.

முதல் நாள் கமலும், திலீபனும் ஒன்றாக இருந்த வேளையிலே திலீபனிடம் ஓர் வேண்டுதல் விடுத்தான் கமல். “நான் சில வேளை இத்தாக்குதலில் சாவடைந்தால் என்னை நேசிப்பவளுக்கு அதை உடனடியாக தெரிவித்தவிடு” என்பதே அது. என்ன சத்தியமான வார்த்தைகள். ஏதோ தன் இறப்பைத் தானே அறிந்து வைத்திருந்தது போல் கூறியிருக்கிறான்.

### கரும்புலி கப்டன் மில்லர்

“மில்லர் சற்றுப் பொறுத்துக்கொள்! அந்த “பங்கர்“ உடைக்கப்பட்டதும் நீ செல்லலாம். மிக விரைவாக வண்டியைச் செலுத்தி வண்டியை விட்டு விட்டு நீ இறங்கி ஓடி வந்துவிடு” என்றான் பிரபா.

மில்லர் ஒரு முறை சிரித்துக் கொண்டான். ஏனென்று புரியவில்லை. அருகில் இருந்த பிரபாவுக்கு ஏனென்று கேட்க மனம் துணியவில்லை.

“பிரபா! முன்பு ஒரு முறை யாழ்ப்பாணத்தில் விடப்பட்ட வாகனம் சரியாகச் செல்லவில்லை. எனவே இம்முறை நான் மிக நிதானமாகவே வாகனத்தைக் கொண்ட செல்வேன்” என்று மில்லர் கூறினான்.

கமல் தன்னுடைய வோக்கியில் றொக்கட் லோஞ்சர் (R.P.G) வைத்திருந்தவனை அந்த காப்பரணை உடைக்குமாறு கூற,




றொக்கட் லோஞ்சரில் இருந்து மிகச் சரியாக ஏவப்பட்ட றொக்கட் பங்கரைத் தாக்கியது. மணல் மூட்டைகள் சிந்தின. பங்கர்

இருந்த இடத்தில் ஒரே புழுதியும் புகையும். கமல் தகவலைத் தெரிவித்தான். பொறுப்பாளரிடமிருந்து மில்லரை புறப்பட மாறு பிரபாவுக்கு உத்தரவு வந்தது.

மில்லர் வண்டியை “ஸ்ராட்” செய்து மெதுவாகச் செலுத்தினான். பிரபா வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டான்.

வண்டி நெல்லியடிச் சந்தியை வந்தடைந்தது. மில்லர் வண்டியை நிறுத்தி பிரபாவை அழைத்தான். பிரபா மில்லருக்கு கையை அசைத்துவிட்டு வெடி மருந்து வெடிப்பதற்கான கருவியை இயக்கினான். கருவி இயங்கத் தொடங்கிவிட்டது. மில்லர் வண்டியை மெதுவாக ஓடவிட்டான். பிரபா வண்டியில் இருந்து குதித்து வண்டியோடு சேர்ந்து ஓடி மில்லரின் பக்கத்தில் வந்து, “மில்லர் எப்படியும் திரும்பி வந்துவிடு” என்று கூற அதை மில்லர் புரிந்து கொண்டது போல் வண்டி வேகம் பிடித்தது. பிரபா அப்படியே தெருவில் நின்று வேகமாகச் செல்லும் வண்டியைப் பார்த்துக் கொண்டிருக்க மில்லரையும், வெடி மருந்தையும் சுமந்து கொண்டு வண்டி சென்று கொண்டிருந்தது.

## கரும்புலி மேஜர் காந்தரூபன்




பெரியம்மா தொடர்ந்து சொன்னார் “கப்பல் அடிக்கிறத்துக்குப் போறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னர் சரியான வெயிலுக்கை வீட்டுக்கு வந்தான். “தலையிடியாக் கிடக்கு பனடோல் தாங்கோ” என்றான். குடுத்தன். வாங்கிக் குடிச்சான். “நான் ஒரு முக்கியமான வேலையா வேற ஒரு இடத்துக்குப் போறன் பெரியம்மா” என்றான். வருத்தம் என்று சொல்லுறாயேடா தம்பி... தலைவரிட்ட சொல்லிப்போட்டு நில்லன். இன்னொருதரம் போகலாம் தானே” எண்டு ஆலோசனை சொன்னேன். “இல்லைப் பெரியம்மா. இந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத் தான் அவரிட்டைக் கேட்டனான்... கட்டாயம் நான் தான் அந்த வேலைக்குப் போகோணும்...” என்றான். “சரிதம்பி... சுகமாய் போய் சுகமாய் திரும்பிவா” எண்டு நான் சொல்ல – அவன் திருப்பிச் சொன்னான் – “சுகமாய் போவன் பெரியம்மா... அதில பிரச்சினையில்லை... ஆனா... திரும்பி வாறதெண்கிறதுதான்... சரி பாப்பம்... எண்டான்”. அதற்கு மேல் பெரியம்மாவால் பேச முடியவில்லை. மறுபக்கம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டார்.

## கரும்புலி கப்டன் வினோத்

வரிப்புலிச் சீருடையில், “மிலிற்றறி” சப்பாத்துப் போட்டு ஒரு கையில் துப்பாக்கியுடன், மறு கையில் புகைப்படக்கருவி ஒன்றையும் கொண்டு வந்தான். வீட்டில் எல்லோருடனும் சேர்ந்து படம் எடுத்தான். அக்காமாரைக் கட்டிப்பிடித்தபடி... அக்கமாரின் குழந்தைகளைத் தோளில் வைத்தபடி... ஆச்சியோடு நின்று... எல்லாவிதமாகவும் படமெடுத்தான்.

“என்னடா புதினமாக இண்டைக்கு எல்லோரோடையும் படம் எடுக்கிறாய்?” அக்கா கேட்டாள்.

“ஒண்டுமில்லையக்கா... நானொரு வேலையாத் தூர இடத்துக்குப் போறன்... திரும்பி வரமாட்டன்...” சிரித்துக் கொண்ட சொன்னான்.

அண்ணனின் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு,

“உன்ர சித்தப்பா இனி வரமாட்டன்... இறுக்கிக் கொஞ்சிவிடு...” என்று சொல்லிக் கொஞ்சினான்.

“எங்களுக்கு அது அப்போது அவ்வளவு விளங்கேல்ல.”

வல்வெட்டித்துறையில் கடற்கரையோராக அவர்களுடைய வீடு இருந்தது. அங்கு பீரங்கிக் கப்பல்களின் தொடர்ச்சியான தாக்குதல்கள் நிகழும். இதன் காரணமாக, கொடிகாமம் சென்று அங்குள்ள உறவினர்கள் வீட்டில் தங்கியிருந்த அம்மாவையும்,




அப்பாவையும் வினோத் சென்று பார்த்தான். கட்டி அணைத்துக் கொண்டு படம் எடுத்தான்.

அம்மா கேட்டபோது – அக்காவுக்குச் சொன்ன அதே காரணத்தை இங்கேயும் சொன்னான். அவர்களாலும் வித்தியாசமாக எதனையும் உணர முடியவில்லை.

“நேவி அடிக்கிறனெண்டு அலைஞ்சு திரியாதேங்கோ அம்மா... ஊரிலபோய் இருங்கோ... ஒரு நாளைக்கு... எங்கட கடல் எங்களிட்டை வரும்” என்று சொல்லிவிட்டுப் போனான்.

அதன் பிறகு ஒரு நாள் கூடத் தங்களுடைய செல்வத்தைக் காணவில்லை. இனிமேல் காணவும் மாட்டார்கள்.

## கரும்புலி கப்டன் கொலின்ஸ்




“இவன் வெளிநாடு செல்ல விரும்பவில்லை. சொன்னபடி இயக்கத்தில் தான் சேர்ந்தான்” – இது அங்கிருந்த தாயாரின் வார்த்தை. இதைத் தொடர்ந்து மீண்டும் அந்தத் தந்தையார் கூறத்தொடங்கினார்.

“தம்பி இவன் லீவு முடிஞ்சு போறதுக்கு முதல் நாள் தாயைப் பார்த்து, “அம்மா, நான் இயக்க வேலையா ஒரு இடத்துக்குப் போக இருக்கிறன். இது முக்கியமான வேலை. இந்த வேலையின் உழைப்பு வீட்டுக்கு வராது – அது நாட்டுக்கு மட்டும்தான்” என்று சொன்னான் – நாங்கள் அதை அப்ப பெரிசா எடுக்கேல்லை.”

## கரும்புலி லெப். கேணல் போர்க்

இந்தத் தாக்குதலுக்குச் சில நாட்களுக்கு முன்பு, போர்க் அண்ணை விடுமுறையில் வீட்டுக்குச் சென்றார்.

அவரது கிராமம் சிங்கள எல்லையில் அமைந்துள்ளது. அது வன்னியிலுள்ள “சேமமடு”.

சிறு வயது தொட்டு நடந்து திரிந்த அக்கிராமத்தில் குளம், வயல், காடு என்ற ஒவ்வொன்றையும் சுற்றி ரசித்தார். இல்லை... அவற்றிடமிருந்து விடைபெற்றார்.

அந்த நாட்களில் ஒரு நாள் பக்கத்து வீட்டுச் சிறுவர்கள்




மரத்தடியில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் சென்று ஓர் மரக்குற்றியில் அமர்ந்தவாறு போர்க் அண்ணை கேட்டார் –

“தம்பியவை, மாவீரர் நாள் வருதல்லோ? தற்செயலா நான் செத்துப் போனா அண்டைக்கு என்ன செய்வியள்.”

“நீங்கள் ஏன் சாகப்போறியள்” எனக் கேலியாகப் பதில் கூறினர் பிள்ளைகள்.

போர்க் அண்ணையும் சிரித்தபடி, “தப்பித்தவறி நான் செத்துப் போனா என்ர நினைவாக ஆளுக்கொரு மரம் நட்டு வளவுங்கோ என்ன?”

அவர்கள் சிரித்தனர். போர்க் அண்ணையும் சேர்ந்து சிரித்தார்.

வீட்டிலிருந்து புறப்படும் இறுதிநாள் வந்தது. மதியம் உணவருந்திவிட்டு விறாந்தையில் பாயைப் போட்டுப் படுத்தார். சற்றுத்தள்ளிப் போர்க் அண்ணையின் அம்மாவும் படுப்பதற்காக, தரையில் பாயைப் போட்டார்.

“அம்மா இதில வந்து, எனக்குப் பக்கத்தில் பாயைப் போடனை.” போர்க்கண்ணை கேட்டார். அம்மாவும் வந்து அவரின் தலையை வருடியவாறு இருந்தார்.

அன்று பின்னேரம் அப்பா, அண்ணன்மார், தம்பிமார், அன்புத் தங்கை என்று எல்லோரிடமும் விடை பெறுகிறார்.

கடைசியாகத் தாயாரிடம் வந்து, “அம்மா எனக்கு உங்கட கையால ஒரு பொட்டு வைச்சு விடுங்கோவன், ஆசையாயிருக்கு” என சாதாரணமாகக் கேட்டார். எதுமறியாத தாயுள்ளம் பிள்ளையின் விருப்பப்படி பொட்டிட்டு மகிழ்ந்தது. இவ்விதம் சிறுபிள்ளைபோல் அவர் நடப்பது வழக்கம் எனத் தாயாரும் கூறினார்.

சிரித்தபடியே விடை பெற்றவர், வீட்டுப் படலையில் நின்று ஒரு கணம் திரும்பிப் பார்த்தார். பின் போய்விட்டார்.

## கரும்புலி மேஜர் டாம்போ




“வீட்டில், நாங்கள் எல்லோருமே எங்களுடைய ஒரேயொரு

www.sangathamil.ca



தங்கச்சியில் மிகுந்த அன்பு வைச்சிருந்தம். அவளின் சாமத்திய வீட்டை சொந்தக்காரர் எல்லோருக்கும் சொல்லி வீட்டில் எங்களின் வசதிக்கேற்ற அளவுக்குப் பெரிசாகச் செய்தம். ஆனால்,

... சாமத்திய வீடு நடந்து பத்தாம் நாள் தம்பிக்கும் தங்கச் சிக்கும் இடையில் சின்னதாக ஒரு பிரச்சினை. அம்மா தம்பிக்கு அடிச்சுப் போட்டா... தன்னாலதான் அண்ணனுக்கு அடி விழுந்ததென்று நினைத்து... எங்களின் ஆசைத் தங்கச்சி நஞ்சு குடிச்சு உயிரைப் போக்கிக் கொண்டாள்..."

ஒரு கையால் கண்களைத் துடைத்துக் கொண்டு கீழே குனிந்தபடி ஒரு தடிக்குச்சியால் மண்ணைக் கிண்டிக் கொண்டு, டாம்போ சொன்னான்...

"இதற்கிடையில் எங்களின் இன்னொரு தம்பி பயணம் போனவன், கடற்படையால கைது செய்யப்பட்டான். இன்னும் வீட்டுக்கு வரவில்லை. இராணுவம் பிடித்துச் செல்கின்ற ஆக்கள் காணாமல் போவதென்பது இங்கு புதினமில்லைத் தானே...

அதுக்குப் பிறபு - தங்கச்சி செத்து ஒரு மாதம் போக முந்தியே தம்பி இயக்கத்திற்கு வந்திட்டான். எங்களுடைய வீட்டு நிலைமையைத் தெரிஞ்சுகொண்ட சுபன் அண்ணை, தம்பியை வீட்டுக்குப் போகச் சொல்லி அனுப்பினபோதும் போக மாட்டன் என்று அடம்பிடித்துக்கொண்டு முகாம் ஒன்றில் நிண்டான்...

பிறகு நான்தான் அவனை மோட்டாப் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு வந்து பயிற்சி முகாமில் விட்டன... இப்ப அவன் அங்கு ஓடித்திரிகிறான்... நான் கரும்புலியாகப் போகப் போகிறேன் என்று அவனுக்குச் சொல்லிப் போட்டன்..." என்ர முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டு வேறெங்கோ பார்த்தான்.

மன்னாரில் நடக்கிற முதலாவது கரும்புலித்தாக்குதலை நான் செய்ய வேணுமென்ற ஆசை என்னிடம் இருந்தது... அதை நான் சுபன் அண்ணயிட்டச்



சொல்லியிருந்தனான்... இப்ப அந்த நாளும் வந்திருக்குது..."

கலக்கமில்லாத – மிகத் தெளிவான – கண்களோடு தோழனைப் பார்த்துச் சொன்னான் - "இப்படி ஒரு நிறைவான சாவு எல்லாருக்கும் வராதடா..."

## கரும்புலி கப்டன் சிதம்பரம்
## கரும்புலி கப்டன் ஜெயந்தன்







இக்கப்பலைத் தேடி திசையறி கருவியின் உதவியுடன் கரும்புலிகளின் வெடிமருந்து ஏற்றிய படகு புறப்பட்டது. சிறிது நேரத்தில் வோக்கி மூலம் தொடர்பு கொண்டு கதைத்தார்கள்.

"நாங்கள் கதைக்கிறது விளங்குகிறதா?" எனக் கேட்டோம்.

"நீங்கள்... கதைப்பது... தெளிவாகக்... கேட்கிறது" என எந்தவித சலசலப்புமில்லாமல் உறுதியுடன் அறிவித்தார்கள். மேலும் சில நிமிடங்கள் சென்றன. சிதம்பரமும் - ஜெயந்தனும் சென்ற வெடிமருந்துப் படகு சுமார் 4 மைல் கடந்திருக்கும்.

அப்போது - "எங்களுடைய இலக்கைக் கண்டு விட்டோம்"

எங்களுடைய இலங்கைக் கண்டுவிட்டோம்... என உற்சாகம் பொங்க படகிலிருந்து அறிவித்தனர். குரலில் பதட்டமோ அல்லது தயக்கமோ தென்படவேயில்லை - கரையில் நின்ற தோழர்களின் நெஞ்சுதான் பதை பதைத்துக் கொண்டிருந்தது.

மேலும் சில நிமிடங்கள் சென்றிருக்கும்.

"திட்டமிட்டபடி நாங்கள் செய்யபோகிறோம்'

"ஏற்கனவே திட்டமிட்டபடி நாங்கள் செய்யப் போகிறோம்", என்ற குரல் கடல் இரைச்சலையும் கிழித்துக் கொண்டு எங்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

கரையில் நின்ற போராளிகள் அனைவரும் கண்வெட்டாது கடலையே பார்த்துக்கொண்டு போக்கிக்கு காதைக் கொடுத்துக் கொண்டு நின்றார்கள்.

அப்போது சிதம்பரமும், ஜெயந்தனும் சேர்ந்து வோக்கி ஊடாக, "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என உரத்துக் கத்தினார்கள்.






# தையிட்டி சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை அகற்றுமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம்!

15.11. 2024

தையிட்டி சட்டவிரோத விகாரைக் கட்டுமானத்தை அகற்றுமாறு வலியுறுத்தி வனயீர்ப்புப் போராட்டம் தமிழ்த் தேசிய மக்கள் முனன்ணி மற்றும் காணி உரிமையாளர்கள் இணைந்து நேற்று மாலை கமுன்னெடுக்கப்பட்டது.





இன்றும் தொடர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாலை 5.30 மணியளவில் போராட்டம் நிறைவடைந்தது.

மேற்படி போராட்டத்தில் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேநதிரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் பிரசார செயலாளர் நடராஜர் காண்டீபன் மற்றும் வாசுகி சுதாகரன் யாழ் மாவட்ட அமைப்பாளர் பொன்.குணரத்தினம் உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் மற்றும் காணி உரிமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# தமிழ் உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே அணியாக செயற்படுவோம்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

16.11. 2024

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாராளுமன்றத்தில் ஒரே அணியாக செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினை குறித்தும், அபிவிருத்தி தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்துவதாக கோரி மக்களிடம் நாங்கள் வாக்கு சேகரித்தோம். குறித்த இரு விடயங்கள் குறித்து அரசாங்கத்துடன் சேர்ந்து செயல்படுகின்ற ஒரு சாத்தியப்பாட்டை மேற்கொள்கின்ற சூழலை உருவாக்குவதாகவும் நாங்கள் கூறியிருந்தோம்.

குறித்த இரு விடயங்களிலும் நாங்கள் கவனம் செலுத்துவோம். கிராமிய ரீதியாக மக்களின் குறைகளை கேட்டறிந்து கிராமங்களை முன்னேற்றுவதே நோக்கமாக இருக்கும். மேலும் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை நாங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுவதற்கான ஒரு சூழலை நாங்கள் உருவாக்குவோம்.

மேலும், இம்முறை பாராளுமன்ற தேர்தலின் போது தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து பாராளுமன்றத்தில் ஒரே அணியாக பொது பிரச்சினைகளை நாங்கள் கையாளுகின்ற வகையிலே செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளேன்.

ஜனாதிபதி கூறியது போல் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, காணாமல் போனவர்கள் குறித்து அவர்களின் உறவுகள் போராட்டத்தின் ஊடாக நீதியை கோரி வருகின்றனர்.

அவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையில் ஒரு வழிமுறையை நாங்கள் கையாளுகின்ற ஒரு சூழலை உருவாக்குதல், எமது நிலங்கள் பரிபோகாத ஒரு சூழலை ஏற்படுத்துதல், எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்



கைகளை முன்னெடுக்க உள்ளோம்.

எனவே, இம்முறை சங்கு சின்னத்துக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகள். மக்கள் சார்ந்த பிரச்சினைகளை கவனத்தில் எடுத்து, மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முறையை நாங்கள் கையாளுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு!

16.11. 2024

கிளிநொச்சியின் பல பகுதிகளில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறறு வருகிறது என பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வினால் பெறுமதியான வயல் நிலங்கள் உள்ளிட்ட தனியார் காணிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இரவு நேரங்களில் விவசாய காணிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றனர் என்றும் இதன் காரணமாக தங்களது விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுளளது என்றும் கவலை தெரிவித்துள்ள பொது மக்கள். சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றவர்களுக்கும் சிறீலங்கா பொலீசாருக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதனால் அவர்கள் மீது சிறீலங்கா பொலீசார் எவ்வித நட வடிக்கையும் எடுப்பதில்லை என்றும் பொது மக்கள் தெரிவித் துள்ளனர்.

சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பினை தடுக்கவும், விவசாய நிலங்களை பாதுகாக்கவும் சட்டவிரோத மணல் அகழ்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம்!

### தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன்

16.11. 2024

கடந்த எழுபது ஆண்டு கால அரசியல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர்கொண்ட தமிழினம் பல்வேறு விதமான இழப்புகளையும், நெருக்கடிகளையும், வலிகளையும், வாழ்வியல் சுமைகளையும் எதிர்கொண்டு வருகிறது.

எனவே தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் இன்று சனிக்கிழமை (16) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

2009க்கு பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவிக்கிறது.

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருபவர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பை தொடர்ச்சியாக வன் வலு கடந்த மென் வலுவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். அதை எதிர்கொள்வது பாரிய சவாலாக உள்ளது.

அதிலும் பிரிந்து நின்று எதிர்கொள்வது என்பது சாத்தியமில்லாத ஒன்று ஆகவே ஒன்றாக இணைந்து அரசின் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தமிழ்க்கட்சிகளின் பதவி சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு பல அணிகளாக பிரிவடைந்துள்ளனர்.

தமக்குள்ளான முரண்பாடு பொது எதிரியை மகிழ்விக்கும் இந்த தேர்தல் களம் தமிழ்க் கட்சிகள் தமது முரண்பாட்டையே பேசு பொருளாக்கியது.

இதனால் வெறுப்படைந்த பொதுமக்கள் தமிழ்த்தேசிய கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

தமிழ் கட்சிகளிலும் பல்வேறு விதமான தவறுகளும், குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரே இலக்கில் செயல்பட முனைவோர்கள் பிரிந்திருந்ததனால் வடக்கு மாகாண தேர்தல் களம் பல்வேறு விதமான சோதனைகளை ஏற்படுத்தியிருக்கிறது. கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டதால் தம்மை தற்காத்துக் கொண்டனர்.

அவர்களுக்கு எமது பாராட்டுக்களும், வாழ்த்துகளும் ஆனால் வடக்கில் உள்ள நிலைமை மிக மோசமாகிவிட்டது. ஆளும் அரசே வெற்றி பெற்றிருப்பதனால் எமது தமிழ் தேசியவாத அபிலாசைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகின்றோம். என்கிற கேள்வி எழுகிறது.

எனவே தமிழ்த்தேசிய கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்தபட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்தமும் ஆகும்.

இவ்வாறான ஐக்கியமில்லாவிட்டால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக்கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய்விடும்.

ஆகவே எதிர்காலத்தில் நடைபெறுகின்ற தேர்தல்களிலும் சரி, தமிழ்த்தேசிய உரிமை ஜனநாயக போராட்ட விடயங்களிலும் சரி, ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதே அவசியமாகும்.

அதனையே மக்களும் விரும்புகிறார்கள். கடந்த பல வருடங்களாக இவ்வாறான ஐக்கிய முயற்சிகளை ஏற்படுத்தியவர்கள் என்கின்ற வகையிலும் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்கு வாக்களியுங்கள் என கோரிக்கை விடுத்ததன் உரிமையிலும் எதிர் வரும் நாட்களில் தமிழ்த்தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட இருக்கின்றோம்.

அதற்கு நீங்கள் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் ஆளுக்கு ஆள் துரோகிப்பட்டம் வழங்குவதும் ஒரு கட்சி வந்தால் இன்னொரு கட்சி வரமாட்டேன் எனக்கூறும் வரட்டு வாதங்களை அடியோடு மறந்து விடுங்கள் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

நடந்து முடிந்த தேர்தல் வடக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய நீக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு தார்மீக பொறுப்பெடுக்க வேண்டியது சகல தமிழ்த் தேசியக்கட்சிகளும் ஆகும்.




தமது குறைபாடுகளையும், செயல்பாடின்மையும் இனி மேலாவது திருத்திக் கொள்வதற்கு முன் வர வேண்டும்.

ஆனாலும் தமிழ் மக்கள் இன ரீதியான சிந்தனை துவத்தை மறந்து தேசிய கட்சிக்கு வாக்களித்தது என்பது மிகவும் வேதனைக்குரிய பரிதாபகரமான நிலைப்பாடு ஆகும்.

தமிழ் மக்களுக்கு பிரச்சினை எதுவும் இல்லை எனும் தோற்றப்பாட்டை வெளிப்படுத்திவரும் ஆபத்துண்டு.

அந்த மக்கள் எதிர்வரும் காலத்தில் தங்களுடைய எண்ணங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் நாம் கேட்டுக் கொள்கிறோம்.

ஏனெனில் தேசிய கட்சிகளுக்குள் கரைந்து போவது என்பது தமிழ்த்தேசிய இருப்பை ஒருபோதும் கூர்மையாக தக்க வைக்க கூடிய கள நிலைமை உருவாகாது என்பதனையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே எமது முயற்சிக்கு சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம். என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளி. கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் தொடரும் சிரமதானப் பணிகள்!

17.11. 2024

எதிர்வரும் நவம்பர் 27, தமிழ்த்தேசிய மாவீரர் நாளின் முன்னாயத்தப் பணிகளின் ஆரம்பமாக, கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் இன்றையதினமும் சிரமதானப் பணிகள் மாவீரர் பணிக்குழுவின் வழிகாட்டலில் இடம்பெற்றன.





கனகபுரம் மாவீரர் பணிக்குழுவினால், முறைமைப்படுத்தப்பட்ட வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட மேற்படி சிரமதானப் பணிகளில் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# ரில்வின் சில்வாவின் கருத்து தமிழ் மக்கள் எதிர் கொள்ளப்போகின்ற ஆபத்தை தெளிவாக புலப்படுத்துகின்றது!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

17.11. 2024

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தியும் ஒரு புதிய அரசமைப்பாக எண்ணியிருக்கின்ற வரைபை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை (16) நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியம் சார்ந்த அரசியலுக்கும் கொள்கை சார்ந்த - தமிழ் மக்களுடைய இருப்பு சார்ந்த விடயங்களுக்கும் எதிர்காலம் மிகவும் சவாலுக்குரிய ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம். இதில் வரப்போகின்ற ஐந்து வருடங்களில் மிக முக்கியமானது வரப்போகின்ற முதலாவது வருடம்தான்.

தேர்தல் முடிவுக்குப் பிறகு கூட ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தங்களது கட்சிக்கு வடக்கில் ஆசனங்கள் கிடைத்துள்ளன எனவும் இனவாதத்தை மக்கள் நிராகரித் துள்ளனர் எனவும் சொல்லியுள்ளார். அந்தக் கருத்திலேயே தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஆபத்துக்கள் மிகத் தெளிவாக அம்பலமாகியுள்ளன.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த நிலைப்பாட்டுக்கு இத்தனை வருடங்களாக தமிழ் மக்கள் ஆணை வழங்கி வந்திருக்கின்ற நிலையில் அந்த ஆணையை இனவாதம் என்று சொல்லி கொச்சைப்படுத்துகின்ற வகையில் ரில்வின் சில்வா பேசியுள்ளார்.

உண்மையில் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கின்ற நிலையில் அந்தத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இனவாத நிலைப்பாடாக கொச்சைப்படுத்தி இன்றைக்குத் தேர்தல் முறை யில் உள்ள ஒரு சில முறைகளால் எண்ணிக்கையில் ஒரு சில ஆசனங்களைப் பெற்றுக்கொண்டதை வைத்துக்கொண்டு ஒட்டு மொத்த தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை நிராகரிக்கின்ற என்று சொல்கின்ற கருத்துக்கள் எந்தளவுக்கு ஆபத்து என்பதை எமது மக்கள் உணர வேண்டும்.

அந்த வகையில்தான் தேர்தல் காலத்திலும் நாம் எமது மக்க ளுக்கு தொடர்ச்சியாக ஒரு விடயத்தைச் சொல்லி வந்தோம். அதாவது இந்த அரசு தேர்தல் முடிந்த கையோடு 2015 முதல் 2019 வரை தயாரிக்கப்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றை யாட்சி அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னோம்.

அந்த ஒற்றையாட்சி ஏக்கிய ராஜ்ஜியவை நிராகரித்து எங்க ளுடைய மக்களின் ஆணையைக் காட்டி தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு தீர்வுக்குக் கடுமையான அழுத்தங்களைக் கொடுப்போம் என்ற கருத் தைத்தான் நாங்கள் சொல்லியிருந்தோம்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற சுயநிர் ணய அடிப்படையில் சமஷ்டித் தீர்வினை எட்டுவதற்கான அழுத் தங்களைக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை நாங்கள் முன் னெடுக்க இருக்கின்றோம்.

அந்தச் செயற்பாடுகளோடு ஒத்துப்போவதற்குத் தயாராக இருக் கின்ற அனைத்து தரப்புகளோடும் செயற்பட நாங்கள் தயாராக வும் இருக்கின்றோம். விசேடமாக ஒற்றையாட்சி அரசமைப்பின் ஏக்கிய ராஜ்ஜிய என்ற இடைக்கால அறிக்கையை வடக்கு, கிழக்கில் தமிழர் தாயகம் ஏற்றுக்கொள்ளாது என்ற செய்தியை அமைதியான முறையிலும் ஜனநாயக முறையிலும் வெளிப் படுத்துவதற்கும் அதனைத் திணிப்பதை ஏற்றுக்கொள்ள முடி யாது என்பதையும் வெளிப்படுத்தி எங்களது செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அந்த நிலைப்பாட்டோடு ஒன்றிணைந்து போவதற்கு இருக் கின்ற அனைத்து தரப்புகளோடும் இணைந்து இந்த விடயங் களைக் கையாளுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம். இந்த விடயத்தில் எம்மோடு இணைந்து செயற்படுவதற்கு முன்வருமாறு அறைகூவலும் விடுக்கின்றோம்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு விடயத்தை தமிழ் மக்கள் நிராகரிப்பார்களாக இருந்தால் அதுவே அழுத்தத்தை ஏற்படுத் தும் என்பதோடு தேசிய மக்கள் சக்தி அரசு ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி பாதையைக் கைவிட்டு சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்தக்கூடிய புதிய மேடையொன்றை உருவாக்கும். அந்த நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

ஏனென்றால், இன்றைக்கு இலங்கை அரசு சர்வதேச மட்டத் திலும் பொருளாதார ரீதியாகவும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகத்தின் உதவி தேவை.

ஆனால், இலங்கையில் இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு ஒரு ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படாத வரை அந்த உதவிகள் கிடைக்காது. ஆகவே அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நாங்கள் அந்த அழுத்தங்களை சரியான வகையில் கொடுக்க வேண்டும்.




இந்த விடயத்தில்தான் தமிழ்த் தேசியத்தோடு தாங்கள் பயணிக் கின்றதாக சொல்லக்கூடிய ஏனையவர்களோடும் சேர்ந்து பயணிக்கத் தயாராக இருக்கின்றோம் என்றார்.

இதேவேளை, நல்லாட்சி காலத்தில் தங்களால் முன்னெடுக்கப் பட்ட இந்த ஏக்கிய ராஜ்ஜிய என்ற புதிய அரசமைப்பு வரைபை அநுர அரசு மீளக் கொண்டுவரப் போவதாகவும் இந்த நேரத்தில் தான் நாடாளுமன்றத்தில் இல்லாத நிலையில் அந்தச் செயற் பாட்டைக் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கையாள்வார் என் றும் சுமந்திரன் தெரிவித்திருந்தார். இது குறித்த கேள்விக்குக் கஜேந்திரகுமார் பதிலளிக்கையில்,

"அவர் கூறுகின்றதை போன்று இந்த அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கின்ற விடயமல்ல. இன்றைக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தியும் ஒரு புதிய அரசமைப்பாக எண்ணியிருக்கின்ற வரைபை நாங்கள் முழுமையாக எதிர்க் கின்றோம்.

ஆகையினால் அந்த வரைபுக்கு எதிராக அதை நாங்கள் தடுத்து இது எமது மக்களின் இணைப்பு முரணானது என்ற பலமான ஒரு செய்தியைக் கொடுப்பதன் ஊடாக அவர்கள் சரியான ஒரு வரைபை தயாரிப்பதற்கும் அவர்களது செயற்பாடுகளில் மாற் றங்களைக் கொண்டு வருவதற்கும்தான் எங்களுடைய முயற் சிகளை முன்னெடுக்கப்போகின்றோம்.

அதற்குத் தமிழ் அரசுக் கட்சியாக இருக்கலாம் ஏனைய தமிழ்க் கட்சிகளாக இருக்கலாம் நாடாளுமன்றத்துக்கு வெளியில் இருக் கக்கூடிய தமிழ்க் கட்சிகளாக இருக்கலாம். சிவில் சமூகச் செயற் பாட்டாளர்களாக இருக்கலாம். அனைவரையும் ஒன் றிணைத்து அந்த விடயங்களை முன்கொண்டு செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றார்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கிளி. அக்கராயனில் மக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கல்!

18.11. 2024

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கிளிநொச்சி அக்கராயன் கரித்தாஸ் குடியிருப் பைச் சேர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் நேற்று ஞாயிற் றுக்கிழமை (17.11.2024) மரக்கன்றுகளை வழங்கி வைத் துள்ளது.





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப்பாளர் உ. நிறோஜன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செய லாளர் த யுகேஸ் ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை வழங்கி வைத்தனர். மரநடுகையும் இடம்பெற்றது.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# தமிழர் தரப்பு ஒன்றிணைய வேண்டும்!

## சட்டத்தரணி வி. மணிவண்ணன்

17.11. 2024

தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டும். அதேவேளை நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ் தரப்புக்களும் ஒண்றிணைந்து செயற்பட வேண்டும் என சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இடதுசாரிகளுக்கு என பண்பியல்வு இருக்கிறது. அவர்கள் தமக்கு ஏற்றவாறு சட்டங்களை மாற்றி தமது ஆட்சியை தக்க வைத்துக்கொண்டிருப்பார்கள்.

இதனை உணர்ந்த கொண்டு தமிழர்தரப்பு ஒற்றைமைப்பட வேண்டும். வடக்கையும் கிழக்கையும் பறிகொடுத்து விட்டு, எங்கள் மீது திணிக்கப்பட போகும் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட போகும் என்பதனை உணர்ந்து கொண்டும், உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களிலும் அவற்றினை தமிழர் தரப்பு பறிக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதனை உணர்ந்து தமிழர் தரப்புக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். இதனை நாம் அழைப் பாக கூட விடுகின்றோம்.

தேர்தலில் தோற்றுபோனவன் என இதனை பலர் எள்ளி நகை யாடலாம். அவ்வாறில்லாமல் தமிழ் தலைமைகள் ஒன்றுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பிளவுபட்ட தமிழர்களாக தொடர்ந்தும் இருக்க வேண்டும் என விரும்பில்லை.

கூட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என கூறவில்லை. ஆசன மோதல்களை கைவிட்டு தமிழ் தரப்பு ஒன்றிணைய வேண்டும். தேசிய மக்கள் சக்தி வாக்களித்து விட்டார்கள் என தமிழ் வாக்களர்களை மலினப்படுத்த விரும்பவில்லை.

நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றவர்களும் ஒண்றி ணைந்து செயற்பட வேண்டும்.




பொதுக்கட்டமைப்பின் உடைவுக்கு, பொது அமைப்புக்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தான் உடைத்தார்கள். அதனை தொடர்ந்து கட்சி தலைவர்களின் ஈகோ மற்றும் ஆசன பங்கீடும் காரணமாக அமைந்திருந்தது என மேலும் தெரி வித்தார்.

# வடக்கு-கிழக்கு தொடர்ச்சியான சிங்கள இராணுவ பிரசன்னம்: தமிழ் மக்களுக்கு ஆபத்து!

18.11. 2024

வடகிழக்கில் தொடர்ச்சியான சிங்கள இராணுவ பிரசன்னம் தமிழ் மக்களிடையே அசாதாரண சூழலையே தோற்றுவித்து வருகின்றது.

மன்னார், விடத்தல்தீவு பகுதியில் உள்ள இராணுவ முகாமில் சுமார் 25 இராணுவத்தினர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

காய்ச்சல் தொற்றையடுத்து, அங்குள்ள இராணுவத்தினர் முகா மிலேயே தனிமைப்படுத்தியுள்ளதாக இராணுவம் தெரி வித்துள்ளது.

மூளைக்காய்ச்சல் தொற்றினால் பாதிக்கப்பட்ட இராணுவத் தினர் குழுவொன்றை வைத்தியசாலையில் அனுமதிக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் சிகிச் சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முகாமில் மேலும் முகாமில் இருக்கும் மேலும் 500 இராணுவ வீரர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சுகாதார திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி முதல் குறித்த இராணுவ முகாமில் காய்ச்சல் பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே படைமுகாமில் ஏற்பட்டுள்ள தொற்று பொது மக்களிடையேயும் பரவலை தோற்றுவிக்கலாமென சந்தேகிகப் படுகின்றது.



# மன்னார் வைத்தியசாலையில் பிரசவத்தின் போது தாயும் சேயும் பலி!

20.11. 2024

மன்னார் வைத்தியசாலையில் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட தாயும் சேயும் மரணமடைந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மன்னார் பட்டித்தோட்டம் பகுதியை சேர்ந்த 28 வயதான வனஜா என்ற திருமணமாகி 10 வருடங்களே ஆன இளம் தாயே நேற்றையநாள் செவ்வாய்கிழமை மன்னார் வைத்திய சாலையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதுடன் குழந்தையும் இறந்தது.








இதனையடுத்து அவருடைய குடும்பத்தினருக்கு நீதி வேண்டி மன்னார் வைத்தியசாலை முன்பாக மக்கள் போராட்டம் நடாத்தினார்.

# யாழ். கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் சுடரேற்றி மாவீரர் வாரம் ஆரம்பம்!

21.11. 2024

கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தி மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டது.



தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு மான மறவர்களுக்கு மலர்தூவி சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தினர்.





# தொடர் நில அபகரிப்புக்கு உள்ளாகும் திருகோணமலை!

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

17.11. 2024



திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதானமான தமிழ் முஸ்லீம் பிரதேசசெயகங்களில் தீவிர நில அபகரிப்பு இடம் பெறுகின்றது. இதன் காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் சனத்தொகையில் சிங்களவர்கள் 27 வீதமாக காணப்படுவதுடன் 36 வீதமான நிலத்தை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

புவியியல் ரீதியில் வடக்கு கிழக்கை இணைக்கும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, கடந்த பத்து வருடங்களில் மிகமோசமாக பறிபோயுள்ளது. இந்த பிரதேச செயலாளர் பிரிவில் ஆகக் குறைந்தது 41164 நிலத்தை அபகரித்துள்ளனர். இது ஒட்டு மொத்த நிலப்பரப்பின் 50 வீதமாகும் என ஒக்லாண்ட் நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்திருந் தது.

இந்த நிலையில். திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திரியாய் பகுதியில் உள்ள தனியார் விவசாய காணி பௌத்த மதகுரு ஒருவரின் அடாவடித்தனத்துக்கு உள்ளானது.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலின் போது தேர்தல் வாக்குறுதிகளிலும் தனது சமூக ஊடக பதிவுகளிலும் இந்த விவகாரம் தொடர்பில் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக தேசிய மக்கள் சக்தியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அருண் ஹேமச்சந்திர கூறியிருக்கிறார்.

இது போன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சண்முகம் குகதாசனும் வாக்குறுதிகளை தெரிவித்திருக்கிறார். இது தவிர ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகிய இம்ரான் மஹ் ரூப் மக்கள் பிரச்சினைக்கான தீர்வுக்காக குரல் கொடுப்பதாக கூறியிருக்கிறார்.

இவ்வாறாக தமிழர் தாயகமான திருகோணமலை மாவட்டத்தில் பல பிரச்சினைகள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை புதிதாக தெரிவாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்த்து வைப்பார்களா என்பது கேள்விக்குறியே. தேர்தல் காலங்களில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா என்பதை சற்று பொறுத்திருந்து பார்ப்போம்.

தங்களுக்கு சொந்தமான காணிக்குள் விவசாய பெரும்போக நெற் செய்கைக்கான இயந்திரம் மூலமான உழுதுதல் நடவடிக்கையின் போது காணிக்குள் புகுந்த பௌத்த பிக்கு அட்டகாசம் ஏற்படுத்தியதாக புல்மோட்டையை சேர்ந்த ஜெ.புஹாரி தெரிவிக்கிறார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது "வளத்தாமலை பகுதியில் காலம் காலமாக எங்கள் விவசாய காணியில் விவசாயம் செய்து வந்தோம். தற்போது பௌத்த பிக்குவினால் பெரும்போகச் செய்கைக்காக வயல் நிலத்தை உழவு மேற்கொள்ளும் போது தடுத்து நிறுத்தப்பட்டது. இம் முறை குத்தகைக்கு எனது சிறிய தந்தைக்கு காணியை வழங்கியிருந்தேன். இருந்த போதிலும் பௌத்த பிக்குவின் அட்டகாசம் காரணமாக காவல்துறையில் முறைப்பாடு செய்த போது அதனை மீறியும் தடையை ஏற்படுத்தி வருகிறார். இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது " என்றார்.

இது விடயமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் 18.10.2024 ந் திகதி அன்று திருகோணமலை பிராந்திய நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்ததாகவும் கிழக்கு மாகாண ஆளுனர், ஜனாதிபதி செயலகம் போன்றவற்றுக்கான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டும் நிரந்தர தீர்வு இன்று வரைக்கும் (2024.11.16) கிடைக்கவில்லை என காணிக்கு சொந்தமான புஹாரி என்பவர் மேலும் தெரிவித்தார்.

இது தவிர அதனை அண்டிய பொன்மலைக்குடா பகுதியில் முஸ்லிம்களுக்குரிய ஜனாசா அடக்கம் செய்யும் மையவாடிக்குள் ஜனாசாவை அடக்க விடாது புனித பூமி என்ற போர்வையில் அரிசிமலை பௌத்த பிக்குவின் அடாவடி 12.10.2024 அன்றைய நாள் இடம் பெற்றது காவல்துறையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் மீண்டும் ஜனாசா நல்லடக்கம் செய்யப்பட்டது. அநுர குமார ஆட்சியில் கூட முஸ்லிம் மக்களுடைய மத சுதந்திரம் பறிக்கப்படுவதை இதன் மூலமாக காணலாம்.

இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை ஆசனத்தை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கு மக்கள் பிரதிநிதிகளில் பல புதிய முகங்களை பெற்றுள்ளனர். இந்த புதியவர்கள், திருகோணமலை உள்ளிட்ட தமிழர் பிரதேசத்தில் காணப்படும் நில அபகரிப்பு தொடர்பில் கரிசனை காட்ட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப் பாக காணப்படுகிறது.

தேர்தல் காலங்களில் பல மக்கள் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தில் தெரிவாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளார்கள். தமிழ் மக்களிடத்தில் தமிழர் பிரதி நிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகிய ச.குகதாசன் கூறியிருந்தார். எனவே மக்கள் பிரச்சினைகளை பாராளுமன்றத்திலும் வெளியிலும் பேசி நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

புனித பூமி என்ற போர்வையில் விவசாய காணிகளை தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தம் என பல ஏக்கர்களை அடாத்தாக அபகரிப்புச் செய்யும் அரிசிமலை திரியாய் குறித்த பௌத்த பிக்குவான பாணமுறே திலகவன்ச தேரர் கடந்த கோத்தபாயவின் ஆட்சி காலத்தில் ஜனாதிபதியின் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராக செயற்பட்டு வந்தவர் மட்டுமல்லாது வடகிழக்கு பௌத்த சங்கத்தின் தலைவர் எனவும் தெரிய வருகிறது.

அரசாங்கத்தினால் இவருக்கு மெய்ப்பாது காவலரும் (MSD) வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆட்சியின் பின் அதிரடியாக முன்னால் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நீக்கப்பட்ட போதும் இவ்வாறு பௌத்த பிக்குவுக்கு மாத்திரம் ஏன் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

திரியாய்க் கிராமத்தின் பூர்வீக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத் தாமரை, ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக்கண்டல், வேடன்குளம் உள்ளடக்கிய வயல் நிலங்களில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வயற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புல்மோட்டை அரிசிமலைப் பிக்குவினால் அடாவடியாக 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக் காணிகள் கையகப் படுத்தப்பட்டுள்ளன. "இந்த விவசாய காணிகள் எங்களுடைய சொந்த பூமி. இதற்குள் விவசாயம் செய்ய முடியாது தடுத்து நிறுத்தும் பௌத்த பிக்குவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக தீர்வினை பெற்றுதாருங்கள்" என திரியாய் விவசாய சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படும் என கூறப்பட்ட தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேறுமா என்ற சந்தேகம் இவ்வாறு நில அபகரிப்பால் பாதிக்கப்படும் மக்களுக்கு இருக்கின்றது.

# விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் வார ஆரம்ப நிகழ்வு முன்னெடுப்பு!

21.11. 2024

மாவீரர் வாரத்தின் முதல் நாளான இன்று வியாழக்கிழமை (21) விசுவமடுவில் உள்ள தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்திலும் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொதுச்சுடர் ஏற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.







# யாழ். தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் வாரம் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுப்பு!

21.11.2024

மாவீரர் வாரம் இன்று (21) ஆரம்பமாகியுள்ள நிலையில், யாழ். தீவகம் - சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் நடைபெற்றது.



தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வருடந்தோறும் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது,

அந்த வகையில் இந்த வருடமும் மாவீரர் நாள் நினைவேந்தலை தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை மாவீரர் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவகம் - சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று உணர்வுபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.



இதன்போது உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி, உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தப்பட்டது.

# வாகரையில் சிறீலங்கா மின்சார சபையின் அசமந்தப் போக்கை கண்டித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

22.11.2024

வாகரை பகுதியில் சிறீலங்கா மின்சார சபையின் அசமந்தப் போக்குக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகத்துக்கு முன்பாக இன்று வெள்ளிக்கிழமை (22) மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வாகரை பிரதேச செயலக பிரிவில் உள்ள வாகரை, ஊரியன் கட்டு, தட்டு முனை, கதிரவெளி உள்ளிட்ட பல கிராமங்களில் நாளாந்தம் பல மணிநேரம் முன்னறிவித்தல் எதுவுமின்றி கடந்த இரண்டு மாதங்களாக மின் துண்டிக்கப்படுவதால் இம் முறை உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலை மாண வர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் உட்பட கிராம மக்கள் தமது நாளாந்த கடமைகள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் சிரமப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் தெரிவித்தனர்.

மின்சார சபையின் இச்செயற்பாட்டினால் பாடசாலை மாணவர் களின் பரீட்சை கால இரவு நேர கற்றல் நடவடிக்கை முற்றாக பாதிப்படைந்துள்ளது. அவர்களது எதிர்காலம் பாதிப்படைய மின் துண்டிப்பு ஒரு காரணமாக அமைந்துள்ளது என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

"துண்டிக்காதே துண்டிக்காதே முன்னறிவித்தல் இன்றி மின்சாரத்தை துண்டிக்காதே", "மின்சார சபையே மின்சார சபையே பாடசாலை மாணவர்களின் கல்விக்கு தடையாக இருக்காதே" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதா தைகளை ஏந்தியவாறு பொதுமக்கள் சுமார் ஒரு மணிநேரம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கான தீர்வினை பெற்றுத்தருமாறு வாகரை பிரதேச செய லாளர் அமலினி கார்த்தீபனிடம் மகஜரொன்றை ஆர்ப்பாட்டக் காரர்கள் கையளித்தனர்.

இப்பிரச்சினை தொடர்பில் பிரதேச செயலாளர் வாக்குறுதியளித்த பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# மன்னார் பண்டிவிரிச்சானில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு!

22.11. 2024

மன்னார் மாவட்ட மாவீரர் பெற்றோர்களின் முதலாவது மதிப் பளிப்பு நிகழ்வானது, 21. 11.2024 மாலை 3 மணிக்கு பண்டி விரிச்சான் மண்டபத்தில் உணர் வெளிச்சியோடு நடைபெற்றது. 85 க்கும் மேற்பட்ட பெற்றோர் உரித்துடையோரின் பங்கு பற்றலுடன் மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டு குழு ஒழுங் கமைப்பில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, பெற்றோர்கள் அனைவரும் நினைவுச் சுடரேற்றி, மலர்வணக்கம் செலுத்தி பின் அக வணக்கத்துடன் ஆரம்பமானது. மாவீரர் ஈகங்கள் சுமந்து உரை நிகழ்த்தப்பட்டது. அத்தோடு, நிகழ்வில் கலந்து கொண் டவர்களுக்கு தேனீர், சிற்றுண்டி வழங்கப்பட்டு பின் நிகழ்வு நிறைவுக்கு வந்தது. உலர்உணவுப் பொதியும், பழமரக் கன்றும் வழங்கப்பட்டது. (தேசி, தோடை, நெல்லி) புலம்பெயர் உறவு களின் நிதி பங்களிப்புடன் இம்மதிப்பளிப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.





# தமிழ்த்தேசமும், தமிழ்த் தேசியமும் அழியவில்லை!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன்

23.11. 2024

அண்மையில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தமிழ்த்தேசமும், தமிழ்த்தேசியமும் அழியவில்லை. மாறாக தமிழ்த்தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரிந்துநின்று அரசாங்கத்தை வெற்றியடையச்செய் திருக்கிறார்களே தவிர, தமிழ்த்தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிடவில்லை என தமிழ்த்தேசிய மக்கள் கூட்டணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"தமிழ்த்தேசியம் அழிந்துவிட்டதா? தேர்தல் முடிவுகள் அதனை உறுதிப்படுத் துகின்றன அல்லவா?" என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு அளித்திருக்கும் பதிலிலேயே சி.வி.விக்கினேஸ் வரன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

தமிழீழம் பெறமுடியாமல் போய்விடுமா என்று பிரபாகரனிடம் ஒருவர் கேட்டார். அதற்கு அவர் "தமிழீழத்தைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. அது ஏற்கனவே இருக்கிறது. அதனைப் பாதுகாப்பதற்காகத் தான் நாங்கள் போராடுகின்றோம்" எனப் பதிலளித்தாராம்.

அதேபோன்று தமிழ்த்தேசம் ஏற்கனவே நடைமுறையில் இருக் கிறது. அதனைப் பாதுகாக்கும் மனோநிலையே தமிழ்த் தேசியம். அது அழிந்துவிடவில்லை. தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசத் தெருக்கள் பலவற்றில் இராணுவத்தடைகள் நீக்கப்பட் டதைப் பார்த்திருப்பீர்கள்.

ஒரே நாட்டுக்குள் தமிழ் பேசும் பிரதேசங்களில் மாத்திரம் ஏன் இந்தப் பாகுபாடு எனும் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ்மொழி பேசும் பிரதேசங்கள் என்ற உண்மையை உணர்ந்து செயலாற் றுபவர்களை தமிழ்த்தேசியத்தை அழிப்பவர்கள் என்று அடையாளம் காட்டமுடியாது.

தமிழ்த்தேசிய சிந்தனையை வைத்து வியாபாரம் நடத் தியவர்கள் தேர்தலில் காணாமல்போயிருக்கிறார்கள். தமிழ்த் தேசிய சிந்தனையை ஏளனம் செய்து, கட்சிகளைப் பிரித்து சுயநல அரசியல் நடத்திய ஒருவர் காணாமல் போயிருக்கிறார்.

இருப்பினும் நடைபெற்று முடிந்த தேர்தலில் வட, கிழக்கில் அரசாங்கம் ஆசனங்களைப் பெற்றிருப்பதே உங்களது கேள் விக்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு இறைவனால் தரப்பட்ட வரப்பிரசாதமாகும்.

கடந்த காலங்களில் தமிழ்த்தேசியத்தை ஆதரித்தவர்கள் இன் னமும் தமிழ்த்தேசியத்துடன் தான் இருக்கிறார்கள். இருப்பினும் பல சுயேட்சைக்குழுக்களின் தோற்றம் மற்றும் பல வருடகால அரசியல் கட்சிகள் தேர்தல் உடன்பாடுகளுக்கு இடம்கொடுக் காமை போன்றவற்றால் அவர்கள் செய்வதறியாது பிரிந்து நின்று வாக்களித்திருக்கிறார்கள். அதேவேளை தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தும் கட்சிகளுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளின் மொத்தத்தொகையைப் பார்த்தால், தமிழ்த் தேசியத்துக்கான எமது மக்களின் ஆதரவு குறையவில்லை



என்ற விடயமே புலனாகிறது.

ஆகவே தமிழ்த்தேசமும், தமிழ்த்தேசியமும் அழியவில்லை. மாறாக தமிழ்த்தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரிந்துநின்று அரசாங்கத்தை வெற்றியடையச்செய்திருக்கிறார்களே தவிர, தமிழ்த்தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டுவிடவில்லை.

அதேவேளை ஐ.நா சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் உறுப்புரை ஒன்றின் கீழ் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்கள் தமிழ்த்தேசம் என்பதை எந்தவொரு இலங்கை அரசாங்கமும் ஏற்காதவரை, வட, கிழக்கு தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். நல்லூரில் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட நினைவாலயம் திறப்பு!

23.11.2024

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் மக்கள் நினைவேந்தலுக்காக நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டன.

1982 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம்- 27 தொடக்கம் 2009 வைகாசி மாதம்- 18 வரையான காலப் பகுதியில் தாயக மண்ணின் விடியலுக்காய்க் களமாடி வித்தாகிய விபரங்கள் பெற்றுக் கொள்ள முடிந்த 24,379 மாவீரர்களின் பெயர் களினை உள்ளடக்கிய கல்லறைகளையும், சில தகவல்களை யும் உள்ளடக்கிய மாவீரர்களின் நினைவாலயத் திறப்பு நிகழ்வு சனிக்கிழமை (23.11.2024) மாலை-06 மணிக்கு யாழ்.நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது.




























# மன்னார் அடம்பன் பிரதேச மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு!

23.11. 2024

மன்னார்- அடம்பன் பிரதேச மாவீரர் பெற்றோருக்கான மதிப்பளிப்பு 23.11.2024 காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. அடம்பன் கூட்டுறவு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டமைக்கிணங்க மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது. இதில் பெற்றோர்கள், உறவுகள் என 100 க்கு மேற்பட்டோர் வருகைதந்திருந்தனர். பொதுச்சுடரேற்றப்பட்டு, பின் ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. மாவீரர்களின் நினைவு சுமந்து உரை நிகழ்த்தப்பட்டது. பின் தேனீர், சிற்றுண்டி வழங்கி வைக்கப்பட்டது. இறுதியாக உலருணவு, பழமரக்கன்று வழங்கிவைக்கப்பட்டது. நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.





# தென்தமிழீழத்தின் வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லதில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு!

23.11. 2024

எதிர்வரும் நவம்பர் 27, தமிழ்த்தேசிய மாவீரர் நாளின் முன்னாயத்தப் பணிகளின் ஆரம்பமாக, தென்தமிழீழம் மட்டக்களப்பு மாவட்ட வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகள் மாவீரர் பணிக்குழுவின் வழிகாட்டலில் இடம்பெற்றன.





வாகரை கண்டலடி மாவீரர் பணிக்குழுவினால், முறைமைப் படுத்தப்பட்ட வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட மேற்படி சிரமதானப் பணிகளில் தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் பலரும் கலந்துகொண் டிருந்தனர்.



# மன்னார் தட்சனார்மருதமடுவில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு!

23.11. 2024

மன்னார் மாவட்ட மாவீரர் பெற்றோர்களின் இரண்டாவது மதிப்பளிப்பு நிகழ்வானது, 21. 11.2024 மாலை 7.00 மணிக்கு தட்சனார்மருதமடு மண்டபத்தில் உணர்வெழுச்சியோடு நடைபெற்றது. 35 க்கும் மேற்பட்ட பெற்றோர் உரித்துடையோரின் பங்குபற்றலுடன் மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டு குழு ஒழுங்கமைப்பில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, பெற்றோர்கள் அனைவரும் நினைவுச் சுடரேற்றி, மலர்வணக்கம் செலுத்தி பின் அக வணக்கத்துடன் ஆரம்பமானது. மாவீரர் ஈகங்கள் சுமந்து உரை நிகழ்த்தப்பட்டது. அத்தோடு, நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு தேனீர், சிற்றுண்டி வழங்கப்பட்டு பின் நிகழ்வு நிறைவுக்கு வந்தது. உலர்உணவுப் பொதியும், பழமரக் கன்றும் வழங்கப்பட்டது.( தேசி, தோடை, நெல்லி) புலம்பெயர்



உறவுகளின் நிதி பங்களிப்புடன் இம்மதிப்பளிப்பு நிகழ்வு



சிறப்பாக நடைபெற்றது.

# தமிழீழ தேசத்தின் விடியலிற்காய் தம்முயிர் தந்து வித்தானவர்களின் நினைவேந்தல்!

22.11. 2024

தம்முயிர் தந்து தமிழர் உள்ளமெங்கும் நிறைந்து உணர் வானவர்களை நினைவேந்திய மாவீரர் வாரத்தின் முதலாம் நாள் நினைவேந்தல்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாவீரர் பொதுத்தூபியில் 21.11.2024 (வியாழக்கிழமை) அன்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தொடங்கி வைக்கப்பட்டது.







www.sangathamil.ca

# திருகோணமலை சம்பூரில் மாவீரர்களின் பெற்றோர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு!

24.11.2024

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளித்து கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (24) சம்பூர் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது. இதனை சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு ஏற்பாடு செய்திருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மலர் தூவி விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு கௌரவப் படுத்தப்பட்டனர். இதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் களினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிர்நீத்த உறவுகளுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 350 மாவீரர்களின் பெற்றோர்களுக்கு தென்னைமரக் கன்றுகள் வழங்கப்பட்டிருந்தன. அத்தோடு அவர்களது குடும்பங்களுக் கான மதியபோசனமும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் சண்முகம் குகதாசன், மாவீரர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.





# யாழ். தீவகம் வேலணையில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு!

24.11. 2024

தமிழ் தேசிய செயற்பாட்டாளர் குழுமம் மற்றும் தீவக நினை வேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் தீவகம் வேலனை துறையூர் பகுதியில் மாவீரர் பெற்றோர்கள் உறவினர்கள் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை மதிப்பளிக்கப்பட்டனர்.

மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் வேலனை துறை யூர் சந்தியில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க வேலணை ஐயானார் சனசமூக நிலைய மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்ட நினைவு மண்டபத்தில் பொதுச் சுடரேற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் மாலைகள் அணியப்பட்டு கண்ணீர் மல்க மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

அதனை தொடர்நது மாவீரர்களின் பெற்றோர்கள் உற வினர்களை கௌரவிக்கும் முகமாக மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் யாழ்ப்பாணம் தீவகப் பகுதி மாவீரர்களின் பெற் றோர்கள் உறவினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# இந்திய கடற்தொழிலாளர்களுக்கு எதிராக அனலைதீவு மீனவர்களால் ஊர்காவல்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு!

24.11. 2024

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்படும் சொத்து இழப்புக்கள் தொடர்பாக அனலைதீவு மீனவர்களால் ஊர்காவல்துறையில் சிறீலங்கா பொலிஸ் நிலையத்தில் முறைபாடு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களால் அனலைதீவு கடற்பரப்பில் கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை மற்றும் சேதங்கள் ஏற்படுகின்றமை தொடர்பில் அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் என்பன இணைந்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.




www.sangathamil.ca

# யாழ். தீவகத்தில் மாவீரர் வார நினைவேந்தல்!

24.11.2024

யாழ் தீவகம் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூவியில் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் மாவீரர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை (24) காலை நினை







வேந்தப்பட்டனர்.

மாவீரர் வாரத்தின் நான்காம் நாளாகிய இன்று(24) யாழ் தீவகம் வங்களாவடி சந்தையில் அமைந்துள்ள நினைவுத் தூவியில் மாவீரர்கள் நினைவு கூறப்பட்டனர்

நிகழ்வில் மாவீரர்கள் நினைவாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் மாவிரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் வேலணை பகுதி வர்த்தகர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி – பளைக்கோட்டத்தின் மாவீரர் பெற்றோர் மதிப்பிளிப்பு நிகழ்வு! 25.11.2024













# மன்னார் தாய், சிசு மரணம்: நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்!

### பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

25.11. 2024

மன்னார் பொது வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்த தாய் மற்றும் சிசு விவகாரம் தொடர்பில் நீதியைப் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாதிக்கப்பட்ட குடும்பத் தினரிடம் தெரிவித்துள்ளார்.

மன்னார் - பட்டித்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள பாதிக் கப்பட்டவர்களின் வீட்டிற்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தனது அனு தாபங்களைத் தெரிவித்ததுடன், இடம்பெற்ற துயரச்சம்பவம் தொடர்பான விடயங்களைக் கேட்டறிந்துகொண்டார்.

அத்தோடு மன்னார் மாவட்ட செயலாளருக்கு தொலைபேசியில் தொடர்பை ஏற்படுத்தி இந்த விடயத்தின் நிலைதொடர்பிலும் கேட்டறிந்ததுடன், இந்த விடயத்தில் கூடுதல் கவனஞ்செலுத் தப்பட்டு நீதியைப்பெற்றுத்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படுமெனவும் ரவிகரன் தெரிவித்துள்ளார்.



***எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழவேண்டும். இந்த இலட்சியம் நிறைவேறவேண்டுமாயின் நாம் போராடியே ஆகவேண்டும்.***

## தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள் அகவை 70

# காணாமலாக்கப்பட்டோர் குறித்து கடற்றொழில் அமைச்சர் கருத்து மிகுந்த மனக் கவலையை அளிக்கின்றது!

## வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாவதி ஆனந்த நடராசா

25.11.2024

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் வெளியிட்ட கருத்து மிகுந்த மனக் கவலையை அளிப்பதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாவதி ஆனந்த நடராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் யாழில் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கருத்து தெரிவித்ததாக அறிய முடிந்தது.

அவ் ஊடக சந்திப்பில் எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துள்ளதாகவும் அவர்கள் இனி உயிருடன் திரும்பப் போவதில்லை எனவும் காணாமலாக்கப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டவர்களே என்றவாறும் கருத்து தெரிவித்திருந்தார்.

உண்மையாகவே அவர் ஒரு தமிழராக இருந்தும் இப்படி ஒரு கருத்தை தெரிவிப்பது எமக்கு மிகுந்த மனக்கவலையை அளிக்கின்றது. நாம் எமது உறவுகளை தேடி 2836 ஆவது நாட்களாக போராடி வருகின்றோம்.

எமது தொடர்போராட்டத்தில் இதுவரை 300 க்கும் மேற்பட்ட பெற்றோர்களை போராட்ட களத்திலே ஆகுதியாக்கியுள்ளோம். அவர்கள் தமது பிள்ளைகளை தேடும் போராட்டத்தில் மரணத்தை தழுவியுள்ளனர். எமது வலிகளை புரியாது ஒரு தமிழ் அமைச்சர் இவ்வாறு கருத்து கூறுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

காணாமல் போன பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தில் தேடிக்கொண்டிருக்கின்றோம். அதை அவர் எமக்கு கூறவேண்டிய விதமாக கூறவேண்டும். அவர் இப்படி கூறுவதை மனிதாபிமானமற்ற செயலாக தான் பார்க்க வேண்டும்.

கடந்த அரசாங்கத்திலே ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் வெல்லும் வரை என்னை வெல்லச் செய்யுங்கள் நான் உங்கள் பிள்ளைகளை கண்டுபிடித்து தருகின்றேன் என்று வாக்குறுதி அளித்து விட்டு தேர்தலில் வென்றவுடன் பலாலிக்கு வந்து தைப்பொங்கல் அன்று எமது உறவுகள் மனம் நோகும்படி காணாமல் போன உறவுகள் யாவரும் உயிரிழந்து விட்டார்கள் என்று தெரிவித்திருந்தார்.



அதேபோல தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலே, காணாமலாக்கப்பட்டோருக்கு தீர்வு வழங்க வேண்டும் எனவும் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும்உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்திருந்தார்கள். ஆனால் இந்த அரசு பதவிக்கு வந்து 15 நாட்கள் ஆக முன்னரேயே இப்படியான ஒரு கருத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

# சிறீலங்கா அரசின் போர்குற்றம் விவகாரத்தில் சீனா சர்வதேச நீதியை தடுக்கிறது!

## வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட சாங்கத்தின் செயலாளர் லீலாதேவி

26.11.2024

வடக்கு கிழக்கில் இறுதி யுத்தின் போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என உறவுகள் ஏங்கி கொண்டிருக்கும் நிலையில் அதற்கான சர்வதேச நீதியைப் பெறுவதற்கு சீனா தடையாக அமைவதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கபட்ட சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா குற்றஞ்சாட்டினார்.

அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வருகை தந்த சீன தூதுவர் தமிழ்மக்களின் தீர்வு மற்றும் காணமாலாக்கப்பட்டோர் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீன தூதுவர் வழங்கிய பதில் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையாகவே சீனதூதுவரின் வருகையின்போது அவரால் தெரிவிக்கப்பெற்ற கருத்திற்கு முற்றாக எதிர்ப்பை தெரிவிக்கின்றேன் .

தேசிய மக்கள் சக்திக்கு வாக்கு கிடைத்தது உண்மை. ஏற்கனவே முன்பிருந்த அரச சார்பான கட்சிக்கு வீழ்ந்தவை தான் இப்பொழுது தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்துள்ளது.

மேலும் இந்த அனுரகுமார அரசாங்கத்தினை முற்று முழுதாக ஏற்றுகொண்டு வாக்களித்தது என்றும் கூறமுடியாது.

இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வெறுப்பும் அங்கே வாக்காக விழுந்துள்ளது. அதனை விட வழக்கமாக இங்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்து கொண்ட வாக்கை விட அதிகளவு வாக்கினை பெற்றுள்ளார்கள்.

ஆடு அழுகின்றது என ஓநாய் வெம்பி அழுத கதை தான் சீனதூதுவரின் கதை மீது எனக்கு வருகின்றது.

உண்மையாகவே இந்த காணாமலாக்காபட்டவரின் பிரச்சினைக்கு எப்பொழுதோ தீர்வு கிடைத்திருக்கும்.

கடந்த அரசாங்கங்கள் இருக்கின்ற பொழுது அதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொடுப்பதற்கு பல நாடுகள் தயாராக இருந்தும் சீனாக்கு அங்குள்ள வீற்றோ பவர் காரணமாக தான் இந்த விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு போகபடவில்லை. ஏன் என்றால் வெளிப்படையாகவே சொல்லுகின்றார்கள் காணாமலாக்கபட்டவரின் பிரச்சினையை கொண்டு சென்றால் சீனா இலங்கைக்கு ஆதரவாக வீற்றோ




அதிகாரத்தை பாவிக்கும் என்கின்றார்கள்.

அதே போல இறுதி கட்ட யுத்தத்தின் பொழுதும் சீனா பொஸ்பரஸ் குண்டுகளை கொடுத்து தமிழ் மக்களை கொல்வதற்கு முக்கால் வாசி அவர்கள் தான் பொறுப்பாளிகள். யுத்தம் முடிவடைந்து தீர்வு காலத்துக்கு காலம் வரும் முட்டு கொடுத்து தங்கள் நலனை தக்க வைப்பதற்காக தங்கள் சுயலாபத்தினை பெறுவதற்கும் தமிழ்மக்களை வஞ்சித்து கொண்ட இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கதினரால் மரக்கன்றுகள் விநியோகம்!

26.11.2024

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் வடமாகாண மரநடுகை மாதத்தைச் சிறப்பாகக் கடைப்பிடித்து வருகிறது. இதனை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் மலர்க் கண்காட்சி இம்முறையும் நவம்பர் மாதம்- 22 ஆம் திகதி முதல் நவம்பர் மாதம்- 30 ஆம் திகதி வரை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், இக்காலப் பகுதியில் புயலுடன் கூடிய மழை வடபகுதியைத் தாக்குமென வானிலையாளர்கள் கடுமையாக எச்சரித்திருந்ததன் காரணமாக கண்காட்சி ஏற்கனவே திட்டமிட்டவாறு இடம்பெறவில்லை.

இந் நிலையில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் ஏற்கனவே மரக்கன்றுகள் பெற்றுக் கொள்வதற்காகப் பதிவு செய்திருந்த பொதுமக்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் கந்தர் மடத்திலுள்ள தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் வைத்துப் பயன்தரு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மரக்கன்றுகளை ஏராளமானோர் தினமும் வந்து பெற்றுச் செல்கின்றனர்.



## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 70ஆவது பிறந்த நாளில் வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் பிறந்த நாள் விழா!

26.11.2024

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 70 ஆவது பிறந்த நாள் நிகழ்வு 26ம் திகதி இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவிஜி லிங்கம் மற்றும் ஊர் மக்கள் ஒன்று திரண்டு வே.பிரபாகரன் அவர்களுக்கு கேக் வெட்டியும், இனிப்பு மற்றும் மரக் கண்டுகள் வழங்கியும் எழுச்சியான முறையில் இப் பிறந்த நாள் கொண் டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பெற்றது.



அவருடைய பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக வல்வெட்டித்துறை தமிழீழத் தேசியத் தலைவரின் புகைப்படத்தினை கொண்ட பதாகை ஒன்றும் அச்சிடப்பட்டு அங்கு காட்சிப்படுத்தப் பட்டிருந்தது.




இதன் போது அங்கு வந்திருந்த வல்வெட்டித்துறை பொலிசார் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவருடை புகைப்படத்தினை பயன்படுத்த முடியாது என்றும், அதற்கு சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்திருந்தனர்.



இருப்பினும் அந்த புகைப்படத்தினை நீக்கிவிட்டு உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப பிறந்தநான் கொண்டாட்ட நிகழ்விவுகளை நடத்துங்கள் என்று பொது மக்களிடம் கோரிக்கை விடுத் திருந்தனர்.



அக் கோரிக்கையினை ஏற்ற மக்கள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் படத்தினை அகற்றிவிட்டு மனதார அவரை வாழ்த்தி அவரின் பிறந்த நாள் நிகழ்வு நடத்தப்பட்டது.

மேலும் இந் நிசகழ்வின் சிறப்பம்சமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் 70 ஆவது பிறந்த நாளை பிரதிபலிக்கும் வகையில் அவருடைய வீடு வளாகத்திற்குள் சிறு வர்கள் மற்றும் பொது மக்களால் 70 மரங்கள் நாட்டப்பட்டன.



இதுமட்டுமல்லாமல் 70 மாணவர்களுக்கான கல்வி உப கரணங்கள், 70 தென்னை மரக் கன்றுகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது




## தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2024

**www.sangathamil.ca**




# கனடிய தபால் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டம்!

15.11. 2024

கனடிய தபால் பணியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

தொழிற்சங்கத்திற்கும் தொழில் தருனருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்படாத காரணத்தினால் இந்த வேலை நிறுத்தம் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கனடிய தபால் திணைக்களத்தைச் சேர்ந்த 55000 பணியாளர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கனடாவில் விடுமுறைக் காலம் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டமானது சிறு வியாபார நிறுவனங்களை வெகுவாக பாதிக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

பணிப் புறக்கணிப்பு அல்லது தொழிற்சங்கப் போராட்டத்தினால் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவின் நியூ பிரவுன்ஸ்வீக்கில் தட்டம்மை நோய் அதிகரிப்பு!

04.11. 2024

கனடாவின் நியூ பிரவுன்ஸ்வீக் பிராந்தியத்தில் தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

கடந்த மூன்று தினங்களில் தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்ரிக்ஷன், அப்பர் செயின் ஜோன் ரிவர் வெலி ஆகிய பகுதிகளில் இவ்வாறு தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நியூ பிரவுன்ஸ்விக் பொதுச் சுகாதார அலுவலகம் இந்த தகவல்களை உறுதி செய்துள்ளது.

நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் நோயாளர் எண்ணிக்கை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொது சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

தட்டம்மை நோய் மிக வேகமாக ஒருவரிடம் இருந்து மற்றவர்களுக்கு மற்றொருவருக்கு பரவக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

தடுப்பூசிகளை உரிய முறையில் ஏற்றிக் கொள்வதன் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதற்கு முன்பதிவு செய்து கொண்டு தடுப்பூசிகளை முடிந்த அளவு ஏற்றுக் கொள்ளுமாறு பொதுச் சுகாதார அலுவலகம் பிரதேச வாழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

காய்ச்சல், இருமல், சளி உள்ளிட்ட சில நோய் அறிகுறிகள் இருந்தால் அது குறித்து அவதானத்துடன் இருக்குமாறு



அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பான வீதிகள் மற்றும் உறுதியான சமூகங்களுக்கு ஒன்ராரியோ முன்னுரிமை வழங்குகிறது!

20.11. 2024

ஒன்ராரியோ அரசு மாநிலமெங்கும் பொதுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கென "பாதுகாப்பான வீதிகள் மற்றும் உறுதியான சமுகங்கள்" எனும் சட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. வலிமை வாய்ந்த இச்சட்டமானது காவற்றுறை விசாரணையை வலுப்படுத்துவதற்கு வேண்டியவற்றை வழங்கவும், பாதிப்புக்குள்ளானவர்களுக்கு முறையான நீதியை வழங்கவும் உதவும். இவை தவிர, வாகனத் திருட்டு, வாகன அடையாள எண் (VIN) மோசடி, சட்டத்துக்குப் புறம்பான சஞ்சா விற்பனை உள்ளிட்ட குற்ற நடவடிக்கைகளுக்குக் கடும் தண்டனைகளை வழங்கவும் வழிவகுக்கும். பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, பள்ளிகள், குழந்தைப் பராமரிப்பு நிலையங்கள் போன்றவற்றுக்கு அருகில் கண்காணிக்கப்படும் (கஞ்சா) நுகர்வு மையங்களைத் தடை செய்வது போன்ற முக்கிய அம்சங்களையும் இச்சட்டம் முன்மொழிகிறது. அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், "உறுதியான ஒன்ராரியோ என்பது அதன் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளது. இச்சட்டமானது ஒன்ராரியோ மாநில மக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் நாம் கொண்டுள்ள உறுதியான நிலைப்பாட்டைக் காண்பிக்கிறது" என்றார். இம்முன்முயற்சியானது, ஒன்ராரியோ வாழ் மக்களுக்குப் பாதுகாப்பானதும், உறுதியானதும், விரைவில் மீண்டெழக்கூடியதுமான எதிர் காலத்தை உருவாக்குவதில் ஒன்ராரியோ அரசுக்குள்ள பொறுப்



புணர்வை வெளிக்காட்டுகின்றது.

# தமிழினப் படுகொலை தொடர்பான ஐநா விசாரணை, மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு; கனடாவில் கோரிக்கை!

20.11. 2024

தமிழினப் படுகொலை தொடர்பான விசாரணைகளை, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச நீதிமன்றதில் (International Court of Justice), கனடா முன்னெடுக்கவேண்டும் எனவும்

ஈழத் தமிழர்களுக்கான சுதந்திரமான, இறையாண்மை மிக்க நாட்டை உருவாக்க, அவர்களின் தாயக பூமியிலும், அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும், சர்வதேசக் கண்காணிப்புடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு கனடா முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கும் மனு இன்று கனேடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், நாட கடந்த தமிழீழ அரசாங்கம், மற்றும் கனடியத் தமிழ் மக்களால் தமிழினப் படுகொலைக்கு விசாரணை வேண்டிய மனுவும் (Petition e-5085 & e-4981)மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

LIBERAL கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் Shaun Chen அவர்கள் இன்று சபையில் இம்மனுக்களை சமர்ப்பித்து உரையாற்றினார்.

ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை உட்பட்ட குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என மனுவில் கோரப்பட்டுள்ளது.




www.sangathamil.ca

# இந்தியப் பிரதமர் மோடிக்கும் காலிஸ்தான் தலைவர் படுகொலைச் சதி தெரியும் குற்றம் சுமத்தும் கனடா!

21.11.2024

கனடாவில் கொலல்லப்பட்ட காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜாரைக் கொல்லும் சதி செயல் குறித்து இந்தியப் பிரதமர் மோடிக்கும் தெரியும் என்று கனடா ஊடகமான தி குளோப் அண்ட் மெயில் செய்தி வெளியிட்டுள்ளது.



பெயர் தெரிவிக்காத கனடா மூத்த தேசிய பாதுகாப்பு அதிகாரியை மேற்கோள் காட்டிவெளியிடப் பட்ட அந்த செய்தியில்,

இந்த சதித்திட்டத்தில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் வெளி விவகார அமைச்சர் ஆகியோரும் இருந்தனர் என்றும் தெரிவித்துள்ளது.

இதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்து இருக்கிறது. கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பு தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார்.

இதை இந்தியா திட்ட வட்டமாக மறுத்தது. இவ் விவகாரத்தால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே சமீபத்தில் நிஜ்ஜார் கொலை தொடர்பாக இந்திய தூதரக அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படும் என்று கனடா தெரிவித்தது.

அதன்பின் இந்திய உள்துறை மந்திரி அமித்ஷாவுக்கு தொடர்பு இருப்பதாகவும் கனடா குற்றம் சாட்டியது. இந்த நிலையில் தற் போது பிரதமர் மோடி மீதும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில்,




நாங்கள் பொதுவாக ஊடக அறிக்கைகள் குறித்து கருத்து தெரிவிப்பதில்லை. இருப்பினும் கனடா அரசாங்கம் ஆதாரம் இல்லாமல் ஒரு செய்தித்தாளில் கூறப்படும் இது போன்ற கேலிக் குரிய அறிக்கைகளை நிராகரிக்க வேண்டும்.

இதுபோன்ற அவதூறு பிரச்சாரங்கள் ஏற்கனவே சிதைந்து விட்ட இரு நாட்டு உறவுகளை மேலும் சேதப்படுத்து கின்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# இரண்டு மாத காலத்திற்கு பொருட்கள் சேவைகள் வரி சலுகை வழங்கப்படும் என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது!

21.11. 2024

கனடாவில் தற்பொழுது அறவீடு செய்யப்பட்டு வரும் பொருட்கள் சேவைகள் வரி குறிப்பிட்ட காலத்திற்கு விலக்கு அளிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஆளும் லிபரல் கட்சியும் என்.டி.பி கட்சியும் இது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதன்படி எதிர்வரும் புத்தாண்டு, நத்தார் பண்டிகையை காலப்பகுதியில் கனடிய நுகர்வோருக்கு இந்த சலுகை வழங்கப்பட உள்ளது.

சுமார் இரண்டு மாத காலத்திற்கு (டிசம்பர் 14, 2024 தொடக்கம் பெப்ரவரி 15, 2025) இவ்வாறு வரி சலுகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற ஏதுக்களி னால் சிரமங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சில வகைப் பொருட்களுக்கு இந்த வரி விலக்கு அறிவிக்கப்பட உள்ளது.

பியர், வைன், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட் களுக்கு இவ்வாறு வரிச் சலுகை வழங்கப்பட உள்ளது.



அரசாங்கத்தின் இந்த திட்டத்திற்கு ஆதரவளிக்கப்படும் என என்.டி.பி கட்சி தெரிவித்துள்ளது.

# "தமிழர்களிற்கு ஆதரவாகயிருப்பது குறித்து பெருமிதமடைகின்றோம்!

## ஒன்ராரியோவின் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சி மரிட்ஸ் டைல்ஸ் – புதிய ஜனநாயக கட்சி

21.11.2024

தமிழ் சமூகத்திற்கு ஆதரவாகயிருப்பது குறித்து பெருமிதம் கொள்வதாக கனடா ஒன்ராரியோவின் உத்தியோகபூர்வ எதிர்கட்சியின் மரிட்ஸ் டைல்ஸ் தெரிவித்துள்ளார்.



தமிழ்ஈழ தேசிய கொடி (21.11.2024) தினத்தை குறிக்கும் நிகழ்வு குறித்து விடுத்துள்ள செய்தியில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

இன்று தமிழீழ தேசிய கொடிதினத்தில், ஒன்ராரியோவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் நாங்கள் தமிழ் சமூகத்தின் வரலாற்றையும் கலாச்சாரத்தையும் கௌரவிக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய நாள் தமிழனப்படுகொலை மற்றும் முள்ளிவாய்க் கால் படுகொலை உட்பட தமிழ் மக்கள் பல தசாப்தங்களை அனுபவித்த வன்முறைகளை நினைவுகூரும் நாளாகும்.

இந்த அட்டுழியங்கள் நினைத்துப்பாக்கமுடியாத வலியை துயரத்தை ஏற்படுத்தின அதேவேளை இது தமிழ் சமூகத்தின் உறுதிப்பாட்டையும், வலிமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

தமிழ் சமூகம் நீதிமற்றும் மனித உரிமைகளிற்கான போராட்டத் திற்கான உத்வேகத்தை அளிக்கின்ற ஒரு சமூகம்.

புதிய ஜனநாயக கட்சியினராகிய நாங்கள் தமிழ் சமூகத்திற்கு ஆதரவாகயிருப்பது குறித்து பெருமிதம் கொள்கின்றோம்,



உங்கள் கலாச்சாரம் மீள்எழுந்தன்மை மற்றும் பங்களிப்புகள் எங்கள் மாகாணமான ஒன்டாரியோவை வளப்படுத்தி,எங்கள் அனைவருக்கும் சிறந்த இடமாக்குகின்றது.

இன்றைய நாளில் நாங்கள் செய்யப்பட்ட தியாகங்களை மீள நினைவுகூருவதுடன், நீதி சமாதானம் ஆகியவற்றிற்காக மீண்டும் அர்ப்பணித்துக்கொள்வோம்.

தமிழீழத் தேசிய மாவீரர் நாள் 2024

www.sangathamil.ca

# கனடிய தபால் திணைக்களம் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்குகின்றது!

24.11.2024

கனடிய தபால் திணைக்களம் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் தபால் திணைக்களப் பணியாளர்கள் பணிப்புறக் கணிப்பு போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக போட்டி நிறுவனங்களிடம் சேவை பெற்றுக் கொள்ள மக்கள் உந்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சுமார் 8 மில்லியன் பொதிகள் வேறும் சேவைகள் ஊடாக அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

இதனால் கனடிய தபால் திணைக்களம் பாரியளவு நட்டத்தை எதிர்நோக்க நேரிடலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் போராட்டம் இன்னமும் முடிவுக்குக் கொண்டு வரப்படவில்லை.

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகள் முன்வைக் கப்பட்டு தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கனடா, மெக்சிகோ மற்றும் சீனா மீது கடுமையான வரி விதிக்கப்படும்!

## அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்

26.11.2024

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் சட்டவிரோத போதைப் பொருள் வர்த்தகம் தொடர்பான கவலைகளை மேற்கோள் காட்டி, மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து அனைத்து பொருட்களுக்கும் 25% வரியும், சீனாவிலிருந்து வரும் பொருட் களுக்கு கூடுதலாக 10% வரியும் விதிக்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார் .

சனவரி 20 ஆம் திகதி, எனது பல முதல் நிர்வாக உத்தரவுகளில் ஒன்றாக, அமெரிக்காவிற்குள் வரும் அனைத்து பொருட் களுக்கும், அதன் அபத்தமான திறந்த எல்லைகளுக்கும் மெக் சிகோ மற்றும் கனடாவிற்கு 25% வரி விதிக்க தேவையான அனைத்து ஆவணங்களிலும் கையெழுத்திடுவேன் என்று டிரம்ப் சமூக ஊடகத்தில் பதிவிட்டுள்ளார்.

மெக்சிகோ வழியாக அமெரிக்காவிற்குள் சட்டவிரோத போதைப் பொருள் நுழைவதைத் தடுக்க சீனா போதுமான நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் விமர்சித்தார்.

அவர்கள் நிறுத்தும் வரை, அமெரிக்காவிற்குள் வரும் சீனா வின் பல தயாரிப்புகள் அனைத்திற்கும் மேலாக, கூடுதல் 10% வரியை நாங்கள் வசூலிப்போம் என்று டிரம்ப் எழுதினார்.



# அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு ஆபத்தானது!

## ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட்

26.11.2024

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள டொனால்ட் டிரம்பின் அறிவிப்பு அபாயகரமானது என கனடா தெரிவித்துள்ளது.

கனடா மேக்சிகோ ஆகிய நாடுகள் இருந்து ஏற்றுமதி செய்யப் படும் பொருட்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என என்ற யோசனையை ட்ரம்ப் முன்மொழிந்துள்ளார்.

ட்ரம்பின் இந்த யோசனையானது கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தை மிக மோசமாக பாதிக்கும் என முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

இதனால் கனடிய ஒன்ராரியோ மாகாண ஏற்றுமதி துறை பெரும் பின்னடைவை எதிர் நோக்க நேரிடலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குயின்ஸ்பார்க்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடமைகளைப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே வரிவிதிப்பு குறித்த நிறைவேற்று அதிகார உத்தரவு பிறப்பிக்கப்படும் என டிரம்ப் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வரி விதிப்பு மேற்கொள்ளப்பட்டால் மாகாணத்தின் பொருளாதாரத்திற்கு பாரிய பின்னடைவு ஏற்படும் எனவும் குறிப்பாக தொழில் வாய்ப்புகளுக்கு பெரும் தாக்கம் ஏற்படும் எனவும் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.













“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# தமிழக செய்திகள்



# இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியையும் கவலையையும் தருகின்றன!

**மதிமுக பொதுச் செயலாளர் வைகோ**

16.11. 2024

மிகக் கொடூரமான தமிழினப் படுகொலைக்கு ராஜபக்சே அரசு காரணம் என்றாலும், ஈழத்தமிழர் பிரச்சினையில் சிங்கள இனவாத வெறிகொண்ட ஜே.வி.பி. கட்சியினுடைய குரலாக, தமிழர்களுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டு வந்தவர்தான் இன்றைய அதிபர் அநுர குமார திசநாயகா.

அவரது கட்சியான தேசிய மக்கள் சக்தி கட்சி, ஜே.வி.பி.யினுடைய மறு பதிப்பாகும்.

தொடக்கத்திலிருந்தே தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற கொலைவெறி நோக்கம் கொண்டவர்தான் திசநாயகா.

இலங்கையில், நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தம் உள்ள 225 தொகுதிகளில், அவரது கட்சி 159 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறது. தமிழர்கள் ஏமாந்துவிட்டார்கள்.

1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டபோது, தமிழர்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடாது என்றும், 13 ஆவது சட்டத் திருத்தத்தை ஏற்கக் கூடாது என்றும் சிங்கள இனவெறியினுடைய கருத்தாக தொடர்ந்து கூறிவந்தவர் திசநாயகா.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கக் கூடாது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவரும் அவர்தான்.

சுனாமிப் பேரலை இலங்கையைத் தாக்கியபோது, தமிழர்களுக்கு எந்த நிவாரணமும் கொடுக்கக் கூடாது என்று பகிரங்கமாக கூச்சலிட்டவர்தான் திசநாயகா.

இந்திய அரசு தொடர்ந்து சிங்கள அரசையே ஆதரித்து வந்திருக்கின்ற நிலையை இனிமேல் மாற்றிக் கொள்ள வேண்டும். சிங்கள இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து வெளியேற்றப்பட வேண்டும். சிறையில் அடைபட்டுள்ள தமிழர்கள் விடுவிக்கப்பட வேண்டும். தமிழினப் படுகொலையை நடத்திய சிங்கள அரசு மீது அனைத்துலக நாடுகளின் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இதற்கு முந்தைய அதிபர்கள் தமிழர்களுக்கு எதிராக கொடும் குற்றங்களை செய்திருந்தாலும், அவர்களைவிட சிங்கள வெறி பிடித்தவர்தான் இன்றைய அதிபர்.

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமாக இடங்களில் வெற்றி பெற்று இருப்பதால், கொடிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர அவர் முற்படுவார்.

சிங்கள அரசோடு மிகுந்த அக்கறையோடு உறவு கொண்டுள்ள இந்திய மோடி அரசு, இனிமேலாவது ஜெனிவா மனித உரிமைக் கவுன்சிலில் சிங்கள ஆதரவு நிலையை எடுக்கக் கூடாது.

ஒரு இலட்சத்து 37 ஆயிரம் ஈழத்தமிழர்களை படுகொலை செய்த சிங்கள அரசு, ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்களை நாசமாக்கி, அவர்களது உயிர்களையும் பறித்த சிங்கள அரசு பன்னாட்டு நீதிமன்றக் குற்றக்கூண்டில் நிறுத்தப்படுகிற வரை, சுயநிர்ணய உரிமைக்காக பொதுவாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தாய்த் தமிழகத்துத் தமிழர்களும், உலகுவாழ் தமிழர்களும் பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கும், பன்னாட்டு நீதி விசாரணை நடத்துவதற்கும் ஓங்கிக் குரல் கொடுக்க வேண்டும் அழுத்தம் தர வேண்டும்.

தமிழர்கள் சிந்திய இரத்தத்தையும், உயிர்ப்பலியையும், ஈழத்



தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்ததோடு, தீக்குளித்து உயிர்களையும் தந்த தியாகத்தை ஒருபோதும் நாம் மறந்து விடக் கூடாது.

தமிழீழத்தில் 90 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்.

பாலஸ்தீனத்திற்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் இந்திய அரசும், ஏனைய நாடுகளின் அரசுகளும் ஈழத்தமிழர் பிரச்சினையில் மட்டும் துரோகம் செய்வது ஏன்?

தமிழ்நாட்டுத் தமிழர்களும், உலகுவாழ் புலம்பெயர் தமிழர்களும் நம் இனத்தைக் காப்பாற்ற ஒன்றுபட்டு உலக அரங்கில் குரல் எழுப்ப வேண்டும். இந்திய அரசு ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்யக் கூடாது.

ஈழத்தமிழர் பிரச்சினை தீர்வுக்கு வரவில்லை. அந்த உணர்வோடு தொடர்ந்து நாம் தமிழீழத்தை ஆதரிக்க வேண்டும்.

# தமிழகத்தில் மருத்துவமனைகள் இருக்கிறது: போதிய மருத்துவர்கள் இல்லை!

18.11.2024

மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் பற்றாக்குறையால் அரசு மருத்துவமனைகள் தள்ளாட்டத்தில் உள்ளன. இதனால், உரிய நேரத்தில் உரிய சிகிச்சை கிடைக்காமல் சாமானியர்கள் சாபம் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 11 ஆயிரம் அரசு மருத்துவமனைகள் உள்ளன. ஆனால், தினமும் இலட்சக்கணக்கான மக்களுக்கு வைத்தியம் பார்க்கும் இந்த மருத்துவமனைகளில் சுமார் 20 ஆயிரம் மருத்துவர் பணியிடங்கள் மட்டுமே உள்ளது. அதிலும், சுமார் 4 ஆயிரம் பேர் பற்றாக்குறை. செவிலியர்களும் போதிய எண்ணிக்கையில் இல்லை.

இதனால், உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகள் கிடைக்காமல் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதர பணியாளர்களுக்கும் பஞ்சமாக இருப்பதால் அரசு மருத்துவமனைகள் சுகாதார சீர்கேட்டில் சிக்கித் தவிக்கின்றன. அண்மையில் ஆய்வுக் கூட்டம் நடத்திய தமிழக சுகாதாரத்துறை செயலாளர் சுப்ரியா சாஹு, அரசு மருத்துவமனைகளில் இருக்கும் சுகாதாரமற்ற கழிப்பறைகள், கழிவுநீர் தேக்கம் உள்ளிட்ட அனைத்து குறைபாடுகளையும் சரிசெய்யுமாறு அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் டீன்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகள், சுகாதாரம், உணவின் தரம் ஆகியவற்றை மாதம் ஒருமுறை கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்கவும் மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநருக்கு அறிவுறுத்தினார். சுகாதாரத்துறையின் இந்த நடவடிக்கையை அரசு மருத்துவர்கள் வரவேற்றுள்ளனர்.

இதுதொடர்பாக அரசு மருத்துவர்களுக்கான சட்டப்போராட்டக் குழு தலைவர் மருத்துவர் எஸ்.பெருமாள் பிள்ளையிடம் கேட்டபோது, “தமிழகத்தில் புதிதாக அரசு மருத்துவமனைகளும், கூடுதல் கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகிறது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக புதிதாக மருத்துவர் பணியிடங்கள் உருவாக்கப்படவில்லை. 10 ஆண்டுகளில் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துவிட்டது. அதற்கு ஏற்ப மருத்துவர், செவிலியர், இதர பணியாளர் பணியிடங்களை உருவாக்க வேண்டும்.

தற்போது தமிழகம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. 850 மகப்பேறு மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் குறைவான அளவே மருத்துவர்கள் உள்ளனர். அரசு மருத்துவமனைகளில் தினமும் சுமார் 2 ஆயிரம் பிரசவங்கள் நடைபெறுகிறது. அதனால், அங்கு மகப்பேறு மருத்துவர் பணியிடங்களை 2 ஆயிரமாக அதிகரிக்க வேண்டும்” என்றார்.

இதனிடையே, மருத்துவர்கள், செவிலியர்கள் பற்றாக்குறை தொடர்பாக அண்மையில் பேட்டியளித்த சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், “கரோனா காலத்தில் 1,412



செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். அவர்களில் 1,271 பேர் காலியாக உள்ள நிரந்தர செவிலியர் பணியிடங்களில் நியமிக்கப்படவுள்ளனர்.

காலியாக உள்ள 2,553 மருத்துவர் பணியிடங்களை நிரப்ப 24 ஆயிரம் மருத்துவர்கள் பங்கேற்கும் ஆன்லைன் தேர்வு ஜனவரி 27-ல் நடைபெறவுள்ளது. அதேபோல் 1,066 சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள், 2,250 கிராம சுகாதார பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படவுள்ளன” என்றார்.

சாமானியர்களுக்கும் தரமான மருத்துவம் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அரசு மருத்துவமனைகளின் தரத்தை உயர்த்தி வருகிறது அரசு. அப்படி இருக்கையில், மருத்துவர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் பற்றாக்குறையால் அந்த நோக்கம் சிதைந்துவிடக் கூடாது!

**நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.**

## தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள் அகவை 70

# பரந்தூர் விமான நிலையத்தை எதிர்த்து ஏகனாபுரம் ஊராட்சி துணைத் தலைவர் தற்கொலை (?)

20.11.2024

ஏகனாபுரம் ஊராட்சி துணைத் தலைவர் திவ்யா (35) நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டார். பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிராக இவர் 9 முறை தீர்மானம் நிறைவேற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.




சென்னையின் 2-வது விமான நிலையம் காஞ்சிபுரம் அருகே உள்ள பரந்தூரில் அமைகிறது. இதற்காக பரந்தூர் மற்றும் சுற்றியுள்ள 13 கிராமங்களில் இருந்து 5,000 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட உள்ளன. ஏகனாபுரம் உள்ளிட்ட சில கிராமங்கள் முழுமையாக கையகப்படுத்தப்பட உள்ளன. இதனால் இந்த கிராமத்தை மையமாகக் கொண்டு 2 ஆண்டுகளாக போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்த போராட்டத்தில் பங்கேற்று வந்தவர் கணபதி.

இவரது மனைவி திவ்யா(35). ஏகனாபுரம் ஊராட்சி துணைத் தலைவராக இருந்த இவர், பரந்தூர் விமான நிலையத்துக்கு எதிராக 9 முறை தீர்மானம் நிறைவேற்ற உதவியாக இருந்தவர். இந்நிலையில், நேற்று முன்தினம் திவ்யா திடீரென தூக்கிட்டு தற்கொலை(?) செய்து கொண்டார். பரந்தூர் விமான நிலையத்துக்கு நிலம் எடுக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்படுவதால் திவ்யா மன உளைச்சலில் இருந்ததாகவும், அதனாலேயே அவர் தற்கொலை செய்து கொண்டதாகவும் போராட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர். தற்கொலை செய்து கொண்ட திவ்யாவுக்கு இரு மகன்கள், ஒரு மகள் உள்ளனர்.




திவ்யா குடும்ப பிரச்சினை காரணமாகவே தற்கொலை செய்து கொண்டார் என்றும், விமான நிலைய திட்டத்தை எதிர்த்து அவர் தற்கொலை செய்து கொள்ளவில்லை என்றும், அதுபோல கடிதம் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும் பொலீசார் தெரிவித்துள்ளனர். தற்கொலை தொடர்பாக பொலீசார் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பூம்புகார், லெமூரியா குறித்து கடல் அகழ்வாராய்ச்சி: விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி. விசுவநாதன் வலியுறுத்தல்!

21.11.2024

பூம்புகார், லெமூரியா கண்டம் குறித்து கடல் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஜி.விஸ்வநாதன் வலியுறுத்தினார். தமிழியக்கம், தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக தமிழியல் மற்றும் பண்பாட்டுப்புலம் சார்பில் சிந்து சமவெளி ஆய்வு நூற்றாண்டு விழா கருத்தரங்கம் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள திறந்தநிலை பல்கலைக்கழக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது.

இக்கருத்தரங்கை அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ்.ஆறுமுகம் தொடங்கிவைத்தார். இதில் தமிழியக்கம் அமைப்பின் நிறுவனரும், வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தருமான ஜி.விஸ்வநாதன் தலைமையுரை ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

ஏறத்தாழ 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது சிந்து சமவெளி நாகரிகம். சிந்துவெளி மக்களின் மொழி குறித்த மதிப்பீட்டில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் அல்ல, சிந்துவெளி மக்கள் ஆரியர்களோ அல்லது ஆரியர்களின் கலப்பினமோ அல்ல. சிந்துவெளி மக்களின் மொழி சமஸ்கிருதம் அல்ல என்பதில் ஆய்வாளர்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர்.

திராவிட மொழி என்ற கருத்தாக்கத்தை 1856-லேயே முன்மொழிந்தவர் ராபர்ட் கால்டுவெல். தற்போது சிலர், திராவிடம் என்பது வேறு தமிழ்த்தேசியம் என்பது வேறு என்று பேசுகிறார்கள். திராவிட இயக்கம் என்பது திமுக, அதிமுக இரு கட்சிகள் அல்ல. திராவிட இயக்கத்துக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. தமிழ்ப் பண்பாட்டை உள்ளடக்கிய, வடமொழி இல்லாத தமிழ்த்தேசியத்தை உருவாக்கியது திராவிட இயக்கம் தான். 1937-ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியது இந்த இயக்கம்தான்.

சிந்து சமவெளி நாகரிகத்தை பறைசாற்றும் மொகஞ்சதாரோவும், ஹரப்பாவும் இன்றைய பாகிஸ்தானில் உள்ளன. எனவே, அந்த இடங்களை நாம் எளிதாக சென்று பார்க்க முடியவில்லை. அவற்றை பார்ப்பதற்கு மத்திய-மாநில அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். அதோடு பூம்புகார், லெமூரியா கண்டம் குறித்து கடல் அகழ்வாராய்ச்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

மத்திய அரசின் தொல்லியல் இயக்குநர் கே.அமர்நாத் ராமகிருஷ்ணா, 'சிந்து சமவெளி நாகரிக சிறப்புகளும், கீழடி தொடர்புகளும்' என்ற தலைப்பில் பேசும்போது, "வரலாறு என்பது உண்மைகளைச் சொல்ல வேண்டும். சிந்து சமவெளியில் வாழ்ந்த மக்கள் திராவிடர்கள் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

'சிந்து சமவெளி நாகரிகத்தில் திராவிடர் பண்பாடு' என்ற




தலைப்பில் வரலாற்று ஆய்வாளர் சூரியா சேவியரும், 'சிந்து சமவெளி ஆய்வு வரலாற்றுத் திருப்பம்' என்ற தலைப்பில் பேராசிரியர் அ.கருணானந்தனும், ஹசிந்து சமவெளியின் தொல்லியல் ஆய்வு' என்ற தலைப்பில் கல்வெட்டு ஆய்வாளர் ஆ.பத்மாவதியும் உரையாற்றினர்.

தமிழியக்கம் பொதுச்செயலாளர் பேராசிரியர் அப்துல் காதர், துணைத் தலைவர் சிவாலயம் ஜெ.மோகன், துணை அமைப்புச் செயலாளர் மு.சிதம்பரபாரதி ஆகியோர் வாழ்த்திப் பேசினர். முன்னதாக தமிழியக்கம் அமைப்புச் செயலாளர் கு.வணங்காமுடி வரவேற்றார். பல்கலைக்கழக தமிழியல் துறையின் தலைவர் பேராசிரியர் சு.பாலசுப்பிரமணியன் கருத்தரங்க அறிமுகவுரை ஆற்றினார். நிறைவாக, உதவிப் பேராசிரியர் மு.வையாபுரி நன்றி கூறினார்.

# கூட்டுறவு சங்கப் பணியாளர்களை சொந்த ஊருக்கு அருகில் பணியமர்த்த வேண்டும்!

## பாமக நிறுவனர் மருத்துவர் இராமதாஸ்

25.11.2024

கூட்டுறவு சங்கப் பணியாளர்களை சொந்த ஊருக்கு அருகில் பணியமர்த்த வேண்டும் என பாமக நிறுவனர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "கூட்டுறவு சங்கப் பணியாளர்களில் பெரும்பான்மையினருக்கு அவர்களின் சொந்த ஊர்கள் மற்றும் வசிப்பிடத்திலிருந்து 100 கி.மீ தொலைவுக்கு அப்பால் பணியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பணியாளர்களில் பெரும்பான்மையானவர்கள் நீரிழிவு நோய் உள்ளிட்ட பல்வேறு தொற்றாநோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்கள் மாற்றுத் திறனாளிகளாக உள்ளனர்.

அவர்களால் ஒவ்வொரு நாளும் 100 கி.மீ தொலைவுக்கு சென்று வருவது சாத்தியமில்லை. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மிகவும் குறைவு என்பதால் அவர்களால் பணி செய்யும் இடத்தில் வாடகைக்கு வீடு எடுத்து தங்குவதும் சாத்தியமில்லை.

நியாயவிலைக்கடை பணியாளர்கள், கட்டுனர்கள் உள்ளிட்ட கூட்டுறவு சங்கப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படும் போது அவர்களின் வசிப்பிட தொலைவு கருத்தில் கொள்ளப்படாதது தான் அனைத்து சிக்கல்களுக்கும் காரணம் ஆகும். தொலைதூரத்தில் பணியாற்றும் பணியாளர்கள் இயன்றவரை தங்களின் வசிப்பிடத்திற்கு அருகில் பணியிட மாற்றம் வழங்கும்படி மாவட்ட இணைப்பதிவாளர்களிடம் பலமுறை மனு கொடுத்தும் எந்தப் பயனும் இல்லை.

இந்த சிக்கலுக்கு தீர்வு காண்பது மிகவும் எளிதானது. 2024-ஆம் ஆண்டில் கூட்டுறவுப் பணியாளர்கள் புதிதாக தேர்வு செய்யப்படுவதற்கு முன்பாக, இருக்கும் காலிப் பணியிடங்களில், தொலைதூரங்களில் பணியாற்றும் பணியாளர்களை அவர்



களின் விருப்பத்தை அறிந்து மாற்றி அமர்த்த வேண்டும். அதன் பின்னர் புதிய காலியிடங்களை கண்டறிந்து அவற்றுக்கு புதிய பணியாளர்களை தேர்வு செய்து நியமிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# உலக செய்திகள்

## நியூசிலாந்து பாராளுமன்றத்தில் சட்டமூலத்தை கிழித்தெறிந்த இளம் பாராளுமன்ற உறுப்பினரான ஹனா-ரவ்ஹிதி கரேரிகி மைபி-கிளார்க்!

16.11.2024

நியூசிலாந்து பாராளுமன்றத்தில் மாவோரி பழங்குடியினத்தைச் சேர்ந்த இளம் உறுப்பினரான ஹனா ரவ்ஹிதி கரேரிகி மைபி-கிளார்க் , ஹக்கா எனப்படும் பழங்குடி நடனம் ஆடி சர்ச்சைக் குரிய சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு, சட்ட நகலை பாராளுமன்றத்தில் கிழித்த சம்பவம் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்நிலையில், நியூசிலாந்து அரசியல் வரலாற்றில் முக்கியத் துவம் வாய்ந்த வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற் றங்களை கொண்டு வருவதற்காக நியூசிலாந்து ஆளும் கூட் டணியில் ஏசிடி கட்சி முன்மொழிவை கொண்டு வந்து வாக் கெடுப்பிற்கு அழைப்பு விடுத்தது.

அதன்படி, நேற்று நியூசிலாந்து பாராளுமன்றத்தில் வைதாங்கி உடன்படிக்கையின் சில மாற்றங்களை கொண்ட வாக்கெடுப்பு நடைபெற்றது. அப்போது, நியூசிலாந்து நாட்டின் பூர்வ குடிக ளான மாவோரி பழங்குடியினத்தைச் சேர்ந்த இளம் உறுப்பினர், ஹக்கா எனப்படும் மாவோரிகளின் நடனம் ஆடி எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

ஹனா-ரவ்ஹிதி கரேரிகி மைபி-கிளார்க் எனும் 22 வயதான இளம் உறுப்பினர், தனது கன்னி உரையின் போதே மாவோரி மொழியில் பேசியது நியூசிலாந்து மட்டுமல்லாது உலக அளவில் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.



## ராஷ்யாவிற்குள் ஏவகணைகள் மூலம் தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு ஜே பைடன் பச்சைக்கொடி!

18.11. 2024

ரஷ்ய பிரதேசத்திற்குள் நீண்ட தூர இலக்குகளைத் தாக்கி அழிக்கும் அமெரிக்க ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகளை வெள்ளை மாளிகை நீக்கியுள்ளதாகக் சில ஆதாரங்களை மேற்கோள் காட்டி நியூயார்க் டைம்ஸ் நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இதேநேரம் ரஷ்யாவை தாக்க அமெரிக்கா வழங்கிய நீண்ட தூர ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்த அமெரிக்க அதிபர் ஜே பைடன் பச்சைக்கொடி காட்டியுள்ளார். அமெரிக்க அதிகாரி ஒருவர் இத்தகவலை உறுதி செய்துள்ளார்.

உக்ரைனின் நட்பு நாடுகள் ரஷ்யாவுக்குள் நீண்ட தூதர இலக் குகளை இலக்கு வைத்து தாக்குதலை நடத்துவதற்கு முன்னர் தங்கள் ஆயுதங்களை பயன்படுத்துவதற்கு உக்ரைனுக்கு தடை செய்திருந்தனர்.

இப்போது, உக்ரேனியப் படைகள் வரும் நாட்களில் ரஷ்ய இலக் குகளுக்கு எதிராக 306 கிலோ மீற்றர் தூரம் வரையிலான வரம்பைக் கொண்ட அமெரிக்கத் தயாரிப்பான ATACMS ரொக் கெட்டுகளைப் பயன்படுத்த உள்ளதாக ஆதாரங்கள் கூறு கின்றன.

இச்செய்திக்கு வெள்ளை மாளிகை உடனடியாக கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

ஜோ பிடனுக்குப் பதிலாக டொனால்ட் டிரம்ப் அமெரிக்க அதிபராக வருவதற்கு சில மாதங்களுக்கு முன்பு இந்த அறிக்கை வந்துள்ளது.

ஜனவரி தொடக்கத்தில் பதவியேற்பதற்கு முன்பே உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என்று டிரம்ப் கூறினார்.

உக்ரைன் அமெரிக்க ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான வரம்புகளை தளர்த்துவது ஒரு பெரிய விரிவாக்கத்தை பிரதி பலிக்கிறது என்று ரஷ்யா எச்சரித்துள்ளது.



## இசுரவேல் பிரதமர் மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை!

21.11. 2024

இசுரவேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் போர் நடைபெற்று வருகிறது. போர் நிறுத்தம் செய்யுமாறு ஹமாஸ் அமைப்பையும், இசுரவேலை யும் அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இருப்பினும் இரண்டு பேரும் அதற்குச் செவிசாய்க்காமல் தொடர்ந்து தாக்குதலை நடத்திக்கொண்டே இருக்கின்றனர்.

ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து காசா மீதும் தொடர் தாக் குதலை நடத்திவரும் இசுரவேல் நாளுக்கு நாள் தாக்குதலை யும் தீவிரப்படுத்தியே வருகிறது. இசுரவேல் நடத்திய தாக் குதலால், காசா பகுதியில் இருந்த சுமார் 44,056 பேர் கொல்லப்பட்டதாகவும், 1,04,268 பேர் காயமடைந்துள்ள தாகவும் ஹமாஸ் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த போரில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும், போர் குற்றங்கள் நடந்ததாகவும் பல நாடுகள் விமர்சனம் செய்து வந்தன. இது தொடர்பான வழக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில், இந்த வழக்கில் தற்போது இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாகு, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் மற்றும் ஹமாஸ் தலைவர் முகமது தியாப் இப்ராஹிம் அல்-மஸ்ரி ஆகி யோருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை



பிறப்பித்துள்ளது.

www.sangathamil.ca

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# உக்ரைன் மீது கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்திய ரஷ்யா!

21.11.2024

உக்ரைன் மீது ரஷ்யா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை மூலம் தாக்குதலை நடத்தியதாக உக்ரைனின் விமானப்படை தெரிவித்தது.

இன்று வியாழக்கிழமை உக்ரைனின் டினிப்ரோவை குறிவைத்து அஸ்ட்ராகான் பகுதியில் இருந்து கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை (ICBM) ரஷ்யா ஏவியதாக உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

இது உண்மையாக இருந்தால் போரில் முதல் முறையாக கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை பயன்படுத்தும் நாடாக ரஷ்யா இருக்கிறது. இது பல்லாயிரக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் சென்று பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் திறன் கொண்டவை.

இந்த தாக்குதலின் போது ஆறு Kh-101 க்ரூஸ் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதாகவும் உக்ரைன் இராணுவம் கூறுகிறது.

இந்த ஏவுகணை எந்த இலக்கைக் குறிவைத்து தாக்கியது. அதனால் எந்தவகையான சேதங்கள் ஏற்பட்டவை என்பதை உக்ரைன் இராணுவம் இதுவரை தெரிவிக்கவில்லை.

அமெரிக்கா உக்ரைனுக்கு ATACMS போன்ற நீண்ட தூர ஏவுகணைகளைப் பயன்படுத்த அனுமதி வழங்கிய சில நாட்களுக்குப் பின்னர் ரஷ்ய இராணுவத் தளங்களை குறிவைக்க உக்ரைன் இந்த வார தொடக்கத்தில் ஏவுகணைத் தாக்குதல்களை நடதியதாகக் கூறப்படுகிறது.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் சாத்தியமான ICBM தாக்குதல் குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார். அது பற்றிய கேள்விகள் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

ரஷ்யப் படைகள் இரண்டு பிரிட்டிஷ் தயாரிக்கப்பட்ட Storm Shadow குரூஸ் ஏவுகணைகளை இடைமறித்ததாகக் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் கூறியது. ஆனால் அந்த ஏவுகணைகள் உக்ரேனிய அல்லது ரஷ்ய பிரதேசத்தின் மீது சுடப்பட்டதா என்பதைக் குறிப்பிடவில்லை.



ரஷ்ய வான் பாதுகாப்புப் படைகள் இரண்டு பிரிட்டிஷ் தயாரிப்பான Storm Shadow Cuise Missiles, 6 US தயாரிப்பான HIMARS ரியாக்டிவ் ஏவுகணைகள் மற்றும் 67 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது என்று ரஷ்ய இராணுவம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# தமிழீழத் தேசியக் கொடி நமது தேசத்தின் இறைமையை பிரதிபலிப்பதாக அமைகிறது!

## பிரதமர் விசுவநாதன் ருத்ரகுமாரன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

21.11.2024

**நவம்பர் 21. இன்று தமிழீழத் தேசியக்கொடி நாள்.**



1990 ஆம் ஆண்டு இரண்டாவது தமிழீழத் தேசிய மாவீரர் நாளையொட்டி நமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் தமிழீழத் தேசியக்கொடி அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இத் தமிழீழத் தேசியக்கொடி பிரகடனம் செய்யப்பட்ட நாளாக நடிம்பர் 21 அமைகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 21 ஆம் நாளை, தமிழீழத் தேசியக்கொடி நாளாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை பிரகடனம் செய்திருக்கிறது. இவ் வருடம் தமிழீழத் தேசியக் கொடி நாள் நான்காவது ஆண்டாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் கொண்டடாடப்படுகிறது.

«தேசிய சுதந்திரத்தை வேண்டி நிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்துக்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக் காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது « எனத் தமிழீழத் தேசியக் கொடி அறிமுகம் செய்யப்பட்டமை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தெரிவித் திருந்தது.

தமிழீழ மக்களுக்கு உரித்தான தாயகப்பூமியினையும், தமிழீழத்தில் சமூகநீதி நிலவுகின்ற சமுதாயம் உருவாக வேண்டும் என்ற விருப்பினையும், எத்தகைய துன்பம் வந்தாலும் விடுதலையில் உறுதியுடன் செயற்படும் உறுதியினையும் வெளிப்படுத்தும் வகையில் தேசியக்கொடியின் நிறங்களாக மஞ்சள், சிவப்பு கறுப்பு, வெள்ளை நிறங்கள் அமைந்துள்ளன.

தமிழீழத் தேசியக்கொடி நமது மாவீரர்களின் ஈகத்தை, நமது தாயகத்தை, நமது மொழியை, நமது பண்பாட்டை, நமது பாரம்பரியத்தை, நமது தேசிய வாழ்வை, நமது தேசத்தின் இறைமையை பிரதிபலிப்பதாக அமைகிறது.

உலகின் பல நாடுகளும் தேசங்களும் தமது தேசியக்கொடிக்காக ஒரு நாளைப் பிரகடனம் செய்து கொண்டாடி வருகின்றன. சுதந்திரவேட்கையுடன், தனக்கென சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை அமைக்க வேண்டும் என்ற வேணவா கொண்ட தமிழீழத் தேசமும் தமிழீழத் தேசியக்கொடி நாளைக் கொண்டாடுவது சிறப்பு மிகுந்த நிகழ்வாகும். அரசற்ற தேசங்கள் தமக்கான அரசை அமைக்கும் உந்துதலையும் உற்சாகத்தையும் பட்டொளி வீசிப் பறக்கும் தேசியக்கொடி அளிக்கிறது.

இவ் வருடம் நமது தேசியக் கொடி நாளான நவம்பர் 21 ஆம் நாளில் சிறீலங்கா நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு இடம் பெறுகிறது. நாம் சிறீலங்காவின் 1972, 1978 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புகள் தமிழ் மக்களின் ஒப்புதல் பெறப்படாதவை என்பதனை மீள மீள சொல்லி வந்திருக்கிறோம். இதனால், சிறீலங்கா நாடாளுமன்றம் ஈழத் தமிழ் மக்களை ஆளுகை செய்வதற்கான அரசியல் ஒப்புதல் அற்றது.

சிறீலங்கா நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நடைபெறும் போது தமிழ் மக்கள் தழிழீழத் தேசியக் கொடி நாளைக் கொண்டாடுவது தற்செயலாக அமைந்தாலும் அது ஒரு செய்தியை உரத்து முரசறைகிறது.

ஈழத் தமிழ் மக்கள் சிறீலங்காவின் நாடாளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் சுதந்திர வேட்கையுடன் தமது விடுதலைப் பயணத்தைத் தொடர்வார்கள் என்பதே அச் செய்தி.

தேசிய விடுதலையை மட்டுமன்றி சமூக விடுதலையை எட்டியவர்களாய், தமிழீழ மக்கள் வாழ்வதற்கு சமத்துவமும் சமூக நீதியும் நிலவும் புரட்சிகர சமூகத்தை உருவாக்கும் அரசியல்




இலக்கின் சாட்சியாக,எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு விடுதலைய அடைய வேண்டும் என்ற மக்களின் உறுதியின் குறியீடாகத் தமிழீழத் தேசியக்கொடி நிமிர்ந்து நிற்கிறது.

நமது தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ மக்கள் அனைவரும் உணர்வோடும் எழுச்சியோடும், தமழீழத் தனியரசை அமைத்திடும் உறுதியோடும் நம் கைகளில் ஏந்தி நிற்க வேண்டும்.

தமிழீழத் தேசியக் கொடி மற்றைய நாட்டுக் கொடிகளுடன் கம்பீரமாக ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் பறக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
நன்றி.
விசுவநாதன் ருத்ரகுமாரன்
பிரதமர்
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

*மலைபோல மக்கள் சக்தி எமக்கு பின்னால் இருக்கும் வரை, எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.*

# தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்

# அகவை 70


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
Arasan
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள்
அனைத்து வீட்டு
வேலைகளிற்கும்
அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்தபடி
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# “சருகாக நெரிபட்ட தமிழனை மலையாக நிமிரச் செய்தவர்கள் மாவீரர்கள்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்றைய நாள் மாவீரர் நாள். இன்றைய நாளை நாம் எமது தியாகிகளின் திருநாளாக, எமது தேசத்தின் பெருநாளாக, எமது போராட்டத்தின் எழுச்சி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசம் விடுதலைபெற வேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, தன்னாட்சி உரிமைபெற்று தன்மானத்துடன் வாழவேண்டும் என்ற உயரிய இலட்சியத்திற்காகத் தமது இன்னுயிரை ஈகம் செய்த எம்முயிர்ப் போராளிகளை, நாம் எமது இதயக் கோவிலில் பூசிக்கும் புனித நாள் இன்று.

உலக வரலாற்றில் எங்குமே, எப்பொழுதுமே நிகழ்ந்திராத அற்புதமான தியாகங்கள் இந்த மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. மனித ஈகத்தின் உச்சங்களை எமது போராட்ட வரலாறு தொட்டு நிற்கினறது. இந்த மகோன்னதமான தியாக வரலாற்றைப் படைத்தவர்கள் எமது மாவீரர்கள்.

விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம்; நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.

தமிழர் வரலாற்றில் என்றோ மாண்டு போன வீர மரபு மீண்டும் மறுபிறப்பு எடுத்தது; அடிமைத்தனத்தின் அமைதியைக் குலைத்துக் கொண்டு ஒரு புயல் எழுந்தது. சருகாக நெரிபட்ட தமிழன், மலையாக எழுந்து நிமிர்ந்தான்; அடிமை விலங்குகளால் பிணைக்கப்பட்டு, நீண்ட நெடுங்காலமாகத் தூங்கிக்கொண்டிருந்த தமிழ்த் தேசம் விழித்துக் கொண்டது. இந்தத் தேசிய எழுச்சிக்கு மூச்சாக இருப்பவர்கள் எமது மாவீரர்கள்.

எமது விடுதலைக் காப்பியத்தின் ஒவ்வொரு அத்தியாயத்திலும், ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பந்தியிலும் எமது மாவீரர்களின் தியாக வரலாறு நெருப்பு வரிகளால் எழுதப் பட்டிருக்கிறது.

விடுதலைக்காக, எமது தேசம் மதிப்பிடமுடியாத பெரு விலையைக் கொடுத்திருக்கிறது; விடுதலைக்காக, இந்த மண்ணில் இரத்த ஆறு ஓடியிருக்கிறது; விடுதலைக்காக, இந்தப் பூமி ரணகளமாக மாறியிருக்கிறது; விடுதலைக்காக, எமது வீரர்கள் இன்றும் செத்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலத்தில் புதையுண்டிருக்கும் ஆயிரமாயிரம் சமாதிக் கற்களும் விடுதலையையே குறியீடு செய்து நிற்கின்றன. வீதிகளில், சந்துகளில், சுவர்களில் நாம் சந்திக்கும் மாவீரர்களது திருவுருவங்களும் விடுதலையின் சாட்சிகளாகவே எமக்குக் காட்சி தருகின்றன.

குறிப்பு: தமிழீழ தேசியத் தலைவரின் அவர்களின், 1994ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் இருந்து.






எமக்கு ஒரு நாடு வேண்டும்
எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்
எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும்
என்ற ஆக்கிரோசமான இலட்சிய வேட்கையுடனே,
மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள் எனவே எமது
மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின்
விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப்
பிரகடனமாகவே சம்பவிக்கின்றது

*தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்*

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிளிரும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
Tankless Water Heater 25 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
25 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

என்ன நினைத்தேன், என்ன மறந்தேன்?
எண்ணப்பயிரினில் ஏனிந்தக் கருகல்?
போகமுடிந்த என் தேசப் பரப்பெங்கும்
போய்வந்தகளைப்போ? இல்லை
காணக்கிடைத்த அக்காட்சிகளாலே
மிக நொந்த மன இளைப்போ?
ஆயினும்...
கண்களைமூடி மீளவும் காண
முயல்கிறேன், முயல்கிறேன்
என்னைச்சுடும் என்னைப்பற்றிய நினைவுகளே
முந்திக் கொண்டு எழுகின்றன!

தேசப்புயலைப் பாராமல் இருந்தேன்,
சர்வதேசப்பரப்பில் பாசம் வளர்த்தேன்,
மூண்ட பிரச்சினைக்கு முகம் கொடுக்க
மறுத்தேன்.
எரியாத ஒன்றிற்காய் தவமாய்க் காத்திருந்தேன்...
புல்லின் நுனியில் தொங்கும் துவிப்பனியில்,
உயர்ந்த பனையின் உருவத் தெரியும்,
அகன்று பரந்த உயர்ந்த ஆலுந்தெரியும்!
எந்தப்புள்ளியில் என்ன கொடுமையோ...
“அந்தப் புள்ளியில்”
கொடுமையை அறுக்கும் கூர்மை பிறக்கும்!
தேசவிடுதலை நவீனயுகத்தில்,
முற்போக்கானது, முழுமையயுமானது! - அது
உள்ளே விளைத்த கயமைகளனைத்தையும்
அழித்து முடிக்கும் அவதாரமுமானது!
சர்வதேசத்தைக்கவ்விய இருட்டுப்போர்வையை
கிழித்துப்போடும் வெளிச்சமுமானது.
“இந்த உண்மைகளை”
உலுத்தமனத்தோடு உணரமறுத்தேன்!
உரிமைப்போரை அழித்து முடிக்க,
அரசரேவிய கொடுமைகள் எத்தனை...
ஆயிரம் பல்லாயிரம் கைகள் விரித்த பெரும் பூதம்
இலட்சம் பற்கள்
பதித்த வடுக்கள் எண்ணிலடங்காது.



# இயற்கையும் இன்றிங்கு பசுமையைப் போர்க்குது! கார்த்திகைப் பூக்களும் கைகளை விரிக்குது!

கண்ணீரைச் செந்நீராய்ச் சொரியவைக்கும்
பொல்லாப்புகள் சொல்லிமாளாது...
நரபிலி எடுக்கத் துடித்தபடி
நீண்டகால வெறியனாய்
பொருளாதாரத் தடையரக்கன்.
பட்டினி வாழ்வை எம்மண்ணில் விளைத்தது!
மருந்துகள் மறுக்கப்பட்ட (பிர) தேசம்...
வாயினைப்பிளந்து அலறியபடி
உயிர் கொல்லி நோய்ப்பிசாசுகள்
பிணிகாவும் மேனிகளாக உளன்றிட வைத்தன.
இங்கு விடுதலைக்காக மட்டுமல்ல;
வாழ்வதற்கும் போராட்டம் தான் நடக்குது!
மேனகையை பாரேனென்ற
விசுவாமித்திரக்கண்மூடலில் நான்
உண்மையின் தரிசனத்தைக் காண மறுத்தேன்.
ஏதோ தரிசனத்திற்காய் தவமாய்க்கிடந்தேன்.
என்தேசப் போராட்டம்,
வெற்றிவாகை சூடிய போதெல்லாம்
உவந்திட மறுத்துக் கொடுப்புக்குள் சிரித்தேன்,
விடுதலைப் போராட்ட வல்லமைதன்னை
பெரும்படையரசின் வல்லமைதன்னை
பெரும்படையரசின் வல்லமை ஒரு நாள்
வென்றே முடிக்கும் என்ற என் நினைப்பால்,
சின்னமீனை பெரிய மீன் விழுங்கும் என்பேன்!
வெளியில் செல்லுமென் வழிகளை அடைத்து
கால்களை ஒடுக்கிச் சிறுகோடு கிழித்து,
வீட்டில் இருந்தே உலகம் சுமந்தேன்
இறுமாப்புத் தொட்டிலில் ஏறி அமர்ந்தேன்!
வானொலி சொல்லும், வருவோர் சொல்வார்,
ஏற்பன ஏற்பேன் மறுப்பன மறுப்பேன்,
உனது அளவுகளின்படியே எல்லாம்
இருக்குமென்று வாதம் செய்வேன்
மறுத்தவரோடு மோவும் செய்வேன் - சிலவேளை

வானொலியை உடைக்க எண்ணமுங்கொள்வேன்!
வரட்டுத்தனத்தால் தனியனாயானேன்
குருட்டுத்தனத்தால் குறுகிநானிருந்தேன்
என்னுள் இந்த “இரசாயன மாற்றம்”
எப்படி நிகழ்ந்தது? என்ன நடந்தது...?
பொறுமைக்குப் பெருமைதராத
கீழ்மையைக் கண்டேன்;
அரசபக்கத்தாரின் அழுக்கான கை
மூன்றாவது கையை முறித்துப்போட்ட
கயமையைக் கண்டேன்;
சமாதானத்திற்குச் சமாதி கட்டிய
கொடுமையைக் கண்டேன்.

கால்களின் கட்டை அவிழ்ந்து எறிந்தேன்...
சூழலைக் காணக் கண்களைத் திறிந்தேன்...
உண்மையை மறுக்கும் வீம்பினைக் கொன்று
மெய்மையைக் காணும் பண்புடன் எழுந்தேன்.
இறுமாப்பின் உயரத்தில் இருந்து
இறங்கியென் தரைமீது நடந்தேன்.
தீச்சுவாலை எழுந்தது;
போரிடும் கைகள் அதனை முடித்தன...
நெருப்பு ஆற்றில் நீந்திடும் அவரே
கவசமாய் மக்களைக்காப்பது மெய்யே.
தொடர்ந்தும் நடந்தேன், தூரம் கடந்தேன்;
நவீன காலத்தின் கொள்கைப்படி,
வயல்களாய்த் தெரியாத வயல்களைக் கடண்டேன்;
தெருக்களாயில்லாத தெருக்களைக் கண்டேன்;
கடைகளை மறுக்கும் கடைகளைக் கண்டேன்;
சந்தையாய் இல்லையாயினும் சந்தையைக் கண்டேன்;
தானெரிந்த சாம்பலிலிருந்து ஏதொ ஒரு பறவை
உயர்த்தெழுமென்று யாரோ கூறக் கேட்டேன்.
எரிந்து கொண்டே மகிழ்ந்து வாழும்
மானிடம் பேராளுமை இங்கே கண்டேன்!

வறுமையப்பட்டும் வெறுமைப்படாத,
“செழுமைக்கோடுகள்”
கொள்கை முனைப்புகளைக் கோலமிடுகின்றன.
மனிதர் இங்கே விழுகின்றனர்
நாளையை பயிர் விளைய...
விதையைத்தருவது இன்றைய பயிரே
இருப்பவர் சிறப்புக்காய் இறப்பவர் இருக்குமினம்
அடைந்திடும் மாண்பிற்கு அளவேது; கரையேது?
தலைமுறைகள் தலைநிமிர தலைகள் தரும்
தலைமுறைகளின்
தேசம் கொள் பெருமைக்கு தடையேது;
குறையேது?
மண்ணுக்காய் விழுந்து, மாவீரராய் எழுந்தவர்
பல்லாயிரம்.
அவருக்காய் கரைந்து
வாழும் மானிடம் உருகும்!
சந்திகள் குளிரும், தெருக்கள் கண்வழிக்கும்
சந்துகளும் சருகுச் செட்டைகள் கழற்றி
சிவப்பாய் மஞ்சளாய் நீலமாய்ப்புதிய
இறக்கைகள் விரித்து கலகலத்துப் பறக்கும்!
போராடும் மண்ணிது புதுப்பொலிவு காணுது!
உலகெங்கும் பரந்து வாழும்
உறவு மனங்களும் குளிரக் குதூகலிக்க
இங்கு இருப்பவர் ஒன்றாயுழைக்கிறார்;
“மாவீரர் வணக்க”
கடைப்பிடிப்பில் வாழ்கிறார்!
இருள் சுமந்த மனத்தினன் நானும் விடுதலைப்
பொருள் சுமந்து இணைகிறேன்...
இயற்கையும் இன்றிங்கு பசுமையைப் போர்க்குது...
கார்த்திகைப் பூக்களும் கைகளை விரிக்குது...

-சு. அரசண்ணா, நவம்பர் 2001 எரிமலை




## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

**எந்த ஒரு தேசத்திலும் எந்த ஒரு காலத்திலும் நிகழாத அற்புதமான அர்ப்பணிப்புக்களை எமது மண்ணிலே எமது மண்ணுக்காக எமது மாவீரர்கள் புரிந்திருக்கிறார்கள்.** – தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்




*ஆயுதங்கள் மட்டும் முக்கியமல்ல, தந்திரங்களும், உபாயங்களும் முக்கியம்.*

# தேசியத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள் அகவை 70






# ஈழத்தின் முதல் வித்து லெப். சங்கர்!





லெப். சங்கர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் வித்தாக வீழ்ந்த மாவீரன். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் உலகளாவிய ரீதியில் கூர்ந்து கவனிக்கப்படுவதற்கு முதலாவது அத்திவாரக் கல்லாய் அமைந்த உறுதி மிக்க போராளி லெப். சங்கர்.

சத்தியநாதன் என்னும் இயற்பெயரைக் கொண்ட லெ. சங்கர் 1961இல் பிறந்தவர். 1977ஆம் ஆண்டு... வீட்டில் கடிதம் ஒன்றை எழுதிவைத்துவிட்டு அவர் பண்ணை ஒன்றில் இயங்கிய விடுதலைப் புலிகளின் பாசறையை அடைந்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் பண்டிதருடன் வந்த அவரை கூர்ந்து நோக்கினார். இளைஞன்... தோற்றத்தில் சின்னவன். தலைமறைவுப் போராட்டம் என்பது மிகவும் கடினமானது. குறிவைத்த எதிரியை வீழ்த்துவதற்காக எதிரியின் கண்களில் மண்ணைத் தூவி பல நாட்கள் அலைந்து திரிய வேண்டும். நிரந்தரமாக ஓரிடத்தில் தங்க முடியாது. நேரத்திற்கு உணவு கிடையாது. அல்லது பல நாட்கள் உணவின்றியே இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் தாங்கும் மனோபலம் சிறுவனுக்கு இருக்குமா...?

தலைவர் பிரபாகரன் கூற்றுப்படி படிப்பைத் தொடர்வதற்காக வீடு திரும்புகிறான் சத்தியநாதன்.

“ஏதோ அறியாதவன். சில நாட்கள் சுற்றிவிட்டு வீடு வந்து விட்டான். இனி ஒழுங்காகப் படிப்பைத் தொடர்வான்” என இவரது பெற்றோர் எண்ணினர். ஆனால், சத்தியநாதனின் உள்ளத்து உறுதி கலையவில்லை. தானும் ஒரு போராளியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக்கொள்கிறான். இடைப்பட்ட காலத்தில் போராட்டத்திற்கு உறுதுணையாக சாரதிப்பயிற்சி பெறத்தீர்மானித்து அதில் வெற்றியும் பெற்று விடுகிறான்.

1978ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு நாள் இரவு மீண்டும் தம்முன் வந்து நின்ற சத்தியநாதனை ஏறிட்டனர் ஏனைய போராளிகள். அவர்கள் முகங்களில் புன்னகை. அதில் சத்தியநாதனின் உறுதி புலப்படுகிறது. சத்தியநாதனுக்கு தலைமறைவு வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் புனைப்பெயர் சூட்டப்படுகிறது. சத்தியநாதன்.... சங்கராக விடுதலைப் புலியாக மாறினான்.

சங்கரின் உள்ளத்தைப் போலவே உடலும் உறுதிபெற்றது. ஓயாது உழைத்தான். எதிலும் ஆர்வம் எப்போதும் சுறுசுறுப்பு. தோழர்கள் ஒன்றுகூடி கருத்தரங்குகள் வைப்பதும், திட்டங்கள் தீட்டுவதும், விவாதிப்பதுமாக... சங்கரின் அரசியல் அறிவு விரிந்தது. வளர்ச்சி பெற்றது.

இயக்கத்தில் ஆரம்பகாலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது. ஓய்வு நேரங்களில் ரிவோல்வரில் குறி பார்ப்பதிலும் ஆங்கில சினிமாப் படங்கள் மூலம் தன் ஆயுத அறிவை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டினான் சங்கர். 1979இல் சிறிய ஆயுதங்களில் குறிபார்த்துச் சுடும் பயிற்சி சங்கருக்கு வழங்கப்பட்டது.

சங்கருக்கு குறி பார்த்துச் சுடும் பயிற்சியிலிருந்த திறமையால் தலைவரிடமிருந்து வெகுமதியாக 0-45 ரிவோல்வர் ஒன்று கிடைத்தது. அது சங்கருக்கு கிடைத்த பின் அதை வைத்து மேலும் தனது திறமையை வளர்த்துக் கொண்டான். இரு கரங்களாலும் குறி பார்த்துச் சுடுவதில் தன்னிகரற்றவனாயினான். சிறந்த ஆயுதப் பராமரிப்பு, தினசரி துப்பரவாக்கப்பட்டு பளபளத்தது ரிவோல்வர்.

1979 வைகாசியிலே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதாக அறிவித்திருந்த அரசு, விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் தேடுதல் வேட்டைகளை விஸ்தரித்தது. சங்கரின் பெயரும் எதிரிக்குத் தெரிந்துவிட்டது. அவனும் தேடப்பட்டான்.

1981ஆம் ஆண்டு நவீன ரக ஆயுதங்களை இயக்கும் பயிற்சி சங்கருக்கு வழங்கப்பட்டது. சங்கர் தாக்குதல் படைப்பிரிவில் ஒருவனானான்.

1982ஆடி 2ஆம் நாள் முதல்முதலாக எதிரியுடன் ஆயுதம் தாங்கிய மோதலில் சங்கர் ஈடுபடப்போகும் நாள், திட்டமிட்டபடி போராளிகள் ஏழுவர் நெல்லியடியில் ரோந்து வந்த பொலிஸ் ஜீப் மீது தாக்குதல் தொடுத்தனர். சங்கரிடம் ஒரு ரிவோல்வர் வேறொரு போராளியிடம் ஒரு இயந்திரத் துப்பாக்கி இதைத்தவிர வேறு ஆயுதங்கள் இல்லை புலிகளிடம்.

முதலில்... எதிரி வாகனச் சாரதி சுட்டு வீழ்த்தப்பட்டான். சங்கரின் நீண்ட காலக் கனவு நனவாகத் தொடங்கியது. வெற்றிகரமானத் தாக்குதலில் எதிரிகளில் நால்வர் கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் எந்தவித இழப்புகளுமின்றி வெற்றியுடன் மீண்டனர்.

1982இல் தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பிற்காக முதன் முதலாக இரு மெய்ப்பாதுகாவலர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். அவர்களில் ஒருவனாக சங்கரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தான். இக் காலகட்டத்தில் நவீனரக ஆயுதவரிசையில் இரண்டு ஜீ-3க்கள் மட்டுமே இயக்கத்திடமிருந்தன. இவற்றில் ஒன்று சங்கருக்கு வழாங்கப்படுகின்றது.




இராணுவத் தாக்குதல்களில் மட்டுமல்ல மக்களை அரசியல் மயப்படுத்தும் நடவடிக்கைகளிலும் சங்கர் ஈடுபட்டான். புலிகளை வலை வீசித் தேடும் நடவடிக்கைகளுக்கு ஊடாகவே இவற்றையெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கூலிப்படைகளின் தேடுதல் வேட்டை மும்முரமாகின்றது. புலிகள் இயக்க ஆதரவாக இருந்த விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் சங்கர்... இதை மோப்பம் பிடித்துவிடுகிறது கூலிப்படை.... வீடு முற்றுகையிடப்படுகிறது..... முற்றுகை முற்று முழுதான முற்றுகை. சங்கரின் கை இடுப்பிலிருந்த ரிவோல்வரின் பிடியை இறுகப் பிடிக்கின்றது. தப்பியோடத் தீர்மானிக்கின்றான் சங்கர். கூவிப் பாய்ந்த ரவைகளில் ஒன்று சங்கரின் வயிற்றைப் பதம் பார்த்துவிடுகிறது. தரையை நனைக்கின்றது குருதி. உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோரவில்லை. எதிரியின் கையில் தனது ரிவோல்வர் கிடைத்துவிடக்கூடாது. எப்படியும் தன் தோழர் கையில் அதனை ஒப்படைத்து விட வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தை உறுதியாக்க கிட்டத்தட்ட இரண்டு மைல் ஓடியிருப்பான். தெரிந்த ஒருவரின் உதவியுடன் நண்பர்கள் இரகசியமாகக் கூடும் இடத்தை அடைந்தான். ரிவோல்வரை தோழர்களிடம் கையளித்துவிட்டு உணர்விழந்தான் சங்கர். தோழர்கள் அவனைத் தாங்கிக் கொள்கிறார்கள்.

# போராட்டத்தின் முதல் இழப்பும்; தலைவரின் உணர்வலையும்!

**எமது முதல் மாவீரன் லெப். சங்கர் வீரச்சாவடைந்த உடனே, தலைவர் அவர்கள் தம் கைப்பட தனது உணர்வுகளை எழுதியிருந்தார்; அதைக் கீழே தருகிறோம்.**

சத்தியநாதன் ( சங்கர் )

**மறைவு : 27. 11. 82**

**இரவு 6. 05 மணி**

அதர்மத்தை அழிக்க எழுந்த மகாபாரத தர்மப் போரிலே தர்மத்தைக் காக்க முதல் களப் பலியாகிய அரவானைப் போல், சிங்கள அதர்மர்களிடத்தில் தர்மயுத்தம் நடாத்தி எமது தமிழீழ நாட்டை மீட்கப்போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளில் முதல் களப்பலியாகிய சத்தியநாதனே! நீ உனது பெயருக்கேற்ப சத்தியத்திற்காகப் போராடி வீரமரணம் அடைந்துவிட்டாய். இதையிட்டு நாம் கண்ணீர் சிந்துவோம் என்றா நினைக்கிறாய். இல்லை, இல்லை. ஒரு வீரனின் வீரமரணத்தைக் கண்டு இன்னொரு வீரன் அழமாட்டான். அழுதுவிட்டு அடங்கிவிடும் பேடிக்கூட்டமல்ல நாம். தொடர்வோம் உன்பாதையில்; அடைவோம் உன்னைப்போல் வீரமரணத்தை அல்லது தமிழீழத்தை.











முற்றுகையில் அகப்பட்ட புலி கைநழுவிட்டது என்ற ஆத்திரம் அரச படையினருக்கு. ஆதரவாளர் கைது செய்யப்பட்டார். தேடுதல் முடுக்கிவிடப்பட்டது. தெருவெங்கும் இராணுவம். காயமுற்றவனை வெளியில் கொண்டு செல்லமுடியாத நிலை. இரத்த வாந்தி எடுத்த சங்கர் துவண்டு போனான். ஐந்து நாட்கள் கடந்தன.

சங்கரை பாரதம் கொண்டு செல்வதற்காக மோட்டார் படகு தயார் செய்யப்பட்டது. பலத்த சிரமத்தின் மத்தியில் சங்கர் ஒருவாறு கரைசேர்க்கப்பட்டான். அங்கும் போதிய வைத்தியம் செய்ய முடியாதநிலை.

உடல்நிலை நாளுக்கு நாள் நலிவடைந்தது.

27.11.1982 அன்று ... விடுதலைப் புலிகளால் மறக்கவே முடியாத நாள். தமிழீழ மக்கள் மனதில் உத்வேகத்தை ஊட்டிய நாள். ஆயிரமாயிரம் போராளிகளை தன்னகத்தே கொண்டு விடுதலைப் போர் வீறுநடை போட வித்திட்ட நாள் அன்றுதான்.

தலைவர் பிரபாகரனின் மடியில் அவர் கைகளை இறுகப்பற்றி "தம்பி" என்றவாறே சங்கர் உயிர் துறந்தான்.

தலைவரின் விழிகளை நிறைத்த கண்ணீர் விழுந்து தெறித்து அவ் வீரனுக்கு அஞ்சலி செலுத்தியது.

தாயக மீட்புக்கான உரிமைப் போரில் வீரச்சாவடைந்த முதற்புலி லெப். சங்கரின் உடல் தமிழீழத்திற்கு வெளியே பாரதத்தில் தகனம் செய்யப்பட்டது. இவனது வீரச்சாவுகூட மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே இருந்த இணைப்பு இறுகிய பின்னரே வெளியே தெரியப்படுத்தப்பட்டது.

இம் மாவீரனின் வழித்தடத்தில் நடந்த ஆயிரக்கணக்கான போராளிகளில் 16000ற்கு மேற்பட்ட போராளிகள் விடுதலைப் போருக்கு தம்மை வித்தாக்கியுள்ளனர். இம் மாவீரர்களை யெல்லாம் நினைவுகூரும் நாளாக லெப். சங்கர் வீரச்சாவடைந்த தினம் மாவீரர் நாளாக தமிழீழ மக்களால் அனுட்டிக்கப்பட்டு வருவதுடன் அவர்களின் இலட்சியப் பயணம் பல வெற்றிகளைப் பெற்று உறுதியுடன் தொடர்கின்றது.

நன்றி: எரிமலை இதழ் (கார்த்திகை, 2000).




# அச்சத்தை விடு, அல்லது இலட்சியத்தை விடு!

– தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன்



# மாவீரர் நாள்

## வீரவணக்கம்

வாழ்க்கையை —
விடுதலைப் போரினாலும்
மரணத்தை —
அஞ்சாத தியாகத்தாலும்
கடைசி வரைக்கும்
கனப்படுத்தி,
பூமி கனக்கப்
புதைந்த புலிகளே!

காலத்தின் செவிகளில்
உமது கர்ச்சனை...
யுகங்களின் நெற்றியில்
உமது திருப் பெயர்...

நாளைய மானுடப்
பிஞ்சு முகங்கள்
முகர்ந்து பார்க்கும்
ஒவ்வொரு பூவிலும்
உங்கள் உயிரின்
வாசம் கமழும்...

நாளைய விடியலை
ஈழத்தில் எழுத
நீளும் கதிர்களில்
நிச்சயம் உமது
உயிரின் சூடும்
ஒன்றித்திருக்கும்.
துரோகத் தூசுப் படலத்தை
உயிரின் சுவாலையால்
பொசுக்கிய புலிகளே!
காலியான சயனைட் குப்பிகளும்
கழன்று கிடக்கும் தோள் துப்பாக்கிகளும்
இன்னும் உலராத இளைய ரத்தமும்...
அதைத்திலும் பேமலாய்
உம்
வாழ்வும் மரணமும்,
விடுதலை வரித்த
அடையாளங்களாய்
வரலாற்று வரிகளில்
கனத்துக் கிடக்கும்!
ரத்த சாட்சிகளே!
வீரவணக்கம்.

-கவிஞர் இன்குலாப்.

**எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிலையாக நிற்பதால், மாற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் தலை நிமிர்ந்து நிற்கமுடிகின்றது.**

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் –

18 ஆம் ஆண்டு

# வீரவணக்கம்



04.03.1938 **தேசத்தின் குரல்** 14.12.2006

# அன்ரன் பாலசிங்கம்

[அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மண்டூர், மட்டு ...கரவெட்டி, யாழ்]

*விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.*

*-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -*

# தமிழீழ விடுதலைக்காக வீழ்ந்த முதல் வித்துக்கள்!



## லெப். சங்கர்
(முதல் மாவீரர்)

லெப. சங்கர் அல்லது சுரேஷ் என அழைக்கப்பட்ட செல்வச்சந்திரன் சத்தியநாதன், வடமராட்சி கம்பர்மலையை சேர்ந்தவர்.

1961.06.19 ஆம் நாள் பிறந்தவர். தனது 16 ஆவது வயதில் -1977 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் இணைய விரும்பி செல்கிறார். போராட்ட வாழ்வின் கடின தன்மையை கருத்தில் கொண்டு சிறியவரான சங்கரை, தலைவர் பிரபாகரன் ஏற்க மறுத்து கல்வியைத் தொடருமாறு அனுப்பிவிடுகிறார்.

போராளி கனவை சுமந்த சங்கர் மீண்டும் அடுத்த ஆண்டு - 1978 இல் திரும்ப செல்கிறார். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் ஒருவரானர். 1979 இல் பயிற்சியை பெறுகிறார். அதே ஆண்டு தேடப்படு வோரில் ஒருவராகிறார்.

1981 இல் நவீன ஆயுதத்தைப் பெறுகிறார். அத்துடன் தாக்குதல் குழு ஒன்றுக்கும் பொறுப்பாளராகிறார். 1982 ஆடி இரண்டாம் நாள் முதல் தாக்குதலை நெல்லி யடியில் தலைமையேற்ற நடத்தினார். இதில் 4 பொலிசார் கொல்லப்பட்டு, ஆயுதங் களும் கைப்பற்றப்பட்டன. இதே ஆண்டு தலைவர் பிரபாகரனிற்கு முதன்முறையாக மெய்ப்பாதுகாவலராக இருவர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் சங்கர்.

இராணுவ முற்றுகைக்குள் இருந்து சங்கர் தப்பியபோது சூட்டுக்கு இலக்காகி வயிற்றில் காயமடைகிறார். தமிழ்நாட்டுக்கு மருத்துவத்திற்காக கொண்டு செல்லப் பட்டபோதும் பலனின்றி 1982.11.27 அன்று தாயகத்தின் முதல் வித்தாக தலை வனின் மடியிலேயே உயிர் சாய்ந்தார்.



## லெப். சீலன்
(முதல் தளபதி)

லெப். சீலன் அல்லது ஆசிர் என்று அறிப்பட்டு தலைவர் பிரபாகரனால் இதையச் சத்திரன் என்றும் விளிக்கப்பட்டவர் ஞானப்பிரகாசம் லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி.

தமிழர் தலைநகர் திருகோணமலையே இவரின் பிறந்த இடம். 1960.12.11 அன்று பிந்தார். 1978 இல் பாடசாலை நிகழ்வில் ஏற்ப்பட இருந்த சிங்கக்கொடியை பொஸ்பரஸை பயன்படுத்தி ஏற்றியபோதே எரிய வைத்தார்.

கைது செய்யப்பட்ட சாள்ஸ் அன்ரனி, இராணுவ, பொலிஸ் எந்திரங்களால் சித்திர வதைக்கு உள்ளானான். மீண்டு வந்த விடுதலைப் புலியானான். ஆரம்பம் முதலே பயிற்சி, சண்டையில் சிறந்து விளங்கியதால் புலிகளின் சண்டை அணிக்கு இவரே தளபதி - புலிகளின் முதல் தளபதி.

1981 இல் புலிகளின் முதல் தாக்குதலில் 2 சிப்பாய்கள் கொல்லப்பட்னர். இரு-வரையும் வீழ்த்தியவர் சாள்ஸ் அன்ரனியே. 1982 இல் காரைநகர் தாக்குதல், பொலிஸ் நிலையத் தாக்குதல்களில் பங்கேற்றார்.

சாள்ஸ் அன்ரனி மறைந்திருந்த இடம் காட்டிக் கொடுக்கப்பட்டது. இராணுவம் முற்றுகையிட்டது. முற்றுகையை உடைத்து நண்பர்களுடன் வெளியேறிய போது சீலன் காயமடைகிறார். தன்னிடம் இருந்த ஆயுதத்தை காப்பாற்றவும், எதிரிகளிடம் பிடிபடாமலும் இருக்க தன்னை சுட்டக் கொல்லுமாறு பணிக்கிறார். தளபதியின் கட்டளை துயரத்துடன் நிறைவேற்றப்படுகின்றது. 1983.07.15 ஆம் நாள் முதல் தளபதி தாய் மண் மீட்புக்கு தன்னை உரமாக்கினான்.



## கப்டன் ஜோன்சன்
(முதல் இஸ்லாமிய தமிழர்)

கப்டன் ஜோன்சன் என அழைக்கப்பட்ட ஜுனைதீன், விடுதலைப் போராட்டத் திற்காக புலியாக தன்னை அர்ப்பணித்த முதல் இஸ்லாமியத் தமிழர். மட்டக் களப்பு ஓட்டமாவடியில் 22.08.1963 ஆம் நாள் பிறந்தார். ஜீனை தீன். 'தமிழீழ விடுதலை நாகங்கள்' (நாக படை) என்ற அமைப்பை நடத்தினார். கிழக்கு மாகாணத்தில் தாக்குதல்களை நடத்தி அதிர்வலைகளை ஏற்படுத்தினார்.

பொலிஸ், இராணுவ நடவடிக்கைகளால் நாக படை இயங்குநிலையை இழக்கவே. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தன்னையும் நண்பர்களையும் இணைத்துக் கொண்டார். இந்தியாவில் புலிகளின் மூன்றாவது பயிற்சி முகாமில் ஆயுதப் பயிற் சியைப் பெற்றார். இஸ்லாமிய தமிழன் என்பதில் பெருமை கொண்ட ஜுனைதீன் தலைவர் பிரபாகரனை விசுவாசத்துடன் ஏற்றுக் கொண்டார்.

1985 இல் குரநகர் பொலிஸ் நிலையம், கொக்கிளாய் இராணுவ முகாம் தாக்குதல் களில் ஈடுபட்டு திறமையை வெளிப்படுத்தியிருந்தார். பின் மட்டக்களப்பில் இயங்கினார்.

நண்பருடன் மோட்டார் சைக்கிளில் ஆதித்திய மலைக்கு சென்றபோது பொலிசார் மறைந்திருந்து தாக்கி ஜோன்சனைக் கைது செய்து கொழும்பு பனாகொட சிற றையில் அடைத்தனர். அங்கிருந்து தப்பித்தபோது 1985.11.30 அன்று இராணுவத் தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தாய் மண்ணுக்கு முதல் இஸ்லாமிய தமிழ் மாவீரனாக விதையானார்.



## கப்டன் மில்லர்
(முதல் கரும்புலி)

மில்லர் என அழைக்கப்பட்ட வல்லிபுரம் வசந்தன் யாழ்ப்பாணம் கரவெட்டி -துன்னா லையை சொந்த இடமாகக் கொண்டவர். 1996.01.01 ஆம் நாள் பிறந்த வசந்தன். 1983 இல் விடுதலைப் புலிகளுக்காக இணைய முயன்றார். ஆதரவாக செயற்படுமாறு தெரிவிக்கப்பட்டு, கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டார். புலிகளின் நம்பிக்கையைப் பெற் றதும் வாகன ஓட்டியாக கடமையைத் தொடங்கினார்.

பயிற்சி முகாமில் மில்லர் என்ற பெயர் சூட்டப்பட்டது. பல தாக்குதல்களில் பங்கேற்ற மில்லர். இராணுவம் மேற்கொண்ட ஒப்ரேஷன் லிபரேசன் தாக்குதல் முறியடிப்பிலும் ஈடுபட்டிருந்தார். நெல்லியடி மத்திய கல்லூரியைக் கைப்பற்றிய இராணுவம் அங்கு முகாம் அமைத்து நின்றது. இராணுவப் பிடியில் இருந்து வடமராட்சியை மீட்க விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டனர்.

திட்டம் தயாரானது. கரும்புலிகள் எனத் தனியான பிரிவு அப்போது இருக்கவில்லை. கரும்புலியாக யார் செல்வது என்ற கேள்வி எழப்பலர் முன்வந்தனர். அடம்பிடித்து வாய்ப்பை பெற்றுக்கொண்டான். முன்னரும் கரும்புலித் தாக்குதல் ஒன்றை நடத்த முயன்றிருந்தார் மில்லர். எனவே அவருக்கே வாய்ப்பு சென்றது.

சக்கை (வெடிமருந்து) நிரப்பிய சென்ற ரலக்கை நோக்கி செலுத்தி தம்பிப்பதே திட்டம். சில வேளைகளில் இலக்குப் பிசகவும் வாய்ப்பு இருக்கும். இதனால் பிரதான முகாம் வரை சென்று மோதி அழித்தார் மில்லர். 1987.07.05 அன்று வருங்கால சந்ததிக்காக தன்னையே நெருப்பாக்கிய மில்லர்தான் முதல் கரும்புலி மாவீரர்.



## லெப். கேணல் திலீபன்
(முதல் அகிம்சை மாவீரர்)

லெப். கேணல் திலீபன் என அறியப்பட்டவரின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன். ஊரெழுவைச் சேர்ந்தவர். யாழ். பல்கலைக்கழகத்தின் மருத் துவபீட மாணவரான பார்த்தீபன், விடுதலைப் புலிகளில் இணைந்து திலீபன் என பெயர் சூடிக்கொண்டார்.

போர்க் களங்களில் பங்கெடுத்தவர். கூரிய அரசியல் சிந்தனை கொண்ட வராக இருந்தார். களத்தில் காயமடைந்து அகற்றப்படவே விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராகப் பொறுப்பு வகித்தார். விடுதலைப் புலிகள் பல துறைகளில் சிறக்க வழியமைத்தவர்களில் இவரும் ஒருவர்.

அமைதிப் படையாக வந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக மாற அகிம்சை ஆயுதத்தை கையில் எடுத்து உணவு, தண்ணீரை ஒறுத்து நல்லூரில் சத்தியப்போர் புரிந்தார். ஆனால் கொடுங்கோலர் களிடம் இந்தப் போராட்டம் எடுபடவில்லை. இலட்சியத்தில் உறுதியாக இருந்த திலீபன் 12 நாள் பட்டினித் தீயில் தன்னை எரித்து 1987.09.26 அன்று உயிர் நீத்தார். இவரே தாயக விடுதலைக்காக வீழ்ந்த முதல் அகிம்சை மாவீரர்.



## 2 ஆம் லெப். மாலதி
(முதல் பெண் மாவீரர்)

மாலதி என அறியப்பட்ட பேதுரு சகாயசீலி மன்னார் ஆட் காட்டி வெளியை சேர்ந்தவர். 1967.01.04 ஆம் நாள் பிறந்தவர் 1984 இல் தன்னை விடுதலைப் போராட்டத் தில் இணைத்துக் கொண்டார்.

பயிற்சிகள் முடித்து புலி வீராங்களையானவர் இராணுவத் துக்கு எதிராகப் பல சண்டைகளில் பங்கெடுத்தார். இந்திய இராணுவத்துக்கு எதிராக 1987 ஒக்ரோபரில் கோப்பாயில் பெரும் தாக்குதலைப் புலிகள் தொடங்கினர். அதில் பங் கெடுத்தார். இந்தத் தாக்குதலில் மாலதி, 2ஆம் லெப். மாலதி யாக 1987.10.10 அன்று வீரச்சாவடைந்தார். இவரே தமிழின விடுதலைக்காகப் பலியான முதல் பெண் மாவீரர்.







## மேஜர் காந்தரூபன் கப்டன் கொலின்ஸ் கப்டன் வினோத்
(முதல் கடற்கரும்புலிகள்)

மேஜர் காந்தரூபன் என அழைக்கப்பட்டவர் யோகராசா கோணேஸ்வரன் (வல்வெட்டித்துறை) என்ற இயற்பெய ருக்கு உரியவர். இதேபோன்று கப்டன் கொலின்ஸின் இயற் பெயர் பர்ணாந்து சில்வஸ்டார் (மன்னார்), கப்டன் வினோத் வேலுப்பிள்ளை திலகராசா (வல்வெட்டித்துறை).

வெவ்வேறு காலப்பகுதிகளில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்தவர்கள். கடற்புலிகள் அமைப்பு உருவாக்கப்பட்ட போது அதில் உள்வாங்கப்பட்டார்கள். கடற்படையின் கப்பல்கள். படகுகள் மீனவர்களுக்கும், தாயகத்துக்கும் பெரும் தொந் தரவளிக்க, தரையில் நடத்தப்படுவது போன்று, கடலிலும் கரும்புலித் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடப்பட்டது.

கேணல் சங்கர் தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டு திட்டமும் தீட்டப்பட்டது. வலவெட்டித்துறையில் அழிப்புக்கு கட்டளையிட்டுக் கொண்டிருந்த எடித்தாரா கப்பலை 10.01.1990 ஆம் ஆண்டு தாக் கியழித்து முதல் கடற்கரும்புலி வீர மறவர்களாகினர்.



## கப்டன் அங்கையற்கண்ணி
(முதல் பெண் கடற்கரும்புலிகள்)

அங்கையற்கண்ணி என அறியப்பட்டவர் துரைசிங்கம் புஸ் பகலா, யாழ்ப்பாணம்-மண்கும்பானில் 1973.05.10 ஆம் நாள் பிறந்தவர். குடும்பம் ஏழ்கையில் வாடியபோதும் விடு தலை வேட்கையால் களமாடப் புகுந்தார்.

கடற்புலிகள் பிரிவில் 3 ஆவது அணியில் பயிற்சி பெற்று பல கடற்சண்டைகளில் ஈடுபட்டார். கரும்புலியாக அனுமதிக்கக் கோரி தலைவருக்கு கடிதமும் எழுதினார். கடற்கரும்புலி களுக்கான அடிப்படை பயிற்சியின்போது 35 கிலோமீற்றர் தூரம் 8 மணி நேரம் நீந்தினார்.

காங்கேசன்துறையில் தரித்து நின்ற கட்டளைக் கப்பல், டோறாப்படகு மீதான தாக்குதலில் கடற்கரும்புலியானார். 16.08.1994 ஆம் ஆண்டு கடலில் காவியமான அங்கையற் கண்ணியே முதல் பெண் கடற்கருப்புலியாவார்.



## மேஜர் யாழினி
(முதல் பெண் தரைக் கரும்புலிகள்)

மேஜர் யாழினி இவரின் இயற்பெயர் சிவசுப்பிரமணியம் ராகினி. யாழ்ப்பாணம் உரும்பிராயில் 1975.05.03 அன்று பிறந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் விடுதலைப்புலி யானார். புகழ்பெற்ற மணலாறு களமுனையில் சாதித்தவர். கரும்புலி அணிக்குச் சென்றவர். சூரியக் கதிர் நடவடிக்கையில் சிறந்த வேவுப் போராளியாகவும் தன்னை நிருபித்தார்.

பெரும் சமர்களில் முக்கயமான ஜெயசிக்குறு சண்டையில் எதிரி யின் இலக்கை அழித்து 1997.06.10 ஆம் நாள் முதல் பெண் தரைக் கரும்புலியாக தாய் மண்ணுக்கு உரமானார்.





## கேணல் ரூபன் லெப். கேணல் சிரித்திரன்
(முதல் வான் கரும்புலிகள்)

1990களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் சேர்ந்தார்கள். வான்புலிகள் கட்டமைப்பு உருவாக் கப்பட்டபோது உள்வாங்கப்பட்டவர்கள். தலைவரின் மெய்ப்பாதுகவலர்களாகவும் - நெருங்கிய தொடர்புடையவர்களாகவும் இருந்தனர். இறுதியுத்த காலத்தில் விமானங்களில் ஏறி பல தாக் குதல்களை நடத்தினர். இறுதிக் கட்டமாக 2009.02.20 அன்று வான் கரும்புலிகளாகி வரலாறாகினர்.



# 27.11.1982 தொடக்கம் 31.10.2008 வரை வீரச்சாவைத்தழுவிகொண்ட மாவீரர் விபரப்பட்டியல்

***2008ம் ஆண்டு மாவீரர் பணிமனையால் வெளியிடப்பட்ட மாவீரர் விபரங்கள்***

27.11.1987 முதல் 31.10.2008 வரையான காலப்பகுதியில் இந்த மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர்.
இவர்களில் 17,305 ஆண் மாவீரர்களும், 4809 பெண் மாவீரர்களும் அடங்கியுள்ளனர்.
2008ம் ஆண்டு 1974 போராளிகள் விடுதலைக்காகப் போராடி வீரச்சாவைத் தழுவிக்கொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 27.11.1982 – 31.10.2008 வரை வீரச்சாவடைந்த கரும்புலிகள், எல்லைப்படை, காவற்றுறை, மாவீரர்களின் தொகுப்பு

| விளக்கம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| தரைக்கரும்புலிகள் | 87 | 26 | 113 |
| கடற்கரும்புலிகள் | 181 | 78 | 259 |
| மொத்தக்கரும்புலிகள் | 268 | 104 | 372 |
| எல்லைப்படை மாவீரர்கள் | 276 | 05 | 281 |
| காவற்றுறை மாவீரர்கள் | 047 | 03 | 50 |
| மாமனிதர் | 019 | — | 19 |
| நாட்டுப்பற்றாளர்கள் | 452 | 28 | 480 |

## 27.11.1982 – 31.10.2008 வரை தமிழீழ விடுதலைப்போரில் வீரச்சாவடைந்த மாவீரர் விரிப்பு

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1982 | 01 | 00 | 01 |
| 1983 | 05 | 00 | 05 |
| 1984 | 36 | 00 | 36 |
| 1985 | 123 | 00 | 123 |
| 1986 | 260 | 00 | 260 |
| 1987 | 439 | 14 | 453 |
| 1988 | 355 | 11 | 366 |
| 1989 | 373 | 01 | 374 |
| 1990 | 893 | 72 | 965 |
| 1991 | 1413 | 209 | 1622 |
| 1992 | 718 | 74 | 792 |
| 1993 | 804 | 124 | 928 |
| 1994 | 366 | 12 | 378 |
| 1995 | 1220 | 288 | 1508 |
| 1996 | 1095 | 285 | 1380 |
| 1997 | 1605 | 507 | 2112 |
| 1998 | 1158 | 648 | 1806 |
| 1999 | 1053 | 496 | 1549 |
| 2000 | 1240 | 743 | 1983 |
| 2001 | 492 | 270 | 762 |
| 2002 | 30 | 16 | 46 |
| 2003 | 61 | 11 | 72 |
| 2004 | 63 | 17 | 80 |
| 2005 | 42 | 15 | 57 |
| 2006 | 747 | 259 | 1006 |
| 2007 | 1041 | 159 | 1200 |
| 2008 | 1398 | 576 | 1974 |
| ஈரோஸ் | 264 | 02 | 266 |
| தனிக்குழு | 10 | 00 | 10 |
| **மொத்தம்** | **17305** | **4809** | **22114** |

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# மாவீரர் துயிலுமில்லப் பாடல்








மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!

சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!

உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!




# ஒதியமலைப் படுகொலை 01.12.1984

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டு சுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் நெடுங்கேணிக்கு அருகில் ஒதிய மலை என்ற கிராமம் அமைந்துள் ளது. தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் குற்றச் செயல்களில் தண்டனை பெற்ற சிங் களக் குற்றவாளிகளும் அவர்கள் குடும்பங்களும் இராணுவப் பாது காப்புடன் சிங்கள அரசு குடியேற்றி வந்தது. அந்த வகையில் கென்பாம், டொலர்பாம் போன்ற இடங்களைத் தொடர்ந்து ஒதியமலைப் பகுதி யிலும் குடியமர்த்தப்பட்டார்கள்.

1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தொன்பதாம் திகதியி லிருந்து மார்கழி இரண்டாம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. மார்கழி மாதம் முதலாம் திகதி பதவியாவிலிருந்து ஒதிய மலை கட்டுக்கரை ஊடாக வந்த இராணுவத்தினர் ஒதியமலைக் கிராமத் தைச் சுற்றிவளைத்தனர். மக்கள் அதிகாலை வீட்டின் கதவு களைத் திறந்தபோது பச்சை நிற உடைகளுடனும் ஆயுதங்களுட னும் இராணுவத்தினர் நின்றனர். "நாங்கள் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்த்தினுள் கூட்டம் வைக்கப் போகிறோம் ஆம்பிளைகள் மட் டும் வாங்க என சரளமாகத் தமிழில் கூறி, முற்பதிற்கும் மேற்பட்ட ஆண் களை கைது செய்து கிராம அபி விருத்திச் சங்கக் கட்டடத்திற்குள் அழைத்துச் சென்றனர். அவர் களின் கைகளை பின்னாற் கட்டி சித்திரவதை செய்து சுட்டும் வெட் டியும் படுகொலை செய்தனர். இராணுவம் சென்றபின் அங்கு சென்று பார்த்தபோது கைதுசெய் யப்பட்டவர்களில் இருபத்தேழு பேர் மிகவும் கோரமாக கொல்லப்பட்டு மண்டபத்தினுள் கிடந்தார்கள். இறந்தவர்களில் அனேகர் திருமண மாகிக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். பலர் முதியவர்கள், சிலர் கிளிநொச்சி மாவட்டம், பளை, பச்சிளைப் பள்ளியிலிருந்து வயல் வேலைக்காக ஒதியமலை வந்தவர் கள், வேறு சிலர் அயல்க்கிராமமான பட்டிக்குடியிருப்பிலிருந்து உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தவர்களாவார்கள். இராணுவத் தினரால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத் தினை தொடர்ந்து ஒதியமலைக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் உள்ள பாட சாலைகளிலும் கோயில் களிலும் தஞ்சமடைந்தார்கள்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தலை வர் நா.கந்தசாமி இப்படுகொலை தொடர்ப்பாகக் குறிப்பிடுகையில்:

"அன்றைய தினம் காலை 6.30 மணியளவிலே எமது கிராமத்திற் குள் புகுந்த இலங்கை இராணுவத் தினர் எமது கிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமது கிராம மக்களில் கண்ணிற்பட்டவர் களையெல்லாம் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக்கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டு வந்தனர். அந்த நேரத் திலே அவ்வீதியாற் சென்ற செல் வராசா என்பவரது உழவு இயந் திரத்தை மறித்து அதிலிருந்தவர் களையும் பிடித்து கிராம அபிவிருத் திச் சங்கக் கட்டடத்திற்குக் கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந் து துப்பாக்கிச் சூட்டுச்சத்தமும் கேட் டது. அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கண பதிப்பிள்ளை, பொன்னம்பலம், சின் னையா, கனகையா, ஆகியோரைத் தங்களது பாதுகாப்பிற்காக அவர் களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந் திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்று விட்டார்கள்.



இராணுவம் வந்ததை அறிந்து காட் டுக்குச் சென்றிருந்த நான் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத் தினுள்




ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இருபத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய் திருப்பதைக் கண்டேன். நான் பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண் ணீர் எனக் கேட்டுக் கொண்டு இறந் ததையும் கண்டேன். பின்னர் அவர் களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களை சீராக கட்டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங் கிருந்து கால்நடையாக முல்லைத் தீவு நோக்கி ஓடினோம்.

அந்த நேரம் இராணுவக் கெடு பிடிகள், ஊரடங்கு உத்தரவுகள் அதையும் மீறி பெரிய முயற்சி யெடுத்து அரசாங்க அதிபர், காவல்த் துறை அதிகாரிகள், நீதியாளர்கள், உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள் என அனை வரையும் அழைத்து வந்து நடந்த சம்பவத்தைக் காட்டினோம். இறந் தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், காதுகள், மூளைகள் வெளியிலே வந்த கோரக்காட்சியைப் பார்த்து அவர்கள் கதிகலங்கிப் போனார் கள். பின்னர் முழுக் கிராமத்தின ரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு முன்பாக பெரிய மரங் கள் போட்டு அதன் மேல் அவர் களை அடுக்கித் தீ மூட்டினோம். அதன் பின்பு இறந்த உறவுகளை நினைத் து அழுது புலம்பிக்கொண் டிருக்கும் சமயம் முல்லைத்தீவி லிருந்தும் சிலோன் தியேட்டர், டொலர்பாம், கென்பாம்களிலிருந் தும் இராணுவத்தினர் ஒதியமலை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் பாதுகாப்பிற்காக நெடுங்கேணி நோக்கி வந்தோம்."

வெலிஓயா சிங்களக் குடியேற்றத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒதிய மலைக் கிராமம் தொடர்ப்பாக அக் கிராம வாசியான சிவசேகரம் சததிய நாதன் அவர்க்களின் ஒதியமலைப் படுகொலைகள் தொடர்ப்பான சுரக் கக் குறிப்பு.

"நான் பிறந்து வளர்ந்த பூர்வீகக் கிராமம் வெலிஓயா எனச் சொல்லப் படும் சிங்களக் குடியேற்றத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலைக் கிராமம் ஆகும். அதற்கு அடுத்தாற் போல் பெரியகுளக் கிராமமும் காணப்படுகின்றது. 1984ம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதி யன்று வெலிஓயாக் கிராமச் சிங் களக் காடையர்களும், சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து ஒரே இடத்தைச் சேர்ந்த இருபத் தேழு அப்பாவிப்






பொதுமக்களை யும், அதற்கு முதல் நாள் ஐந்து பொதுமக்களையும் கைதுசெய்து சென்றனர். கென்பாம் என்கின்ற இடத்தில் வைத்து இவர்கள் அனை வரையும் சுட்டுக் கொன்றார்கள். அதன் தொடராக இவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வருவதும் கண்ணிற்படுபவர்களைப் பிடித்துச் சுடுவதுடன், இங்கு வசித்த தமிழ் மக்களின் பொருட்களைக் கொள் ளையடிப்பதும், வழக்கமாக இருந் தது. குறிப்பாக விளைபொருட்களை யும் விவசாய இயந்திரங்கள், துவிச் சக்கரவண்டிகளென என்னவாக இருந்தாலும் எடுத்துச் சென்று விடுவார்கள்.

நானும் எனது உறவினரான இராஜரட்ணம் என்பவரும் ஒரிடத்தில் ஒளிந்திருந் தோம். என்னைத் தேடி வந்த பொன்னம்பலத்தின் மகனை இரா ணுவத்தினர் கலைத்துச் சுட்டார்கள்.

அதன் பின்னர் அவனைத் தேடி வந்த மூத்த சகோதரன் தம்பி இறந்து இருப்பதைப் பார்த்து அழுது கொண்டிருந்த சமயம் அவரையும் சுட்டுவிட்டு வல்லிபுரத்தின் மகனான பேரின்பநாயகம் என்ப வரையும் பழம்பாசிக் கிராமத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளையின் மகனான கைலையையும், சிவலிங்கத் தின் மகனையும் சுட்டுக் கொலை செய்தனர். ஈசன் என்பவருக்கு கை யில் வெட்டுக்காயம் பட்ட நிலையில் உயிர் தப்பி வந்தார். இப்படியாக இரண்டு நாட்களாக பாரிய அட்டூ ழியங்கள் செய்தார்கள். கிட்டத்தட்ட பதின்நான்கிற்கும் மேற்பட்ட பொது மக்களைக் கொலை செய்திருந்தார் கள். இப்படியாக இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொலைச்சம்பவங்கள் இடம்பெற்று வந்த வண்ணமிருந் தது. இவ் வாறான செயற்பாடுகளை நடத்தி இப்பிரதேச வாழ் தமிழ் மக்கள் அனைவரை யும் அங்கிருந்து வெளியேற்றி அப் பிரதேசத்தை ஒரு சிங்களக் குடி யேற்றப் பிரதேசமாக்குவதே அவர் களின் குறிக்கோளாக இருந்தது. ஏனென்றால் சிலோன் தியேட்டர் மற்றும் அங்கு காணப்பட்ட டொலர் பாம், கென் பாம் போன்ற பண் ணைகளிலும் தமிழர்கள் இருந்தார் கள். அவர்களுக்கு 1984ம் ஆண்டு காலப்பகுதியில் இவ் விடங்களை விட்டு வெளியேற வேண்டுமென்ற நேரடியான இராணுவ அச்சுறுத்தல் இருந்தது. அதாவது 1984ம் ஆண் டு ஆறாம் மாதமளவில் நேரடியாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இத னைத் தெரிவித்து தமிழரை வெளி யேற வைத்த சம்பவம் இடம்பெற் றது. அதன்பின்னர் தென்னிலங் கையின் சிறைகளிலிருந்த ஆயுட் கைதிகளுக்கு ஆயுதங்கள் வழங்கி புனர்வாழ்வு என்ற பெயரில் இங்கு குடியேற்றி அவர்களையே இராணு வக் காடையர்களாகவும் பயன்படுத் தி வந்தனர். இவர்களது கொலைக் கொள்ளைச் சம்பவங்கள் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந் தத்திற்குப் பின்னர் வரை நீண்டு சென்றது.



**01.12.1984 அன்று ஒதிய மலைப் படுகாலையில் கொல்லப்பட் டோர் விபரம்**

01. நாகமணி சின்னையா - 50
02. நாகரத்தினம் கேதீஸ்வரன்-23
03. நல்லையா நவரட்ணம் - 17
04. கந்தையா கனகையா - -
05. கந்தையா பொன்னம்பலம்-48
06. கந்தையா சிவசிதம்பரம் - 35
07. கிருஸ்ணபிள்ளை இராச லிங்கம் - 29
08. கறுபபையா தங்க்ராசா - தொழி லாளி 18
09. கணபதிப்பிள்ளை சின்னையா - 35
10. கணபதிப்பிள்ளை சிவபாதம் 28
11. தாமோதரம்பிள்ளை கணபதிப் பிள்ளை - 51
12. தாமோதரம்பிள்ளை சதாசிவம் - 46
13. தம்பிஜயா காசிப்பிள்ளை - 45
14. தம்பிஜயா வேலுப்பிள்ளை - 38
15. தம்பிஜயா சுப்பிரமணியம் - 26
16. தம்பிஜயா சிவஞானம் - 23
17. அழகையா ஜெககாதன் - 17
18. கோவிந்தர் கணபதிப் பிளளை - 55
19. பொனன்ம்பலம் தேவராசா - 25
20. வேலுப்பிள்ளை சிதம்பரப் பிள்ளை - 36
21. சுப்பையா கெங்காதரன் - 26
22. சின்னையா இராசேந்திரம் - 21
23. சிதம்பரப்பிள்ளை இராசையா - 27
24. சங்கரப்பிள்ளை சபாரத்தினம் - 40
25. சங்கரப்பிள்ளை சண்முகசுந் தரம் - 25
26. சண்முகராசா இரவிச்சந்திரன் - 16
27. வீரகத்தி தில்லைநடராசா - 25

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடிய வில் லை.



இவ்வாறான அட்டூழியங்கள் இடம் பெற்று வரும்வேளை குறிப்பாக 1986ம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தாறாம் திகதி காட்டுப் பகுதி யால் வந்த இராணுவத்தினர் மாலை 3.00 மணியளவில் திரு கோளம் என்று சொல்லப்படும் இக் கிராமத்தில் சுப்பிரமணியம் என் பவரின் கடைக்குள் வைத்து கார்த் திகேசு விசுவலிங்கம், பழனி யாண்டி செல்லத்துரை என்ற இரு வரையும் உயிருடன் கடைக்குள் வைத்துத் தீமூட்டி எரித்த சம்பவம் நடந்தது. இச்சம்பவம் நடந்ததால் பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த அப்புத்துரை என்பவர் அவருக்குச் சிங்களம் தெரியுமாதலால் அந்தக் காடையர்களிடம் சென்று “ஏன் இவ்வாறான அநியாயம் செய்கிறீர் கள், யார் உங்களுக்கு அதிகாரம் தந்தது“ என்று கேட்டதற்காக அவ ரின் வாய்க்குள் துப்பாக்கியாற் சுட்டு ஜெயம் என்பவரின் வீட்டிற்குள் போட்டு எரித்ததுடன், தொடர்ச்சியாக அப்பகுதியிலிருந்த பதினைந்திற் கும் மேற்பட்ட வீடுகளை எரித்த பின்னர் படையினர் காடுகளுக்குள் பதுங்கியிருந்தார்கள். அதற்கு அடுத் தநாள் விடியற்காலை பதவியாப் பகுதியிலிருந்து வாகனங்களில் இராணுவத்தினர் வந்ததைத் தொடர்ந்து நெடுங்கேணிப் பிர தேசத்தைச் சுற்றிவளைத்தனர். இதன்போது இராணுவம் கிரா மத்துள் இருக்கிறதா இல்லையா எனத் தெரியாமல் வந்த பல அப் பாவி மக்கள் அதனிடம் மாட்டிக் கொண்டார்கள். அப்படி வந்தவர் களிற் பலர் சுடப்பட்டார்கள். குறிப் பாகச் சொல்லப்போனால் வினாசிக் குளத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரும் அவருடைய இளைய மகனும் என்னுடைய கடைக்கென வந்தவிடத்தில் அந்த நேரம்



# செட்டிகுளம் படுகொலை 02.12.1984



வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக வவுனியா-மன்னார் வீதியில் வவுனியா நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் செட்டிக் குளம் அமைந்துள்ளது. இக்கிராமத் தில் விவசாயிகள், வர்த்தகர்கள், கூலித்தொழிலாளர்கள், அரச உத்தி யோகத்தர்கள் எனப் பலரும் வாழ் கின்றார்கள்.

1984.12.02 அன்று இராணுவத் தினரால் செட்டிகுளப் பகுதி எங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டது. இராணுவத்தினர் செட்டிக் குளம் கிராமத்தினை காலை 5.30 மணியளவில் சுற்றிவளைக்கத் தொடங்கினார்கள். கிராம மக்களில் கூடுதலானவர்கள் உறக்கத்தில் இருந்தனர். செட்டிகுள கிராமத்திற் குள் நுழைந்த இராணுவத்தினர் கிராம மக்களில் ஆண்களை விசார ணைக்காக அழைத்துச் சென்றார் கள். இவர்களில் ஐம்பத்திரண்டு பேரைச் செட்டிகுளச் சந்தியில் வைத்து இராணுவ வாகனங்களில் ஏற்றி மதவாச்சிக்குக் கொண்டு சென்றனர். இதன்பின் இவர்கள் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. ஆனாலும் இவர்கள் மதவாச்சி யிலுள்ள ஓர் சிங்களக் கிராமத்தில் வைத்து இராணுவத்தினரால் வெட் டிப் படுகொலை செய்யப்பட்டனரென் றும் குற்றுயிராக இருந்தவர்கள் மீது டோசரை ஏற்றிக் கொன்றனரென் றும் செட்டக்குள மக்கள் கூறுகின் றனர்.

செட்டிகுளம் மகா வித்தியாலய ஆசி ரியரான தி.யேசுதாசன் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில்:

"ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டு வந்த இராணுவத்தினர் சுற்றி வளைத்து ஐம்பத்திரண்டு ஆண் களைக் கைது செய்து விசாரணைக் காக அழைத்துச் சென்றனர். இச்சம் பவத்தில் எனது தம்பியும் எனது அக் காவின் கணவரும் உயிரிழந்தனர். அத்துடன் எனது வீட்டில் வேலை செய்த இருவரும் கைது செய்யப் பட்டனர், சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் பின்பு அவ்வூர் மக்கள் வன்னி, மடு, இந்தியா போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்."

**02.12.1984 அன்று படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம்**

01. சூசைப்பிள்ளை கிறிஸ்துராசா (கமம் - 32)
02. இராசையா - -
03. இராமசாமி பொன்னுத்துரை (கமம் - 45)
04. ஊர்கனசாமி கமம் (23)
05. கந்தையா - -
06. கந்தையா கெங்காரட்ணம் - -
07. குமார் மோகன் - -
08. குமார் வரதராசா வியாபாரம் (19)
09. குருகுலசாமி (கமம் - 23)
10. குலசேகரம்பிள்ளை யூஜின் (கமம் -18)
11. பாண்டியன் பெரியரசு - -
12. பி.அருள்பிரகாசம் (கமம் - 30)
13. பிலிப்பையா அருள்பிரகாசம் (கமம் - 38)
14. பரமலிங்கம் பரமநாதன் - -
15. ஐயம்பிள்ளை பரமநாதன் (கமம் - 33)
16. துரையப்பா நாதன் - -
17. முத்துசாமி கோணார் கோபால் - -
18. முருகேசு சங்கரப்பிள்ளை (தொழிலாளி - 38)
19. அப்பாப்பிள்ளை வெற்றிவேற் பிள்ளை (கமம் - )
20. அல்பின் றொபின்சன் (கமம் - 26)
21. அல்வின் அந்தோனிஸ்ரி வின்சன (தச்சுத் தொழில் - 24)
22. அல்வின் அலைக்சாண்டர் (தச்சுத் தொழில் - 21)
23. அல்வின் அன்றன் - -
24. பொன்னுத்துரை கிறிஸ்துராசா - -
25. பொன்னுத்துரை தனநாயகம் - -
26. டொண்பொஸ்கோ றொமன் - -
27. சௌந்தரராசன் புஸ்பராசன் (மரவேலை - 27)
28. செல்லையா யூட் - -
29. செல்லையா கேதீஸ்வரன் (கமம் - 28)
30. செல்லர் மூர்த்தி - -
31. செல்லர் மகேந்திரன் - -
32. வேதநாயகம் செபமாலை (கமம் - 31)
33. வேலுப்பிள்ளை சிவபால சிங்கம் (விவசாயம் - 35)
34. சந்தணப்பிள்ளை இருதைய ராசா (கமம் - 25)
35. சின்னக்குட்டி கந்தசாமி - -
36. சிவகணேசன் - -
37. சங்கரப்பிள்ளை பாலேந்திரன் (கமம் - 29)
38. வடிவேல் அசோக்குமார் - -
39. விநாயகமூர்த்தி யோகநாதன் (கமம் - 24)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

# கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் படுகொலை 15.12.1984

கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி போன்றன தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்களாகும். இப்பிரதேசங்கள் மீன்பிடிக்குப் புகழ் மிக்க பிரதேசங்களில் ஒன்றாகும். இம்மக்களும் நல்ல செல்வச் செழிப் புடன் வாழ்ந்துவந்தார்கள். 1984. 12.15 ஆம் திகதி இராணுவச் சிப் பாய்கள் முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, குமுழமுனை, அளம்பில் ஆகிய சிராமங்களுக்குள் நுழைந்து சொத்துக்களை நாசம் செய்ததுடன் மக்களைப் படுகொலையும் செய் தனர். இச்சம்பவத்தில் கருநாட்டுக் கேணி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய கிராமங்களை விட்டு இரண்டாயிரம் தமிழ் குடம் பங்கள் கையில் கிடைத்த பொருட் களை மட்டும் எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்தனர். இச்சம்பவத் தின்போது இதில் முப்பத்தொரு பெண்கள், இருபத்தொரு குழந் தைகள் உள்ளடங்கலாக நூற்று முப்பத்தொரு பேர் உயிரிழந்தனர்.

[redacted]

# சுண்டிக்குளம் நல்லதண்ணித் தொடுவாய் மீதான கிபீர் குண்டுவீச்சுத் தாக்குதல் 02.12.1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டா வளைப் பிரதேசெயலர் பிரிவின் எல்லைக் கிராமமாகச் சுண்டிக் குளம் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இப்பிரதேசத்தில் பறவைகள் சரணாலயம் காணப் படுவது சிறப்பம்சமாகும். கடலும் கடல் சார்ந்த இப்பிரதேசத்தில் மீன் பிடி பிரதான தொழிலாகும்.

கடற்படையின் வடக்குக் கிழக்கில் கடற்கரையோரப் பகுதிகளில் வாழ் கின்ற மக்கள் மீது பல்வேறு கால கட்டங்களிலும் தொடர்ச்சியான தாக் குதல்களை மேற்கொண்டு வந் தனர். இந்தவகையில் சுண்டிக் குளக் கிராமமும் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது.

1995 ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் மருதங்கேணி பிரதேசெயலர் பிரிவைச் சேர்ந்த உடுத்துறை, தாளையடி, ஆழியவளைப் பிரதேச மக்கள் தமது தொழில் நிமித்தம் சுண்டிக்குளப் பகுதியில் வந்து சிறிய குடிசைகள் அமைத்து கடற் கரையை அண்டிய பிரதேசங்களில் குடியேறினார்கள். இம்மக்கள் கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது வாழ்க்கையை ஓட்டுவதற்காக கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவ் வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது 1998.12.02 ஆம் திகதி நண்பகல் 12:00 மணியளவில் விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங் கள் இப்பகுதி வான் பரப்பினுள் பேரிரைச்சலுடன் நுழைந்து வட்டமிடத் தொடங்கின. இதனைக்கண்ட மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சுமார் பத்து நிமிடங்கள் வரை அப்பகுதியை வட்டமிட்ட பின்னர் அவை நல்லதண்ணித் தொடுவாய் குடியேற்ற முகாம் மீது ஆறு குண்டுகளைப் போட்டன. இக்குண்டுவீச்சுத் தாக்குதலினால் சிறுவர்கள், பெண்கள் உட்பட மொத்தம் எழு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, பலர் காயமடைந்தனர்.

1. விஸ்வலிங்கம் யோகராணி (38, உடுத்துறை)
2. யோகச்சந்திரன் மல்லிகாதேவி (36, தாளயடி)
3. சிவா (13, மாணவன்)
4. கமலநாதன் தணுசா (15, மாணவி, உடுத்துறை
5. இராசலிங்கம் சுதாஸ் (13, மாணவன்)
6. வேலுப்பிள்ளை செல்லத்துரை (75)

காயமடைந்தவர்களின் விபரம்
கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (48)
சுப்பிரமணியம் கெங்கரூபி (16, மாணவி)
கே. சோதிமலர் (38)

[redacted]

# குமுழமுனைப் படுகொலை 02.12.1984

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் குமுழமுனைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன அமைந்துள்ளன.

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் குமுழமுனைக் கிராமம் அதிகாலையில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்படுவதும், மக்கள் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதும் வழக்கமாக இருந்தது.

வழமைபோல 01.10.1984 அனறு அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து 29.11.1984 அன்றும் பலர் கைது செய்யப்பட்டனர். இதில முன்பு கைதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் ஏனைய நான்கு சகோதரர்களும், மோகன் என்பவரும் (குமுழமுனையைச் சேர்ந்தவர்) தவிர்ந்த ஏனையோரை இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

இவர்களின் மனைவியர் தமது கணவன்மாரை விடுதலை செய்யுமாறு இராணுவத்தினரைக் கேட்ட பொழுதெல்லாம் அவர்களை விசாரணை செய்தபின் விடுதலை செய்வதாகக் கூறிய இராணுவத்தினர் அவர்களை 02.12.1984 அன்று தாம் சுட்டுவிட்டதாக உரியவர்களின் வீடுகளுக்கு 14.02.1985 அன்று அறிவித்தனர்.

இச்சம்பவத்தில் குமுழமுனையைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரின் பிள்ளைகள் 6 பேர் உட்பட அதே கிராமத்தைச் சேர்நத் ஒருவர் அடங்கலாக 07 பேர் உயிரிழந்தனர். அக்கிரமத்தைச் சேர்ந்த 06 குடும்பங்களில் குடும்பத்த தலைவர்கள் இல்லாமல், 06 பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இச்சம்பவம் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை தொடர்ந்து முல்லைத் தீவில் நடைபெற்ற முதலாவது சம்பவம் ஆகம்.

**02.12.1984 அன்று குமுழமுனைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்.**

1. பொன்னம்பலம் நமசிவாயம் (வயது 51)
2. பொன்னம்பலம் ஆனந்தன் (வயது 53)
3. பொன்னம்பலம் கெங்காதரன் (வயது 45)
4. பொன்னம்பலம் பொன்ராசா (வயது 43)
5. பொன்னம்பலம் சந்திரலிங்கம் (வயது 49)
6. பொன்னம்பலம் விவேகானந்தம் (வயது 47)
7. மோகனதாஸ் (வயது 32)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# தென்னமரவடி படுகொலை 03.12.1984



தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத தென்னமரவடி படுகொலை 03.12.1984 இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக்கொண்டனார். தமிழர் தாயக பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் புவியியல் இன ரீதியாக இணைத்து நிற்கும் கிராமமே தென்னமரவடி எனும் பழமை மிக்க தமிழ் கிராமம். தென்னவன் எனும் தமிழ் மன்னன் தென்னமரவடி இராசாதானியை ஆட்சிபுரிந்ததால் தென்னன் மரபு அடி என அழைக்கப்பட்டதாக வரலாறுகள் சொல்கின்றன.புரதான ஆறு வன்னிமைகளோடு தென்னமரவடியும் ஒன்றாக விளங்கியுள்ளது.

புரதான காலத்தில் பல குறுநில தமிழ் மன்னர்கள் தென்னமரவடியை ஆட்சிபுரிந்துள்ளனர். பாண்டிய மன்னர்காலத்தில் பல பிராமணர்களும்.வேதாரணிய வைத்தியர்களும். பல குலத்தவர்களும் தென்னமரவடியில் குடியேறியதாக வரலாறுகள் சொல்கின்றன. அத்தோடு பாண்டிய மன்னர்களினுடைய மரக்கலங்கள் தென்னமரவடி துறையில் வந்தடைந்ததாகவும் குமுளமுனையில் கட்டப்படும் யானைகள் செம்மலைக்குடா தென்னமரவடி குடாக்களினூடாக தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் ஆதாரப்படுத்துகின்றன.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க தென்னமரவடி போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இருந்து எதிரிகளால் மாறி மாறி முற்றுகைக்குட்பட்டதனால் தென்னமரவடி பெரும் பிரதேசமக்கள் திருகோணமலை. தம்பலாகாமம். செம்மலை. அனுராதபுரம் என புலம் பெயர்ந்தார்கள் என்றும் அங்கே புதிய குடியேற்றங்களை நிறுவினார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. தென்னமரவடியோடு இணைந் திருந்த அமரிவயல் எனும் தொன்மைமிக்க தமிழ்கிராமம் முற்றாக அழிந்து போனதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறாக வீழ்ச்சி கண்ட தென்னமரவடி பிரித்தானியர் வருகைக்கு பின்னரான காலத்தில் பெரும்பான்மை சிங்களவர்களாலும் சிதைக்கப்பட்டது. இக்கிராமம் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச 31நு பிரிவின் கீழ் அமைந்துள்ளது. திருகோணமலையில் 65கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. முல்லைத்தீவையும் திருகோணமலையையும் இணைத்து நிற்பதால் வடகிழக்கை இணைக்கும் இருதய நிலமாக தென்னமரவடி அமைவுபெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய்கடல் நீரேரிக்கு மறுகரையில் வடகிழக்கை பிரித்து ஓடும் பறையனாற்று கரையில் தென்னமரவடி அமைந்துள்ளது.

தென்னமரவடியின் அமைவிட சிறப்பு தமிழ் பேசும் மக்களின் ஈழ நிலப்பரப்பை இணைத்து விடும் என்பதால் தென்னமரவடி மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பு, இல்லாது அழித்தல் எனும் சதித் திட்டத்தையே மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்து வருகின்றனர்.இக்கிராமத்தை 1970 களில் திருகோணமலையில் இருந்து பிரித்து அனுராதபுர மாவட்டத்தோடும் இணைத்தனர். பின்னர் தமிழ் அரசியல் தலைவர்களின் தொடர் அழுத்தத்தால் மீண்டும் திருகோணமலையோடு இணைக்கப்பட்டது.



இருந்தும் தென்னமரவடி கிராமத்தை சிங்களமயமாக்கும் பணியை சிங்களம் நிறுத்தவில்லை.1980 களில் பல தொன்மை சிறப்புடைய இக்கிராமத்தின் பல கல்வெட்டுக்களை இல்லாமல் ஆக்கினர். அகழ்வாராட்சி என்ற பெயரில் பல வரலாற்று அடையாளங்களை திருடிச் சென்றுள்ளனர். அதை இன்று வரை இக்கிராமத்தவரிடம் ஒப்படைக்கவில்லை. கந்தசாமி மலை பிரதேசத்தில் இன்றும் பல தொன்மை அடையாளங்களும் பழம்பெரும் முருகன் ஆலயமும் அமைந்துள்ளது.இதனால் இவ்வலயத்தை பௌத்தபுனித பூமி என தொல் அகழ்வாராச்சி சபை ஆக்கிரமித்துள்ளது. அத்தோடு இத் தொன்மை மிக்க தமிழ் கிராமத்தின் வயல்நிலங்களை சிங்களவர்க்கு கைமாற்றியது. அத்தோடு மட்டுமன்றி பதவியா. சிறிபுர. சிங்கபுர.13ம் கொலணி சிங்கள குடியேற்றங்களை தென்னமரவடி கிராமத்தில் அத்துமிறி சிங்களம் நிறுவியது. இதனால் தென்னமரவடி மக்கள் 1980, 1984ம் ஆண்டு காலப்பகுதிகளில் தனித்து நின்று தென்னமரவடி நிலத்தை பாதுகாப்பதற்காக சிங்கள காடையர்களோடு முரண்பட்டு மோதிக்கொன்றனர். பல தடவைகள் சிங்கள குடியேற்றவாசிகளை விரட்டி அடித்னர். தமக்கே உரித்தான இடியன் துவக்குகளை இவர்கள் பயன்படுத்தி சிங்களவர்களை விரட்டி அடித்த வீரம்மிக்க கிராமமாக தென்னமரவடிமக்கள் விளங்கினர்.

இதனால் ஆத்திரம் கொண்ட சிங்கள இனவாத அரசும் சிங்களை காடையர்களும் ஒன்றாகி பலமாகி பலதடவைகள் தென்னமரவடி கிராம மக்களை விரட்டி அடித்தனர்.

காடுகளில் பலநாட்கள் தங்கிய மக்கள் சொல்லண்ணா துயர்களை அனுபவித்தனர்.அத்துமீறிய சிங்களவர்கள் இக்கிராமத்தவரின் சொத்துகளை சூறையாடி சென்றும் இருந்தனர். மீண்டும் கிராமத்துக்குள் வந்தவர்கள் இந்நிலை கண்டு அச்சமும் கவலையும் கொண்டனர். தென்னமரவடிதமிழர்க்கும் சிங்களவர்க்கும் பகை உச்சம் கொண்டிருந்தது. எந்த நேரத்திலும் தென்னமரவடி அபகரிக்கப்படும் சூழல் உருவானது. மக்கள் அச்சத்துடன் ஒவ்வோர் இரவையும் கழித்தனர்.

அன்று 1984 மார்கழி மாதம் மூன்றாம் திகதி தென்னமரவடியை அண்மித்த பகுதிகளில் வேட்டு சத்தம் பலமாக கேட்டது. தென்னமரவடியை சேர்ந்த பலரை சிங்கள காடையர்கள் கொலைசெய்துவிட்ட செய்தி பரவியது. தோட்டங்கள். வயல் நிலங்களிற்கு சென்ற பலர் வீடு திரும்பவில்லை. பிள்ளைகள். கணவன்மார்களை காணாது தவித்த உறவினர்கள் அவர்களை தேடி சென்றனர். இவ்வாறு பிள்ளைகளையும் கணவன்மாரையும் தேடிச்சென்ற பல பெண்களை சிங்கள காடையர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர். பலர் சிதறி ஓடியும் கடையர்களிடமிருந்து தப்பமுடியவில்லை. தாய்மார் முன்னிலையில் பிள்ளைகள் வெட்டிக்கொல்லப்பட்டனர். கணவர்மார் முன்னிலையில் பல பெண்கள் அம்மணமாக்கி கற்பழித்து கொலைசெய்யப்பட்டனர்.

இந்த கொடும் செயலை சிங்களம் செய்து முடித்தது.

பிள்ளைகளை தேடிச்சென்ற இரத்தினம். வேலாயுதம் மனைவி ஆகிய இருவரையும் தவிர ஏனைய எல்லோரும் கொலைசெய்யப்பட்டனர்.

1.. சண்முகம் முருகுப்பிள்ளை (42)
2. முருகுப்பிள்ளை அபிராமி (40)
3. முருகுப்பிள்ளை பாலகிருஸ்ணன் (18)
4. விநாசித்தம்பி கனகையா (45)
5. கனகையா சேதுப்பிள்ளை (38)
6. கந்தையா கெங்காதரன் (24)
7. சண்முகம் சதாசிவம் (35)
8. கணபதி வேலாயுதம் (48)
9. பூசாரி சின்னையா (65)
10. நமசிவாயம் கலையன் (18)
11. ஐங்கரப்பிள்ளை திருச்செல்வம் (23)

ஆகியோர் காடையர்களால் படுகொலை செய்யப்பட்னர்.

ஆனால் இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக் கொண்டனார். “ஐயோ சிங்களவர் திரண்டு வாறான்கள். எல்லோரும் ஊரைவிட்டு ஓடுங்கோ. பிடிச்சு வைச்சிருந்த எல்லோரையும் வெட்டிக்கொண்றிட்டான்கள் ...” என்ற அந்த இரு பெண்களின் அலறல் தென்னமரவடியை நிலைகுலைய செய்தது. அன்றே தென்னமரவடி மக்கள் காடுகளிற்குள் தஞ்சம் புகந்தனர்.அந்த நொடிப்பொழுதில் சிங்கள காடையர்கள் தென்னமரவடியை சூறையாடி ஊர் முழுவதையும் எரித்தனர்.

காடுகளிற்குள் ஒளிந்த மக்கள் கண்களில் தென்னமரவடி எனும் வளமான ஊர் எரியூட்டப்பட்டு புகை மண்டலம் வெளிவந்ததை பார்த்தனர்.. ஆறாத வடுக்களுடன் கண்களில் நீர் கசிந்திட முதியோர். இளையோர். குழந்தைகள் என பதினெட்டு நாள் அச்சமான காட்டு வழி பயணமாக முல்லைத்தீவு. முள்ளிவளை. புதுக்குடியிருப்பு. செம்மலை போன்ற பகுதிகளிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். 1984ல் இல் தமிழர் தாயகத்தில் முற்று முழுதாக முதலில் இடம் பெயர்ந்த தென்னமரவடி கிராமத்தின் இடம் பெயர் அவலமும் தென்னமரவடி படுகொலையும் நடந்து முப்பத்து ஏழு வருடத்தை கடந்தும் இன்னும் ஆறாத துயரமாகவே தமிழர் மனங்களில் பதிந்துள்ளது.







# மன்னார் – முருங்கன் வீதிப் படுகொலை 04.12.1984

04.12.1984 அன்று காலை பதினோராம் கட்டைப் பகுதியில் காலை 11:00மணியளவில் பாரிய வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. அதன் பின்னர் இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி முகாமிற்கு சென்று பின் மதியம் திரும்பவும் உயிலங்குளப் பகுதிக்கு வந்தனர். அவ்வேளை வானத்தில் உலங்குவானூர்தி ஒன்றும் சுற்றிக்கொண்டிருந்தது. அங்கு வந்து வீதியோரமாக அமர்ந்திருந்தவர்களைப் பிடித்துச் சுட்டுப் படுகொலை செய்த இராணுவத்தினர் பதினோராம் கட்டையடிப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த போது வவுனியாவிலிருந்து வந்த பேருந்தை மறித்து அதிலேற முற்பட்ட வேளை சிங்கள இனத்தவரான நடத்துநர் அதனை அனுமதிக்கவில்லை. அதனால் அவரைச் சுட்டுவிட்டு, பேருந்தில் வந்த நாற்பது பேரையும் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றார்கள். இதன்போது ஒரு வயோதிபர் மாத்திரம் மயக்கமுற்ற நிலையில் உயிர் தப்பினார். அதைத் தொடர்ந்து திரும்ப முருங்கன் தபாற்கந்தோர் வரை தம் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்றுவிட்டு இராணுவத்தினர் சென்றனர்.

குறிப்பாக ஒரு பாரவூர்தியில் வந்த ஓட்டுநர், நடத்துநர், மற்றும் அருகிலிருந்த வீட்டில் நின்றவர்களையும் சுட்டுப் படுகொலை செய்தனர். இந்தப் படுகொலைச் செயல் அன்று மாலை வரை நடந்தேறியது. அதில் இறந்தவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பு தேடி ஓடிவிட்டு மீண்டும் பொருட்களை எடுப்பதற்காக திரும்ப வீடுகளுக்கு வந்தவர்களேயாவர். பின்னர் அடுத்த நாள் இராணுவத்தினர் முகாங்களுக்குச் சென்ற பின் பங்குத் தந்தையின் உதவியுடன் அனைத்துச் சடலங்களும் எடுக்கப்பட்டன. பேருந்தில் வந்தவர்கள், வயலில் வேலை செய்தவர்கள் என் நூற்றுக்கும் மேற்பட்டவர்களது சடலங்கள் எடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட முருங்கனிலிருந்து தள்ளாடி முகாம் வரை இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நான்காம் திகதி மன்னார் மாவட்டம் சிறிலங்கா இராணுவத்தின் கொலைவெறியால் சோக மயமாகியது. சம்பவம் நடந்து இரண்டாம் நாள் (06.12.1984) சிறீலங்கா இராணுவத்தின் அனுமதி பெற்று மன்னர் ஆயர், அரச அதிபர் போனறேர் மக்களுடன் சேர்ந்து தொண்ணூறு உடல்களை (சில உடல்கள் எரிந்தவை) மன்னார் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை இருநூறுக்கும் அதிகமாகும்.

வட்டக்கண்டலைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவித்ததாவது:

“இதில் தப்பி வந்த கால் இயலாத ஒரு வயோதிபர் கூறும்போது: பேருந்தினை மறித்து அனைவரையும் இறக்கித் தன்னைப் போல ஒரு சிலரைத் தவிர ஏனையோரை வரிசையாக நிற்கவிட்டுத் தானியங்கித் துப்பாக்கியால் பல இராணுவத்தினர் சேர்ந்து சுட்டதாகக் கூறினார். இச்சம்பவத்தில் எந்தவிதப் பாகுபாடுமில்லாது வயல்வேலை செய்து கொண்டிருந்த அனைவரையும் சுட்டனர். அவர்களது சடலங்கள் அனைத்தும் ஆடைகள் இல்லாது அடையாளங் காணமுடியாத நிலையில் மூன்று நாட்களின் பின்னர் மன்னார் மருத்துவமனையில் போடப்பட்டிருந்தது. இச்சம்பவத்தின் போது வீதியிலிருந்த கடைகள் சில பொதுமக்களின் வீடுகள் என அனைத்தும் உடைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் இருந்தன”

வட்டக்கண்டல் பாலப்பெருமாள்கட்டைச் சேர்ந்த கதிரன் சௌந்தரராஜன் சம்பவத்தைப் பற்றிக் கூறுகையில்:

“1984ஆம் ஆண்டு பதினோராம் கட்டையில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் இருநூறிற்கும் மேற்பட்ட மக்களை வெட்டியும் வைக்கோலுக்குள் போட்டு எரித்தும் கொன்றார்கள். இச்சம்பவத்தில் எமது உறவினர்கள் நிறையப்பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். எனது சகோதரன் ஒருவரை இரத்தத்தைக் குடிக்குமாறு கூறி சித்திரவதை செய்தார்கள். நடராசா என்கின்ற எனது அண்ணன் ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள். 1984ம் ஆண்டு மூன்றாம் பிட்டியில் வைத்து எனது மற்றைய அண்ணனான கந்தசாமி என்பவரை சித்திரவதை செய்து கொன்றார்கள் ”



**04.12.1984 அன்று மன்னார்ப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்:**

1. சூசை நிக்கிளாஸ் (வயது 38 – தொழிலாளி)
2. சூசை அந்தோனி (வயது 52 – விவசாயம்)
3. சூசேப்பு இன்மனுவேல் லெம்பேட் (வயது 24 – விவசாயம்)
4. இம்மானுவேல் சூசையப்பு லெம்பட் (வயது 24 – தொழிலாளி)
5. இராமையா கந்தசாமி (வயது 50 – தெழிலாளி)
6. இராசையா இரகுநாதன் (வயது 40 – கூட்டுறவு பரிசோதகர்)
7. இராமலிங்கம் இலச்சுமணன் (வயது 50 – தொழிலாளி)
8. யக்கோவு மனுவல் / அலஸ் (வயது 50 – விவசாயம்)
9. க.த.இராஜரெட்ணம் ( வயது 67 – வைத்தியர்)
10. கந்தப்பு அப்புத்துரை (வயது 64 – விவசாயம்)
11. கப்பநெயினா நஜீமுதீன் (வயது 32 – தொழிலாளி)
12. குப்புசாமி செல்லத்துரை (வயது 55 – கணக்குப் பரி சோதகர்)
13. கபிரிகேல் ஜீவானந்தம் (வயது 40 – தபால் சேவகர்)
14. கறுப்பையா அச்சுதன் வயது 34 – பொறியிலாளர்)
15. கறுப்பையா பெருமாள் (வயது 60 – தொழிலாளி)
16. பூசாரி கந்த சாமி (வயது 46 – தொழிலாளி)
17. பிலேந்திரன் அல்யோண்ஸ் (வயது 55 – கமம்)
18. பிறஞ்சிசவிரி சாரம் (வயது 54 – விவசாயம்)
19. பிலிப்பு பிலேந்திரன் (வயது 56 – விவசாயம்)
20. மயில் வாகனம் ஜெயக்குமார் (வயது 32 – விவசாயம்)
21. மனுவல் அலஸ் (வயது 52 – விவசாயம்)
22. முகமட் கனிபா சுல்த் தான் (வயது 36 – கொண்றைக்ரர்)
23. முத்துச்சாமி சுப்பிரமணியம் (வயது 58 – மெக்கானிக்)
24. மீலாசாகிபு அப்புல்மஜீது (வயது 43 – விவசாயம்)
25. மஞ்சன் சின்னப்பன் (வயது 34 – தொழிலாளி)
26. முருகேசு நவரெட்ணம் (வயது 54 – விவசாயம்)
27. முருகேசு செல்லம்மா (வயது 60)
28. அந்தேனி பிரான்சிஸ் மொறாய் (வயது 29 – தபால் சேவகர்)
29. அந்தோனி செபமாலை (வயது 48 – லிகிதர்)
30. அந்தோனி குருதாசன் (வயது 23 – விவசாயம்)
31. அந்தோனி யோகநாதன் (வயது 18 – மாணவன்)
32. அந்தோனி யோகநாதன் மிறால் (வயது 18- விவசாயம்)
33. அக்கினிமுத்து இராமசாமி (வயது 34 – தொழிலாளி)
34. அப்புத்துறை வீரசிங்கம் (வயது 40 – மெக்கானிக்)
35. அப்பையா செல்லையா (வயது 57 – வியாபாரம்)
36. அரியபுத்திரன் திருநாவுக்கரசு (வயது 49 – வியாபாரம்)
37. அலெக்ஸ்சாண்டர் மாட்டின் ராஜ்குமார் (வயது 34 – மின் அத்தியட்சகர்)
38. அழகன் காளிமுத்து (வயது 65 – தொழிலாளி)
39. அழகையா காளிமுத்து (வயது 31 – விவசாயம்)
40. அருள்மலர் ஜோன்ஸபப்பிஸ்ட் (வயது 28 – வீட்டுப்பணி)
41. அருளானந்தம் துரைராஜா (வயது 32 – அரச ஊழியர்)
42. அல்பிறட்போல் நோயல் இம்மானுவேல் (வயது 45 – விவசாயம்)
43. அல்போன்ஸ் சூசைநாதன் குரூ (வயது 34 – மானேஜர்)
44. ஆண்டி ஆறுமுகம் சுந்தரராஜ் (வயது 45 – விவசாயம்)
45. நேசராசன் (வயது 50 – விவசாயம்)
46. கென்றிமரியதாஸ் மியேஸ் (வயது 57 – விவசாயம்)
47. பொன்னம்பலம் (வயது 40 – வியாபாரி)
48. பொன்னையா அழகையா (வயது 65 – விவசாயம்)
49. பேதுரு அரியரட்ணம் (வயது 42 – தபால் சேவகர்)
50. பெஞ்ஜமின் ஸ்ரீபன்ஜெறே தவரெட்ணம் (வயது 45 – சிறைச்சாலை அதிகாரி)
51. செபமாலை மேரிகார்மிலாராணி (வயது 28)
52. செல்லையா சண்முகநாதன் (வயது 45 – மருந்தாளர்)
53. வேலு இராஜலிங்கம் (வயது 25 – தொழிலாளி)
54. வேலு கணேஸ் (வயது 40 – தொழிலாளி)
55. வேலு கணபதிப்பிள்ளை (வயது 58 – விவசாயம்)
56. வேலு பன்னீர்செல்வம் (வயது 31 – வியாபாரம்)
57. வேலுப்பிள்ளை கணவதிப்பிள்ளை (வயது 58 – விவசாயம்)
58. லோறன்ஸபிள்ளை பாபிலுப்பிள்ளை (வயது 47 – விவசாயம்)
59. சன்னாசி ரெங்கையா (வயது 55 – தொழிலாளி)
60. சந்தாம்பிள்ளை மரியாம்பிள்ளை (வயது 30 – கமம்)
61. சந்தியா அல்யோன்ஸ் சூசைநாதன் (வயது 36 – வியாபாரம்)
62. சுந்தரம்பிள்ளை செபஸ்தியான்பிள்ளை (வயது 45 – விவசாயம்)
63. சுப்பன் கிருஸ்ணபிள்ளை (வயது 38 – வர்த்தகர்)
64. சுப்பையா (வயது 75 – பிச்சைக்காரன்)
65. சாமிநாதன் கண்ணுசாமி (வயது 28 – காவலாளி)
66. சாசீம் சமது (வயது 36 – வியாபாரம்)
67. சின்னக்குட்டி கதிரவேல் ஆறுமுகம் (வயது 72)
68. சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது 51 – விவசாயம்)
69. சீமான்பிள்ளை சந்தியாம்பிள்ளை (வயது 58 – விவசாயம்)
70. சவிரியான் சந்தியோகுபறுனா (வயது 32 – விவசாயம்)
71. வல்லிபுரம் தியாகராசா (வயது 40 – உதவி தபால் அதிபர்)
72. றிச்சாட்குலாஸ் சேக்கிழாயார்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.



# மனித வரலாறும் நினைவுச் சின்னங்களும்

**களத்தில் வீழ்ந்த எதிரிநாட்டுப் படையினருக்குப் பூரண இராணுவமரியாதை அளிப்பதும், உடலைப் பக்குவமாக அவன் நாட்டிற்கு அனுப்பிவைப்பதும் உலகின் போரியல் மரபு. அதே போல் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும் இராணுவம் அங்கிருக்கும் இடு நிலங்களையும் போர் வீரர்களின் கல்லறைகளையும் குறை விடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்புடையதாகும்.**



புவி வரலாற்றோடு ஒப்பிடுகையில் தனி மனித ஆயுட்காலம் ஒரு நொடிப்பொழுதிற்குச் சமமானது. இருப்பினும் இக்குறுகிய காலத்திற்குள் அவன் நாட்டிய சாதனைகளும் படைத்த ஆக்கங்களும் காலத்தை வென்று நிற்கின்றன. அவை மனித வரலாற்று நிலையைக் கடந்து புவி வரலாறாக இடம்பெறுகின்றன. மனிதன் ஆக்கியவை இரு வகைப்படுகின்றன. ஒன்று அவன் தனித்தோ கூட்டாகவோ தனது வாழ்நாளில் உருவாக்கியவை. இரண்டு அவன் இல்லாக்காலத்தில் அவன் நினைவாகப் பிறர் உருவாக்கியவை. புவியில் பரந்து பட்டுச்செறிந்து காணப்படும் மனித ஆக்கச்சான்றுகள் இவ்விரு தலைப்பின் கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன. முன்னைய மனிதன் கட்டிய பல வழிபாட்டுத்தலங்கள், அரண்மனைகள், நிர்வாக மையங்கள், கல்லறைகள், நினைவுத் தூபிகள் போன்றவை இன்றும் நிலைத்து நிற்கின்றன. அதே போல் அவன் படைத்த இலக்கியங்கள், தீட்டிய ஓவியங்கள், செதுக்கிய சிற்பங்கள் மற்றும் இன்னோரன்ன கைவினைப் பொருள்கள் மனித ஆக்கத் திறனுக்குச் சான்றாக பகர்ந்த வாறு நிலைபெறுகின்றன. ஆக்கங்களுக்கான மூலப்பொருள்களை மனிதன் களிமண், கல், சுதை, உலோகம், மரம் ஆகியவற்றிலிருந்து பெற்றுள்ளான்.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய புராதன காலத்தில் வாழ்ந்த மனிதன் உருவாக்கிய அதிசயங்கள் ஏழு என்று வழமையாகப் பட்டியலிடப்படுகிறது. அவற்றுள் ஒன்றுமாத்திரம் இன்றும் நிலைத்து நிற்கிறது. ஏனையவை அழிந்துவிட்டன. கீசா பிரமிட் (GIZA PYRAMID) என்று அழைக்கப்படும் இப் பிரமாண்ட அமைப்பு எகிப்து மன்னன் கூபூ (KHUFU) வின் கல்லறையாகக்கட்டப்பட்டது. இற்றைக்கு 5000 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட இப் பிரமிட் உலகின் மிகப் பெரிய கல்லறை என்று சிறப்பிக்கப்படுகிறது. பிரமிட் என்பது சதுர வடிவிலான அடித்தளத்தில் நான்கு பக்கமும் முக்கோணமாக உயர்ந்து உச்சியில் ஒன்று சேரும் உருவமுடையது. இப் பிரமிட்டின் அடித்தளம் 13 ஏக்கராகும். 2,500, 000 நன்கு வெட்டிச் செதுக்கப்பட்ட கற்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. இதன் உயரம் 451 அடி. ஒவ்வொரு கல்லின் எடை இரண்டரைத் தொன். எகிப்தின் கீசா என்ற இடத்தில் இருப்பதால் அது கீசா பிரமிட் எனப்படுகிறது.

அடுத்த அதிசயம் பபிலோனின் தொங்கு தோட்டம் (THE HANGING GARDENS OF BABYLON) என்று அழைக்கப்பட்டது. 2,500 வருடங்களுக்கு முன்பு இரண்டாம் நெபுட் சாட்நெசர் மன்னன் (NEBUDCHADNE ZZAR - II) தனது இளம் மனைவியின் மகிழ்ச் சிக்காக இதை அமைத்தார். யூபிரேட்டீஸ் நதியோரத்தில் 350 அடி உயர மண் குன்றை எழுப்பி அதில் வெட்டிய படிக்கட்டுகளில் ஒரு பூந் தோட்டத்தை உருவாக்கி அதற்கான நீர்ப் பாசன வசதியையும் செய்வித்தான். காலப் போக்கில் இத்தோட்டம் முற்றாக அழிந்து விட்டது. ஆனால் 1920 இல் ஜேர்மன் புதை படிவ ஆய்வாளர் றொபேட் கோல்டேவே (ROBERT KOLDEWEY) தோட்டம் இருந்த இடத்தை அடையாளம் கண்டுள்ளார்.

கிறித்தவத்திற்கு முந்திய கிரேக்க மதத்தின் முழுமுதற் கடவுளர் சொயிசின் (ZEUS) 40 அடி உயரமான சிலை கி.மு 456 இல் கிரேக்க நாட்டின் ஒலிம்புஸ் என்னும் இடத்தில் நிறுவப்பட்டது. மரத்தால் செய்யப்பட்ட இச்சிலை தங்கத்தகடுகளால் போர்த்தப்பட்டது, வைரக் கற்களால் அணி செய்யப்பட்டது. கி.பி 475 இல் பெருந் தீயினால் பாதிக்கப்பட்டு அழிந்து விட்டது. சிலையின் அடிப்பாகம் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடக்கும் திடலுக்கு அருகாமையில் காணப்படுகிறது. இன்றைய துருக்கி நாட்டின் கரையோரத்தில் வேட்டைக் காரர்கள், காட்டுவாசிகள், கன்னிப் பெண்கள் ஆகியோரின் காவல் தெய்வமான டயானாவின் கோயில் கி.மு. நாலாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இப் பெண் தெய்வத்தின் அணிகலன்களாகப் பெருமளவு தங்க, வைர நகைகள் சாற்றப் பட்டிருந்தன. புராதன உலகின் நான்காவது அதிசயமான டயானாவின் கோயில் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

மத்தியதரைக் கடலின் ஒரு பகுதியான ஏஜியன் (AEGEANSEN) கடலிலுள்ளதில் 100 அடி உயரமான வெண்கலச் சிலை சூரியக் கடவுளுக்கு கி.மு 280 இல் எழுப்பப்பட்டது. இது 56 வருடங்கள் மாத்திரம் தனது பீடத்தில் நின்றது. கி.மு.224 இல் நிகழ்ந்த நில நடுக்கத்தின் போது அது தரையில் வீழ்ந்தது. பல நூற்றாண்டு காலமாக அப்படியே கிடந்த சிலையை கி.பி.7 ஆம் நூற்றாண்டில் உலோக வர்த்தகர்கள் பகுதி பகுதியாக விற்று விட்டார்கள். வெளிச்ச வீடுகளின் முன்னோடி என்று வர்ணிக்கப்படும் எகிப்தின் அலெக்சாந் திரியா துறைமுகத் திற் கு அருகாமையிலுள் ள பாரொஸ் (PHAROS) தீவில் கி.மு 285க்கும் கி.மு 247 க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. 400 அடி உயரமான அதன் உச்சியில் இரவு பகலாக வெளிச்சம் எரிந்தபடி இருக்கும். ஒளியை நெடுதூரம் பரப்புவதற்காக உலோக அடிகள் பொருத்தப்பட்டிருந்தன. கி.பி.14 ஆம் நூற்றாண்டு வரை அது கடலோடிகளுக்கு உதவிக் கொண்டிருந்தபின் பாரொஸ் தீவு ஒரு நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டபோது கடல் நீரில் மூழ்கிவிட்டது.

சிறந்த வேலைப்பாடுகள் நிறைந்த பாரிய கல்லறையை மொசோலியம் (MAUSOLE UM) என்று அழைப்பது உலக வழமை. உலகின் மிக அழகான கட்டடம் எனப்படும் இந்தியாவின் தாஜ்மகால் அப்படியான தொன்று. இன்றைய துருக்கி நாட்டின் உட்பகுதியில் ஒரு சிறிய துறைமுக நகரான கலிகார்னேசஸ் (HALICARNASSUS) என்னும் இடத்தில் கி.மு 353 அளவில் கட்டப்பட்ட கல்லறையில் இருந்து மொசோலியம் என்ற சொல் உருவாகியது. இப்பகுதியை ஆட்சி செய்த மொசோலுஸ் (MAUSOLUS) மன்னன் இறந்த பின் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவருடைய மனைவி ஆர்ட்டிமிசியா (ARTEMISIA) ராணி ஒரு ஒப்பற்ற கல்லறையைக் கட்டு வித்தார். இக்கல்லறை இன்று சிதைந்து விட்டது. அதன் மீட்கப்பட்ட பாகங்கள் சில இலண்டன் அரும்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து கல்லறையின் பருமன், அழகிய வேலைப்பாடு போன்ற விவரங்களை நிபுணர்கள் கணிப்பீடு செய்துள்ளனர்.

இதில் கூறப்பட்ட புராதன கால அதிசயங்கள் அனைத்தும் எகிப்து, கிரேக்கம், துருக்கி ஆகிய இன்றைய நாட்டுத் தரைப்பரப்பில் காணப்பட்டன. வேறு இடங்களில் அது போன்றவை இல்லையா என்ற கேள்வி எழுகிறது. தெற்கு இங்கிலாந்தின் சோல்ஸ்பெரி பெருவெளியில் (SALISBURY PLAIN) புராதன கால நடுகற்கள் காணப்படுகின்றன. உள் வட்டம் வெளி வட்டமாக மிக உயரமான வெட்டுக் கற்கள் நடப்பட்டு அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. இவை ஸ்ரோன் கெஞ்ச் (STONEHENGE) என்று அழைக்கப்படுகின்றன. 3500 - 4000 வருடங்களுக்கு முன் செல்ற்ஸ் (CELTS) என்ற ஆதி மக்கள் இனம் இதை அமைத்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அமைப்பின் நோக்கம் பற்றிய தர்க்கம் நிலவுகிறது. இறந்தோரைப்புதைக்கும் இடமாகவோ அல்லது இறந்தோருக்கான வணக்கத்தல மாகவோ இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. நேரக் கணிப்பிற்காக இக்கற்கள் வட்டம் வட்டமாக நடப்பட்டிருக்கலாம், அத்தோடு கோள்களின் நகர்வை அவதானிப்பதற்காகவும் இருக்கலாம் என்றும் சொல்கிறார்கள். இன்றும் இவை நிலைத்து நிற்கின்றன.

கல்லறைகளைப் பொறுத்தளவில் மிகப் பிரமிப்பூட்டும் வகையானதொன்று 1974 ஆம் ஆண்டு சீனாவின் சான்க்சி (SHAANXI) மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கிணறு வெட்டும் போது 7400 வரையிலான சுட்ட மண் போர் வீரர்கள் மற்றும் குதிரைகள், போருக்குப் பயன்படுத்தும் தேர்கள் (CHA RIOTS) என்பன மண்ணில் புதைக் கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றார்கள். அவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் சீன அதிகாரிகள் இத்தனையையும் மீட்டார்கள். துண்டு துண்டாகப் பல மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட சீனாவை முதன் முதலாக ஒன்றிணைத்தவர் சீனச்சக்கரவர்த்தி யிங்செங். அவர் முழுச் சீனாவையும் தனது ஆட்சிப்பிடியில் கொண்டு வந்தபின் தனக்குத் தானே சூட்டிய பட்டம் குவின் சீ குவாங் டீ (QIN SHI HUANG DI) அதாவது குவின் வம்சத்தைச் சேர்ந்த முதலாவது சீனச் சக்கரவர்த்தி என்று பொருள். இவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த பேரரசர்களும் இப் பட்டத்தைத் தமதாக்கியுள்ளனர். பல நூற்றாண்டுகளாக நிலவிய சீன அரசு முறையை நிறுவியவர் என்று முதலாவது குவின் சீ குவாங் டீ சிறப்பிக்கப்படுகிறார். முழு நாட்டிற்கும் ஒரே சீன எழுத்து, சட்டம், நாணயம், நெறுத்தல் அளவை ஆகிய வற்றைப் புகுத்தியவரும் அவர்தான். இவருடைய அதிகார வீச்சு கி.மு. 246 இல் ஆரம்பிக்கிறது.

தனது ஆட்சிக் காலத்தில் அவர் தனது எதிரிகளையும் ஆணையை மீறு வோரையும் மிகவும் கொடூரமாகத் தண்டித்தார். உயிரோடு மண்ணில் புதைக்கும் தண்டனை வழக்கத்தை அறிமுகம் செய்தார். கி.மு.260இல் சாயோ (ZHAO) மன்னனைப் போரில் வென்றபின் அவனுடைய 400,000 படையினரை உயிரோடு புதைத்தார் என்று சீன ஏடுகள் செப்புகின்றன. அவர் தன்னுடைய கல்லறையை உருவாக்கும் போது இந்த முறையைப் பின்பற்றவில்லை. மாறாக சுட்ட மண் சிலைகளைச் செய்து தனது கல்லறைக்கு அருகாமையில் புதைக்க உத்தரவிட்டார். இரு பெரிய நீள் சதுரக்கிடங்குகளில் 7400 படையினர் போருக்குத் தயாரான நிலையில் நிறுத்தப்பட்டனர். ஒவ்வொரு மண் சிலையின் உயரம் 5 அடி 11 அங்குலம். குதிரைகளும், தேர்களும் அவ்வாறு தத்ரூபமாகச் செய்யப்பட்டன. இவற்றை செய்து முடிக்க முப்பத்தியாறு வருடம் பிடித்தது. 7000 வரையிலான தொழிலாளர்கள் உருவாக்கப் பணியில் ஈடுபட்டனர். பணி காலத்தில் இறந்தோரின் சடலங்கள் சற்றுத் தூரத்தில் புதைக்கப்பட்டன. இதில் வியப்பு என்ன வென்றால் 1974 இல் தற்செயலாகக் கண்ட பிடிக்கப்படும் வரை சுட்ட மண் போர்வீரர்கள் பற்றிய செய்தியை ஒருவராவது அறியாதிருந்ததுதான். நிகழ் உலகின் அதிசயமான சீனப் பெருஞ்சுவருக்கு நிகரான புகழ் இதற்கு உண்டு. ஏறத்தாழ 2000 வருடங்களுக்கு முன் இந்தச் சிலைக்குத் தீட்டப்பட்ட வர்ணங்கள் இப்போதுதான் சற்று மங்கியுள்ளன. இதுவும் இன்னுமோர் அதிசயம்.

ஏறக்குறைய 2500 வருட வரலாறு உடைய தமிழ் இலங்கியத்தில் கி.மு. 500 தொடக்கம் கி.பி. 200 வரையான காலத்தை சங்க இலக்கியகாலம் என்கிறோம். சங்க இலக்கிய காலத்தில் இறந்தோரைப் புதைத்தார்கள் அல்லது எரித்தார்கள் என்பதை இலக்கியக் குறிப்புக்கள் மூலம் அறிகிறோம். களத்தில் வீழ்ந்த வீரருக்கு நடுகல் நாட்டி தெய்வமாக வழிபடும் வழக்கும் தமிழரிடம் இருந்தது. நடுகல்லில் வீரன் பெயரும் வாழ்க்கைக்குறிப்பும் பொறிக்கப்பட்டன. நடுகல் நாட்டி வழிபாடு நடத்துவது பற்றி அகநானூறு, பாடல் 67

**"நல்லமர்க் கடந்த நானுடை மறவர், பேரும் பீடும் எழுதி அதர்தோறும் பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்"**

என்று கூறுகிறது.

வீழ்ந்த வீரன் பற்றிக் கூறும் புறப்பொருள் வெண்பாமாலை "எய்போல் கிடந்தான் என் ஏறு" என்கிறது. (எய் - அம்பு) சங்க இலக்கியம் குறிப்புணர்த்தும் நடுகல் இப்போதுதான் முதன் முறையாகக்கிடைத்துள்ளது. தேனீ மாவட்டத்திலுள்ள புலிமான் கோம்பை எனும் சிற்றூரில் மூன்று சங்க கால நடுகற்கள் எடுக்கப்பட்டன. 2300 வருடப் பழைமைவாய்ந்த தமிழ்ப் பிரம்பி எழுத்தில் அதில் வீரரின் பெயர் முதலியன பொறிக்கப்பட்டிருந்தன. ஒரு கல்லில் 'கூடல் ஊரில் நடந்த ஆகோள் போரில்

உயிரிழந்த பேடு தீயின் அந்தவன்' என் பானுக்கு எடுத்த கல் என்ற செய்தி பழைய தமிழில் சொல்லப்பட்டுள்ளது. இந்திய உப கண்டத்தில் கிடைத்த நடுகற்களில் இம் மூன்றும் மிகப் பழையனவாகக் கருதப்படு கின்றன.

களத்தில் வீழ்ந்த எதிரிநாட்டுப் படையினருக் குப் பூரண இராணுவ மரியாதை அளிப்பதும், உடலைப்பக்குவமாக அவன் நாட்டிற்கு அனுப் பிவைப்பதும் உலகின் போரியல் மரபு. அதே போல் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கும் இராணு வம் அங்கிருக்கும் இடு நிலங்களையும் போர் வீரர்களின் கல்லறைகளையும் குறைவிடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்புடையதாகும். முதலாம் இரண்டாம் உலகப் போர்களில் பெல் ஜியம், பிரான்சு ஆகிய நாடுகளில் இறந்த ஜேர மன் படையாட்களின் கல்லறைகள் காணப்படு கின்றன. ஜேர்மன் படைகள் வெளியேற்றப்பட் டாலும் அவர்கள் விட்டுச்சென்ற கல்லறைகள் மிகவும் நேர்த்தியாக இந்த நாடுகளால் பேணப்படுகின்றன. தமிழீழ மண்ணை றிவிரச இராணுவ நடவடிக்கை மூலம் ஆக்கிர மித்த சிங்களப் படைகள் முதல் வேலையாக புலி மாவீரர்களின் துயிலும் இல்லங்களையும் நினைவுத் தூபிகளையும் சேதப்படுத் தினார்கள். சமாதான காலத்தில் விடுதலைப் புலிகள் அவற்றை மீண்டும் பழைய நிலைக் குக் கொண்டுவந்துள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தில் ஒரு பக்கலில் குவிக்கப்பட்ட கல்லறைச் சிதைவுகளின்மேல் பின்வரும் வாசகம் தமிழ், ஆங்கில மொழி களில் பொறிக்கப்பட்டுள்ளது. “1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பின் னர் சிறீலங்காப் படையினர் இங்கே உறங்கிய எம் மாவீரச் செல்வங்களின் கல்லறைகளைச் சிதைத்து அழித்தனர். அந்தக்கல்லறைச் சிதை வுகள் இங்கே சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. சில நொடிப் பொழுதுகள் சிரம் தாழ்த்துவோம்” சிறீலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித் தனமும் வெறிப்போக்கும் இன்னும் ஓய வில்லை. வடமராட்சி எள்ளன்குளம் மாவீரர் துயிலும் இல்லம் 2006 செப்ரம்பரில் மூன்று தடவை சேதமாக்கப்பட்டுள்ளது. சுற்றுமதிலில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்கள் அடித்து நொருக்கப்பட்டன. துயிலும் இல்லத்தின் பெயர்ப்பலகை உடைத்து எறியப்பட்டது. நுழைவாயில் கதவு நிரந்தரமாக இராணுவத் தினரால் திறந்து விடப்பட்டுள்ளது. கட்டாக் காலி மாடுகள் துயிலு மில்லப் பூந்தோட் டத்தை அழித்து விட்டன.

அத்தோடு நின்று விடாது சிலை உடைப்பு, சிதைப்பு ஆகியவற்றிலும் சிங்களப் படை யினர் இன்னும் வது கரும்புலி மாவீரன் கப்டன் மில்லரின் திரு உருவச் சிலை உடைத்து வீழ்த்தப்பட்டுள்ளது. 2006 ஆகஸ்து 23 ஆம் நாள் இரவு 11.30 மணியளவில் உட் புகுந்த படையினர் இந்த அநாகரிகச் செயலைச் செய் துள்ளனர். செப் ரம்பர் 4 ஆம் நாள் வல்வை ஆதி கோவிலடியில் நிறுவப்பட்ட தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர் சிலை மீது இரவு ஊரடங்கு அமுலில் இருந்தவேளையில் கழிவு எண்ணெய் ஊற்றியுள்ளனர். இந்தியத் தூத ரகம் ஊடாக விடுக்கப்பட்ட எச்சரிக்கைக்குப் பின் அதே படையினர் ஆதி கோவிலடி மக் களைக்கொண்டு எம்.ஜி.ஆர் சிலையைச் சுத் தப்படுத்தியுள்ளனர். அண்மையில் சம் பூரை ஆக்கிரமித்த சிங்களப் படையினர் அனைத்து இந்து, கிறிஸ்தவ ஆலயங்களையும் நிர்மூல மாக்கியுள்ளனர். சம்பூரில் புதிதாக ஒரு புத்தர் சிலையும் அரசமரக்கன்றும் நாட்டப்பட் டுள்ளன.




**கலாநிதி க.சோமாஸ்கந்தன்**

களத்தில் இறந்த சிங்களப் படையினரின் உடல்களை ஏற்க மறுப்பது அல்லது ஏற்கத் தயங்குவது பற்றிய சர்ச்சை சிறீலங்காவில் நில வுகிறது. சிறீலங்கா வெளிவிவகார அமைச்சக முன்னாள் அதிகாரி கே. கொடகே, டெயிலி மிரர் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் (DAILY MIRROR 2005 FEBRUARY 21) “புலிகள் எம்மை மீண்டும் மீண்டும் கேட்ட போதும் நாம் ஆனையிறவுச் சமரில் இறந்த எமது படையினரின் உடல்களை ஏற்கமறுத் துள்ளோம். இது பற்றி நான் ஒரு மூத்த அர சியல் வாதியைக் கேட்டபோது, அவ்வளவு எண்ணிக்கையில் உடல்கள் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டால் அரசு விழ நேரிடும் என்று பதிலளித்தார். இறந்தோர் காணாமல் போனோர் பட்டியலில் இருக்கிறார்கள். அவர் களுக்கு பன்சகுல மதச்சடங்குகள் ஒன்றுமே கிடைக்காது.”

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜப்பான் இதுவரை கொரியா ஆகிய நாடுகள் இதற்குக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கின்றன. முன்னாள் ஜப்பான் பிரதமர் கொய்சுமி வணக்கம் செலுத் துவதற்காக அங்கு அடிக்கடி சென்று வந்தார். இதனால் சீன ஜப்பான் உறவுகள் கசப்படைந் தன. நான் அங்கே செல்லுவது எனது நாட்டின் உள்விவகாரம், அதில் வெளியார் தலையீடு இருக்கக் கூடாது என்கிறார் கொய்சுமி. யசுக் குனி என்றால் ஜப்பான் மொழியில் அமைதி நிலவும் இடம் என்று பொருள். ஷின்ரோ மத ஆசாரப்படி பேணப்படும் யசுக்குனி ஆலயம் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் கடும் உணர்வலைகளை எழுப்புகிறது. 1868 ஆம் ஆண்டு தொட்டு ஷின்ரோ ஜப்பானின் தேசிய மதமாக இடம் பெறுகிறது.

ஜப்பான் நாட்டு வர்த்தப் பிரமுகர்கள் சீனாவில் பெருமளவு முதலீடுகள் செய்த காரணத்தால் அதனோடு நல்லுறவைப் பேண விரும்பு கின்றனர். யசுக்குனி கோயிலை டோக்கி யோவிலிருந்து பிறிதோர் உட்புற நகருக்கு மாற்றும் யோசனையை அவர்கள் முன்வைக் கின்றனர். சில அரசியல் வாதிகளும், பத்திரிகை முதலாளிகளும் இதற்கு ஆதரவ ளிக்கின்றனர். ஷின் ரோ மதபீடம் சாதகமான பதில்தரவில்லை.

நாசி ஜேர்மனி படுகொலை செய்த ஆறு மில் லியன் யூதர்களுக்கான உத்தி யோகபூர்வ நினைவாலயம் இசுரவேல் அரசினால் ஜெருச லேம் நகரில் திறக்கப்பட்டுள்ளது. அதன் பெயர் யாத் வாசெம். பைபிள் வாசகம், இசையா, அத் தியாயம் 56, பாடல் 5 இல் “நான் அவர்க ளுக்கு எனது வீட்டில் எனது சுவர்களுக்குள் ஒரு நினைவாலயமும் பெயரும் தருவேன்” என்ற வரி வருகிறது. நினைவுச் சிற்பம், கலைக்கூடம், ஆவணக்காப்பகம், நாசிகள் கொன்ற யூதர்களின் விவரம் அடங்கிய பகுதி, கல்வி நிலையம், ஆராய்ச்சி நிலையம் என் பன யாத் வாசெமில் அடங்குகின்றன. உயி ராபத்தையும் பொருட்படுத்தாது யூதர்களைக் காப்பாற்றிய யூதர்கள் அல்லாதோரின் பட்டியல் இங்கு வைக்கப்பட்டுள்ளது. இப் பெருமக்கள் “தேசங்களின் நீதியானோர்” (RIGHTEOUS AMONG THE NATIONS) என்று கௌரவிக் கப்படுகின்றனர். இசுரவேலுக்குச் செல்லும் உலகத் தலைவர்கள் யாத் வாசெம் சென்று மரியாதை வணக்கம் செலுத்துகிறார்கள். பல நூற்றாண்டு காலம் நிலவிய கிறிஸ்தவ - யூத முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் 2000 மார்ச்சு 23ஆம் நாள் இரண் டாம் அருளப்பர் சின்னப்பர் யாத் வாசெமுக்கு வருகைதந்தார். 1948 இல் இசுரவேல் நாடு நிறுவப்பட்டபோது கத்தோலிக்க மதபீடம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது நினை விருக் கலாம். பாப்பரசின் விஜயத்தோடு முரண்பாடுக ளுக்கு முடிவு கட்டப்பட்டது.

வியட்நாம் போரில் உயிரிழந்த அமெரிக்கப் படையினருக்குத் தலைநகர் வாக்ஷிங்ரனில் ஒரு பிரத்தியேக நினைவுச் சின்னம் எழுப்பப் பட்டுள்ளது. 1982 நவம்பர் 13 ஆம் நாள் அது நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. தலைநகரின் முக்கிய பூங்கா ஒன்றில் மூன்று ஏக்கர் நிலம் நினைவுச் சின்னம் வைப்பதற்காக ஒதுக்கப் பட்டுள்ளது. தமிழ் ட எழுத்துப்போல் இரு கருங் கற் சுவர்கள் நினைவுச் சின்னமாக நிறுத்தப் பட்டுள்ளன. திறந்த வெளியில் நிற்கும் இரு சுவர்களின் மொத்த நீளம் 246 அடி 9 அங் குலம். சுவர்களுக்கான கருங்கற்கள் இந்தியா வின் கர்நாடகா மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்பட்டு அமெரிக்காவின் வேர்மொன்ற் (VERMONT) மாநிலத்தில் செப்பனிடப்பட்டுள் ளன. உயிர்நீத்த 58,159 படையினரின் பெயர்கள், இறந்த திகதி வாரியாகச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. அவர்களுடைய இரா ணுவ அணி, பதவி, விருதுகள், பதக்கங்கள் போன்ற விவரங்கள் இதில் பொறிக்கப்பட வில்லை. இரு சுவர்களும் எடுத்துக்காட்டும் பளிங்குபோல் மினுக்கப்பட்டுள்ளன. சுவரி லுள்ள பெயர்களைப் படிப்போரின் விம்பம் சுவரில் நன்கு தெரியும் விதத்தில் சுவரைப் பளிங்காக்கி உள்ளனர். பெயரைப்படிப்ப வரும் பெயருக்குரியவரும் ஒருவரே என்ற தத்துவ விளக்கமாகப் பளிங்குச்சுவர் விளங்குகிறது. நினைவுச் சின்ன வரலாற்றில் வியட்நாம் வீரர்களுக்கான நினைவுச்சுவர் மிகவும் வித்தியாசமானது.

விடுதலைப்புலிகள் ஏடு - ஐப்பசி - கார்த்திகை, 2006




JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★Carpet★Flooring
★Hardware★Kitchen Cabinets
★Painting★Tiles★ Stairs
★Moulding★Window★Garage Door
★Spotlight★ Plumping★Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# பெருங்கற்பண்பாட்டுக் கால இலங்கையில் தமிழரும், பௌத்தமும்!

கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னர் இங்கு நிலவிய பெருங்கற்காலப் பண்பாட்டுடன் பொதுவானதொரு பண்பாடு இலங்கை முழுவதிலும் காணப்பட்டது. இப்பண்பாட்டின் பரவல், செறிவு, வளர்ச்சி, அவற்றின் வளங்கள் என்பன இடத்திற்கு இடம் வேறுபட்டு காணப்பட்டமைக்கு அவ்வவ்விடங்களில் காணப்பட்ட பௌதீக வளங்கள் காரணமாக இருப்பினும் அவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஏற்பட்ட அபிவிருத்திகளாகும். இப்பண்பாடு அறிமுகமாவதற்கு முன்னர் இலங்கையில் மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை ஏறத்தாழ 75 இற்கு மேற்பட்ட இடங்களில் இடைக்கற்கால அல்லது நுண்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் வட இலங்கையில் புளியங்குளம், கட்டுக்கரைக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளிலும் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்திருக்கக் கூடிய ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை நோக்கும் போது இப்பண்பாட்டு மக்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

நுண்கற்காலப் பண்பாடு இலங்கை தென்னிந்தியா முழுவதற்கும் பொதுவான பண்பாடாக இருந்துள்ளது. இனம், மொழிகள், பண்பாட்டுக் கூறுகள், தொழில்நுட்பம் என்பவற்றில் பொதுத்தன்மை காணப்பட்டது (இந்திரபாலா 2006: 87). இப்பண்பாட்டைத் தொடர்ந்து முன்னேற்றகரமான பெருங்கற்காலப் பண்பாடும், மக்களும் இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்தபோது அப்பண்பாட்டை முன்பு இங்கு வாழ்ந்த நுண்கற்கால மக்கள் பின்பற்றினர் அல்லது பெருங்கற்காலப் பண்பாடு அப்பண்பாட்டை உள்வாங்கிக் கொண்டது எனக் கூறலாம். இதனால், வரலாற்றுக் காலத்தில் இருந்து மொழியடிப்படையில் தமிழ், சிங்களம் என வேறுபடுத்திப் பார்க்கப்படும் மக்கள் இன அடிப்படையில் ஒரு இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவதே பொருத்தப்பாடாகும் (இந்திரபாலா 2006:86). அதில் தமிழ் மொழி பேசும் மக்கள் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் மொழி பேசும் மக்களாக இலங்கைக்கு வருவதற்கு முன்னரே அவர்களின் மூதாதையினர் வரலாற்றிற்கு முற்பட்ட கற்காலத்திலிருந்து இலங்கையில் வாழ்ந்துள்ளனர் (புஷ்பரட்ணம் 2003:2-41, இந்திரபாலா 2006:86). இவற்றை விளங்கிக் கொள்ள பௌத்த மதத்துடன் தோன்றிய புதிய பண்பாட்டையும், மொழிகளையும் நோக்குவது பொருத்தமாகும்.

## பௌத்த மதமும் தமிழரும்

பௌத்த மதத்தின் அறிமுகம் பெருங்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் ஏற்பட்ட இன்னொரு புதிய பண்பாட்டின் தொடக்க காலமாகப் பார்க்கப்படுகிறது. இம்மதம் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து மௌரிய மன்னன் அசோகனது ஆட்சியில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட போது இலங்கையில் நிலவிய பெருங்கற்கால பொருளாதாரக் கட்டமைப்பும், சமூகப் பிரிவுகளும் பௌத்த மதம் குறுகிய காலத்தில் பரவுவதற்கும், வளர்வதற்கும் சாதகமாக இருந்தது. இம்மதத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்களில் பெரும்பான்மையோர் பின்பற்றியிருக்கலாம் என்பதை இப்பண்பாட்டு மையங்களை அண்மித்துக் காணப்படும் பௌத்த மதத்துடன் தொடர்புடைய பிராமிக் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் தொடக்ககால பௌத்த ஆலயங்கள் கூடப் பெரும்பாலும் இப்பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களை ஒட்டியதாகவே காணப்படுகின்றன. பௌத்தம் ஒரு புதிய மதத்தின் அறிமுகமாக மட்டுமன்றி அது இலங்கையில் எழுத்து, மொழி, இலக்கியம், வரலாற்றைப் பேணும் மரபு, கட்டிடக்கலை, பௌத்த சங்கம் என்பனவற்றின் தோற்றத்திற்கும் காரணமாகியது. இதனால் இலங்கையில் புதிய பண்பாடு தோற்றம் பெற்றது.



சங்கமித்திரை இலங்கைக்கு வெள்ளரசு மரத்தைக் கொண்டு வந்ததை விபரிக்கும் விதமாக ஓவியர் பிசரன்ன வீரக்கொடி வரைந்த ஓவியம்

பௌத்த மதத்துடன் இலக்கிய மொழியான பாளியும், கல்வெட்டு மொழியான பிராகிருதமும் அறிமுகப்படுத்தப்பட்டது. பிராகிருத மொழி இலங்கையில் மட்டுமன்றி பௌத்த மதம் பரவிய அனைத்து நாடுகளிலும் கி.பி 4 ஆம் நூற்றாண்டு வரை (கி.மு. 3 முதல் கி.பி. 4 வரை) கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. சமகாலத்தில் தமிழகத்தில், தமிழ் கல்வெட்டு மொழியாக இருந்தும், அவற்றில் 25 விழுக்காடு பிராகிருதச் சொற்கள் கலந்து எழுதப்பட்டுள்ளன. கல்வெட்டு மொழியாக இருந்த பிராகிருத மொழியைச் சில அறிஞர்கள் சிங்கள மொழிக்கு முன்னோடியான மொழி (Proto-Sinhala) என அழைக்கின்றனர். வேறு சிலர் பழைய சிங்களம் எனக் கூறுகின்றனர். பிராகிருதம் என்பது பழைய மொழி என்ற பொருளைக் கொண்டது. இம்மொழிச் சொற்கள் பலவற்றைத் தமிழ் உட்பட பிற மொழிகள் கடன் பெற்றுள்ளன. தெலுங்கு மொழி பேசும் ஆந்திர மாநிலத்தில் உள்ள தந்திக்கம், புட்டுகாமம் முதலான இடப்பெயர்கள் 11 ஆம் நூற்றாண்டில் முக்கிய அரச தலைநகராக இருந்துள்ளன. தமிழகத்தில் உள்ள அதிரம்பாக்கம், அயின்காமம், பெரிய கையகம் என்பன வரலாற்றுப் பழமை வாய்ந்த இடப்பெயர்களாக உள்ளன. இவற்றில் பொது விகுதியாக வரும் 'சும. காம' என்பன பிராகிருத மொழியில் இருந்து பெறப்பட்டவை. சமகாலத்தில் பாளி இலக்கியங்களிலும், பிராமிக் கல்வெட்டுகளிலும் இவை இடப்பெயர்களின் பொதுவிருதியாக வருகின்றன. இவற்றில் இருந்தே தமிழில் உள்ள வலிகாமம், வீமன்காமம், மல்லாகம், சுண்ணாகம், கொடிகாமம், பனங்காமம், தம்பலகாமம் முதலான இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஆயினும் ஒப்பீட்டளவில் இலங்கையின் சிங்கள மொழி உருவாக்கத்தில் பிராகிருத மொழிக்கு முக்கிய பங்குண்டு எனலாம். இதனால் பௌத்த மத்தைப் பின்பற்றிய பெரும்பான்மை மக்கள் காலப்போக்கில் சிங்கள மொழி பேசும் பௌத்தர்களாக மாறிய போது, இன்னொரு பிரிவு மக்கள் பிராகிருத மொழிக்கு உட்படாது தமிழ் மொழி பேசிய இனக்குழுவாக மாறினர் (Indrupala 2005).

பௌத்த மதம் இலங்கையில் குறிப்பிட்ட இனம், மொழி அல்லது குறிப்பிட்ட இடத்திற்குரிய மதமாக வளரவில்லை. அது அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து இலங்கையின் பல பிராந்தியங்களுக்கும் பரவியதற்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்கள் உண்டு. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் பௌத்த துறவியான சங்கமித்தையால் கொண்டு வரப்பட்ட புனித சின்னமான வெள்ளரசக்கிளை, யாழ்ப்பாணத்தில் உள்ள ஜம்புக்கோளப் பட்டினத்திலிருந்து அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டதாக மஹாவம்சம் என்ற நூல் கூறுகிறது. தேவநம்பியதீஸன் தனது ஆட்சியில் ஜம்புக்கோளப்பட்டினத்திற்கு அண்மையில் திஸமாரசும விகாரையும், அதற்கு வெளியே பஞ்சினரமா என்ற விகாரையும் (மன்னார்?) கட்டியதாக இந்நூல் மேலும் கூறுகிறது. பிற்காலத்தில் ஜம்புக்கோளபட்டினத்தில் இருந்த விகாரையை கனிட்ட தீஸன் (கி.பி. 167- 186), வொகரிக தீஸன் (கி.பி. 209-211), முதலாம் விஜயபாகு போன்ற மன்னர்கள் புதுப்பித்துக் கட்டிய செய்திகளும் காணப்படுகின்றன. இவ்வரலாற்றுக் குறிப்புக்களை வன்னிப் பிராந்தியத்தின் சில இடங்களிலும், யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை கண்ணாகம், மகியப்பிட்டி, வல்லிபுரம், நவகிரி, நெடுந்தீவு, நயினாதீவு முதலான இடங்





யாழ். கந்தரோடை




# யாழ். நெடுந்தீவு பௌத்த தூபி

களிலும் கண்டுபிடிக்கப்பட்ட புத்தர், போதிசத்துவர் சிலைகள், பௌத்த வழிபாட்டு எச்சங்கள் என்பன உறுதி செய்கின்றன.

வரலாற்று அறிஞர்களில் ஒரு பிரிவினர் இலங்கையில் கண்டு பிடிக்கப்படும் புராதன பௌத்த மதம் தொடர்பான சான்றாதாரங்களை ஒரு மதத்தின் பண்பாட்டுச் சின்னங்களாகப் பார்க்காது குறிப்பிட்ட இனம் முன்பொருகாலத்தில் வாழ்ந்ததன் அடையாளமாகவே நோக்குகின்றனர். ஆனால் இலங்கையில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு வட இந்தியத் தொடர்பு ஒரு காரணமாக இருப்பினும் அதன் வளர்ச்சிக்கு தமிழக - ஆந்திரச் செல்வாக்கே முக்கிய காரணங்களில் ஒன்றாக இருந்துள்ளது. பேராசிரியர் பரணவிதான இலங்கையின் தொடக்க காலப் பௌத்த கலைப்படைப்புகள் ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறுகிறார். பாளி இலக்கியங்கள் தமிழகத்திலிருந்து வந்த புத்தத்த (Buddhatta), புத்தகோஸ் (Buddha Hosa), தர்மபால (Dharmapala) முதலான பௌத்த துறவிகள் இலங்கையில் தேரவாத பௌத்தத்திற்கு ஆற்றிய பணிகளை முக்கியப்படுத்திக் கூறுகின்றன. தமிழகத்தில் தோன்றிய பௌத்த காப்பியமான மணிமேகலை என்ற நூல் அறவணவடிகள், மணிமேகலை முதலானோர் இலங்கையில் நாகநாடு, மணிபல்லவம், இரத்தினதீவம் முதலான இடங்களுக்குச் சென்று அங்குள்ள பௌத்த பாதபிடிகையைத் தரிசித்ததாகக் கூறுகிறது. அவற்றுள் நாகநாடு, மணிபல்லவம் ஆகிய இடங்கள் யாழ்ப்பாணத்தையும், இரத்தினதீவம் சிவனொளிபாத மலையையும் குறிப்பதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது (திருநாவுக்கரசு 1978:62). அவற்றுள் தமிழகத்தில் இருந்து 40 காதம் தொலைவில் உள்ள மணிபல்லவம் நெடுந்தீவு என்ற இடத்தையே குறிப்பதாக அண்மைக்கால ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இலங்கையை சேர்ந்த பௌத்த துறவிகள் தமிழ்நாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த பள்ளிகளில் கல்வி கற்றதற்கும், தமிழ்நாட்டுப் பௌத்த குருமார் இலங்கையில் உள்ள பௌத்த விகாரைகளில் தங்கியிருந்து பாளி இலக்கியங்களுக்கு விளக்கவுரை எழுதியதற்கும் ஆதாரங்கள் உண்டு. சோழ நாட்டு தமிழ் பிக்குவான மகிந்தனே, மகாசேனன் ஆட்சியில் (கி.பி. 3ஆம் நூற்றாண்டில்) இலங்கைக்கு வந்து மகாயான பௌத்த மதத்தைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்துள்ளான்.

இவ்வரலாற்றுச் சம்பவங்கள் தமிழகத்தைப் போல் சமகாலத்தில் இலங்கையிலும் தமிழர்களில் கணிசமானவர்கள் பௌத்தர்களாக, பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. இதைப் பாளி இலக்கியங்களும் சமகாலப் பிராமிக் கல்வெட்டுகளும் உறுதிசெய்கின்றன. அநுராதபுர அரசில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் 22 ஆண்டுகள் (கி.மு. 177-155) ஆட்சி புரிந்த சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்களும், கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் 44 ஆண்டுகள் (கி.மு. 145-101) நீதி தவறாது ஆட்சிபுரிந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனும் தமது பழைய மத நம்பிக்கையை கைவிடாத போதிலும், பௌத்த மதத்திற்கு ஆதரவாக ஆட்சி செய்தார்கள் என மகாவம்சம் கூறுகிறது (Mahavamsa XX1:34). வட இலங்கையில் பெரியபுளியங்குளம், அநுராதபுரம், அம்பாறையில் குடுவில், திருகோணமலையில் சேருவில் ஆகிய இடங்களில் காணப்படும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் தமிழ் வணிகர்கள் பௌத்த துறவிகளுக்கு, பௌத்த சங்கத்திற்கு வழங்கிய குகைகள், கற்படுக்கைகள் என்பன பற்றிக் கூறுகின்றன (Paranavithana 1970). பிராகிருதம் பௌத்த மதத்திற்குரிய மொழியாக இருந்தும், இலங்கையில் உள்ள பல பிராமிக் கல்வெட்டுகள் தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பெழுத்துக்களைக் கொண்டிருப்பதுடன், அவற்றில் தனிநபர், உறவுமுறை, பட்டம், சமூகம் சார்ந்த பெயர்கள் தமிழிலும், பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களாகவும் எழுதப்பட்டிருப்பது அக்கல்வெட்டுகளைப் பொறித்தவர்கள் பௌத்த மதத்தவர்களாக அல்லது பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் காட்டுவதாக உள்ளன. அண்மையில் பேராசிரியர் கிருஸ்ணராஜா கந்தரோடையில் பௌத்த சின்னங்கள் காணப்படும் சுற்றாடலில் மேற்கொண்ட ஆய்வின்போது பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். அச்சாசனங்கள் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளில் அமைந்திருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தது.



யாழ். நெடுந்தீவு பௌத்த தூபி

## நெடுந்தீவிலுள்ள பௌத்த தூபி

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் 4 ஆண்டுகள் ஆட்சி புரிந்த பரித்தனும் (441-444), 16 ஆண்டுகள் ஆட்சி புரிந்த அவன் தம்பி குட்டபரிந்தனும் (444-460) பௌத்த மதத்திற்கு ஆற்றிய பணிகளை அநுராதபுர, அறகமக் கல்வெட்டுகள். கூறுகின்றன. இதனால் குட்டபரிந்தன் பரிதேவன், புத்ததாஸன் முதலான பட்டங்களைப் பெற்றதாக அநுராதபுரக் கல்வெட்டுக் கூறுகிறது. இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை பௌத்த சங்கத்திற்கும் தமிழக சோழ நாட்டுப் பௌத்த சங்கத்திற்கும் இடையே நெருங்கிய நட்புறவு ஏற்பட்டது. சோழநாட்டுப் பௌத்த துறவியான தீபங்கரர் இலங்கையில் சிங்கள பௌத்த துறவியான ஆனந்த வரைதன என்பவரிடம் கல்வி கற்றவர். இவர் சோழங்க தீபங்கர் என இலங்கையில் அழைக்கப்பட்டார். இவரைப் போல் சோழ நாட்டைச் சேர்ந்த காசியப்பர், புத்தமித்திரர், ஆனந்தர், அநுரத்தர் முதலான தமிழ்ப் பௌத்த துறவிகள் இலங்கையில் பணிபுரிந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன (இந்திரபாலா 2006:294). திருகோணமலையில் கண்டுபிடிக்கப்பட்ட 16 தமிழ்க் கல்வெட்டுகள் தமிழ்ப் பௌத்தத்துடன் தொடர்புடையவை. இவை சோழர் ஆட்சியில் இலங்கையில் தமிழ்ப் பௌத்தம் நிலவியதற்குச் சான்றுகளாகும். நெடுந்தீவில் காணப்படும் பௌத்த தூபியில் மூன்று கல்வெட்டுகள் தமிழிலும், கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டுகளிலும் இங்கு தமிழ்ப் பௌத்தம் இருந்ததற்குச் சான்றுகளாகும். கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டளவில் எழுந்த 'நம்பொத்த' என்ற சிங்கள இலக்கியம் அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த தமிழ்ப்பட்டினத்தில் (தெமில பட்டணத்தில்) பௌத்த யாத்திரிகர்கள் சென்றுவரக்கூடிய இடங்களாக தெல்லிப்பளை, மல்லாகம், நாகர்கோவில், விமன்காமம், ஊர்காவற்துறை, நயினாதீவு, காரைதீவு, புங்குடுதீவு, தனத்தீவு (நெடுங்கேணி) முதலான இடங்களைக் கூறுகிறது. இவற்றை நோக்கும் போது முன்னொரு காலத்தில் இங்கு வாழ்ந்த தமிழர்களுள் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்களும் இருந்துள்ளனர் என்பது தெரிகிறது. இதற்கு நெடுந்தீவிலுள்ள 15 - 16 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ் - கிரந்த மொழிக் கல்வெட்டுகளுடன் கூடிய பௌத்த தூபிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

நன்றி: போராசிரியர் பரமு புஷ்பரட்ணம்,

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு

437.345.4203

# மாவீரர் துயிலும் இல்லம்

மாற்றார் சிதைத்தாலும் மாவீரர் கல்லறை
மண்ணாய் நிலைக்குமையா...
ஆற்றல் மிகுந்த மாவீர் கல்லறை
மண்ணில் அனலே முளைக்குமையா...!






# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்!

**வீரமரணமடையும் புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுக்குள் மிகப் பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப் பட்டுள்ளது.**

**மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட "மாவீரர் துயிலும் இல்லங்களில்" இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுகற்கள் வைக்கப்பட்டுக் கொண் டிருக்கின்றன.**

**இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.**

**மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்பட வேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம்? என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.**





இதுவரை காலமும் வீரமரணமடைந்த எமது போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மத சம்பிர தாயங்களின் அடிப்படையில் உடல்கள் புதைக்கப்படுவதோ, தகனம் செய்யப்படுவதோ நடந்து வந்தது. ஆனால், இனிமேல் வீரமரணமடையும் அனைத்துப் புலிவீரர்களின் உடல்களை யும் புதைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். புதைக் கப்பட்ட இடத்தில் அவ்வப்போராளியின் பெயர் கூறும் கல் லறைகள் எழுப்பப்பட்டு அவை தேசிய நினைவுச் சின்னங் களாகப் பாதுகாக்கப்படும். இவைகள் காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.



தாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைத்து அங்கே நினைவுக் கற்கள் நாட்டப்பட வேண்டும் என்பதே போராளிகளின் விருப்ப மாகும். இந்த விருப்பம் மிக அண்மையில் ஏற்பட்ட தொன்றல்ல. இந்திய – புலிகள் போர்க் காலத்தில் வன்னிக் காட்டுக்குள்ளேயே போராளிகளின் இவ்விருப்பங்கள் வெளிப்படத்தொடங்கி விட்டன. பிரதானமாகத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தங்கி யிருந்த மணலாற்று காட்டுக்குள்ளேயே இவ்விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல்வடிவங்களும் கொடுக்கப் பட்டது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக கடும் சமர்கள் நடந்த இடம் மணலாறு என்பது தெரிந்ததே. இந்தியப் படைக ளுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அத்திவாரமாக இருந்தது மணலாற்றுக் காட்டில் நாம்கண்ட வெற்றிதான். இந்தச் சமர்களில் எமது போராளிகள் பெற்ற வெற்றிக்கு மண லாற்றுக்காடு உறுதுணையாக இருந்தது. இதனால் தங்க ளுடைய போராட்ட வாழ்வில் ஒன்றிக்கலந்து உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக் கப்பட வேண்டும் எனப் போராளிகள் விரும்பினார்கள்.

மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய போராளிகள் பலர் தாங்கள் எங்கேசென்று போராடி வீரமரணமடைந்தாலும் தங்களது உடல்கள் மணலாற்றுக் காட்டுப்பகுதிக்குள்தான் புதைக்கப்படவேண்டும் என எழுத்து மூலம், வாய் மூலம் தலைவர் பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன.

இதன் காரணமாக இன்று மணலாற்றுக் காட்டுக்குள் பெரிய தொரு மாவீரர் துயிலும் இல்லம் போராட்டக் கதைகளைக் கூறிக் கொண்டே இருக்கின்றது. இதேபோன்று மற்றைய மாவட்டங் களிலும் சிறிய சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளி களின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவ்விதம் தங்களது உடல்கள் சொந்த மண்ணுடன் கலக்கப்பட வேண்டும் என்ற போரளிகளது மன விருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்மதிருப்தியையும் பார்த்தோம். இனி போராளிகளது உடல் களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையில் இருக் கும் மானிட உணர்வுகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும், மனோவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டுகொள்ளலாம்.

மரபு வழியாக தமிழர்களிடம் இருந்துவரும் சம்பிரதாயங்களின் படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமை என அறிந்து வைத்திருக்கின்றோம். இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொரு ளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் வைக்கப்படுவது நாம் அறிந்ததுதான். ஆனால் அந்த வாதத்தை இம் மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகள் விட யத்தில் ஒப்புநோக்க முடியாது. போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஸ்டிகர்த் தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரணநிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என் றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்தத்தியாகச் சின் னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது, போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச் சுடரை ஏற்ற உதவும் நெருப்புக்கிடங்குகளாகவே பயன்படும். எனவேதான் போராளிகளது உடல்களைப் புதைத்து கல்லறைகளை எழுப்பி அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச் சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம். இன்றுவரை 3750ற்கும் மேற்பட்ட புலி வீரர்கள் வீரமரணமடைந்துவிட்டனர். இவர்களது உயிர்த் தியாகத்தால் எமது விடுதலைப் போராட்டம் உயர்ந்ததொரு கட்டத்திற்கு நகர்த்தப்பட்டு விட்டது. ஆனால் இவர்களது நினைவை உயிர்த்துடிப்புள்ளதாக்கும் சின்னங்கள் எம்மிடம் உண்டா? எனக் கேட்டால் 'இல்லை' என்றுதான் பதில் கிடைக்கும்.

**போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதயி வரலாற்றைப்படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரணம் நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச்சின்னமாக என்றென்றும் நிலைத்துநிற்கவேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.**

இப் போராளிகள் அனைவருக்கும் அவர்கள் பெயர் கூறும் கல் லறைகள் கட்டப்பட்டால் அவற்றைக் கண்ணுறும் அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பெறுமதியைப் புரிந்து கொள்வதுடன் அதை வென்றெடுக்க போராளிகள் கொடுத்த உயிர் விலையையும் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வார்கள்.

அன்பிற்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக் கொள் வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்து வந்த சம்பிரதாயம், சாஸ்திரங்களுக்கு முரணாக இருக் கிறது என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைக ளான புலிவீரர்கள் இந்தச் சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல் லாவற்றையும் கடந்த நிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத் தாக, பொக்கிசமாக இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான இப் பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும், எண்ணிக்கைக ளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம்மண்ணில் இருந்துகொண் டேயிருக்க வேண்டும்.



இது ஒருபுறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத் தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதைப் பாதித் திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ, உடன் பிறந்தவர் களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போரா ளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம். என்னதான் எமது தோழர்கள் சூழ்ந்து நின்று தகன நிகழ்சியை நடத்தினாலும்கூட, அப்போராளியைப் பெற்றெடுத்து – சீராட்டி வளர்த்தெடுத்த தாய் – தந்தையரோ, அல்லது உடன் பிறந்த வர்களோ இல்லாதது எமது மனதை நெருடுகின்றது. போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை இப் பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப் போகின்றோம்? ஒன்றன் பின் ஒன்றாய் நுற்றுக்கணக்கான போராளிகளைத் தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்? அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவ



வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான் தனது பிள்ளையின் உடலைப் பார்க்காது விட்டாலும் கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவி செய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப் பார்ப்பதுடன் ஓர் ஆத்ம திருப்தியையும் அவர்கள் அடைந்து கொள்வார்கள். கல்லறைகளை அமைத்து அடிக்கடி அங்கே செல்வது சோகத்தை தொடர்ந்தும் மனங்களில் வைத்திருப்பதற்காகவா? என ஒரு கேள்வி எழலாம்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானது தான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்க முடியாது தானே! கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செல்வதால் மனம் நிம்மதி அடையும். எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப் பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா? என யாராவது வினா எழுப்பலாம்.



நீண்டகாலம் தொட்டு இருந்து வரும் தகனம் செய்வது தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூற்று இலக்கியமும் ஈமத்தாழி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் இதை நிரூபிக்கப் போதுமானது.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும், உண்மையில் இந்த முறையை ஒரு சமூக சீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டும் பொருந்தும். இது பொது மக்களிற்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப்பிரச்சனை எழ நியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக் கிரியை நிகழ்ச்சி அல்ல, அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

சரி அப்படி புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா? அப்படி நடந்தால் வீரமரணமடைந்த போராளிகள் அவமதிக்கப்பட்டது போலாகாதா? எனவே இந்த அவமதிப்புக்கு புலிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? எனவும் கேள்வி எழலாம். தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் அமைக்கப்பட்ட சிலையையும் மன்னார் தளபதி லெப்.கேணல் விக்டரது கல்லறையையும் சிங்களப் படைகள் சிதைத்ததையும் மனதில் வைத்து மேற்குறித்த கேள்விகள் எழுவது நியாயமானது.

போரில் கொல்லப்பட்ட எதிரி இராணுவ வீரனது கல்லறைக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பது சாதாரண போர் தர்மம். ஆனால் அதை சிங்கள இராணுவம் கடைப்பிடிக்கும் என உறுதி கூறமுடியாதுதான். ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதானால் இங்கு கொல்லப்பட்ட இந்திய ஜவான்களுக்காக இந்திய அரசு எமது மண்ணிலேயே அமைத்த நினைவுச் சின்னங்களை இந்தியப் படைகள் வெளியேற்றப்பட்ட





பின்பும்கூட நாம் உடைத்தெறியவில்லை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகிறோம்.

ஆனால், எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் துண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும். இறுதியாக ஒன்று சொல்கிறோம். முழுமையாகவே எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாய்மண்ணை விடுவிக்கும் போரில் வீரமரணமடையும் ஒரு வேங்கை கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே.

**போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச்சுடரை ஏற்ற உதவும் நெருப்புக்கிடங்ககளாகும்.**

விடுதலைப் புலிகள் (ஐப்பசி – கார்த்திகை 1991)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னோடிகள் தமிழீழத்தின் அடிக்கற்கள்



லெப். **சங்கர்** (செ. சத்தியநாதன்)
கம்பர்மலை
வீரச்சாவு: 27.11.1982



லெப். **சீலன்** (லூ. சாள்ஸ் அன்ரனி)
திருமலை
வீரச்சாவு: 15.07.1983





கப்டன் **லாலாரஞ்சன்** (க. ஞானேந்திரமேகன்)
பருத்தித்துறை
வீரச்சாவு: 13.07.1984



வீரவேங்கை **ஆனந்தன்** (இ. அருள்நாதன்)
மயிலிட்டி
வீரச்சாவு: 15.07.1983



லெப். **செல்லக்கிளி** (ச. செல்வநாயகம்)
கல்வியங்காடு
வீரச்சாவு: 23.07.1983



கப்டன் **பண்டிதர்** (சி. ரவீந்திரன்)
கம்பர்மலை
வீரச்சாவு: 09.01.1985



கப்டன் **றெஜி** (சு. மகேஸ்வரன்)
காரைநகர்
வீரச்சாவு: 02.12.1985



மேஜர் **அல்பேட்** (க. ரூபநிதி)
அச்சுவேலி
வீரச்சாவு: 21.12.1985



லெப். கேணல் **சந்தோசம்** (க. உமைநேசன்)
அரியாலை
வீரச்சாவு: 21.10.1987



லெப். கேணல் **விக்டர்** (ம. பியூஸ்லஸ்)
பனங்கட்டிக்கொட்டு
வீரச்சாவு: 12.10.1986



கப்டன் **லிங்கம்** (சி. செல்வகுமார்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 24.04.1985



மேஜர் **கணேஸ்** (சி. சிற்றம்பலம்)
கந்தளாய்
வீரச்சாவு: 05.11.1986



லெப். கேணல் **பொன்னம்மான்** (யோ. குகன்)
யாழ். கலட்டி
வீரச்சாவு: 14.02.1984



லெப். கேணல் **புலேந்திரன்** (கு. தர்மராசா)
திருமலை
வீரச்சாவு: 05.10.1987



லெப். கேணல் **குமரப்பா** (பா. இரத்தினபாலன்)
வல்வெட்டித்துறை
வீரச்சாவு: 05.10.1987



கேணல் **கிட்டு** ச. கிருஸ்ணகுமார்
வல்வெட்த்துறை
வீரச்சாவு: 16.01.1993



லெப். கேணல் **அப்பையா** (ஐ. இராசையா)
மானிப்பாய்
வீரச்சாவு: 24.12.1997

தியாகத்தின்
சிகரங்கள்..!
வீர யாகத்தின்
அகரங்கள்...!!
காற்றோடு
கலந்தவர்கள்...!
வீர காவியம்
ஆனவர்கள்...!!

நெருப்பாற்றில்
குளித்தவர்கள்...!
வரலாற்றில்
நிலைத்தவர்கள்...!!
மரணத்தை வென்ற
மாவீரர்...!
தமிழ் மானத்தைக்
காத்த புலிவீரர்...!!

மாவீரச்
செல்வங்களே...!
உங்களின்
கல்லறைகள் கூட
பகைவனைப்
பயமுறுத்தும்!
அதனால்தானே...
அனைத்தையும்
அழிக்கிறான்...!?
உங்களின்
நினைவுநாள் கூட
எதிரிக்கு உறுத்தும்!
அதனால்தானே...
அனைத்தையும்
தடுக்கிறான்...!?

உங்களின் தியாகத்
தீயில்தான்...
இன்னும் நாம்
குளிர்காய்கிறோம்!
இவ்வளவு இழந்த
பின்னும்...
இன்னும் நாம்
உயிர்
வாழ்கிறோம்!!

இனியும் நீங்கள்
எங்களுக்காய்
உங்கள்
ஆத்மாக்களை
எழுப்பாதீர்கள்!
நிம்மதியாய்
உறங்குங்கள்...!
உங்கள் கனவுகள்
உறங்காது!

# தமிழீழ விடுதலைக்கு விதையான தமிழகத்தைச் சேர்ந்த மாவீரர்கள்



**மாவீரன்**
**முத்துக்குமார்**
**குமரேசன் முத்துக்குமார்**
**19.11.1982-29.01.2009**

ஈழத்தமிழர்களின் இனப்படுகொலையைக்கு
இந்திய அரசு துணை போவதாக கண்டித்து
சென்னையிலுள்ள சாஸ்திரி பவன்
முன் தீக்குளித்து வீரச்சாவு

**வீரவேங்கை பத்மநாபன்**
இயற்பெயர்: பி.பத்மநாபன்
ஊர்: திருச்சி, தமிழகம்.
வீரப்பிறப்பு: 27.07.1963
வீரச்சாவு: 16.03.1988 (தமிழகத்தின் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் போது)

**வீரவேங்கை சுனில்**
இயற்பெயர்: கதிரவன்
ஊர்: தமிழகம்.




வீரச்சாவு: 11.04.1988 (முல்லைத்தீவு ஒட்டங்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட தாக்குதலில்)

**லெப். இனியன் [ரஸ்கின்]**
இயற்பெயர்: முத்தையா இராமசாமி
ஊர்: தூத்துக்குடி, கன்னியாகுமாரி, தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 23.07.1962
வீரச்சாவு: 11.12.1991 (மன்னார் மருதமடு வேப்பங்குளம் பகுதியில் சிறீலங்கா படையினருடனான சமரில்)
துயிலுமில்லம்: ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**2ம் லெப். உதயசந்திரன்**
இயற்பெயர்: சேதுபாணடித்தேவர் ராமமணி சேகரன்மகாதேவர்
ஊர்: திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 05.05.1969
வீரச்சாவு: 09.06.1992 (மன்னார் சிறுநாவற்குளத்தில் சிறீலங்கா படையினர் மீதான அதிரடி தாக்குதலின் போது)

**கடற்புலி கப்டன் ஈழவேந்தன்**
இயற்பெயர்: துரைராசன் குமரேசன்
ஊர்: தமிழ்நாடு.
வீரப்பிறப்பு: 25.05.1969
வீரச்சாவு: 20.11.1992 (தமிழீழக் கடற்பரப்பில் நடந்த மோதலில்)
துயிலுமில்லம்: எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**லெப். சச்சு**

இயற்பெயர்: அன்ரனி சிறிகாந்த்
ஊர்: பியர், இந்தியா.
வீரப்பிறப்பு: 04.09.1975
வீரச்சாவு: 20.12.1992 (மன்னார் நானாட்டன் மாதிரிக்கிராமம் படை முகாம்களுக்கிடையில் அமைந்துள்ள காவலரண்கள் மீதான தாக்குதலின்போது)
துயிலுமில்லம்: பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**கரும்புலி லெப். செங்கண்ணன்**
இயற்பெயர்: தனுஸ்கோடி செந்தூரபாண்டியன்
ஊர்: சாத்தூர், சிவகாசி (தமிழகம்)
வீரப்பிறப்பு: 25.01.1975



வீரச்சாவு: 11.11.1993 (யாழ். பலாலி படைத்தளத்தினுள் ஊடுருவி மேற்கொள்ளப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது வீரச்சாவு)
துயிலுமில்லம்: உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**வீரவேங்கை மணியரசி**
இயற்பெயர்: செல்லத்துரை கமலாதேவி
ஊர்: தமிழகம்.
வீரப்பிறப்பு: 02.02.1977



வீரச்சாவு: 19.04.1996 (யாழ். தென்மராட்சி கோட்டத்தை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட சூரிய கதிர்-2 நடவடிக்கைக்கு எதிரான சமரில்)
துயிலுமில்லம்: ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.

**கப்டன் குணதேவன் [லக்ஸ்மணன்]**
இயற்பெயர்: அம்மனாரி தென்னரசு
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 01.01.1966
வீரச்சாவு: 13.05.1996 (அம்பாறை 11ம் கொலனியில் அமைந்திருந்த காவல்துறை நிலையம் மீதான தாக்குதலின்போது)

**கப்டன் பெரியதம்பி [விஸ்ணு]**
இயற்பெயர்: சிவானந்தம் முகேஸ்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 31.05.1975



வீரச்சாவு: 19.05.1996 (திருகோணமலை கிலக்கடவெல படைமுகாம் மீதான தாக்குதலின்போது)
துயிலுமில்லம்: மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**கப்டன் குற்றாளன்**
இயற்பெயர்: கந்தையா கலைச்செல்வன்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 08.08.1969
வீரச்சாவு: 16.07.1996 (மன்னார் பள்ளிமுனைப் பகுதியில் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு)

**மேஜர் குருசங்கர்**
இயற்பெயர்: பழனியாண்டி மகேந்திரன்
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 18.04.1973



வீரச்சாவு: 25.07.1996 (முல்லைத்தீவு படைத்தளம் மீதான ஓயாத அலைகள் நடவடிக்கையின் போது)
துயிலுமில்லம்: பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**வீரவேங்கை சுதா**
இயற்பெயர்: வீரப்பன் இலட்சுமணன்
ஊர்: தஞ்சாவூர், தமிழ்நாடு
வீரப்பிறப்பு: 28.10.1980
வீரச்சாவு: 05.07.1999 (மன்னார் பள்ளமடு பகுதியில் சிறீலங்கா படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது.)
துயிலுமில்லம்: கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

**மேஜர் உமா**
இயற்பெயர்: வேலுச்சாமி இந்துமதி
ஊர்: தமிழகம்
வீரப்பிறப்பு: 27.05.1972
வீரச்சாவு: 11.12.1999 (கிளிநொச்சி பரந்தன் பகுதியில் 'ஓயாத அலைகள் 03' நடவடிக்கையின்போது)
துயிலுமில்லம்: விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைக்கப்பட்டுள்ளது.

# நடுகல்



கார்த்திகைத் திங்கள் கடும் குளிர்வாடை
வீசுங் காலம் மாசில் ஒருநாள்
பண்டைத் தோன்றிய தண்டமிழ் மரபின்
மாலை இட்டு மலர்கள் தூவி
நெய்விளக்கேற்றி பெய்ம் மழை அன்ன
விழிநீர் ஒழுக பலர் நின்று தொழூஉம்
இவையே
ஞாலம் வியக்கத் தாயகம் மீட்கப்
பாசறை கலங்கள், பகையொடு வளங்கள்
என்றிவை சிதைய என்றிய சினத்தில்
வெடியொடு சென்று வெடித்து வீழ்ந்தும்
அறத்தார்நாம் என்றவர் முகத்திரை கிழிய
மென்முறை வழியில் உண்ணாது நோற்றுத்
தம்முயிர் ஈந்தும் செம்மையில் தெவ்வர்
கையகப்படாது மரபது காக்க
நஞ்சினை உண்டு நல்லுயிர் விட்டும்
வெஞ்சமர் ஆடிக் களத்திடை வீழ்ந்தும்
மாண்ட கரும்புலி மறவர் பெயரும்
ஈண்டவர் ஈட்டிய பெருமையும் அன்னார்
வாழும் ஊரம் வீழ்ந்த
நாளும் எழுதிய நடுகல் தாமே.

– பண்டிதர் வீ. பரந்தாமன்

# 25ஆம் ஆண்டு வீரவணக்கம்



கடற்புலி **கப்டன் தமிழிசை**

**தெய்வேந்திரம் தேவசுகிதா**

வேலணை மேற்கு, 06ஆம் வட்டாரம், யாழ். மாவட்டம்

தோற்றம்: 27.11.1975 வீரச்சாவு: 27.11.1999

கடற்புலியாய் வீறுகொண்டு
கயவர்களை வீழத்தியவளே!
விடியலின் வரவால்
விடுதலைக்கு வித்திட்டவளே!
வீழ்ந்த நீ வெகுவிரைவில்
விழுதாகி வேர்விடுவாய்.

நெய்விளக்கை ஏற்றும்வேளை
நெக்குருகி நின்றாலும்
நெஞ்சுயர்த்தி வாழ
நீயும் வழி சமைத்துவிட்டாய்
வருகின்ற தாயகத்தில்
விடிவெள்ளியாய் நீ தரிப்பாய்
ஈழத்தின் உன்னத உதயத்திலும்
ஈகைச்சுடர் நாம் ஏற்றுகிறோம்."

நிகழ்வு: தமிழீழ கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தின் போது வீரச்சாவு

தகவல்: உடன்பிறப்புகள்

# தேசியக்கொடிப் பயன்பாட்டு விதிக்கோவை
# "தமிழீழ தேசியக்கொடி"



## 01. முன்னுரை

உலகிலுள்ள எல்லா நாடுகளும் தத்தமக்கெனத் தேசியக் கொடிகளை உருவாக்கியுள்ளன. ஒரு நாட்டின் மீது அந்நாட்டின் குடிமக்கள் கொண்டிருக்கும் மதிப்பின், பற்றின் வெளிப்பாடே தேசியக்கொடி வணக்கமாகும். தேசியக்கொடியை ஏற்றிப் போற்றிய பின்பே முதன்மையான விழாக்கள், நிகழ்ச்சிகள் என்பன ஒவ்வொரு நாட்டிலும் தொடக்கப்படுகின்றன.

மாற்றாரின் பிடியிலிருந்து தமிழீழ மண்ணை முற்றாக விடுவிப்பதற்கான போராட்டம் வீறுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையில், ஆயிரக்கணக்கான மாவீரரின் உயிர்களை விலை கொடுத்து மாற்றாரிடமிருந்து மீட்டெடுத்த எமது பாரம் பரியத் தமிழீழ மண்ணில் தமிழீழ நாட்டுக்கான தேசியக் கொடியை எமது தேசியத்தலைவர் ஏற்றிப் பறக்கவிட்டுள்ளார்.

நாடு உருவாகுதற்கு முன்பே நாட்டுமக்களால் முறைப்படி கொடி வணக்கம் செலுத்தி, கொடிவணக்கப்பாடலை இசைத்து முதன்மை விழாக்களை, நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் தமிழீழ மண் தேசியக்கொடி வரலாற்றில் ஒரு புதுமை சேர்த்திருக்கிறது.

உலகம் வியக்கக்கூடிய புதுமையான வரலாற்றைப் பெற்ற எமது தேசியக்கொடியை ஏற்றிப்போற்றும் முறையைத் தமிழீழ மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் "தேசியக்கொடிப் பயன்பாட்டு விதிக்கோவை" என்ற இக்கைந்நூலைப் பெருமகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.




| 1977 | 1990 |
|---|---|
| Liberation Tigers of Tamileelam (LTTE) Logo | Tamileelam National Flag |

## 02. தேசியக்கொடியின் தன்மை

ஒரு நாட்டின் தேசிய இனங்கள், நாட்டு மக்களின் பண்புகள், ஆட்சி, இறைமை என்பவை உட்பட அந்த நாட்டைக் குறிக்கின்ற ஒட்டுமொத்தமான பொதுச் சின்னமாகத் தேசியக்கொடி விளங்குகின்றது.

## 03. தேசியக்கொடியின் அமைப்பும் அளவும்

ஒவ்வொரு நாட்டினதும் இயல்புகள், நிலைமைகள், எண்ணங்கள் ஆகியவற்றின் வெளிப்பாடாக அந்தந்த நாடுகளின் தேசியக்கொடிகளின் சின்னம், நிறம், அளவு, அமைப்பு என்பன வேறுபட்டிருக்கும். தேசியக்கொடிகளின் நீள, அகலங்கள் பெரும்பாலும் 3:2 என்ற கூறுபாடு (விகிதம்) கொண்டனவாக அமைகின்றன. சில நாடுகளின் தேசியக்கொடிகளின் நீள, அகலங்கள் 2:1 என்ற அளவினவாகவும் இன்னும் சில நாடுகளில் 1:1 என்ற அளவைக் கொண்டனவாகவும் (சதுரமாகவும்) அமைகின்றன.

## 04. தேசியக்கொடியின் பெருமையும் கொடி வணக்கமும்

நாட்டைப்போற்றி வணங்குதற்கீடாகத் தேசியக்கொடிக்கு வணக்கம் செலுத்தப்படுகின்றது. தேசியக்கொடியை வணங்குவது, நாட்டை வணங்குவது போலாகும். நாட்டின் தலைவர், படை, ஆட்சி என்பவற்றைவிடவும் உயர்ந்ததாகத் தேசியக் கொடி மதிக்கப்படுகின்றது. எனவேதான் எந்தவொரு நாட்டிலும் எந்தச் சிறப்பு நிகழ்வுகளின்போதும் நாட்டின் தலைவர், படை வீரர், அரசுப் பணியாளர், குடிமக்கள் அனைவரும் கொடி வணக்கம் செய்கின்றனர்.

நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளிலும் குறிப்பிட்ட சில பொது இடங்களிலும் தேசியக்கொடியை நாள்தோறும் பறக்கவிடலாம்.

வெளிநாடுகளிலுள்ள எமது பணியகங்களிலும் தூதரகங்களிலும் பகலில் எந்நாளும் எமது தேசியக்கொடியைப் பறக்கவிடலாம்.

தேசியக்கொடி ஏற்றப்படும்போது அனைவரும் எழுந்துநின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

கொடிவணக்கத்தின்போது சீருடையில் இருக்கும் பணி ஆளணியினர் (படையணிகள், சாரண இயக்கத்தவர், முதலுதவிப்படை முதலியன) தத்தமது பணிகளுக்குரிய கட்டளைகளில் விதித்துரைக்கப்பட்டவாறு முறைப்படி கொடிவணக்கம் செலுத்துவர்.

சீருடை அணிந்தவர்கள் தவிர ஏனையோர் தலையணி (தொப்பி) அணிந்திருப்பின் தேசியக்கொடி ஏற்றப்படும் வேளையில் அவற்றை வலது கையாற் களைதல்வேண்டும். தலையணியைக் களைந்தபின்பு வலது கையை இடப்பக்க நெஞ்சின் மீது வைத்துக் கொடி வணக்கம் செலுத்தவேண்டும். தமிழீழக் குடியுரிமையாளரல்லாதாரும் வலது கையை இடப்பக்க நெஞ்சின் மீது வைத்து வணக்கம் செலுத்தலாம். அல்லது கவன நிலையில் (Attention) நிற்கவேண்டும்.

வணக்கத்துக்குரிய தேசியக்கொடியை உடையாக அணியவோ உடையின் பகுதியாகப் பொருத்தவோ கூடாது.

தேசியக்கொடியிற் பொறிக்கப்பட்டுள்ள இலச்சினையைப் பெறுமதியான பொருட்களிலோ உடைகளிலோ பொறிக்கலாம்.

தேசியக்கொடியில் எவ்வகையான அடையாளங்களையோ எழுத்துக்களையோ சொற்களையோ எண்களையோ வடிவங்களையோ படங்களையோ எழுதவோ வரையவோ கூடாது.

தற்காலிகமாகப் பயன்படுத்திவிட்டு வீசப்படும் எப்பொருளிலும் தேசியக்கொடியைப் பதிக்கக்கூடாது.

தேசியக்கொடி நிலத்தில் வீழ்வதை எப்பாடுபட்டேனும் தவிர்க்க வேண்டும். ஒருவேளை நிலத்தில் வீழ்ந்துவிட்டால் உடனடியாக நிலைமையைச் சீராக்கிவிடவேண்டும். கொடியில் அழுக்குப்படிந்துவிட்டால் உடனடியாகக் கழுவிக் காய விட்டபின்பே பயன்படுத்தவேண்டும்.

தேசியத்துயர நிகழ்வின்போது தேசியக்கொடியை அரைக்கம்பத்திற் பறக்கவிடப்படுவதன்மூலம் நாட்டின் துயரம் உணர்த்தப்படுகின்றது. கொடிக்கம்பத்தின் நுனியிலே பறக்கின்ற கொடி நடுப்பகுதிவரை இறக்கப்பட்டு அரைக்கம்பத்திற் பறப்பதே நாட்டின் மிகுதுயரை உணர்த்துவதாயின் தேசியக்கொடி சிதைவுறுவதோ கீழே வீழ்த்தப்படுவதோ வீசப்படுவதோ கால்களில் மிதிக்கப்படுவதோ எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத இழிநிலையாகும்.

தேசியக்கொடியின் நிறம் மங்கிப்போனாலோ வேறு ஏதாவது வகையிற் பழுதடைந்து பறக்கவிடுவதற்குரிய நிலையை இழந்துவிட்டாலோ அதனை உரியமுறையில் எரித்து அழித்துவிடவேண்டும். பழந்துணியாகப் பயன்படுத்துவதோ குப்பைத்தொட்டியிற் போடுவதோ தேசத்திற்குச் செய்யப்படும் அவமானமாகும். எனவே அவ்வாறு செய்யக்கூடாது.

## 05. கொடியை ஏற்றும் போதும் கொடிவணக்கத்தின் போதும் செய்யப்படக் கூடாதவை

தேசியக்கொடிக்கு வழங்கப்படுகின்ற மதிப்பு, சிறப்பு என்பன அந்த நாட்டைச் சென்றடைவது போன்று, தேசியக்கொடிக்கு ஏற்படுத்தப்படும் இழிவு, புறக்கணிப்பு என்பனவும் அதன் நாட்டையே சென்றடையும். எனவேதான் தேசியக்கொடிக்கு மிகுதியான ஒறுப்பு (தண்டனை) வழங்கப்படுகின்றது.

தேசியக்கொடிக்கு மதிப்புச் செலுத்துகின்ற கொடிவணக்க நிகழ்வுக்கு நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட சீரான ஒழுங்குமுறை வரையறுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றது. கொடியேற்றம், கொடிவணக்கம் என்பனவற்றுக்கான ஒழுங்குமுறை, நடைமுறை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறையில் அமைந்திருக்கும். அந்த வரையறுக்கப்பட்ட ஒழுங்கு முறைகளை மீறுவது தேசியக்கொடிக்கு இழைக்கப்படுகின்ற இழிவாகவே கொள்ளப்படும்.

### தேசியக்கொடியைத் தலைகீழாகப் பறக்கவிடக்கூடாது

மடித்தபடி மேலே ஏற்றி அங்கிருந்து விரிந்து பறக்கும் வகையில் தேசியக்கொடியை ஏற்றுதல் கூடாது. தேசியக்கொடியைக் கீழிருந்து பறந்தபடியிருக்கும் நிலையிலேயே ஏற்றவேண்டும்.

## 06. கொடிமீது கொண்ட பற்று

சிறப்பு நிகழ்வுகளுக்கான ஊர்வலங்களின் போது தேசியக் கொடியை ஏந்திச்செல்வதும் ஏந்தி நிற்பதும் கூடத் தேசியக் கொடிக்குச் செலுத்துகின்ற மதிப்பு வணக்கமாகும். தேசியக் கொடி ஏந்துபவர்களும் கொடிக்கம்பத்தைக் காப்பவர்களும் தேசியக்கொடி சிதையவோ கொடிக்கம்பம் சரியவோ இடமளிக்கமாட்டார்.

தேசியக்கொடியை ஏந்துபவர் ஏந்துகின்ற கொடியைக் கடமை முடிந்ததும் உரிய இடத்தில் வைப்பர், அல்லது தகுதியானவரிடம் கையளிப்பர், எவ்விடர்வரினும் உயிரேபோகின்ற நிலைவரினும் கொடியைக் கைவிடாத தன்மையைக் கொண்டிருப்பர். தாம் ஏந்துகின்ற கொடி சரிந்தாலோ கீழே விழுந்தாலோ அது தமது நாட்டுக்கு இழுக்காகிவிடும், தமது நாட்டின் ஆட்சி வீழ்ந்ததாகக் கொள்ளப்படும் என்ற உணர்வு அவர்களிடமிருக்கும். பண்டைக் காலத்திலேயே தமிழ்மக்கள் நாட்டின் கொடிமீது கொண்டிருந்த பற்றும் அதற்குக் கொடுத்த மதிப்பும் பற்றி இலக்கியங்களும் வரலாறுகளும் எடுத்தியம்புகின்றன.

## 07. தமிழீழத் தேசியக் கொடியின் வரலாறு



எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பெற்ற புலிக்கொடி 1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்து வருகிறது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பெற்ற கொடி தமிழீழத் தேசியக் கொடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்றது. தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் அதாவது 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் நாள் முதல் தடவையாகத் தமிழீழத் தேசியத் தலைவர்

அவர்களால் அவரது பாசறையில் ஏற்றிவைக்கப் பெற்றது.

### 08. நிறங்களும் குறிக்கோளும்

எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன. தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக்கொள்ள விழைவது அதனது அடிப்படை அரசியல் உரிமையும் மனித உரிமையுமாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, நியாயமானது என்பதையும் தமிழீழத் தேசம் எப்பொழுதும் அறத்தின் பக்கம் நிற்குமென்பதையும் மஞ்சள் நிறம் குறித்து நிற்கிறது.

தேசிய விடுதலை பெற்ற தமிழீழத் தனியரசை அமைத்து விடுவதால் மட்டும் முழுமையான விடுதலையைப் பெற்றுவிட்டதாகக் கொள்ளமுடியாது. தமிழீழக் குமுகாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். சாதிய, வகுப்பு முரண்பாடுகள் அகற்றப்படவேண்டும். பெண்ணடிமைத்தனம் நீக்கப் படவேண்டும். இதற்குக் குமுகாய அமைப்பிற் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமன்மையும் சம தருமமும் குமுகாய நீதியும் நிலைநாட்டப்படவேண்டும். இத் தகைய புரட்சிகரமான குமுகாயமாற்றத்தை வேண்டிநிற்கும் எமது அரசியல் இலக்கைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கின்றது.

விடுதலைப்பாதை கரடுமுரடானது சாவும் அழிவும் தாங் கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இவற்றைத் தாங்கிக் கொள்ளவும் விடுதலையடைந்தபின் ஏற்படப்போகும் நெருக் கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்பவும் பாதுகாக்கவும் உருக்குப் போன்ற உறுதியான உள்ளம் வேண்டும் அசையாத நம்பிக்கை வேண்டும் தளராத உறுதி வேண்டும். இவற்றைக் கறுப்பு நிறம் குறித்துக் காட்டுகின்றது.

விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கிறது.

### 09. தமிழீழத் தேசியக் கொடியின் வகையும் அளவும் கொடிக்கம்பத்தின் அளவும்:

| கொடியின் வகை | கொடியின் அளவு | கொடிக்கம்ப பீடத்துக்கு மேலுள்ள அளவு |
|---|---|---|
| ஏற்றுங்கொடி - பொதுக்கொடி | 4' x 6' | 24' |
| - உள்ளிடக்கொடி | 3' x 5' | 9' |
| எழுச்சிக்கொடி | 2' x 3' | 18' |
| வீட்டுக்கொடி | 2' x 3' | 18' |
| அணிவகுப்புக் கொடி | 2' x 3' | 6' |
| சார்திக் கொடி | 1' x 1.5' | 2' |
| விசையக்கொடி (மேசைக்கொடி) | 6" x 9" | 15" |

**பொதுக்கொடி : 4' x 6'**

விடுதலைப்புலிகள் இயக்கப் பாசறைகள், அரசநிறுவனங்கள், பள்ளிகள், கூட்டுறவு அமைப்புக்கள், குமுதாய அமைப்புக்கள் போன்ற எல்லாப் பொது இடங்களிலும் இக்கொடி பறக்க விடப்படும். இவ்விடங்களில் நிகழ்ச்சிகள் தொடங்குமுன்பும் இத்தேசியக்கொடி ஏற்றிவைக்கப்படும்.

**உள்ளிடக்கொடி: 3' x 5'**

அரசுத்தலைவர், அமைச்சர்கள், படைத்தலைவர்கள் போன் றோரின் பணிமனைகளிலும் மாநாட்டுக் கூடங்களிலும் நிறுத் தியிற் பொருத்தப்பட்ட தேசியக்கொடி வைக்கப்படலாம். பணி மனையின் உள்ளே நுழைவாயிலின் வலப்புறத்தில் வைக்கப் படவேண்டும்.

**எழுச்சிக்கொடி: 2' x 3'**

பொது இடங்கள் அனைத்திலும் எழுச்சியை ஏற்படுத்துவதற்காக இக்கொடி பறக்கவிடப்படும்.

**வீட்டுக்கொடி: 2' x 3'**

தாயகப்பற்றுடைய தமிழீழக் குடியுரிமையாளர் எவரும் தமது வீட்டுக்கு முன்னாலோ வணிக வளாகங்கள், தொழிற் சாலைகள் போன்றவற்றிலோ இக்கொடியைப் பறக்கவிடலாம்.

**அணிவகுப்புக்கொடி: 2' x 3'**

அணிநடை மற்றும் ஊர்வலங்கள் போன்றவற்றில் இக்கொடி பயன்படுத்தப்படும்.

### 10. கொடிக்கம்பமும் கயிறும்



கொடிக்கம்பங்கள் மேற்குறிக்கப்பட்ட அளவுகளில் வெள்ளிநிறத்தில் இருத்தல் வேண்டும் கொடிக்கம்பத்தின் நுனியில் வெள்ளி நிறமுடையதும் இங்கு காட்டப் பட்ட வடிவிலமைந்ததுமான முடி பொருத் தப்படவேண்டும். கொடிக்கயிறு வழுக்காம லிருப்பதற்காகக் கயிற்றைக் கட்டுமிடத்தில் தடை அமைக்கப்படல் வேண்டும். இத் தடை பீடத்திலிருந்து மூன்றாவது அடியில் இருத்தல் வேண்டும். கொடிக்கயிறு வெள்ளை நிறத்தில் இருத்தல் வேண்டும். கொடிக்கம்பம் பீடத்திலிருந்து 24 அடி உயரத்தில் இருக்கவேண்டும். பீடம் இல்லாத இடங்களில் நிலமட்டத்திலிருந்து 24 அடி உயரத்தில் இருக்கவேண்டும். கொடிக்கம்பம் 2 அங்குல விட்டமுடையதாக இருக்கவேண்டும்.

### 11. கொடிப்பீடம்








கொடிப்பீடம் நிலமட்டத்திலிருந்து ஓர் அடி உயரங் கொண்ட தாகவும் 2 அடி நீளம் 2 அடி அகலம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். பீடத்தின் முன்புறம் பீடத்தோடு இணைந்து 2 அடி நீண்டு நிலத்திலிருந்து அரை அடி உயரமுடையதாக இருக்க வேண்டும்.

### 12. கொடியேற்றும் முறை



தேசியக்கொடியை ஏற்றும்போது கொடியேற்றப்படும் வளாகத் திலோ வீட்டிலோ இருக்கும் அனைவரும் (நோயாளர் நீங்க லாக) கொடியேற்றும் நிகழ்விற் பங்கேற்கவேண்டும். கொடிக் கம்பத்திற்கு இடது பக்கத்தில் நின்று கொடியையேற்ற வேண்டும். கொடியை மிடுக்கோடும் சீரான வேகத்தோடும் ஏற்ற வேண்டும். கூடுதலான வேகத்துடனோ மிக மெதுவாகவோ ஏற்றக்கூடாது. கொடியையேற்றுபவர் தானே கொடியையேற்றிக் கயிற்றைக் கொடிக்கம்பத்திற் கட்டவேண்டும். தேசியக் கொடியை ஏற்றும்போது கொடியை விரிப்பதற்கும் கொடி ஒழுங் காக இருக்கிறதா என்பதை உறுதிசெய்வதற்கும் கொடி நிலத் திற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கும் கொடியை ஏற்று பவருக்கு ஒருவர் உதவவேண்டும். கொடியையேற்றுபவர் கொடியை ஏற்றியதும் ஓர் அடி பின்னகர்ந்து வணக்க நிலையில் நிற்கவேண்டும். கொடிவணக்கப் பண் முடிவடையும் வரை அனைவரும் வணக்க (Salute) நிலையில் நிற்கவேண்டும்.

### 13. கொடியின்பார்வை



கொடியிலுள்ள புலியின் பார்வை கொடிக் கம்பத்திற்கு எதிர்ப்புறமாக இருத்தல் வேண்டும்.

### 14. தேசியக் கொடியை ஏற்றும் நேரமும் ஒளிபாய்ச்சுதலும்

கொடிக்கம்பத்தில் ஏற்றப்படும் தேசியக்கொடி நாள்தோறும் கதிரவன் எழுந்ததற்குப் பின்னர் ஏற்றப்பட்டு மறைவதற்கு முன்னர் இறக்கப்படவேண்டும்.

மங்கிய ஒளியிற் கொடியை ஏற்றுதல் கூடாது. எனவே காலை 6 மணிக்கு முன்பும் மாலை 6 மணிக்குப் பின்பும் கொடியை ஏற்றவேண்டுமெனிற் கொடிப் பீடத்திலிருந்து கொடிக்கம்பத்தின் உச்சிவரை போதுமான ஒளிபாய்ச்சப்படவேண்டும். கொடி யேற்ற நிகழ்வு நடைபெறும் இடத்திலும் போதுமான வெளிச்சம் இருக்கவேண்டும்.

தேசியக்கொடியை முழுமையான வெளிச்சத்தின்கீழ் இருபத்து நான்கு மணிநேரமும் பறக்கவிடலாம்.

தேசியக்கொடி பொதுவாக மாலை 6 மணிக்கு முன்னர் முறைப் படி இறக்கப்படவேண்டும். கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்குப் பின்னரும் தொடருமாயின் நிகழ்ச்சி முடிவுறும் வரை கொடிக்கு வெளிச்சம் பாய்ச்சப்பட வேண்டும். இரவில் நிகழ்ச்சி முடிவுற்றதும் கொடியை அமைதியான முறையில் இறக்கலாம்.

கொடியேற்றித் தொடக்கப்படும் நிகழ்ச்சிகள் நாட்கணக்கில் தொடருமாயின் அந்த நிகழ்ச்சிகள் முடிவுறும்வரை தேசியக் கொடி இரவும் தொடர்ச்சியாகப் பறக்கவிடப்படலாம். ஆனால் கொடிபறப்பது தெளிவாகத் தெரியக்கூடியவாறு போதிய வெளிச்சம் பாய்ச்சப்படவேண்டும். நிகழ்ச்சிகள் முடிவடைந் தபின் முறைப்படி தேசியக்கொடி இறக்கப்படவேண்டும்.

### 15. எமது தேசியக்கொடியுடன் வேறு நாடுகளின் தேசியக்கொடிகள்



(கொடிக்கம்பத்தின் முன்பக்கத் தோற்றம்)

தமிழீழத் தேசியக்கொடியுடன் வேறு நாடுகளின் தேசியக் கொடிகளைப் பறக்கவிடும்போது ஒரே அளவான கொடிக்கம் பங்களில் கொடிகளை ஏற்றவேண்டும். தமிழீழத் தேசியக்கொடி யின் இடப்புறமாக ஏனைய நாடுகளின் தேசியக்கொடிகளை அந்தந்த நாடுகளின் அகரவரிசைப்படி பறக்கவிடவேண்டும். எமது தேசியக்கொடியும் ஏனைய தேசியக் கொடிகளும் இடைஞ் சலின்றிப் பறக்கக்கூடியவகையிலும் (ஒன்றில் ஒன்று முட் டாமல்) சமனான இடைவெளியிலும் கொடிக்கம்பங்கள் நட்ட படவேண்டும். எமது தேசியக்கொடியை ஏற்றியபின்பே ஏனைய வற்றை ஏற்றவேண்டும். ஏனையவற்றை இறக்கியபின்பே எமது கொடியை இறக்கவேண்டும்.

### தேசியக்கொடியும் ஏனைய கொடிகளும்

எமது தேசியக் கொடியுடன் எமது முப்படைகள், காவற்துறை, படையணிகள், உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள், பள்ளிக்கூடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், விளையாட்டுக் கழ கங்கள், குமுகாய அமைப்புக்கள் போன்றவற்றின் கொடிகளைப் பக்கவாட்டில் அடுத்தடுத்துள்ள கம்பங்களில் ஏற்றும்போது தேசியக்கொடியின் அளவைவிடச் சிறிய அளவிலான கொடி களைத், தேசியக்கொழக் கம்பத்தைவிட 4' உயரம் குறைவான கம்பங்களில் ஏற்றவேண்டும். அதாவது தமிழீழத் தேசியக்கொடி மற்றக் கொடிகளைவிட 4' கூடுதலான உயரத்தில் இருக்க வேண்டும்

16.1. தேசியக்கொடிக்கு இடப்புறமாகச் சமனான இடைவெளியில் ஏனையகொடிகள் ஏற்றப்படலாம்.
(கொடிக்கம்பத்தின் முன்பக்கத் தோற்றம்)



16.2.தேசியக்கொடிக் கம்பத்திலிருந்து ஏழு அடிக்குப்பின்னால் தேசியக்கொடிக்கு இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் தமிழீழத் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகிய முப்படைகளின் கொடிகளும் காவற்துறையின் கொடியும் சமனான இடைவெளியிற் பறக்கவிடப்படலாம்.



16. 3. தேசியக் கொடிக்குப்பின்னால் 16. (2) இற்கமைவாக முப்படைகளதும் காவற்துறையினதும் கொடிகளும் அவற்றுக்குப் பின்னால் போதிய இடைவெளிவிட்டுப் படையணிகளின் கொடிகளும் பறக்கவிடப்படலாம்.



16.4. உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள், பள்ளிகள், கூட்டுறவுச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், குமகாய வமைப்புக்கள் போன்றவற்றின் கொடிகளும் தேவைக்கேற்ப பறக்கவிடப்படலாம். தேசியக் கொடியுடன் முப்படைகளதும் காவற்துறையினதும் கொடிகள் பறக்கவிடப்படும் நிகழ்வுகளில் அவற்றுக்குப் பின்னாலேயே மேற்படிக் கொடிகள் பறக்கவிடப்பட வேண்டும். மேலே கூறப்பட்ட கொடிகளும் படையணிக் கொடிகளும் ஒரே நிரையிற் பறக்கவிடப்படலாம். உள்ளூராட்சி மன்றங்கள், திணைக்களங்கள் முதலியவற்றின் கொடிகள் நிகழ்ச்சி நடைபெறும் திடலின் பின்புறமாக உட்பக்கத்திலும் பறக்க



விடப்படலாம்.

16.5.தேசியக்கொடியுடன் இங்கு குறிக்கப்பட்ட ஏனைய கொடிகளைக் கூட்டமாகப் பறக்கவிடும்போது ஏனைய கொடிக்கம்பங்களைவிட உயரமான கொடிக்கம்பத்தில் எல்லாக் கொடிகளுக்கும் நடுவில் தேசியக்கொடியைப் பறக்கவிடவேண்டும்.

தேசியக்கொடி ஏற்றப்பட்ட பின்பே ஏனையவை ஏற்றப் படவேண்டும் ஏனையவற்றை இறக்கியபின்பே தேசியக் கொடியை இறக்கவேண்டும். அரைக்கம்பத்திற் கொடிகளைப் பறக்கவிடும்போது ஏனைய கொடிகளை அரைக் கம்பத்திற்குக் கொண்டு வந்தபின்பே தேசியக்கொடியை அரைக்கம்பத்திற்குக் கொண்டு வரவேண்டும்.



## 17. ஊர்வலங்களில் தேசியக்கொடியை எடுத்துச் செல்லுதல்





ஊர்வலங்களில் தேசியக்கொடியை வேறு கொடிகளுடன் எடுத்துச் செல்கையில் ஊர்வலத்தின் முன்னால் வலப்புறத்தில் எடுத்துச் செல்லவேண்டும். அல்லது நடுவரிசையில் மற்றைய கொடிகளுக்கு முன்னால் எடுத்துச்செல்லவேண்டும். வேறு எந்தக் கொடியை ஏந்திச் செல்பவரும் எமது தேசியக்கொடியை முந்திச் செல்லக்கூடாது. தேசியக்கொடியை நெஞ்சுக்கு நேராகவோ வலத்தோளிலோ ஏந்திச் செல்லவேண்டும்.

## 18. ஊர்திகளில் தேசியக்கொடியைப் பறக்கவிடுதல்

ஊர்தியின் முன்புறத்தில் உறுதியாகப் பொருத்தப்பெற்ற கம்பத்திற் பறக்கவிடவேண்டும். ஊர்தியின் தொளைமூடியின் மேல் இரண்டடி உயரத்திற் கம்பம் இருத்தல்வேண்டும்.



உந்துருளிகள் மிதிவண்டிகள் ஆகியவற்றின் முன் வலப்புறத்தில் தேசியக்கொடியைப் பறக்கவிடலாம்.



## 18. மிசையத்தில் தேசியக்கொடியை வைத்தல்

அரசுத் தலைவர் மற்றும் முதன்மை மாந்தரின் மிசையங்களில் தேசியக்கொடியை வைக்கும்போது மிசையத்தின் வலப்புறத்தில் வைத்தல்வேண்டும். வேறு கொடிகளும் வைக்கப்படுமாயின் அவை இடப்புறத்தில் வைக்கப்படவேண்டும். தேசியக்கொடிக்கு முதன்மை வழங்கவேண்டும்.



## 19. ஈமப்பேழையின் மீது தேசியக்கொடியைப் போர்த்துதல்



மாவீரர், காவற்துறை மாவீரர், தேசியத்துணைப்படை மாவீரர் மற்றும் தேசக் காப்புப்பணியில் ஈடுபடும் வீரர், நாட்டுப்பற்றாளர் ஆகியோரின் உடல் வைக்கப்பட்ட ஈமப்பேழையின்மீது தேசியக் கொடியைப் போர்த்தும் போது புலியின் தலைக்கு மேலுள்ள பகுதி பேழையின் தலைப்பகுதியில் இருக்குமாறு போர்த்த வேண்டும். அவ்வாறு போர்த்தப்பெற்ற தேசியக் கொடியைப் போர்த்தப் பெற்றவரின் இரத்த உறவினரிடம் பேணிப்பாதுகாக்கும் பொருட்டு வழங்கலாம். இறந்தவரின் தாயகப்பற்றை மதிப்பதற்காக அவரின் ஈமப்பேழைமீது போர்த்தப்பெற்ற தேசியக்கொடியைப் பறக்க விடலாம்.

## 21. துயர நிகழ்வின் போது கொடியேற்றுதல்



தேசியத் துயர நிகழ்வுகளின்போது கொடியேற்றுகையிற் கொடியைக் கம்பத்தின் உச்சிக்கு ஏற்றி, பின் அரைக் கம்பத்துக்கு இறக்கிக் கட்டவேண்டும். அரைக்கம்பத்தில் உள்ள கொடியை இறக்கும்போது முதலிற் கொடிக் கம்பத்தின் உச்சிக்கு ஏற்றி, பின் இறக்கவேண்டும்.

தேசத் தலைவரின்முறைப்படியான அறிவுறுத்தலுக்கு இணங்கவே தேசியக்கொடியை அரைக்கம்பத்திற் பறக்கவிடலாம். வேறெந்த வேளையிலும் அரைக்கம்பத்திற் பறக்கவிடக் கூடாது. தேசியக் கொடியை எத்தனை நாட்களுக்கு அரைக்கம்பத்திற் பறக்கவிடவேண்டுமென்பது தேசத்தலைவரின் அறிவுறுத்தலிற் குறிப்பிடப்படவேண்டும்.

கம்பத்தோடு நிலையாகப் பொருத்தப்பட்ட தேசியக் கொடியைத் தேசியத்துயர நிகழ்வுகளின்போது அரைக் கம்பத்திற்குக் கொண்டுவரமுடியாது. அவ்வேளையில் தேசியக் கொடிக் கம்பத்தில் 3' x 2' அளவுள்ள கறுப்புக்கொடியை அரைக்கம்பத்திற் பொருத்திவிடலாம்.

## 22. கொடிகளைத் தொங்கவிடுதல்



உயரத்திற் கொடிகளைத் தொங்கவிடலாம். போக்குவரத்திலுள்ள எந்த ஊர்தியிலும் கொடி படாதவகையில் உயரமான கம்பங்களை இருமருங்கும் நிறுத்தி உறுதியான கயிற்றினை இணைத்துத் தொங்கவிடலாம். கொடி கட்டப்படும் கயிறு மிகவும் உறுதியானதாக இருக்கவேண்டும். கொடிக்கயிறு அறுந்து கொடி கீழே விழுவது தேசத்துக்கு இழுக்காகும்.



கொடியைக் கயிற்றில் இணைக்கும்போது புலியின் தலைக்கு மேலேயுள்ள பகுதி கயிற்றுடன் இணைக்கப்படவேண்டும். புலியின் பார்வை வலப்புறமாக இருக்கவேண்டும். அதாவது கொடிக்கு எதிரே நிற்பவரின் இடப்புறத்தைப் பார்த்தவாறு புலியின் பார்வை அமையவேண்டும். புலியின்பார்வை நிலத்தைப் பார்த்தவாறோ வானைப் பார்த்தவாறோ அமையக் கூடாது.

## 23. குறுக்குக் கம்பங்களிற் கொடியைப் பறக்கவிடுதல்

தமிழீழத் தேசியக் கொடியையும் வேறொரு தேசத்தின் தேசியக் கொடியையும் குறுக்குக் கம்பங்களிற் பறக்கவிடும்போது தமிழீழத் தேசியக்கொடி வலப்புறமாக இருக்கவேண்டும். அதாவது பார்வையாளருக்கு இடப்புறமாக இருக்கவேண்டும். மேலும் தமிழீழத் தேசியக் கொடியின் கம்பம் முன்னாலும்



மற்றக்கொடியின் கம்பம் பின்னாலும் இருக்கவேண்டும்.

## 24. கட்டடங்களிற் கொடியைப் பறக்கவிடுதல்



சாளர அடிக்கட்டை, முகப்புமாடம் ஆகியவற்றிற் கிடையாகவோ கோணவழிவிலோ கொடியைப் பறக்கவிடும்போது கொடி கம்பத்தின் உச்சியில் இருக்கவேண்டும். கிடையாகப் பறக்கவிடும்போது புலியின் பார்வை வலப்புறமாக இருக்கக்கூடிய வகையிற் புலியின் தலைக்கு மேலுள்ள பகுதியே கம்பத்துடன் இணைக்கப்படவேண்டும். கோணவழிவிற் பறக்கவிடும்போது அணிவகுப்புக் கொடியை இணைப்பதுபோன்று அதாவது எழுச்சிக் கொடியைக் கம்பத்தில் இணைப்பது போன்று இணைக்க வேண்டும்.



## 25. மேடைகளில் தேசியக்கொடி





கூட்ட மேடைகளிற் பேச்சாளரின் தலைக்கு மேலாகப் பின்புறத் தட்டியில் தேசியக்கொடியைக் கட்டலாம். 9 அடி உயர நிறுத்தியிற் பொருத்தப்பெற்ற தேசியக்கொடியை மேடையின் வலப்புறத்திற் பேச்சாளருக்கு முன்னால் வைக்கலாம். ஏனைய கொடிகள் இடப்புறத்தில் வைக்கப்படலாம்.

## 26. தேசியக்கொடியை இறக்குதல்

தேசியக்கொடி ஏற்றப்படுவதுபோன்றே இறக்கப்படுவதும் ஒழுங்குமுறையிலான சிறப்பு நிகழ்வாகவே இருக்கவேண்டும். கொடியை இறக்குபவரும் முதன்மையானவராக, தகுதியானவராக இருத்தல் வேண்டும். கொடியேற்றுபவர் நிகழ்ச்சியின் இறுதிவரை இருந்தால் அவரே கொடியை இறக்குதல் வேண்டும்.

தேசியக்கொடி இறக்கப்படும்போது நிலத்தில் விழாது கைக்கு எட்டக்கூடிய உயரத்தில் வைத்தே கைகளில் ஏந்தி எடுத்தல் வேண்டும்.

தேசியக்கொடி இறக்கப்படும் நிகழ்வின்போது எவரும் கையொலி எழுப்பக்கூடாது. அந்நிகழ்வு அமைதியாக நடைபெற வேண்டும்.

## 27. கொடி வணக்க நிகழ்வை ஒழுங்கு செய்பவர்களுக்கு

தேசியக்கொடியை ஏற்றுகின்ற நிகழ்வின்போது தவறுகள், தடங்கல்கள் ஏற்படாது இருப்பதற்கு நிகழ்ச்சி தொடங்குவதற்கு முற்கூட்டியே தேசியக்கொடியைக் கம்பத்தில் ஏற்றி ஒத்திகை பார்த்தல் வேண்டும்.

தேசியக்கொடி தலைகீழாக அல்லாமல் நேராக இருக்கின்றதா?

தேசியக்கொடியிற் கயிறு கோர்ப்பதற்கான மடிப்பு புலியின் பார்வைக்கு எதிர்ப்புறமாகத் தைக்கப் பட்டிருக்கின்றதா?

கொடி கிழியாமல், மங்காமல் ஏற்றக்கூடிய நிலையில் இருக்கின்றதா?

நிகழ்வில் எற்றப்பட இருக்கும் வேறுநாடுகளின் தேசியக்கொடி தவிர்ந்த ஏனைய கொடிகள் தேசியக்கொடியைவிடச் சிறிதாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதா?

கொடியை ஏற்றுவதற்கான கயிறு கொடிக்கம்பத்தின் உயரத்தைவிட இருமடங்கிற்குக் குறையாமலும் உறுதியாகவும் இருக்கின்றதா?

தேசியக்கொடி ஏற்றப்படும் கொடிக்கம்பம் உறுதியாக நாட்டப்பட்டிருக்கின்றதா?

கொடிக்கம்பம் தேசியக்கொடி ஏற்றுவதற்கு வேண்டிய உயரத்தை, உறுதியை உடையதாக இருக்கின்றதா?

என்பவற்றையெல்லாம் முற்கூட்டியே உறுதிசெய்து கொண்டால் கொடியேற்ற நிகழ்வில் எவ்வகைத் தவறோ தடங்கலோ ஏற்படாது தவிர்க்கலாம்.

தேசியக்கொடியேற்ற நிகழ்வில் ஏற்படும் தவறுகள், தடங்கல்களுக்கு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும் பொறுப்பாளரே பொறுப்பாவார்.

## 28. தேசியக்கொடியை அகற்றுதல்

நீண்டகாலப் பயன்பாட்டின்போது நரைத்தல், இற்றுப்போதல் போன்றவற்றாற் பழுதடைந்து தேசத்தின் சின்னமாகப் பயன்படுத்த முடியாத நிலைக்குவரும் தேசியக்கொடிகளை அகற்றிவிடவேண்டும். வகுக்கப்பட்ட முறைக்கிணங்க அகற்றும் நிகழ்வு நடைபெறும்.

### பயன்படுத்தமுடியாத கொடிகளைச் சேர்த்தல்

பழுதடைந்த கொடிகளை வட்டார அரசியற் செயலகங்களினூடாக ஆறுமாதத்திற்கொரு முறை சேர்க்கவேண்டும். சேர்க்கப்பட்ட கொடிகள் முழுவதும் தலைமைச் செயலகத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

### பழுதடைந்த கொடிகளை ஆய்வு செய்தல்

தலைமைச் செயலகச் செயலரோ அவரால் அமர்த்தப்பெறும் தகுதி வாய்ந்த ஒருவரோ குழுவோ சேர்க்கப்பட்ட கொடிகள் அனைத்தையும் அவை எதிர்காலத்திற் பயன்படுத்த முடியாதபடி பழுதடைந்துள்ளனவா என்பதை ஆராய்ந்து உறுதிப்படுத்த வேண்டும். பயன்படுத்த முடியாதவையென உறுதிப்படுத்தப்பட்ட கொடிகளுக்கு இறுதிச் சடங்கும் அகற்றுஞ் சடங்கும் ஒதுக்குப்புறமான வேறு இடங்களில் மாலைநேரத்தில் இருள் சூழ்வதற்கு முன் நடைபெறவேண்டும்.

### இறுதிச் சடங்கு

அகற்றப்படவிருக்கும் எல்லாக் கொடிகளையும் நிகராண்மைப் படுத்தும் ஒரு கொடியைத் தெரிவுசெய்து இந்நிகழ்விற் பயன்படுத்தவேண்டும். தற்போது பயன்படுத்தப்படும் கொடிக்காக ஒருவரும் நிலையாக ஓய்வு கொடுக்கப்படவிருக்கும் கொடிக்காக மற்றொருவருமாக செங்காவலர் (சிவப்புநிறப் பரேத் தொப்பி அணிந்திருக்கவேண்டும்) இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர். மொத்தமாக எழுவருக்குக் குறையாதோர் இந்நிகழ்விற் கலந்துகொள்ளவேண்டும்.

பகல் முழுவதும் பறந்துகொண்டிருக்கும் கொடிக்குப் பொதுவான சடங்கு முறைகளுக்கிணங்கப் பொழுது கருகுவதற்குமுன் ஓய்வு கொடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட செங்காவலரில் ஒருவர் இப்பணியைச் செய்வார்.

இறுதி மதிப்புப் பெறவிருக்கும் கொடியைக் கையாள்வதற்காகத் தெரிவுசெய்யப்பெற்ற செங்காவலர் முன்னுக்குச் சென்று நடுவே நிற்பார். இறுதி மதிப்புச் செலுத்தப்பெற்று அகற்றப்படுவதற்காகத் தெரிவுசெய்யப்பெற்ற கொடியைத் தலைவர் செங்காலவரிடம் கையளிப்பார். பின்னர் கொடியை ஏற்றுமாறு கட்டளையிடுவார். வழமையாகக் கடைப்பிடிக்கப்படும் சடங்குகளுடன் கொடியேற்றப்பட்டுக் கொடிக்கம்பத்தின் உச்சியைக் கொடி அடைந்ததும் தலைவர் பின்வருமாறு உரையாற்றுவார்:

“இந்தக் கொடி எமது தாயகத்திற்காக நீண்டகாலம் நன்கு பணியாற்றியுள்ளது. எதிர்காலத்தில் எமது தேசத்தை நிகராண்மைப் படுத்த முடியாத அளவுக்குப் பழுதடைந்துவிட்டது. பணியிலிருந்து முழுமையான ஓய்வு கொடுப்பதற்காக இன்று தெரிவு செய்யப்பட்டிருக்கும் எல்லாக் கொடிகளையும் இக்கொடி நிகராண்மைப்படுத்துகிறது. இக்கொடியை வணங்குவதன் மூலம் எல்லாக் கொடிகளுக்கும் மதிப்பளிக்கிறோம்”

உரையின்பின் தலைவர், உறுப்பினர் அனைவரையும் கவனநிலைக்கு அழைப்பார் வணக்கஞ் செய்யும்படி பணிப்பார் உறுதிமொழியை முன்மொழிவார். கொடிக்கு ஓய்வளிக்குமாறு கட்டளையிடுவார். செங்காவலர் மெதுவாகவும் சடங்கு முறைகளுக்கமைவாகவும் கொடியை இறக்குவார். பின்னர் உரிய மதிப்புடன் வழக்கம்போல முக்கோணமாக மடித்துத் தலைவரிடம் வழங்குவார். குழு கலைக்கப்படுவதுடன் இறுதி மதிப்புச் சடங்கு முடிவுறும்.

### எரியூட்டும் சடங்கு

ஒதுக்குப்புறமான வேறோரிடத்தில் எரியூட்டுஞ் சடங்கு நடைபெறும். கொடிகளை எச்சமெதுவுமின்றி முழுமையாக எரிக்கக்கூடிய வகையில் தீ மூட்டப்படும். முக்கோணமாக மடிக்கப்பட்டிருக்கும் கொடி, சடங்கு தொடங்குமுன் ஈமப்பேழையின் சாயலையுடைய செவ்வகமாக மடிக்கப்படும். எல்லோரும் நெருப்பைச் சூழ்ந்து நிற்பர். தலைவர் எல்லோரையும் கவனநிலைக்கு அழைப்பார். செங்காவலர் முன்னே வந்து கொடியைத் தீயிலிடுவார். எல்லோரும் விரைந்து வணக்கம் செலுத்துவர். வணக்கம் செலுத்தியபின் அனைவரும் கவனநிலைக்கு வருவர். தேசியப்பண் இசைத்தல், உறுதிமொழி உரைத்தல், கொடியின் மேன்மையை உரைத்தல் போன்றவற்றைத் தலைவர் நிகழ்த்துவார்.

கொடி எரிந்ததும் குழுத்தலைவரையும் செங்காவலரையும் தவிர ஏனையோர் கலைந்து ஒரே வரிசையில் அமைதியாகச் செல்வர். தலைவரும் செங்காவலரும் அங்கேயே நின்று கொடி முற்றுமுழுதாக எரிந்துவிட்டதென்பதை உறுதி செய்வர். ஏனைய கொடிகளையும் தீயிலிடுவர். எல்லாக் கொடிகளும் முழுமையாக எரிந்தபின் நெருப்பு அணைக்கப்படும். சாம்பல் முழுவதும் கவனமாகப் புதைக்கப்படுவதுடன் நிகழ்ச்சி முடிவடையும்.






# மாவீரர் துயிலுமில்லங்கள் விபரம்

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில (5, துயிலும் இல்லங்கள்)**

1) சாட்டி தீவகம் துயிலுமில்லம்
2) கோப்பாய் துயிலுமில்லம்
3) எல்லங்குளம துயிலுமில்லம்
4) கொடிகாமம் துயிலுமில்லம்
5) உடுத்துறை துயிலுமில்லம்

**கிளிநொச்சி மாவட்டம் (3, துயிலும் இல்லங்கள்)**

6)கனகபுரம் துயிலுமில்லம்
7)விசுவமடு துயிலுமில்லம்
8)முழங்காவில் துயிலும்இல்லம்

**முல்லைத்தீவு மாவட்டம் (5, துயிலும் இல்லங்கள்)**

9) முள்ளியவளை துயிலுமில்லம்
10) அலம்பில் துயிலுமில்லம்
11) ஆலங்குளம் துயிலுமில்லம்
12) வன்னிவிளாங்குளம் துயிலுமில்லம்
13) களிக்காடு (நெடுங்கேணி) துயிலுமில்லம்

**மன்னார் மாவட்டம் (2, துயிலும் இல்லங்கள்)**

14) ஆட்காட்டிவெளி துயிலுமில்லம்
15) பண்டிவிரிச்சான் துயிலுமில்லம்

**வவுனியா மாவட்டம் (1, துயிலும் இல்லம்)**

16) ஈச்சங்குளம்துயிலுமில்லமும்

**மணலாறு பிரதேசம் (2 துயிலும் இல்லம்)**

17) உதயபீடம் (டடி முகாம்) துயிலுமில்லம்
18) இதயபீடம் (ஜீவன் முகாம்) துயிலுமில்லம்



**திருகோணமலை மாவட்டம் (4, துயிலும் இல்லங்கள்)**

19) ஆழங்குளம் துயிலுமில்லம்
20) தியாகவனம் துயிலுமில்லம்
21) பெரியகுளம் துயிலுமில்லம்
22) உப்பாறு துயிலுமில்லம்

**மட்டக்களப்பு மாவட்டம் (4, துயிலும் இல்லங்கள்)**

23) தரவை துயிலுமில்லம்
24) தாண்டியடி துயிலுமில்லம்
25) வாகரை கண்டலடி துயிலுமில்லம்
26) மாவடிமுன்மாரி துயிலுமில்லம்

**அம்பாறை மாவட்டம் (1, துயலும் இல்லம்)**

27)கஞ்சிகுடியாறு துயிலுமில்லம்

**மொத்தம் 27 துயிலும் இல்லங்கள் மட்டுமே**

2008 இறுதிவரை இருந்தது.
ஆனால் ...!
போர் உக்கிரமான போது அமைக்கப்பட்ட விபரம் வருமாறு

**மாவீரர் துயிலுமில்லங்கள் (6,துயிலும் இல்லங்கள்)**

28) தர்மபுரம் துயிலுமில்லம்
29) சுதந்திரபுரம் துயிலுமில்லம்
30 இரணைப்பாளை துயிலுமில்லம்
31) பச்சைப்புல்வெளி துயிலுமில்லம்
32) கரையா முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்
33) வெள்ளா முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்

ஆகிய ஆறு துயிலும் இல்லங்களும் 2008, தொடக்கம் இறுதிப்போர் 2009, மே.18 வரை அமைக்கப்பட்டன.

# விடுதலைப் பேரொளியான வீரத்தின் விருட்சங்கள்:
# ஹோ சி மின் – சே குவாரா – பிரபாகரன்







24.11.2024

வெற்றிகளைப் போராளிகளுக்கு கொடுங்கள். தோல்விகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளுவோம். நான் சாகசவாதியல்ல, எனது மக்களுக்காகப் போராடும் விடுதலைப் போராளி எனும் மேதகுவின் கூற்றுக்கிணங்க தமிழர்களின் தேசிய விடுதலையை முன்னெடுத்தவரே பிரபாகரன்.

புரட்சியாளர்கள் புதைக்கப்படுவதில்லை விதைக்கப்படுகின்றார்கள் எனும் சே குவேராவின் கூற்றுக்கிணங்க மக்களின் நலனுக்காக தன்னையே தியாகித்த வீரன் தான் சே குவாரா.

இப்பூமிப் பந்தில் பலர் உதிக்குன்றனர், பலர் மறைகின்றனர். ஆயினும் ஒருசிலரே இன்றுவரை நீடித்து நிலைத்து சாதனை படைக்கிறார்கள். அந்தவகையில் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட்ட விடுதலைப் போராளிகளாக ஹோ சி மின் – சே குவாரா – பிரபாகரன் விளங்குகின்றனர்.

## என்றும் விலைபோகாத பிரபாகரன்:

எந்தவித அற்ப அதிகாரங்களுக்காகவும் விலைபோகாத, தமிழ் மக்களின் உரிமைகளை அடகுவைக்காத போராட்டத்தை முன்னெடுத்த பெருந் தலைவனே பிரபாகரன்.

தமிழரின் விடுதலைக்காக முன்னின்ற பிரபாகரனையே தங்களின் அடையாளமாக ஏற்கத் துணிந்தார்கள் ஈழத்தமிழ் மக்கள். அப்படித்தான் பிரபாகரன் ஈழத் தமிழர்களின் தேசியத் தலைவரானார்.

பதினெட்டாவது அகவையில் போராடத் தொடங்கிய பிரபாகரன் உலகத் தமிழர்களின் தேசியத் தலைவராகவே அன்றும் இன்றும் என்றும் விளங்குகிறார்.

பிரபாகரன் சிறுவனாக இருந்த போது, 1958 ஆம் ஆண்டில் நடந்த தமிழர் இன அழிப்பில் நிகழ்ந்த பயங்கர சம்பவங்கள் இவர் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தின. சிங்கள இன வெறியரால் ஈழத்தமிழர்கள், கொடூரமாகக் கொல்லப்பட்ட சம்பவங்களை பலதை கேள்விப்பட்டார்.

இவருடைய பெற்றோருக்கு நன்கு தெரிந்த ஒரு விதவைத்தாய் தனக்கு நேர்ந்த துயரச் சம்பவத்தைச் சிறுவனாக இருந்த பிரபாகரனுக்குக் கூறினார். பாணந்துறையில் இந்து குரு ஒருவர் உயிரோடு தீ மூட்டி எரிக்கப்பட்ட சம்பவம் போன்ற கொடூரமான வன்முறைகளை இவர் அறிந்தபோது, சிங்கள அரசின் பிடிக்குள்ளிருக்கும் தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற உள்ளுணர்வும் முனைப்பும் இவர் மனதில் இளம் வயதிலேயே உருவாகியது.

அன்றில் இருந்து நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இனவெறி அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று இவர் முடிவு செய்தார்.

அத்துடன் தமிழ் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்த பிறகு மேற்படிப்புக்குச் செல்ல இலங்கை அரசின் மேற்கல்வி தரப்படுத்தல் கொள்கை ஒரு தடையாக இருந்தது. இவற்றை எல்லாம் விடிவிக்க தமிழ் ஈழமே ஓரே தீர்வாகும் என முடிவெடுத்துப் போராடினார்.

இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி எனும் பிரபாகரன் கூற்றுக்கிணங்க தன் வாழ் நாளை தமிழர்க்காக அர்ப்பணித்தார்.

ஒரு தவறு நடந்தால் பிழைகளை உங்களில் இருந்து தேடுங்கள். மற்றவர்களில் இருந்து தேடாதீர்கள்.

உண்மையானவராக இருந்தால் அவர் இலட்சியத்திற்காக உழைத்திருக்க வேண்டும். அல்லது இலட்சியத்தை அடைந்திருக்க வேண்டும். இப்படிப் பார்த்தால் எங்களில் மாவீரர்கள் தான் உண்மையானவர்கள் - உயர்ந்தவர்கள் என மாவீரர்களை என்றும் போற்றிக் கௌரவித்த பெருந் தலைவனே பிரபாகரன்.

## வியட்நாமில் ஹோ சி மின்:

ஈழத் தமிழர் போராடியதைப் போன்றே வியட்நாமிய மக்களும் போராடினார்கள். பல்லாயிரம் மக்களின் தியாகங்களால் உருவானதே வியட்நாம் தேசம். வியட்நாமில் காலனித்துவ குடியேற்றவாதிகளிடம் இருந்து முழுமையாக விடுதலை அடைந்து சுதந்திர நாடாக விளங்க ஹோ சி மின் ஆற்றிய பணி அளப்பரியது.

ஹோ வியட் மின் விடுதலை இயக்கத்தை 1941 இலிருந்து முன்னின்று நடத்தி, 1954 இல் வரை பிரெஞ்சுப் படையினருடன் சண்டையிட்டு வெற்றி பெற்றார். பின்னர் அவ்வெற்றியானது அவருக்கு கம்யூனிச நாடாக வடக்கு வியட்நாமை அமைக்க உதவியது.

வியட்நாம் போரை அவரது இறப்பு வரையில் முன்னின்று நடத்தினார். ஆறு ஆண்டுகளின் பின்னர் வட வியட்நாமின் வெற்றியுடன் போர் முடிவுக்கு வந்ததுடன் இரண்டு வியட்நாம்களும் ஒன்றிணைந்தன.

அமெரிக்கர்களை விரட்டியடித்த பின்னர் தெற்கு வியட்நாமின் தலைநகராயிருந்த சாய்கோன் (Saigon) நகரம் ஹோவின் நினைவாக ஹோ சி மின் நகரம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

## புரட்சியின் முகம் சே குவேரா:

சே குவேரா ஆர்ஜென்டீனாவை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு சோசலிசப் புரட்சியாளர் மருத்துவர், மார்க்சியவாதி, அரசியல்வாதி, கியூபா மற்றும் பல நாடுகளின் புரட்சிகளில் பங்குபெற்றிய போராளி எனப்பல முகங்களைக் கொண்டவர்.

பரவலான வறுமை, அடக்குமுறை, வாக்குரிமை பறிப்பு என்பவற்றை இலத்தீன் அமெரிக்கா முழுதும் கண்ணால் கண்டதினாலும், மார்க்சிய நூல்களின் செல்வாக்கும் ஒன்று சேர ஆயுதம் ஏந்திய புரட்சி மூலமே சமூக ஏற்றத் தாழ்வுகளுக்குத் தீர்வு காண முடியும் என சே குவேரா நம்பலானார்.

இலத்தீன் அமெரிக்காவைத் தனித்தனி நாடுகளாகப் பார்க்காமல், ஒட்டு மொத்தமான கண்டம் தழுவிய விடுதலைப் போர்முறை தேவைப்படும் ஒரே பகுதியாகப் பார்த்தார். எல்லைகளற்ற ஸ்பானிய அமெரிக்கா என்னும் சே குவேராவின் கருத்துரு அவரது பிற்காலப் புரட்சி நடவடிக்கைகளில் தெளிவாக வெளிப்பட்டது.

பிற்காலத்தின் பின்னர் சே குவேரா தன்னை பிடல் காஸ்ட்ரோவின் போராட்ட இயக்கத்தில் இணைத்துக்கொண்டார். அவ்வியக்கம் 1959 இல் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றியது.

அதன் பின்னர் கியூபாவின் மத்திய வங்கியின் தலைவராக 14 ஆண்டுகள் பணியாற்றினார். அக்காலகட்டத்தில் கரந்தடிப் போர்முறை பற்றிய பல கட்டுரைகளையும், புத்தங்களையும் எழுதியிருந்தார். 1964 டிசம்பர் 11ம் தேதியன்று கியூபாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் அவையின் 19 வது பொது அமர்வில் உரையாற்றினார்.

பின்னர் பதவிகள் அனைத்தையும் துறந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதுவும் வேறு நாட்டு மக்களுக்காக போராடிய இவரது போராட்டம் அளப்பரிய ஒன்றாகும்.

பூமியின் நடுவினில் ஆழப்பதிந்த பெயர் பெற்ற சேகுவாரா தனது இறுதிக்கணங்கள் கூட ஒரு புரட்சி வீரனின் உன்னத தியாகத்தை உலகறியச் செயத்து.

எந்த மண்ணிலோ பிறந்து எந்த மண்ணிற்காகவோ போராடி எந்த மண்ணிலோ துணிச்சலாக மரணத்தை சந்தித்த சே குவேரா இந்த யுகத்தின் ஒப்பற்ற தலைசிறந்த விடுதலைப் போராளி. எக்காலமும் முகிழும் வீரத்தின் வித்தான சே குவேரா, எல்லா யுகங்களிலும் ஒளிரும் புரட்சிமுகமானார்.

உலகப் பந்தில் விடுதலைப் பேரொளியாக ஹோ சி மின், சே குவாரா, பிரபாகரன் என்றுமாக மிளிர்கின்றனர்.

சுதந்திர விடுதலை வேண்டிய மக்களின் வீர விருட்சங்களாக ஹோ சி மின் - சே குவாரா - பிரபாகரன் விளங்குகின்றனர். அவர்களின் வரலாறு அடுத்த தலைமுறைக்கும் உணர்த்தப்பட வேண்டும்.

-நவீனன்

**எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழவேண்டும். இந்த இலட்சியம் நிறைவேறவேண்டுமாயின் நாம் போராடியே ஆகவேண்டும்.**

– தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் –


e Wallet
Google Play
App Store
Reward Points
Gift Card
EVRP
EVERYDAY REWARD POINTS
JOIN, SHOP, & COLLECT EVR POINTS WHILE SHOPPING WITH OUR MERCHANTS & GIFT CARDS
MY EVERYDAY SHOPPING
REWARDING YOUR EVERYDAY
MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.
Merchant Benefits
Website Template: Modern design for improved user experience.
Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
Comprehensive Analytics: Access full reporting and tracking online.
Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
Financial Security: Build income for future sale or retirement.
One-time Registration Fee: $199 to unlock these benefits.
And more...
Member User Benefits
Point Accumulation: Earn 4% to 60% on purchases.
Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
Networking Opportunities: Build your own shopping network effortlessly.
Exclusive Privileges: Gain mining rights worth $60.
And more...
Register Now
10
20
40
80
160
320
WWW.MYEVERYDAYSHOPPING.COM




***பொழுது புலராத அந்த நேரத்தில்... இருள் அதிர்ந்தது! தங்கள் கிளைகளோடு கிளம்பிய அரக்கர்கள்; ஆயிரம்... ஆயிரம் கைகளில் ஆயுதங்களை உயர்த்தியபடி... தீப் பொறிகளை உமிழ்ந்து தள்ளியபடி; பேரிரைச்சல்களை எழுப்பி... ஆகாயத்துப்பிகளின் துணையோடு... தங்கள் அழிப்பு வேலையை ஆரம்பித்தனர்.***

***"வாறாங்கள்... வாறாங்கள்! தம்பி எழும்படா! தங்கச்சி எழும்படி! ஓடுவம்... ஓடுவம்! வாருங்கோ ஓடுவம்!"***

***இவை அன்றாடம் வந்து மீளும் அவலங்கள்தான் ஓசை கேட்டு ஓடுவதும்; நிசப்தம் நிலவ திரும்புவதும்... இந்த எல்லைப் புறவாசிகளான எங்களுக்கு வழக்கமாகிவிட்டது.***

அமைதித் தேவதை தன் சோலைத் தலைப்பால் முக்காடிட்டு; மூலையில் முடங்கிப் படுத்து வெகுகாலமாகி விட்டது. விரக்தி சுமந்து வாழும் வேதனை நெஞ்சங்கள்... நெடுமூச்சுக்களை இறைத்து அலுத்துவிட்டன. ஊரைவிட்டு வெளியேறி; எங்கோ தொலைந்தவர்களைவிட; எங்களைப் போன்றவர்கள் இன்னும் நிலத்திலே நின்றுபிடிக்கிறோம்.

"அவன்களை இஞ்சாலை கடைசிவரை வரவிடம்! பவளம் அக்கா! பயப்படாமல் இருங்கோ!" என்ற திலகனின் குரல்; அடிக்கடி என் செவிகளில் ஒலித்தது... நம்பிக்கை சுரப்பியை நெருடிவிடும் அந்தச் சின்னஞ் சிறிய போராளிக்கு இருக்கும் மனஉறுதி; வயது இருபதைத் தாண்டிவிட்ட தடிக்குமரியான எனக்கில்லையே...? என எம்மனம் ஏங்குவதுமுண்டு.

சூரியனின் வரவு கண்டு, அசுரர்கள் திரும்பிவிட்டார்கள். சுமந்து கொண்டு ஓடிய பொருள் பண்டங்களோடு; வீடு திரும்பும் படலத்தில் ஈடுபட்டோம். தங்கச்சி எப்போதும் போல் புத்தகக் கட்டோடு முன்னே போகிறாள்.

"கடவுளே! எப்பதான் இந்தக் கோதாரி அலைச்சல் தீரப் போகுதோ?"

என உரக்கக் கூறி உள்ளம் வெதும்பியபடி; அம்மா தனது வற்றலான உடலைச் சுமந்தபடி பின்னே வருகிறாள்.

வண்டில் மாடுகளை விரட்டிக் கொண்டு அப்பா முன்னே போக; "வண்டிலை பூட்டியாங்க எண்ட; விட்டிட்டு... என்னாலை நடக்கவும் ஏலுதில்லை" என்று, போலியோ வந்த தம்பி சிணுங்க; நான் அவனைத் தூக்கி நாரியில் ஏற்றியபடி நடக்கின்றேன்.

சமராடித் திரும்பிக் கொண்டிருந்த போராளிகள் எங்களை அனுதாபத்தோடு பார்க்கின்றார்கள். திலகனின் முகம் தெரிகின்றதா என்று தேடிய எனது கண்ணில் பெண் போராளிகளின் மிடுக்கு நடை உறுத்துகின்றது.

அரக்கார்கள் வந்து போன தடம் வழியெங்கும் ஆழப்பதிந்திருந்தது. ஆடுமாடுகள் கட்டோடு... கருகிக்கிடந்தன! வீடுகள் அழிந்து... இடிந்து... புகை எழும்பி; எரிந்து கொண்டு... சேதத்தை எடுத்துக் கூறமுடியாத வாயடைத்த துயரங்களோடு வந்து சேர்ந்தோம்.

மரணித்துக் கிடந்த மயான அமைதியை கிழித்துப் போட்டபடி; அகிலா செய்தி கொண்டோடி வந்தாள். "அக்கா! எங்கடை திலகன் வீரமரணமாம்"

என் இருதயம் அதிர்ந்தது! கை வேறு... கால் வேறாகக் கழன்று விழந்துவிட்டது போல் கதறினேன். மண்ணில் விழுந்து குழறினேன்... துடித்தேன்... இன்னும் என்னென்ன செய்தேனோ எனக்குத் தெரியாது.

"அக்கா... அக்கா! பவளம் அக்கா! திலகனின் குரல் ஊசி இழைகளாய் என் உயிர் நரம்புகளில் ஊடுருவியது. விடுதலை வேண்டி உந்தி எழுந்த அந்தச் சின்னஞ்சிறு சிட்டுக் கடுவன்... வெடிபட்டு வீழ்ந்தான்! என்னால் அந்தத் துயரத்தை மிண்டி விழுங்கி; ஜீரணிக்க முடியவில்லை. அவனின் உடல் காண வேண்டி ஓடினேன்.



சிறிய வெள்ளை நெற்றியின் கீழ்... அந்த அடர்ந்த புருவங்களின் கீழ் பறந்த அந்தக் கண்வண்டுகள்... இமைகளுக்குள் சிறைபட்டுக்கிடந்தன. றோசாநிறக் கன்னங்களின் மினுக்கத்தை மரணம் பறிக்கவில்லை. சிவந்த அதரங்கள் இன்னும் சிரித்தபடிதான் இருந்தன.

திலகனின் புகழ் உடலைப் பிரிந்துவர முடியாதவனாக... பேழையை மூடி அடைக்கும் வரை, உன்னத ஊர்வலம் முடியும்வரை, விதைகுழியில் அவன் உடல் விதைக்குமட்டும் என்னை இழந்தவனாக நான் நின்றிருந்தேன்.

என் நெஞ்சத்தை ஆற்ற எனக்கு நெடுநாள் தேவைப்பட்டது. அவ்வப்போது அவனின் முகம் தெரியும். அந்தக் கண் வண்டுகள் நிலை கொள்ளாது பறக்கும். முற்றத்து மாங்காயை எட்டிப்பிடுங்கி தானும் தின்று... எனக்கும் நீட்டும் அவனின் வேகம் தோன்றும். இடது கையை தூக்கி மணிக்கட்டை நோக்கி, பின் சயிக்கிலை உருட்டி... தொங்கி ஏறி, எட்டாத கால்களால் அங்கும் இங்கும் ஆடி அவன் உன்னி உழக்கிப் போய் மறையும் தோற்றம் தெரியும்.

இருளின் சுருதியை இல்லாதொழித்து இருந்தாற்போல் விண்ணெழுந்தது வெடிக்கும் தீயின் சுவாலைகள் இப்போதெல்லாம் என் இதயத்தை துணுக்குறச் செய்வதில்லை குண்டுகள்... துப்பாக்கி வேட்டுகள் இவற்றோடு; அசுரர்கள் எழுந்து வரும் அவல ஒலிகள் அவ்வளவாக என்னைப் பாதிப்பதில்லை.

மனம் சலிகாகது முகம் சுழிக்காது வேதனைகளை எதிர்கொள்ள என் மனம் முனைந்தது. அழிவுக்கு இடையே எழுந்து ஆக்கத்தை உருவாக்கும் ஊக்கம் வளர்ந்து வந்தது. சூழ்நிலை புரிந்தது! எதிர்காலத்தின் ஒளிக்கீற்று எனக்குள் தெரிந்தது.

விடுதலை வேண்டி வீராப்போடு பறக்கும் சிட்டுகளின் சிறகொலி... என்னை வா வா என்று அழைத்தன. பயத்தின் பழுவால் மெல்லக் கூனிப் போய்விட்ட எனது முதுகு... என்னையறியாமலே நிமிர்ந்து கொண்டது.

"அகிலா நான் இயக்கத்துக்குப் போகப் போறன்!" தங்கையைப் பார்த்து நான் கூறியது அவளுக்குச் சிரிப்பை மூட்டியது.

"பயந்த பீச்சாண்டி! நீ இயக்கத்துக்குப் போப்போறியோ?"

உரக்கக் கேட்டவளின் உதடுகளைப் பொத்திவிட்டேன்.

விடிவை நோக்கி நான் புறப்படும் பயணத்திற்கு... விடுக்கப்பட்ட அறிவிப்பாக அது அமைந்தது. பந்தபாசங்களால் மயங்கும் மனங்களின் மயக்கங்களைத் தாண்டி, துயில் நீங்கிய நம்பிக்கைச் சுடரை தூண்டிவிட்டபடி... உன்னத இலட்சியத்தைத் தேடி அன்றே வீட்டின் படலையைத் திறந்து வெளிப்பட்டேன்.

பயிற்சிகள் முடிந்து முழுமையான போராளி என நிமிர்ந்த நான் இநத மூன்றாண்டுக் காலத்தில் அனுபவரீதியாக அறிந்து கொண்டவை கல்விமூலம் கற்றுக்கொண்டவை எல்லாம் என்னை இன விடுதலைக்காக விரைவுபடுத்தின.

எமது எல்லைப்புறக் கிராமம் எதிரிகளின் கைக்குள் சிக்குண்டது கேட்டுவருந்தினேன். எங்கள் வீடு... அயல் அட்டம்... அம்மன் கோவிலடி, பாடசாலை... அது.... இது என்று என் நெஞ்சுகள் திரைப்படமொன்று ஓடித்தீர்ந்தது.

ஆழப்புதைந்துபோன உறவுப்பிணைப்புகள் உடைப்பெடுத்து சிறு கணங்களை விழுங்கிக் கொண்டன. ஒல்லியான தேகமுடைய அம்மாவும் ஒருகாலை இழுத்து இழுத:து நடக்கும் என் தம்பியும் நீண்ட நேரம் நினைவில் நின்றாடி மறைந்தார்கள்.

சிந்தும் ஒவ்வொரு வியர்வைத் துளியும், குருதித் துளியும் தாயகமண்ணுக்காக என்ற நினைவு, உந்தி எழும் உற்சாகப் பெருக்கை, ஒவ்வொரு புதிய நாளிலும் வாரிவழங்கியது என்றும் உறைந்துபோகாத உணர்வுக் கிளர்த்தல்களோடு எதிரியைக் களங்களில் கண்டு எங்கள் மண்ணை விடுவித்து வந்தோம்.





சூறைக்காற்றாய் சுழன்றடிக்க சூழ்ந்து வந்து எமது மண்ணையும் மக்களையும் விழுங்க... அசுரர்கள் போட்ட திட்டத்தை எதிர்கொள்ள; எழுந்த அணிகளுள் ஒருத்தியாகி நான் களத்திலே நின்றேன்.

மேகக்கூரைகளைக் கிழித்தெறிந்தபடி; விமானங்கள் வெளிக்கிளம்பிவந்தன... குண்டுகளைக் கொட்டின! இடியிடியாக அவை விழுந்தன. கடலேனப் பெருகி வந்த எதிரியைக் காப்பாற்ற வானத்தடுப்பு வலு மும்முரமாகியது.

ஊழிக்காற்றின் "ஹே" வென்ற உறுமலோடு கூரிய துணிவோடு... நேர் எதிர்கொண்டு நாங்கள் மோதினோம்! சுற்றி வந்த எதிரிப்படை சற்றுப் பின்னோக்கி நகர்ந்து... வீழ்ந்துபட்டு அச்சத்தொனி எழுப்பி... ஏக்கம் கௌவிக்கொள்ள, எங்கும் சிதறியது.

உதய சூரியன் முதர்வடைந்து உச்சியைத் தொட்ட வேளையிலும் அடிபாடு முடியவில்லை. என் கண்முன்னே நின்று அடிபட்ட தோழி; அலறுவது தெரிகிறது. நெஞ்சால் தவழ்ந்து சென்று; அவளை நிமிர்த்தியபோது...

புலன்கள் அதிர... மின்னாமல் முழங்காமல் இடியொன்று என்மடியிலே இறங்கியது. அது அகிலா. என் உடன் பிறப்பான அகிலோவேதான்.

வேகமாய்ப் பாய்ந்துவந்த பாசப்பெருக்கோடு... "அகிலா! அகிலா..." என அழைக்கிறேன். மெல்ல விழிகளை உயர்த்தி கூர்குறிப்பாய்பாரத்தவள், கணப்பொழுதில் என்னைக் கண்டு பிடித்துவிடுகிறாள்.

"அக்கா!" என்ற முனங்களோடு... அவளின் ஆவி பிரிகின்றது.

அகிலாவின் இரத்தம் தோய்ந்த துப்பாக்கியை எடுத்து என் தோளிலே ஏற்றிவிட்டு... தொடர்ந்து அரக்கரைத் துரத்துகின்றேன்.

# கனவு மலர் பூக்கும் கார்த்திகைத் திருநாள்

கனத்துக் கிடக்கும் காலக் கருமுகிலாய்
விழிசிந்தித் துடிக்கிறது காலம்.
கார்த்திகைப் பூவுக்குள்
எந்தப் பூவுக்குமில்லாத
திமிரும், நிமிர்வும்.
நெஞ்சத் தெரியும் நெருப்பின் குறியீடே
அன்று மட்டும் கரங்களில்
வந்தமர்ந்து ஒளிர்கிறது.
வானமாந்தர்கள் ஆச்சரியப் பூச்சொரிய
பூமி புத்திரர்கள் கண்விழித்துத்
துயிலெழும்பி
ஆற்றுப்படுத்த முடியாத
எம் துயரைத்
தேற்றுதற்காய் ஒருதரம்
புன்னகைப்பூ சொரிவார்கள்.
ஆறடிக்குழியின் ஆழத்து உணர்வலைகள்
ஓடி வந்தெம் உட்புகுந்து
ஆர்ப்பரிக்கும்.
இனித் தேடிக் காணமுடியாது
சிரிப்பை,
கரம்பற்றிக் காலாற நடந்து
கனவுகள் சுமந்த கதைகேட்க முடியாது.
கூடிச்சிரித்து மகிழ்ந்து — ஒருவாய்
சோறூட்ட முடியாது.
வாசல் வரும் நாளெண்ணி
அந்தரிப்போடு காத்திருக்க முடியாது
இனி எல்லாம் முடிந்ததென்று
புலம்பியிருந்த வாழ்விடை தான்
ஒன்றும் முடியவில்லையென்று
ஒவ்வொரு கார்த்திகையும்
உற்சாகம் தருகிறது.
நம்பிக்கையூற்றுப் பாய்ந்த நிலமாகக்
குளிர்ந்து போகின்றன — எம்
மனவெளிகள்.
இது அவர்களுக்கான
நாட்கள் மட்டுமல்ல.
எங்களுக்கான
முற்றிலும் எங்களுக்கான
பூவுலகில் எங்கு சுற்றியும்
இங்குதான் இறுதி உறக்கம்
கொள்ள விழைகின்ற
முழுத் தமிழ் மாந்தர்களினதும்
கனவுப் பொருநாள்.
எங்கு வாழினும் தமிழர்கள்
தமக்குரியதாய் அடையாளங்காட்டும்
தேசியத் திருநாள்.
கார்த்திகைக்காகவே
வருடங்கள் ஒவ்வொன்றும்
கண் விழிக்கட்டும்.
கார்த்திகையிற் கண்மலர்ந்து — எம்
கானல்களைச் சுனைகளாய்
மலரவைத்து வீரத்திருமகனின்
கனவுப் பூமி...
அவர் வழியில் சென்று
உயிர் சொரிந்த எங்கள்
உறவுப் பூக்களின்
இலட்சியத் திருநாடு...
எங்களுக்கென விடியும் காலம்
மிக விரைவில் மலரும்.

-கங்கை-

சுதந்திரப்பறவைகள்
(2002 ஐப்பசி - கார்த்திகை)

2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# எங்கள் தோழர்களின் புதைகுழியில்

எங்கள் தோழர்களின் புதைகுழியில்
மண்போட்டுச் செல்கின்றோம்
இவர்கள் சிந்திய குருதி -தமிழ்
ஈழம் மீட்பது உறுதி!

இளமைநாளின் கனவையெல்லாம்
எருவாய் மண்ணில் புதைத்தவர்கள்
போர்க்களம் படைத்து தமிழ்இனத்தின்
கருத்தில் நெருப்பை விதைத்தவர்கள்

வாழும்நாளில் எங்கள் தோழர்
வாழ்ந்த வாழ்வை நினைக்கின்றோம் - எம்
தோழர் நினைவில் மீண்டும் தோளில்
துப்பாக்கிகளை அணைக்கின்றோம்

தாவிப்பாயும் புலிகள்நாங்கள்
சாவைக்கண்டு பறப்போமா?
பூவாய்ப் பிஞ்சாய் உதிரும் புலிகள்
போனவழியை மறப்போமா?



## நெருப்பேந்திய மக்கள்

வாழ்வு மறுக்கப்பட்ட போது
மக்கள் நெருப்பைச் சுமந்தார்கள்.
தீ கக்கும் கண்களோடு
குழந்தைகள் பிறந்தனர்.

ஒடுங்கிப் போகின்ற மக்களின்
உணர்வு நெருப்பே!

வீரம் தொனிக்க
தீயை மூட்டி
இளையர்கள் வீர தாண்டவம்
ஆடினார்கள்.

கிராமத்தின் கடலோரக் காற்றாக
இருந்த மக்கள் நெருப்பு மனிதர்கள்
ஆகிவிட்டார்கள் – இந்த
நெருப்பை அணைக்க
கடல் தாண்டியும் வந்தார்கள்
மக்கள் நெருப்பாய்
நின்றெதிர்த்தார்கள்
ஒடுங்கிய மக்களின்
விடுதலைத் தீ
ஓமகுண்டத்து நெருப்பாய் ஓங்கியது.

வாழ்வுக்கான போர்த் தீ
அணைந்து விடுமாயின்
வாழ்க்கை?
அப்போது இன்னும் வேகமாய்
எங்கள் நிலத்தில் மூண்டது தீ.

தீ நிறைந்த தேச வயல்களில் திரியும்
நெருப்புப் பறவைகளின்
சிறக்கை நிழலில்
தீ அணையாது.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024: தமிழ்க்கட்சிகள் விளங்கிக்கொள்ள வேண்டிய எளிமையான பேருண்மைகள்!

16.11.2024

தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைவதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. கடந்த நாடாளுமன்றத்தில் 13 ஆசனங்கள். இந்த முறை ஒன்பது ஆசனங்கள். மருத்துவர் அர்ஜூனாவின் அரசியல் நிலைப்பாடுகள் ஸ்திரமானவை அல்ல. எனினும் அவரையும் இணைத்துக் கொண்டால் பத்து ஆசனங்கள். தமிழ்த் தேசியத் தரப்புக்குக் கிடைக்காத ஆச னங்கள் தமிழ்த் தேசிய பரப்புக்கு வெளியே போயிருக்கின்றன.



வடக்கில் மொத்தம் ஐந்து என்பிபி வேட்பாளர்களும் கிழக்கில் இரண்டு என் பி பி தமிழ் வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருக் கிறார்கள். கடந்த நாடாளுமன்றத்தில் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இருவரும் வடக்கிலிருந்தும், பிள்ளையான் கிழக்கில் இருந்தும் சென்றார்கள். மூன்று வேறு கட்சிகளைச் சேர்ந்த மூன்று தமிழ் பிரதிநிதிகள். இப்பொழுது ஒரே தென்னிலங்கைக் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர்.

என்பிபி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பி தமிழ் மக்கள் அதற்கு வாக்களிக்கவில்லை. பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறியதன் விளைவே அது.

தமிழ்ச் சமூகமானது ஒருவர் மற்றவரை நம்பாத; தன் பலத்தை தானே நம்பாத; ஒருவர் மற்றவரை சந்தேகத்தோடு பார்க்கின்ற; ஒருவருக்கு எதிராக மற்றவர் சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் புனைகின்ற; சமூகத்தில் மினுங்கிக் கொண்டு தெரியும் ஒருவரை சந்தேகத்தோடு வெறுப்போடு அணுகுகின்ற; வெறுப்பர்கள் அதிகம் நிறைந்த; கூட்டுணர்வு குறைந்த; தாய் நிலத்தை விட்டுப் புலம்பெயரும் வேட்கை மிகுந்த ஒரு சமூக மாக மாறி வருகின்றது.

அவ்வாறு தூர்ந்து கொண்டு போகும் ஒரு சமூகத்தைக் கட்டி யெழுப்ப வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசிய அரசியலுக்கு உண்டு. தன் பலம் உணர்ந்து ஒருவர் மற்றவரை நம்பிக்கை யோடு பார்க்கின்ற; உருகிப்பிணைந்த ஒரு திரட்சியாக தமிழ் மக்களைத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உண்டு.



ஆனால் தேசியவாத அரசியல் என்றால் மக்களைத் திரளாக் குவதுதான் என்ற எளிமையான பேருண்மையை விளங்கிக் கொள்ளாத அல்லது அதை விளங்கிக் கொள்ளத் தேவையான பண்பாட்டு இதயத்தைக் கொண்டிராத் தேசிய கூட்டுணர்வைக் கொண்டிராத, பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல் வியின் விளைவே, அதிகரித்த சுயேச்சைகளும் கட்சிகளும் ஆகும். இதனால் ஏற்பட்ட சலிப்பினாலும் விரக்தியினாலும் வெறுப்பினாலும் ஒரு பகுதி தமிழ் வாக்காளர்கள் என்பிபியை நோக்கிப் போனார்கள்.

நாடாளுமன்றத்தில் என்பிபி பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது திருப்பகரமான மாற்றங்களைச் செய் யப் போதுமான ஒரு பெரும்பான்மை. அப்படிப் பார்த்தால் என்பிபி இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் புரட்சிகரமான முடிவை எடுக்குமா? அல்லது மகாவம்ச மனோநிலையின் கைதியாக மாறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தானே தோற்கடிக்குமா? இலங்கைத் தீவியின் எந்த ஒரு தேர்தல் வெற்றியும் எப்பொழுது முழு வெற்றியாக மாறுகிறது என்றால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் போதுதான்.

என்பிபி கருதுவதுபோல இனப்பிரச்சினை,ஒரு மனிதாபிமானப் பிரச்சினையல்ல. அது இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ளாமையின் விளைவுதான். இச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள்,தேசிய இனங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களை இறமையும் சுய நிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு, இலங்கைத் தீவின் அரசுக் கட்டமைப்பை பல்லினத் தன்மை கொண்ட ஒன்றாகக் கட்டமைக்க வேண்டும்.

அவ்வாறான அடிப்படை மாற்றம் ஒன்றைச் செய்வதற்கு என்பிபி தயாரா? இப்போதிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதைச் செய்யப் போதுமானது.

அதே சமயம் இம்முறை தேர்தல் முடிவுகளில் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் நம்பிக்கையூட்டும் விடயங்கள் எவை என்று பார்த்தால், கிழக்கில் பிரதேச வாதத்தை முன்வைக்கும் பிள்ளை யான் தோற்று விட்டார். அது பெரிய வாக்கு வித்தியாசத்தில் கிடைத்த தோல்வியல்ல. சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் கிடைத்த தோல்விதான். சங்குக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த தோல்விபோல. எனினும் தேர்தல் கணக்கில் அது தோல்வி. கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்திருக் கின்றன. இது கிட்டத்தட்ட ஒன்றரை மாதத்துக்கு முன் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தாயக ஒருமைப்பாட்டிற்குக் கிடைத்த



வெற்றியின் அடுத்த கட்ட வளர்ச்சி. ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு வேட்பாளருக்கு வடக் கில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன. நாடாளுமன்ற தேர்தலில் கிழக்கு மைய பிரதேச வாதத்துக்கு தலைமை தாங்கும் அரசியல்வாதி தோல் வியுற்றிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, தாயக ஒருமைப்பாட்டை நிரூபித்தது. நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு தாயக ஒருமைப்பாட்டை நிரூபித்திருக்கிறது. வடக்கை யும் கிழக்கையும் பிரித்த ஜேவிபிக்கு வடக்கு கிழக்கில் 7 ஆசனங்கள் கிடைத்திருக்கும் ஒரு பின்னணியில் கிழக்கில் தாயக ஒருமைப்பாட்டுக்கான பலமான மக்கள் ஆணை கிடைத் திருக்கிறது.

மேலும் தமிழரசுக் கட்சி அதிகம் ஆசனங்களை பெற்ற ஒரு தனிக் கட்சியாக மேலெழுந்திருக்கிறது. கடந்த முறையைவிட இந்த முறை இரண்டு ஆசனங்கள் அதிகம். ஒரு கட்சியாக அந்த வெற்றியைக் கொண்டாடலாம். ஆனால் தேசத்தைத் திரட்டுவது என்பது கட்சியைப் பலப்படுத்துவது மட்டும் அல்ல. கடந்த நாடாளுமன்றத்தோடு ஒப்பிடுகையில் மொத்த தமிழ் தேசியப் பிரதிநிதித்துவத்தில் மூன்று ஆசனங்கள் இழக்கப்பட்டமை வீழ்ச்சி. என்பிபி யாழ்ப்பாணத்தில் அதிக ஆசனங்களை வென் றிருக்கிறது. கிழக்கிலும் அதற்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன. அவை தமிழ்த் தேசிய அரசியலின் தோல்விகள். இந்தத் தோல்விகளுக்கு ஊடாகப் பார்த்தால் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றியைக் கொண்டாட முடியாது. ஆனால் சுமந்திரன் கட்சி யின் வெற்றியைக் கொண்டாடுகிறார். கடந்த ஒரு தசாப்தத்துக் கும் மேலாகத் தமிழரசியலைத் தீர்மானிக்கும் சக்திபோல செயற்பட்ட சுமந்திரனும் இந்தத் தோல்விக்குப் பொறுப்பு. அதற் குரிய தண்டனையை வாக்காளர்கள் அவருக்குக் கொடுத்திருக் கிறார்கள். ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசிய அரசியலில் பின் னடைவை ஏற்படுத்திவிட்டு கட்சி பெற்ற சிறு வெற்றியை எப்படிக் கொண்டாட முடியும்? ஏனைய கட்சிகள் இல்லாமல் தனிக் கட்சியாக வெல்ல முடியும் என்று மார்தட்டுவதே தேசியவாத அரசியலுக்கு, தேசத் திரட்சிக்கு எதிரானது.

முன்னணி ஏற்கனவே இருந்த ஓர் ஆசனத்தை இழந்திருக் கிறது. சங்கிற்கு ஒரேயொரு ஆசனந்தான். மானும் மாம்பழமும் வெற்றி பெறவில்லை. சங்குச் சின்னதைப் பயன்படுத்துவதன் மூலம் பொது வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளை நாடாளு மன்றத் தேர்தலுக்கும் மடை மாற்றலாம் என்ற எதிர் பார்ப்பு வெற்றி பெறவில்லை. செல்வம் அடைக்கலநாதனுக்குக் கிடைத்த விருப்பு வாக்குகள் மொத்தம் 5695. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் இம்முறையும்




வெற்றி பெறவில்லை. தென்னிலங்கையில் இரண்டு தடவை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜேவிபிக்கு வடக்கில் 5 ஆசனங்கள். ஆனால் ஆயுதப் போராட்டத்தில் உறுப்புகளை இழந்தவர்களும் உட்பட முன்னாள் விடுதலைப் புலிகள் இயக் கத்தவர்கள் வெற்றி பெறவில்லை. சசிகலா எதிர்பார்த்த அனு தாப வாக்குகள் அவருக்குக் கிடைக்கவில்லை. தென்மராட் சியில், ரவிராஜ்ஜின் நினைவுகளை விடவும் அர்ஜூனாவின் கலகம் அதிக வாக்குகளை வென்றிருக்கின்றது.

அர்ஜூனாவுக்கு கிடைத்த வெற்றியை வைத்து சமூக வலைத் தளங்களில் யாழ்ப்பாணத்தவர்கள் பரிகசிக்கப்படுகிறார்கள். ஆனால் அந்த வெற்றியை சமூக வலைத்தளங்கள் மற்றும் யூடியுப்கள் உருவாக்கும் புதிய அரசியல் பண்பாட்டுக்கூடாகவே விளங்கிக்கொள்ள வேண்டும். யுடியூபர்களின் காலத்தில் தேசத் தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் பொருத்தமான உபா யங்களைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. அதைவிட முக்கிய மாக தமிழ்த் தேசிய அரசியலில் காணப்படும் தலைமைத்துவ வெற்றிடம்தான் அர்ஜூனாவைப் போன்றவர்களின் வெற்றிக ளுக்கு மூலகாரணம். அந்த வெற்றிடத்திற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளே பொறுப்பு.

முடிவாக, தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ் தேசியக் கட்சிகளும் தமிழ் மக்களும் கற்றுக் கொள்ள வேண்டிய அடிப்படை உண்மைகள் வருமாறு.

முதலாவது பேருண்மை. தேசியவாத அரசியல் எனப்படுவது மக்களை ஒரு பெரிய திரளாகக் கூட்டிக்கட்டுவது. தேசத்தைத் திரட்டத் தவறினால், தென்னிலங்கை மையக் கட்சிகள் வாக் குகளைக் கவர்ந்து சென்று விடும்.

இரண்டாவது பேருண்மை, சமஸ்ரியை தேர்தல் மூலம் அடைய முடியாது. தேர்தல்களின் மூலம் மட்டும் தேசத்தைத் திரட்ட முடியாது.

மூன்றாவது பேருண்மை, சமஸ்ரியை அடைவதாக இருந்தால் ஈழத் தமிழர்கள் நாட்டுக்கு வெளியே அணிகளையும் கூட்டுக் களையும் உருவாக்க வேண்டும். அந்த அணிகளின் மூலம் தீர்வுக்கான பிராந்திய மற்றும் அனைத்துலகச் சூழலைக் கனியச்செய்ய வேண்டும். அவ்வாறு உலகத்தைத் திரட்டுவது என்றால் அதற்கு முதல் இங்கு தாயகத்தில் தேசத்தைத் திரட்ட வேண்டும். தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட தரப்புகளை ஒரு பெருந்திரளாக்க வேண்டும். தேசத்தைத் திரட்டினால்தான் உலகத்தைத் திரட்டலாம். அவ்வாறு தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறினால் தென்னிலங்கையை மையக் கட்சிகள் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைப் படிப்படியாக அரித்துத் தின்று விடும்.

நன்றி: நிலாந்தன்

# தமிழரின் தாயக கோட்பாடும்: அநுர அலையில் வீழும் தமிழரும்!

– நவீனன்

19.11.2024

தமிழர் தாயகத்திலும், பாராளுமன்ற தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மை NPPக்கு கிடைத்த வெற்றியின் பின்னரும் அநுர அரசின் இனப்பிரச்சனை பற்றிய எதுவித கருத்துக்களும் தெளிவு பெறவில்லை என்பதே உண்மையாகும்.



தமிழர்களின் ஆகக் குறைந்த அரசியல் அபிலாசையான வடக்கு கிழக்கு இணைப்பைக் கூட அனுமதிக்க முடியாதென அதனை நீதிமன்றில் வழக்கிட்டு பிரித்தவர்களே இன்றைய ஆட்சியாளர்களான முன்னாள் ஜேவிபியினர்.

மாவீரர் நாள் நெருங்கும் வேளையில், இன்றைய ஆட்சியாளர்களை பற்றி தேசியத் தலைவரின் 2005 மாவீரர் நாள் உரையே அதற்கு சான்று பகரும்.

சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த ஜே.வி.பி, சுனாமி நிவாரண கட்டமைப்புக்கு கடுமையான ஆட்சேபம் தெரிவித்து அரசியலில் இருந்து விலகிக் கொண்டது. ஜே.வி.பி ஜாத்திக ஹெல உரிமைய போன்ற தீவிர இனவாத கட்சிகள் இந்த நிவாரண உடன்பாடு சிறீலங்கா அரசியல் அமைப்புக்கு விரோதமானதென உயர் நீதிமன்றத்தில் வழக்குகளையும் தாக்கல் செய்தனர்.

சிங்கள இனவாத சக்திகளுக்கு சார்பான முறையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சுனாமி கட்டமைப்பை முழுமையாக முடக்கி செயலிழக்கச் செய்து சுனாமி கட்டமைப்புக்கு சாவுமணி அடிக்கப்பட்டதுடன் தமிழ் மக்களுக்கு எஞ்சியிருந்த இறுதி நம்பிக்கையையும் சிங்கள பௌத்த பேரினவாதம் சாகடித்து விட்டது என தேசியத் தலைவரின் 2005 மாவீரர் நாள் உரை சான்றாக விளங்குகிறது.

அத்துடன் போர்க்காலங்களில் தமிழர்களுக்கு எதிரான இன வழிப்பு யுத்தத்திற்கு சிங்கள கிராமங்களில் முன்னின்று ஆட்சேர்ப்பு செய்தவர்களும் இவர்களேயாவர்.

தமிழர்களுக்கு 13ஆம் திருத்தச் சட்டம் தேவையில்லை என அறிவித்தது மாத்திரமின்றி, மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க மாட்டோம் என சிங்கள பிக்குகளுக்கு உறுதி வழங்கியவர்களும் இவர்களே.

## சர்வதேச போர்க் குற்ற விசாரணை ?

இறுதிப்போரின் சர்வதேச போர்க் குற்ற விசாரணையை ஏற்க முடியாதென கூறியதுடன், எந்த ஒரு இராணுவ வீரனையும் போர்க்குற்றவாளியாக விடமாட்டோம் என அறிவித்தனர்.

அதேவேளை உள்நாட்டு விசாரணை நடாத்தி இனப்படுகொலையில் சிறந்த பங்காற்றியவர்களுக்கு பதவி உயர்வுகளும் விருதுகளும் வழங்கி உள்ளார்கள்.

கடந்த செப்டம்பரில் ஜனாதிபதி தேர்தல் முடிந்து இதுவரையில் ஒரு அரசியல் கைதியை தானும் விடுதலை செய்யப்படவில்லை. தற்போது பாராளமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையும் பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்து இதுவரையில், யுத்தம் முடிந்து 15 வருடங்களான பின்பும் உயர் பாதுகாப்பு வலயங்கள் என அநாவசியமாக இராணுவம் வைத்திருக்கும் தமிழர்களின் காணிகளில் எதனையும் விடுவிக்காதவர்கள், பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பாக ஓரிரு காணிகளை மட்டுமே பிரச்சார நோக்கில் விடுவித்தனர்.

நிலையான அதிகாரப் பகிர்வு ஏற்பாடு மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறைக்கான ஒத்துழைப்புக்கான அரசியல் தீர்வு இல்லாத நிலையில், மோசமான இனவாதப் பதிவைக் கொண்ட கட்சியே தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ளது.

புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய தனது முதலாவது உரையில் தமிழ் மக்களின் பிரச்சனை குறித்து ஒரு வார்த்தையைக் கூட அவர் குறிப்பிடவில்லை.




அவரது நிலைப்பாடு இவ்வாறு தான் இருக்கும் என்று தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். அனுரவின் புதிய ஆட்சியில் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்கும் என்ற நப்பாசை பல தமிழர்களுக்கும் உண்டு. ஆயினும் சந்திரிக்கா அம்மையார் அவர்கள் இலங்கையின் ஜனாதிபதியாக அரியணை எறியபோதும் போதும் அவர் ஒரு பெண் தானே தமிழ் மக்களின் உணர்வுகளை அவர் தாயன்போடு புரிந்துகொள்ளவார் என்று அம்மையாருக்கு வாழ்த்துரை பாடிய வரலாறும் உண்டு.

பின்னர் முழுத் தமிழ் மக்கள் தூற்றும் அளவிற்கு அம்மணி செம்மணியில் கிரிஷாந்தி உள்ளிட்ட பலநூறு தமிழர்களை துடிக்கத், துடிக்க கொன்று புதைத்து, பல இலட்சம் தமிழர்களையும் இடம்பெயரச் செய்த கொடூர ஆட்சியை தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.

தற்போது அதிகாரத்திற்கு வந்துள்ள இலங்கையின் புதிய அரசும், அனுர அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் குறிப்பாக அவரின் கடந்த கால அணுகுமுறைகள் பற்றி தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

நியாயமான அபிலாஷைகளுக்கான நீண்டகாலப் போராட்டத்தில் தமிழர்கள் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். இதன் மூலமே தமிழரின் தாயக கோட்பாடு சிதையாமல் இருக்கும்.

இதேவேளை அநுர அரசின் செயற்பாடுகள் புலம்பெயர் தமிழ் மக்களை நோக்கி திசை திருப்பப்படுகிறது. தமிழ் இனம் சிங்கள தேசத்தால் மாபெரும் இனப்படுகொலையை சந்தித்து அதற்காக சர்வதேச ரீதியாக போராடிவரும் நிலையில் அதுபற்றி எந்தவித கரிசனையுமற்று சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி சிங்களவர்கள் மட்டும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்ந்தால் பொதுமென்று தமிழரை வைத்தே தம்மை பலப்படுத்திக்கொள்ள அநுர அரசும் முயற்சிக்கிறது.



இந்த நிகழ்ச்சி நிரல்களுக்குள் புலம்பெயர் தமிழர்கள் வீழ்ந்து விடக்கூடாது. தமிழரின் தாயக கோட்பாடு சிதையாமல் இருக்க, விடுதலை நோக்கிய நீண்டகாலப் போராட்டத்தில் தமிழர்கள் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும்.

நீண்டகாலமாக தாயக மக்களுக்காக குரல் கொடுத்துவரும் புலம்பெயர் தமிழ் மக்கள் நிதானமாக செயற்பட வேண்டும்.



# தமிழீழத்தில் விதையாய் விழுந்த வேங்கைகளின் சுவடுகளே எமது வீர வரலாறு...!

*கிட்டு பீரங்கிப்படையணியின் சிறப்புத் தளபதி*

## கேணல் குயிலன் (ராயு)



எமது இனம் பெரும் அடக்குமறைக்குள்ளான 1983 காலப் பகுதியில் கேணல் குயிலன் அவர்கள் தன்னை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். அர்ப்பணிப்பும் ஆழமான விடுதலை வேட்கையும் கொண்ட கேணல் குயிலன் அவர்கள் போராட்டம் பெரும் நெருக் கடிகளைச் சந்தித்த காலங்களில் எல்லாம் எமது தலைவருடன் உடனிருந்து தலைவரின் போரியல் நுட்பங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்தவர். இராணுவ நுட்பங்களுக்கு செயல்வடிவம் கொடுத் ஒரு முத்த தளபதி கேணல் குயிலன் 25.08.2002 அன்று சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

## பெல். கேணல் நவம் (டடி)



விடுதலைப் போராட்த்தின் முதன்நிலைத் தளபதிகளுள் ஒருவரான நவம், கை ஒன்றை இழந்திருந்த நிலையிலும் இந்தியப்படையினருக்கு எதிரான புகழ்பெற்ற மணலாற்றுச் சமரில் முக்கிய பங்கு வகித்தவர். முல்லை மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டிருந்த போது நெடுங்கேணி பாடசாலை இந்திய முகாம் மீதான பிரசித்தி பெற்ற தாக்குதலின்போது காயமடைந்து பின்பு வீரச்சாவடைந்தார். போரில் உறுப்புக்களை இழந்த போராளிகளின் தொழிரநுட்ப பயிற்சிக் கல்லூரிக்கு அவர் நினைவாக இவரது பெயரை தலைவர் சூட்டினார்.

## லெப். கேணல் ஜொனி



விடுதலைப் புலிகளின் முதன்நிலைத் தளபதிகளுள் ஒருவர் ஜொனி. பேச்சுவார்த்தைக்கென இந்தியாவிலிருந்து இவரை அழைத்து வந்த இந்தியப் படையால் முல்லைத்தீவு, தேவிபுரத்தில் வைத்து இந்திய நயவஞ்சகமான முறையில் சுடப்பட்டு வீரச்சாவு.

*முதற் பெண் தளபதி*

## மேஜர் சோதியா



1985களில் தன்னைப் தமிழீழ விடுதலைப் போராட்டப் பாதையில் இணைத் துக் கொண்ட அவர், 1990இல் நோயின் காரணமாக தன்னுயிரை இம் மண்ணுக்காய் அர்ப்பணிக்கும் வரை சண்டைக்களங்களிலும் நிர்வாக விடங்களிலும் தன்பணியைத் திறம்படச் செய்தவர்.

*தென் தமிழீழத்தின் முதல் கடற்கரும்புலி*

## கப்டன் ஜெயந்தன்



தென் தமிழீழம் முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சம்புக்குட்டி பத்ம நாதனே கடற்கரும்புலி ஜெயந்தன். கப்டன் ஜெயந்தனும் கப்டன் சிதப்பரமும் சேர்ந்து 1991 ஆம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி அபிதா என்றும் சிங்களக் கடற் காவற் கலத்தின்மேல் நடாத்திய கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவு. இவ் மாவீரன் கப்டன் ஜெயந்தன் பெயரிலேயே 1993 மே மாதம் 4ம் திகதி ஜெயந் தன் படையணி (மரபுச் படையணி) ஆரம்பிக்கப்பட்டது.

*தமிழீழ வான்படையின் சிறப்புத்தளபதி*

## கேணல் சங்கர்



தனது வாழ்வில் இரு தசாப்தங்களுக்கு மேலான பகுதியைத் தமிழீழ விடுதலைப் போராட் டத்திற்காக அர்ப்பணித்த மூத்த உறுப்பினராகிய கேணல் சங்கர் (வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்) அவர்கள், 26.09.2001 அன்று வன்னியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலின் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

*தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் சு. ப. தமிழ்ச்செல்வன்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1984 ஆம் ஆண்டு தன்னை இணைத்துக்கொண்ட இவர். 1987ஆம் ஆண்டு தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளராகவும், 1997 இல் யாழ். மாவட்ட சிறப்புத் தளபதியாகவும் செயல் பட்டதோடு, 1993 இல் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளராகவும், இறுதி வரை, ஓர் இலட்சியப் போராளியாக, அரசியல் பொறுப்பாளனாக, அனைத் துலதோடு உறவாடிய தமிழீழத்தின் இராஜதந்திரியாக, பேராற்றல் மிக்க பேச்சுவார்த்தையாளனாக தமிழுலகமே ஆழமாக நேசித்த ஒரு அரசியல் தலைவனாகத் திகழ்ந்தார். 02.11.2007 அன்று சிறீலங்கா வான்படையின் வான்குண்டுத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் லெப். கேணல் அன்புமணி, மேஜர் மிகுதன், மேஜர் கலையழகன், லெப். ஆட்சிவேல், லெப். மாவைக்குமரன் ஆகியோரும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

*மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர்*

## லெப். கேணல் கௌசல்யன்



மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரான கௌசல்யன் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானப் பணிகளை சிறப்பாக மேற்கொண்ட வேளை 07.02.2005 அன்று மட்டு, மாவட்ட இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான புனைனைப் பகுதியில் வைத்து சௌசல்யன் குழுவினர் பயணித்த வாகனத்தின் மீது சிறீலங்கா இராணுவத்தால் நடத்தப் பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

*சமர்க்கள நாயகன்*

## பிரிகேடியர் பால்ராஜ் (லீமா)



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1984ஆம் ஆண்டு தன்னை இணைத்துக் கொண்ட இவர் ஓர் அற்றல் மிக்க, ஆளுமை மிக்க இலட்சியப் போராளியாக தேசியத் தலைவர் அவர்களால் வளர்த் தெடுக்கப்பட்டவர். மணலாறு மாவட்ட கட்டளைத் தளபதியாகவும், சாள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவின் முதல் தள பதியாகவும், விடுதலைப் புலிகளின் இராணுவத் துணைத்தளப்தியாகவும் செயலாற்றியவர். மகத்தான, இமாலய இராணுவ வெற்றிகள் பலவற்றுக்கு நடுநாயகமாக நின்று வெற்றி ஈட்டியவர். மரபுப் படையணிகளையும் வழிபடுத்தி, நெறிப்படுத்திச் சமராடிய தலைசிறந்த போர்த்தளபதியாகவும், கடைசிவரை திகழ்ந்தவர். 20.05.2008 அன்று சுகவீனம் காரணமாக சாவடைந்தார்.

*சேத்தின் குதல்*

## கலாநிதி அன்டன் பாலசிங்கம்



கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக தமிழீழ போராட்ட வளர்ச்சிக்கு அரசியல் இராஜதந்திர நகர்வுக்கு தேசியத் தலைவர் அவர்களுடன் உறு துணையாக நின்றதோடு, ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதி யுரைஞராக, ஒரு தத்துவாசிரியராகவும் திகழ்ந்துள்ளார். ஈழத் தமிழன் பெருமை கொள்ளும் வகையில் அரசயில் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து தேச சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத் தியவர். 14.12.2006 அன்று சுகவீனம் காரணமாக இங்கிலாந்தில் சாவடைந்தார்.

*2ம் லெப். மாலதி படையணியின் சிறப்புத் தளபதி*

## பிரிகேடியர் விதுசா



குருக்கள் கந்தையா, ஞனாம்பிகை இணையருக்கு ஞானபூரணி என்ற இயற்பெயர் பூண்ட விதுசா மூத்த மகளாக 1969 செப்டம்பர் 29ம் நாள் கரவெட்டி, கப்புதூவில் பிறந்தார். 1986 ஆம் ஆண்டு மே மாதத்தில் விடுதலைப் புலி உறுப்பினராக இணைந்தார். சந்திரிக்கா அரசின் சமாதனத்திற்கான போர் தொடங்கிய போது தலைமைப் பொறுப்பேற்று மாலதி படையணியை வழி நடத்தினார். அவருடைய களப் பயணம் 1993ஆம் ஆண்டு தொடக்கம் வீரச்சாவடையும் 2009 ஏப்ரல் வரை ஒரு போதும் ஓய்ந்ததில்லை. யாழிலும் சரி வன்னியிலும் சரி எண்ணற்ற சமர்களில் பங்காற்றினார். எதிரிகளின் சூழ்ச்சியால் ஆனந்தபுர மண்ணில் வீரச்சாவடைந்தார்.

*மேஜர் சோதியா படையணியின் சிறப்புத் தளபதி*

## பிரிகேடியர் துர்க்கா



1971ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ம் திகதி கலைச்செல்வி பொன்னுத்துறை என்னும் பெயர் சூட்டி 4 பிள்ளைகளில் மூன்றாவதாகப் பிறந்த பெண் பிள்ளை தான் எங்கள் மண்ணின் புதல்வி பிரிகேடியர் துர்க்கா. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் சிறப்பு தாக்குதல் படையணிகளில் ஒன்றான மேஜர் சோதியா படையணியின் சிறப்பு தளபதி, பெண்புலிகளின் ஒரு படையணியை வழி நடத்திச் சென்ற ஒரு சிறந்த தலைவி. முழுவதுமாக, எந்த வித ஆண்களின் தலையீடும் இன்றி, பயிற்சி தொடக்கம், நிர்வாகம், தொழில்நுட்பம் மற்றும் கள முனை வரை பெண்களை மட்டுமே வழிநடத்திச் செய்து வெற்றி கண்ட பெருமை எங்கள் பிரிகேடியர் துர்க்கா. எதிரிகளின் சூழ்ச்சியால் ஆனந்தபுர மண்ணில் விதையாகினார்.

*வட போர் முனைக் கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் தீபன்



கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளையைப் பிறப்பிடமாக கொண்ட தீபனின் (வேளையுதபிள்ளை பகீரதகுமார்) இயக்கப்பெயர் சிவதீபன். 1984ஆம் ஆண்டு முற்பகுதியில் தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்ட பகீரத குமார், ஆயுதப் பயிற்சி பெற்று தீபனாக மாறினார், இவருடைய தொடர் பாடல் குறிப்புப் பெயர் “தாங்கோ பாப்பா” ஆகும். சமர்க்களங்களின் துணை நாயகன் இந்த தீபன் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதல், ஜெயசிக்குரு இராணுவ நடவடிக்கை, சத்ஜெய நட வடிக்கை, ஓயாத அலைகள் - 3, ஆகாய கடல் வெளிச் சமர், 2000 ஏப்ரல் 24ல் இடம்பெற்ற ஆனையிறவை மீளக்கைப்பற்றும் நோக் கிலான படையினரின் தீச்சுவாலை உட்பட பல இராணுவ நடவடிக்கைகளில் பங்குபற்றியவர். 25 ஆண்டு காலம் ஓயாது அடித்துக்கொண்டிருந்த இந்தப் புயல் 2009 ஏப்ரல் மாதம் 4ம் திகதி புதுக்குடியிருப்பு ஆனந்த புரத்திலேு எதிரிகளின் சூழ்ச்சியால் நிரந்தரமாக வீர காவியமானது.


மாவீரர் நாள்
MAAVEERAR NAAL
நவம்பர்
NOVEMBER
27
காந்தள்
சிறுத்தை
வாகை
செண்பகம்
எங்களுக்காய், தமிழீழ மண்ணுக்காய், தமிழ் தேசியத்துக்காய் தம் உயிர் ஈந்த மாவீரர்களின் வீர வணக்க நாள்
In remembrance Our Heroes
Who Sacrificed their very Life for us,
for Our Homeland and or our Tamil Nationalism
கொடிகாமம்
முழங்காவில்
தேவிபுரம்
வன்னிவிளாங்குளம்
கள்ளிக்காடு
எள்ளங்குளம்
விசுவமடு
முள்ளிவாய்க்கால்
ஆலங்குளம்
ஆட்காட்டிவெளி
கனகபுரம்
இரட்டைவாய்க்காலையும் வலைஞர் மட கிரவல் வீதி பகுதி
கண்டலடி
தரவை
மணலாறு டடி முகாம்
ஈச்சங்குளம்
முள்ளியவளை
அளம்பில்
உடுத்துறை
தாண்டியடி
பெரிய பண்டிவிரிச்சான்
மாவடி முன்மாரி
பெரியகுளம்
சம்பூர் ஆலங்குளம்
சாட்டி
மணலாறு ஜீவன் முகாம்
இரணப்பாலை
கோப்பாய்
கல்லடி
இறுதிப் போர்க்காலத்தில் முல்லையில் மாவீரர் துயிலுமில்லகள்:
தேவிபுரம் "ஆ" பகுதி குடியேற்ற திட்டம்
[சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை]
இரணப்பாலை பெருந்தோட்டம்
[சனவரி 20 பிற்பாடில் இருந்து பெப்ரவரி இறுதி வரை]
வலைஞர் மடம் தெற்கு களித்தரைப் பகுதி
[பெப்ரவரி இறுதியில் இருந்து மார்ச் முதலாவது கிழமை வரை]
வெள்ளா முள்ளிவாய்க்கால் கப்பல் வீதிக்கு அண்மையில் உள்ள பகுதி
[ஏப்ரல் 21– மே 12 வரை]
முள்ளிவாய்க்கால்
மே 13,14,15 அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றாற்போல விதைக்கப்பட்டது.
முல்லிவாய்க்கால்
மே 16,17,18
விதைக்கப்படவில்லை விடுபட்டன.
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Tamileelam
சங்கத்தமிழ்



# தமிழீழத்தில் விதையாய் விழுந்த வேங்கைகளின் சுவடுகளே எமது வீர வரலாறு...!

*பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் ஆதவன் (கடாபி)



யாழ் மாவட்டம் வடமராட்சிப் பகுதியில் கொற்றாவத்தை, வதிரியைப் பிறப்பிட மாகக் கொண்டவர். விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் 1985-86 காலப் பகுதியில் இணைந்து கொண்டு இந்தியாவில் பயிற்சி பெற்றவர். விமான எதிர்ப்பு ஏவுகணைகள் சுடும் பயிற்சிக்காக இந்திய இராணுவத்தால் தெரிவு செய்யப்பட்ட பத்து விடுதலைப்புலிகள் உறுப்பினர்களில் ஒருவர். கடாபி அண்ணையைப் பொறுத்தவரையில் தாக்குதல்களோடு சம்பந்தப்பட்ட தாக்குதலணிகளை மட்டுமன்றி பயிற்சிகள், விசாரணைகள், புலனாய்வு போன்ற நிர்வாக நீதியிலான அணிகளையும் நிர்வகிக்வேண்டிய பொறுப்பிலேதான் இருந்தார். இறுதிவரை உறுதியோடு போரிட்ட கடாபி அண்ணை ஆனந்தபுரக் களத்தில் படுகாயமடைந்தார். களத்தின் இறுக்கமான நிலையை உணர்ந்து, அக்களத்திலேயே சயனைற் உட்கொண்டு, இன்னுப் பல வீரர்களுடன் ஆனந்தபுரம் மண்ணில் வீர வரலாறாகிப் போனார்.

*கிட்டுப் பீரங்கிப்படையணி சிறப்புத் தளபதி*

## பிரிகேடியர் மணிவண்ணன்



தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொண்ட மணி வண்ணன். தொடக்க காலத்திலேயே கேணல் ராயு அவர்களுடன் இணைந்து தனது விடுதலைப் பணியை மேற்கொண்டிருந்தார். விடுதலைப்புலிகளின் போராட்டவலுவை அடுத்த கட்ட பரிணாமத்திற்குள் நகர்த்திய மோட்டார் பீரங்கிகளும் ஆட்லறி பீரங்கிகளும் தான், ஆட்லறி பீரங்கிப் படையணி தளபதி பிரிகேடியர் மணிவண்ணனின் போராட்டவாழ்க்கையாக இருந்தது. இந்த நிலையில்தான் சிங்களப் படையின் தாக்குதலில் ஆனந்தபுர மண்ணிலே பிரிகேடியர் மணிவண்ணன் அவர்களும்; தமிழீழ காற்றோடு காற்றாக கலந்துபோனார்.

*தமிழீழ நிதிப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் தமிழேந்தி



பிரிகேடியர் தமிழேந்தி (சபாரத்தினம் செல்லத்துரை), 15.02.1950 யாழ். மாவட்டத்தில் பிறந்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால கட்டத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக தன்னை முழுமை யாக அர்ப்பணித்து பணியாற்றியவர். தனது தனித்துவமான திறமையால் நிதித்துறையை திறம்பட செயலாற்றி தேசியத் தலைவரினாலும், போராளிக ளாலும் நன்மதிப்பு பெற்றிருந்தார். 10.03.2009 அன்று சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சவடைந்தார்.

*கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் சொர்ணம்



பிரிகேடியர் சொர்ணம், 26 வருடங்கள் அயராது உழைத்த வீரத்தளபதி, மானிப்பாயில் பிறந்த பொழுதும் திருமலை அரசடி வாழைத் தோட்டம் என்னும் ஊர்தான் இவரை சிறு பராயத்தில் இருந்து மாபெரும் வீரனாக வீரத்தை ஊட்டி வளர்த்த மண். தந்தை ஜோசப்புக்கும் தாய் திரேசம்மா (பரிபூரணம்) அவர்களுக்கும் மகனாக பிறந்தவன் தான் பிரிகேடியர் சொர்ணம். இவரது இயற் பெயர் அன்ரனிதாஸ். வெற்றிவாகை சூடிய சமர்க் களங்களே அதிகம்: ஆகாயக் கடல் வெளிச்சமர், மாங்குளம், தவளைப் பாய்ச்சல், மண்டைதீவு, மண்கிண்டி மலை, இதய பூமி, புலிப்பாய்ச்சல், ஓயாத அலைகள், பிரிகேடியர் எனப் பல வெற்றிச் சமர்களை எல்லாம் வழிநடத்திய சமர்க் களத் தளபதிகளில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தார். இம்ரான் பாண்டியன் படையணியின் முதல் தளபதியாகவும் செயற்பட்டவர். தேவிபுர ஊடறுப்பு தாக்குதலில் விழுப்புண் அடைந்து 15.05.2009ம் நாள் தன்னை மண்ணுக்கு விதையாக்குகினார்.

*கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் ஜெயம்



வன்னிக்கிராமங்களில் ஒன்றான பாவற்குளம் மண்தான் சுவேந்திரன் என்ற ஜெயம் ஆவார். புதிய போராளிகளை உருவாக்குதல் தொடக்கம் அந்தக்கால இறுக்கத்திற்கு ஏற்ப திட்டமிடல் பணிகளை விரிவுபடுத்தல் செயற்படுத்தல் என ஓய்வு மறந்து இயங்கிக் கொண்டிருந்த போராளி. ஆற்றலின் வடிவமாய் அமைதியின் உருவாய் கடந்து வந்த பாதைகளின் காலத்தை வென்ற போராளியாயிருந்த தளபதி தனது வாழ்க்கைத் துணைவியையும் போராளி யாகவே தேர்ந்தெடுத்தார். கடைசிக்கள முடிவினை உலகப் எப்படியே எல்லாம் எழுதியும் ஆய் வுகள் செய்தும் கொண்டிருக்க அந்த முள்ளிவாய்க்கால் கரைகளில் தங்கள் இருவரின் உயிரையும் விதைத்து வீழ்ந்து வீழாத கனவுகளோடும் கலந்து போனார்கள் பிரிகேடியர் ஜெயமண்ணையும் அவரது துணைவி நளாக்காவும்.

*பீரங்கிப் படையணித் தளபதி*

## பிரிகேடியர் பானு



யாழ்ப்பாணம், அரியாலையை பிறப்பிடமாகக் கொண்ட தளபதி பானுவின் இயற் பெயர் சிவநாதன் சோமசேகரன். இவர் யாழ் ஸ்ரான்லிக் கல்லூாயில் கல்வி பயின்றவர். 1983 காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் அணியில் தன்னை இணைத்துக் கொண்டவர். யாழ் மாவட்டத்தில், யாழ் பொலிஸ் நிலையத்தாக்குதல் உட்பட பல ஆரம்ப கால தாக்குதல் நடவடிக்கைகளில் பங்குபற்றியவர். வன்னி மாவட்டத்தில் ஓயாத அலைகள் என பல வெற்றிகரத் தாக்குதல்களில் பங்குபற்றிய பானு ஆனையிறவு மீட்பின் பின்னர் அதில் புலிக்கொடியை ஏற்றிவைத்தவர் இவரே. கருணாவின் துரோகத்தின் பின்னர் மட்டக்களப்பு தாக்குதல் நடவடிக்கையலும் பங்குபற்றியவர். பீரங்கிப் படையணித் தளபதியாகவும் பணியாற்றிவர். முள்ளிவாய்க்காலில் போராடி வீரச்சவடைந்தார்.

*கடற்புலிகளின் கட்டளைத் தளபதி*

## பிரிகேடியர் சூசை



பிரிகேடியர் சூசை அவர்களின் இயற்பெயர் தில்லையம்பலம் சிவநேசன் ஆகும். இவர் யாழ் மாவட்ட வடமராட்சி பொலிகண்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். இவா் 1979-80 காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். ஆரம்ப காலத்தில் பல தரை சார்ந்த தாக்குதல்களில் சிறப்பாகப் பங்குபற்றிய சூசை, 1991ல் விடுதலைப் புலிகளின் கடற் புலிகளின் அணி என்ற விரிவாக்கத்துடன் கடற் புலிகளின் சிறப்புத் தளபதியாக தலைவரினால் நியமிக்கப் பட்டார். சிறீலங்கா கடற் படையினர் மீது, கடலில் வைத்தும், கடற்கரையோரங்களில் உள்ள முகாம்கள் மீதும், காவல் அரண்கள் மீதும் பாரிய வெற்றிகரத் தாக்குதல்கள் சூசை தலைமையில் மேற்கொள்ளப்பட்டன. போர் காலத்தில் சிறீலங்கா இராணுவத்தின் டோரா படகுகள் உட்பட பாரிய யுத்தக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடற் புலிகளின் கட்டளைத் தளபதியாக விளங்கிய பிரிகேடியர் சூசை, இறுதி யுத்ததில் களத்தில் போராடியபடி இறுதி நேரத்திலும் மக்களுக்கு குரல் கொடுத்தபடியே வீரச்சாவடைந்தார்.

*படைத்துறை வரைபடத் தளபதி*

## பிரிகேடியர் சசிகுமார்



பிரிகேடியர் சசிகுமார் அவர்கள் இராணுவ படைத்துறை வரைபடத் தளபதி ஆவார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் சிங்களப் படைமுகாம் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னரும், எதிரிகளின் படைப்பலம், படைக் கட் டமைப்புக்கள் போன்றவற்றினைத் தெரிந்து தகவல் கொடுக்கவும், எதிரியின் அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணித்து பின் போராளிகளின் நட வடிக்கை சமர்களுக் கான தகவல்களை வழங்குவதற்கும் வேவுப்பிரிவு தேசியத்தலைவரால் உருவாக்கப்பட்டது. அதற்காக அல்லும் பகலும் தன் உழைப்பாலும் போராளிகளின் ஈகத்திற்க்கு உயிர்கொடுத்து வரைபடைமும் உயிரோட்டம் கொடுத்தவர்களில் பிரிகேடியர் சசிக்குமார் மாஸ்ரரின் பங்கும் அளப் பெரியது என்றால் மிகையாகாது. 2009ஆம் ஆண்டு மே 15ம் நாள் ஆயிரம் ஆயிரம் மாவீரா்க ளுடன் இணைந்துகொண்டார்.

*வான் புலிகள் தொழில் நுட்பத் தளபதி*

## கேணல் சாள்ஸ் அன்ரனி



கேணல் சாள்ஸ் அன்ரனி தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் மூத்த மகனாவார். தலைவரின் ஆரம்பகால நம்பிக்கைக்குரிய போராளியாகவிருந்து வீரச்சாவடைந்த முத்த தளபதி லெப். சாள்ஸ் அன்ரனியின் பெயரையே தனது மூத்த மகனுக்குச் சூட்டியிருந்தார். கேணல் சாள்ஸ் அன்ரனி வான் புலிகள் தொழில் நுட்பத் தளபதியாக செயற்பட்டு வந்தார். இறுதியாக யுத்தம் நடை பெற்ற காலத்தில் பல களமுனைகளில் புலிகளின் படையணிகளை வழிநடத்தி தாக்குதல்களைத் தொடுத்தார். பலர் வெளியில் செல்வதற்கு வற்புறுத்திய போதும் இறுதி வரை களத்தில் நின்று போராடி வீரச் சாவடைந்து தமிழீழ மண்ணில் விதையானார்.

*அரசியல் துறைப் பொறுப்பாளர்*

## பிரிகேடியர் நடசேன்



பிரிகேடியர் நடேசன், இவரின் இயற்பெயர் பாலசிங்கம் மகேந்திரன். இவர் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். விடுதலைப் புலிகளின் அலுவலகம் இந்தியா, தமிழ்நாட்டில் இருந்த ஆரம்ப காலத்தில் தலைமை அலுவலகப் பொறுப்பாளராகவும் பின்பு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாள ராகவும் செயற்பட்டார். 2007ஆம் ஆண்டு அரசியில் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அவர்கள் வீரச்சாவடைந்ததன் பின்னர் இவர் அரசியல் பொறுப்பாளராக தலைவரினால் நியமிக் கப்பட் டிருந்தார். முள்ளிவாய்க்கால் யுத்தத்தில் சா்வதேச யுத்த நியதிகளின்படி சர்வதேச மத்தியஸ் தர்களின் வேண்டுதலின் பேரில் நிராயுதபாணியாக தனது அரசியல் குழுவினருடன் வெள்ளைக் கொடியுடன் சென்றவேளை சிறீலங்கா படையினரால் சுடப்பட்டு தமிழீழ மண்ணில் விதையானார்.

*சமாதானச் செயலகப் பணிப்பாளர்*

## பிரிகேடியர் புலித்தேவன்



புலித்தேவனின் இயற்பெயர் சீவரத்தினம் பிரபாகரன் ஆகும். இவர் புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அரசியல் பொறுப் பாளர் தமிழ்ச்செல்வன் அவர்ளுடன் பல்வேறு அரசியல் பணிகளை முன் னெடுத்தவர். பல பேச்சு வார்த்தைகளிலும் பங்குபற்றிய புலித்தேவன் சமா தான செயலகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். முள்ளிவாய்க்கால் யுத்தததில் சா்வதேச யுத்த நியதிகளின்படி சர்வதேச மத்தியஸ்தர்களின் வேண்டுதலின் பேரில், நிராயுதபாணியாக வெள்ளைக் கொடியுடன் சென்றவேளை சிறீலங்கா படையினரால் சுடப்பட்டு தமிழீழ மண்ணில் விதையானார்.



# தமிழீழ
# தேசியக் கொடி பாடல்

ஏறுது பார் கொடி ஏறுது பார்
ஏறுது பார் கொடி ஏறுது பார் – இங்கு
ஏறுது பார் கொடி ஏறுது – தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்த கொடி – எட்டுத்
திக்கிலும் மானத்தைச் சேர்த்த கொடி
காலத்தை வென்றுமே நின்ற கொடி – புலி
காட்டிய பாதையில் சென்ற கொடி (ஏறுது பார்)

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது – தமிழ்
மக்களைக் காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது – புலி
வீரத்தின் கொடியிது – மா
வீரரின் கொடியிது (ஏறுது பார்)

எத்தனை எத்தனை வேங்கைகள் இரத்தத்தில்
ஏறிய கொடியிது – பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினிலே
சாற்றிய கொடியிது – தமிழ்
ஈழத்தின் கொடியிது – புலி
ஏந்திய கொடியிது (ஏறுது பார்)

சாதிகள் சண்டைகள் சாய்த்து விழுத்திய
சாதனைக் கொடியிது – சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனையாவிலும்
உலவிய கொடியிது – சம
தர்மத்தின் கொடியிது – எங்கள்
தாயவள் கொடியிது (ஏறுது பார்)

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது – பிர
பாகரன் என்றிடும் காவிய நாயகன்
போற்றிடும் கொடியிது – தமிழ்
தேசத்தின் கொடியிது – எங்கள்
தேசியக் கொடியிது (ஏறுது பார்)

## தமிழீழத் தேசியச் சின்னங்கள்

கார்த்திகை பூ



செண்பகம்



கொடிச் சின்னம்



சிறுத்தை



வாகை



தமிழீழ வரைபடம்




(ஈழத் தமிழரின் மரபு வழித் தாயகம்)
தமிழீழம்
தமிழீழத் தலைநகர் - திருகோணமலை
தமிழீழ மாவட்டங்கள்
01. யாழ்ப்பாணம்
02. கிளிநொச்சி
03. முல்லைத்தீவு
04. வவுனியா
05. மன்னார்
06. திருகோணமலை
07. மட்டக்களப்பு
08. அம்பாறை
தமிழீழ நிர்வாக வலயங்களும் நகரங்களும்
01. நல்லூர் - நல்லூர்
02. வரணி - கொடிகாமம்
03. கரைச்சி - கிளிநொச்சி
04. பூநகரி - பூநகரி
05. முல்லைத்தீவு - தண்ணீரூற்று
06. மாங்குளம் - மாங்குளம்
07. மாந்தை - உயிலங்குளம்
08. மடு - மடுறோட்
09. வவுனியா - ஓமந்தை
10. குச்சவெளி - திரியாய்
11. திருகோணமலை - திருகோணமலை
12. மூதூர் - கிளிவெட்டி
13. வாகரை - மாங்கேணி
14. வெல்லாவெளி - பேராறு
15. மட்டக்களப்பு - கரடியனாறு
16. அக்கரைப்பற்று - பாலமுனை
17. பொத்துவில் - பொத்துவில்
18. அறுவாக்காடு - பொம்பரிப்பு
19. புத்தளம் - புத்தளம்
20. சிலாபம் - சிலாபம்
தமிழீழத் தேசியச் சின்னங்கள்
வட மண்டலம்
வன்னி மண்டலம்
மேல்மண்டலம்
நடு மண்டலம்
முத்து மண்டலம்
கிழக்கு மண்டலம்
தென் மண்டலம்
சிங்களநாடு
TAMIL EELAM
வெளியீட்டுப் பிரிவு
அனைத்துலகத் தொடர்பகம்

# மாவீரர் நாள் பதாதைகளும் பிற வெளியீடுகளும்

*“நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்,*
*நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்,*
*மாண்ட வீரர் கனவு பலிக்கும்,*
*மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்.”*

- தமிழீழ எழுச்சிப்பாடல் வரிகள். மாவீரர் நாள் போஸ்ரர்கள் பலவற்றில் இவ்வரிகளைக் காணலாம் -

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

ஒரு விற்பனைபொருள், நடக்க விருக்கும் நிகழ்ச்சி அல்லது வரவிருக்கும் முக்கிய நாள்; பற்றிய செய்தியைப் பொது மக்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கும் அச்சு ஊடகம் என்று போஸ்ரர் (POSTER) வரையறை செய்யப்படுகிறது. இவ்வாங்கிலச் சொல்லிற்கு பொது இடங்களில் வைக்கப்பட்டுள்ள விளம்பரங்கள், சுவரொட்டிகள் என்று தமிழில் விளக்கம் தரப்படுகிறது. போஸ்ரர், விளம்பரம் என்ற நிலையைக் கடந்து தனியொரு கலைப்பிரிவாக இன்று இயங்குகிறது. பரந்துபட்ட ஓவியக் கலையின் ஒரு பகுதியாகவும் போஸ்ரர் கலை கணிப்பிடப்படுகிறது. பொதுவாகச் சுவரொட்டிகள் உயிரற்றவையாகவும், தற்காலிக மானவையாகவும் இடம்பெறுகின்றன. போஸ்ரர்கள் மூச்சும் வீச்சும் கொண்ட கலை வடிவமாகத் திகழ்கின்றன.

போஸ்ரர் என்ற சொல்லிற்கு அர்த்தமுள்ள தமிழ்ச்சொல் உருவாகும் வரை நாம் போஸ்ரர் என்று கூறுவோம். போஸ்ரர் பற்றிய ஆரம்ப வரலாறு கிடைக்கவில்லை, நிட்சயம் அது அச்சுக் கலையுடன் தொடர்புடையது என்பதை மாத்திரம் கூறிவைக்கிறோம். ஆகக் குறைந்தளவு சொற்களைப் பயன்படுத்தியவாறு படத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது போஸ்ரரின் இயல்பு. பார்வையாளர் மீது கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் போஸ்ரர் படம் தீட்டப்பட வேண்டும். படத்திலும் கூடிய கவன ஈர்ப்பைப் போஸ்ரரில் பொறிக்கப்பட்ட சொற்கள் பெறுமாயின் அது போஸ்ரரின் இலக்கை மழுங்கடித்துவிடும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்தில் மேற்கு நாடுகளில் தொழிற்புரட்சி ஆரம்பித்தபோது தொழிற்சாலை ஆக்கங்களைச் சந்தைப்படுத் துவதற்காக நவீன போஸ்ரர் கலை உருவாகியது. பலவர்ணலிதோகிராபி அச்சுக்கலையின் தோற்றம் போஸ்ரர்களின் தரத்தையும் கவர்ச்சியையும் தூக்கி நிறுத்தின. பிரான்சு நாட்டு ஓவியர் ஹென்றி தி தூலொஸ் லோத்றெக் (HENRE DE TOULOUSE - LAUTREC 1864-1901) தீட்டிய போஸ்ரர்கள் கலை உலகில் நிலையான இடம்பிடித்துள்ளன. ஜேன் அவ்றில் என்ற பிரெஞ்சுப் பாடகியை அவர் போஸ்ரர் ஓவியமாகத் தீட்டி தனக்கும் அந்தப் பெண்ணுக்கும் அழியாப்புகழ் தேடியுள்ளார்.

முதலாம் உலகப்போர் காலத்தில் படைக்கு ஆட்சேர்க்கும் போஸ்ரர்கள் மேற்குநாடுகளில் வெளியிடப்பட்டன. அரும்பொருள் காட்சியகங்களில் அவற்றில் சிலவற்றை இன்றும் பார்வையிடலாம். 1917ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவம் வெளியிட்ட போஸ்ரர் பற்றி இன்றும் பேசப்படுகிறது. இதில் மூன்று வண்ணங்கள் - கறுப்பு, சிவப்பு, வெள்ளை என்பன மாத்திரம் உள்ளன. போஸ்ரரைப் படிப்பவர்களை நோக்கி அமெரிக்க அரசை உருவகப்படுத்தும் “சாம் மாமாவின்” (UNCLE SAM) உருவம் சுட்டுவிரலைக் காட்டியபடி “அமெரிக்க இராணுவத்திற்கு (நான்) உன்னை வா என்கிறேன்” என்கிறது. இந்தச் செய்தி பெரிய கொட்டை எழுத்துக்களிலும், அண்மையிலுள்ள ஆட்சேர்ப்பு மையம் என்ற சொற்கள் சிறய எழுத்துக்களிலும் அதில் காணப்படுகின்றன. ஒரு உருவமும் பத்து ஆங்கிலச் சொற்களும் கொண்ட இப்போஸ்ரர் போஸ்ரர் ஓவியர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

பொதுவுடமை நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சி நிலவும் நாடுகளிலும் மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் பிரசாரப் போஸ்ரர்கள் நிரந்தரமாக வைக்கப்படுகின்றன. முன்னாள் சோவியத் ஒன்றியம், செஞ்சீனா ஆகியவற்றில் இந்த வழமை இருப்பது கண்கூடு. எளிதாகப் பார்க்கக்கூடிய உயரத்தில் இப்போஸ்ரர்கள் பொருத்தப்படுவதால் அவற்றைப் பார்க்காமல் செல்வது கடினமாக இருக்கும். இதை ஒரு வகை மூளைச்சலவை என்றும் சொல்லலாம். “உலகத் தொழிலாளர்களே ஒன்றிணையுங்கள், கொமியூனிசத் தலைமையைப் போற்றுங்கள்”, “தேசிய நலனுக்காகச்சேமியுங்கள்”, “ஒன்றுபட்டால் உண்ட வாழ்வு” போன்ற செய்திகள் இப்போஸ்ரர்களில் பொதுவாகக் காணப்படுகின்றன. மக்கள் சமுதாயத்தை ஒன்றிணைக்கும் வலு புகைப்படத்திற்கும் போஸ்ரர்களுக்கும் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த நோக்கில் போஸ்ரர்கள் “சமுதாயச் சித்திரம்” (SOCIAL ARTS) என்று அழைக்கப்படுகின்றன.

ஆசியாவில் எவ்வாறு விளம்பரம் செய்கிறார்கள் என்ற ஆய்வு நூலில் ஆசியாவின் 90 நாடுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. (HOW ASIA ADVERTIES BY JIM AITCHISON) இந்த நாடுகள் செய்யும் விளம்பரங்களின் தரம், கைக்கொள்ளும் வழிமுறைகள், சர்வதேச பாணிகளுடன் ஒப்பீடு போன்றவை இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. “சிறீலங்கா வில் செய்யப்படும் வர்த்தக விளம்பரங்களில் ஒன்று மாத்திரம் உலக தரத்திற்கு இருக்கிறது. சிறீலங்கா இராணுவத்தின் ஆட் சேர்ப்பு மற்றும் சிறப்புச் செய்தி பற்றிய பிரசார விளம்பரங்கள் தான் அந்த ஒன்றாகும்” இராணுவம் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகச் செய்யும் பிரசாரத்திற்கு வலுவூட்டும் விதத்தில் அது மக்கள் பார்வைக்கும் பொது இடங்களில் வைக்கும் பிரசாரப் போஸ்ரர்கள் இடம்பெறுகின்றன. சிறீலங்காவில் உள்நாட்டுப்போர் நடந்த காலத்தில் சிங்கள இராணுவத்திற்காக ஒரு விளம்பர நிறுவனத்தால் நடத்தப்பட்ட பல தரப்பட்ட பிரசாரம் இராணுவத்தின் விம்பத்தை உயர்த்தியதாக மேற் கூறிய நூல் கருத்துத் தெரிவிக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் கிரமந்தவறாது முக்கிய நாட்களில் வெளியிடும் போஸ்ரர்கள் அனைத்துலக மட்டத்தில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளன. எதிர்வரும் நிகழ்ச்சியை பொது மக்களுக்கு இப்போஸ்ரர்கள் நினைவுறுத்துகின்றன என்பது உண்மையே.




1986ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் முதன்முதலாக வெளியிடப்பட்ட போஸ்ரர்

ஆனால் மிகப் பெரியதொரு இன்னு மோர் விளக்கம் இது பற்றிக் கூறப்படுகிறது. விடுதலைப்புலிகள் நடாத்தும் மக்கள் மயப் படுத்தப்பட்ட போரில் மக்கள் யாவரையும் உள்வாங்கும் நோக்கத்துடனும் இதற்கான கருத்தூட்டலுக்குமாகவே இவை வெளியிடப்படுகின்றன. விடுதலைப் புலிகள் தலைமையில் தமிழீழ மக்கள் நடாத்தும் விடுதலைப்போரின் முக்கிய குறியீடாக இப்போஸ்ரர்கள் கணிப்பிடப்படுகின்றன. மேலும் மக்களிடையே கலை உணர்வை ஏற்படுத்தும் நோக்கையும் அவை கொண்டுள்ளன. போர்ச் சூழலிலும் எம்மத்தியில் கலை வளரமுடியும் என்பதற்குச் சாட்சியமாக அவை அமைகின்றன. மக்கள் உணர்வுகளைச் சரிவரப்புரிந்துகொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் வெளியிடும் போஸ்ரர்கள் ஊடாக உணர்வுக்கு உருவமும் கலை வடிவமும் கொடுத்துள்ளனர்.

தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதிய தொரு மரபைப் புலிகள் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத்தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப்படைப்புகளும் இந்த நியதிக்கு உட்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத் தமிழினத்தின் பொதுத் தேவைக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICULAR PERIOD IN HISTORY என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத்தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின்றன. அவற்றை யார் தீட்டினார்கள் அல்லது வடிவமைத்தார்கள் என்று பார்க்க வேண்டியதில்லை. எந்த இன மக்கள் வெளியிட்டார்கள், எப்போது, எதற்காக என்பதுதான் முக்கியம்.

> *போஸ்ரர் ஒரு வாய்பேசாத தொடர்பு சாதனம்* (NON ORAL COMMUNICATION TOOL). *அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தைப் பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.*

இன்று போஸ்ரர் ஒரு தனித்துவமான கலை வடிவமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. போஸ்ரர் கலையின் சாரம் யாதெனில் அதை பார்ப்பவர்களுக்கு உடனடிப் புரிதல் ஏற்படுகின்றது. தமது தேவைகளுக்காகப் புலிகள் அதைத் தெரிவு செய்ததற்கு இது முக்கிய காரணமாக இருக்கலாம். புலிகளுடைய போஸ்ரர்கள் தத்ரூப ஓவியம் (REALISTIC ART) அல்ல. எதற் காக அது அச்சிடப்படுகிறதோ அந்த இலக்கை எட்டுவதற்காகவே அது வரையப்படுகிறது. போஸ்ரர் ஒரு வாய் பேசாத தொடர்பு சாதனம் (NON ORAL COMMUNICATION TOOL). அதே சமயத்தில் போஸ்ரர் ஒரு சர்வதேசிய மொழி. முக்கிய நிகழ்ச்சியின் சாரத்தை பிழிந்து குறைந்தளவு சொற்களையும் கூடுதலான குறியீட்டுப் படங்களையும் இணைத்துப் புலிகளுடைய போஸ்ரர்கள் உருவாக்கப்படுகின்றன. நவீன ஓவியம்போல் போஸ்ரர்களில் மர்மமோ, புதிரோ இல்லை. பார்ப்பவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த அல்லது சுலபமாக ஊகிக்கக்கூடிய படிமத்தை அல்லது நிகழ்ச்சியை புலிகளின் வெளியீடுகள் கொண்டிருக்கின்றன.

வருடா வருடம் கிரமம் தவறாது பின் வரும் தேசிய நிகழ்ச்சிகளைப் புலிகள் சிறப் பிக்கிறார் கள்:

1. கேணல் கிட்டு நினைவு நாள் - சனவரி 16
2. அனைத்துலகப் பெண்கள் நாள் - மார்ச்சு 05
3. அன்னை பூபதி நினைவு நாள் - ஏப்பிரல் 19
4. தமிழீழ மாணவர் நாள் - சூன் 06
5. கரும்புலிகள் நாள் - சூலை 05
6. தியாகி திலீபன் நினைவு நாள் - செப்தெம்பர் 26
7. பன்னிரு வேங்கைகள் நினைவு நாள் - ஒக்டோபர் 05
8. மாலதி, தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் - ஒக்தோபர் 10
9. மாவீரர் நாள் - நவம்பர் 27

இவற்றுள் மாவீரர் நாள் கூடுதல் முக்கியத்தும் வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அதற்கு இரு காரணங்கள் உண்டு. அன்று மாவீரர்களின் துயிலும் இல்லம் சென்று சுடர் ஏற்றும் நாள். அடுத்தது தேசியத் தலைவர் அவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் மாவீரர் நாள் உரை அன்று வெளியாகிறது. மிகக் கூடுதலான போஸ்ரர்கள் வெளியிடப்பட்ட தேசிய தினமாக நவம்பர் 27 இடம் பெறுகிறது. மாவீரர்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட முதலாவது பொதுவான போஸ்ரர் 1986 சூலை 25ஆம் நாள் வெளிவந்தது. பெரியதொரு கடதாசியின் மேற்புறத்தில் நீலவண்ணமும் அதன்மேல் சிவப்பு எழுத்துக்களில் “தமிழீழ விடிவிற்காக இன்று வரை தம்மை அர்ப்பணித்துக்கொண்ட எமது இயக்கத்தின் தியாகச்சுடர்கள் முன்னூற்றி இருபத்தியேழு” என்ற வாசகம் காணப்படுகிறது. இதே போஸ்ரரில் நடு நாயகமாகப் பெரியளவில் தோளில்




327 மாவீரர்களின் நினைவாக 1986 யூலை, 25இல் பொதுவாக வெளியிடப்பட்டது

ஒரு சிறுவனையும் சிறுமியையும் அழைத்துச் செல்லும் காட்சி கறுப்பு மையால் தீட்டப்பட்டுள்ளது. போஸ்ரரின் அடிப்பகுதியில் பெரிய எழுத்துக்களில் "இது அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதியல்ல உறுதியின் உறைவிடம் இது" என்ற உணர்ச்சி பொங்கும் வாசகம் 327 என்ற பெரிய வெள்ளை வண்ண எண்ணின் மேல் பொறிக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களின் எண்ணிக்கையை புலிகள் ஒருபோதும் குறைத்தோ கூட்டியோ வெளியிட்டதில்லை. அவர்கள் செய்த தியாகத்தை உரிய முறையில் புலிகள் கௌவித்து வருகின் றனர். இது சம்பந்தமாக திகதியிடப்படாத போஸ்ரர் ஒன்றை வெள்ளைக் கடதாசியில் நீல எழுத்துக்களில் தேசியத் தலை வரின் படம் மற்றும் வாசகத்துடன் புலிகள் வெளியிட்டுள்ளனர். தேசியத் தலைவரின் வாசகம், "இந்த மண்ணின் மைந்தர் களைப் பெற்ற பெற்றோர்களே! உங்களது குழந்தைகள் சாக வில்லை, சரித்திர மாகிவிட்டார்கள" என்கிறது. நவம்பர் 27 மாவீரர் நாளாகக்கொள்ளப்படுவதற்கு எமது விடுதலைப்போரில் களப்பலியான முதலாவது மாவீரன் லெப். சங்கர் காரணமாவர். இவர் வீரச்சாவடைந்த தினம் 1982 நவம்பர் 27. இவருடைய படம் தாங்கிய முழு அளவு போஸ்ரரை, வெளியீட்டுத் திகதி இடா மல் புலிகள் பிரசுரித்துள்ளனர். அதில் பின்வரும் வாசகம், "முற் றுகையில் முன் நின்றாய், முதற்சாவு நீ கண்டாய். லெப்டினன்ட் சத்தியநாதன் (சங்கர்/சுரேஸ்) தோற்றம் 19.06.1961, வீர மரணம் 27.11.1982" என பொறிக்கப்பட்டுள்ளது.

தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தும் மாவீ ரர் நாள் போஸ்ரர் 1990இல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இலங்கைத்தீவின் வரைபடம் பொறிக்கப்பட்டுள்ளது. அதை ஆண் பெண் போரா ளிகள் கடப்பாரை, சுத்தி போன்ற ஆயுதம் கொண்டு இரு கூறாக்கு கிறார்கள். இக்கறுப்பு வெள்ளைப் படத்தின்கீழ் கவிதை வடிவில் இவ்வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன:

**செந்தமிழ்த் திசைகள் யாவும் சிவக்கும்,**
**இந்து மாகடலில் இன்னொரு நாடு பிறக்கும்.**

அதே வருடம் நவம்பரில் இன்னுமோர் அதிமுக்கியத்துவம் வாய்ந்த போஸ்ரர் வெளிவந்தது. இதில் வரிச்சீருடை தரித்த ஆண் பெண் போராளிகள் முன்னேறிச் செல்கிறார்கள். அவர் களுக்குப் பின்புறத்தில் எரிந்து கொண்டிருக்கும் சிதை ஒன்று காணப்படுகிறது. முன்னேறும் போராளிகளின் வலது புறத்தில் கல்லறைகள் தெரிகின்றன. வித்துடல்களை எரியூட்டும் மரபை விடுத்து கல்லறைகளைத் துயிலும் இல்லங்களில் எழுப்பும் பழந் தமிழர் மரபைக்கைக்கொள்ளும் மாற்றத்தை இது காட்டி நிற்கிறது .




மாவீரர் நாள் போஸ்ரர்களில் மிகப் பழையதும் முன்னோடியு மானதாக 1989 நவம்பர் வெளியீடு கருதப்படுகிறது. இப்போஸ் ரரில் கறுப்பு வண்ணம் ஆதிக்கம் செலுத்துகிறது. போஸ்ரரின் வலது மேற்புறத்தில் மஞ்சள் வண்ணத்தில் விடுதலைப் புலிகளின் உத்தி யோகபூர்வ இலட்சினை பொறிக்கப்பட் டுள்ளது. இடதுபக்க கீழ்ப்புறத்தில் பச்சைவண்ண இலைக ளுடன் கூடிய பெரிய சிவப்புநிற றோஜாப்பூ படம் பொறிக்கப்பட் டுள்ளது. போஸ்ரரின் வலது பக்கத்தில் மேலிருந்து கீழாகப் பின்வரும் கவிதை வரிகள் தரப் பட்டுள்ளன:

**"களம் கண்ட தோழர்களே!**
**உலக வரலாற்று நியதியின்**
**ஒப்பற்ற சுதந்திரச் சிற்பிகளே!**
**எமது மக்களின் விடிவிற்காக**
**பயத்தை வென்றீர்கள், சுயத்தைக் பயத்தை**
**வென்றீர்கள்,**
**சுயத்தைக் கொன்றீர்கள்,**
**தர்மம் நீதி சொல்லும்**
**சரித்திரம் உங்கள் இலட்சியத்தைச்**
**சாகவிடாது,**
**உங்கள் உன்னதப் பாதையில் எமது**
**வீரப்பயணம் தொடர்கிறது,**
**பிறக்கப்போகும் புதிய நாட்டிற்கு,**
**புலிகளின் கல்லறைகள்**
**அத்திவாரமாகத் திகழும்'**

மாவீரர்களின் கல்லறையை மையப்படுத்தும் முதலாவது போஸ்ரர் நவம்பர் 1991இல் வெளி வந்தது. இதில் ஒரு இளம் பெண், ஒரு மூதாட்டி, ஒரு சிறுவன் கல்லறைக்கு அஞ்சலி செலுத்தும் படம் வரையப்பட்டுள்ளது. கல்லறையில் சாற்றப் பட்டுள்ள துவக்கை சிறுவன் எட்டித்தொடுகிறான். கல்லறையில், "எம் மண்ணின் விடிவுக்காகப் போராடிய மாவீரர்கள் இங்கே விதைக்கப்பட்டுள்ளனர். எமது தாயகத்தின் பிறப்புக்காக வேங் கைகளின் இறப்புக்கள் தொடருகின்றன. புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற வரிகளுடன் இக்கட்டுரையின் தலைப் பில் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்று தொடங்கும் கவிதையும் பொறிக்கப்பட்டுள்ளன. இதே வருடம் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மக்கள் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, மாவீரனின் வித்துடலை புலி வீரர்கள் சுமந்து செல்லும் ஓவியம், குத்தியதுவக்கு தொப்பி இராணுவ மரியாதைச் சின்னம் ஆகியவற்றுடன் ஒரு சிறந்த போஸ்ரரை வெளியிட்டுள்ளது. மேலும் அதே வருட மாவீரர் நாளுக்கெனத் தேசியத் தலைவர் அவர்கள் தெரிவித்த விசேட செய்தியும் பிறிதோர் போஸ்ரராக வெளியிடப்பட்டுள்ளது.




தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுத் தலைவன் லெப்டினன்ட் செ. சத்தியநாதன் (சங்கர், சுரேஷ்) வீரச்சாவடைந்த ஈராண்டு நிறைவுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துவதைச் சித்தரிக்கும் சுவரொட்டி.

தொங்கும் ஆயுதத்துடன் ஒரு புலிவீரன் ஒவ்வொரு கையில்

**"இழப்புக்களும் அழிவுகளும்**
**எமது ஆன்ம உறுதிக்கு**
**உரமாக அமைந்துவிட்டால்,**
**உலகத்தில் எந்த சக்தியாலும்**
**எம்மை அடக்கிவிட முடியாது."**

இப்போஸ்ரரையும் மக்கள் உறவுக்கொள்கை முன்னெடுப்புப் பிரிவு, தமிழீழ விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ளனர்.

1992ஆம் ஆண்டு மாவீரர் நாளைச் சிறப்பிக்கும் விதமாக ஐந்திற்கும் மேற்பட்ட போஸ்ரர்கள் வெளியிடப்பட்டன. முதலாவதில் தமிழீழ வரைபடமும், நிறுத்தியவாளும், உயர்த்திய முஷ்டியும் படமாக வரையப் பட்டுள்ளன. ஆதன்கீழ்:

**"அங்கம் முழுவதும் துடிக்கும் – புலி**
**ஆக்கினிக் குழியிலும் குதிக்கும்**
**சிந்தும் குருதி தெறிக்கும் – அதில்**
**செந்தமிழீழம் பிறக்கும்"**

என்ற கவிதை வரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டாவதில் கல்லறைகளுக்கு நடுவே வானளாவிய குன்றுபோல் கையில் ஆயுதத்தோடு ஆண் பெண் இருபாலாரும் உயர்ந்து நிற்கிறார்கள். உச்சியில் ஒரு மரக்கன்று தழைக்கின்றது அதன்கீழ்:

**" வாழையடி வாழை என**
**மாவீரர் வழிவந்தோம்**
**விழவிழ எழுந்து – நம்**
**தமிழீழ மண் மீட்போம்"**

என்ற பாடல் வரிகள் காணப்படுகின்றன. மூன்றாவது போஸ்ரர் மட்டக்களப்பில் வெளியிடப்படுகிறது. இதில் "தமிழீழ தேசிய வீரர் நாள், தமிழீழ எழுச்சி நாள், தமிழீழ விடுதலையின் வீரமிகு திரு நாள், தாய் மண்ணின் விடுதலைக்காய் வீரகாவியமான மாவீரர்களே உங்கள் வரலாறு என்றும் நிலையானது" என்ற நீண்ட வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டின் நான்காவது போஸ்ரர் மிகவும் புதமையானது. பூகோள உருண்டையில் இருந்து தமிழீழம் பிறக்குமாப்போல் சித்திரம் இதில் வரையப்பட்டுள்ளது. ஒரு ஆண் ஒரு பெண் போராளிகள் உயர்த்திய சுடு கலன்களுடன் நிற்கிறார்கள். சிவப்பு வர்ணத்தில் "செந்தமிழீழத் திசைகள் யாவும் சிவக்கும், இந்து மாகடலில் இன்னொரு நாடு பிறக்கும்" என்ற வரிகள் போஸ்ரரின் மேற் பகுதியிலும், "உலகமே எங்கள் உணர்வைப் புரிந்து கொள்" என்ற சொற்கள் அதன் கீழ்ப் புறத்திலும் தீட்டப்பட்டுள்ளன. ஐந்தாவது மிகவும் எளிமையாக வெள்ளை சிவப்பு வண்ணங்களில் உருவாக்கப்பட்டுள்ளது. உயரத்தில் தெரியும் நட்சத்திரங்களை நோக்கி மனிதப் பாதச் சுவடுகள் செல்கின்றன. நடுவே நீலவண்ணத்தில் ஆயுதமேந்திய கரம். அதன் கீழ் மீண்டு மொரு பாதச்சுவடு, அதில் மூன்று புலி வீரர்கள் நடந்து செல்கிறார்கள். "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் போஸ்ரரின் அடிப்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள் ளது.

கடந்த தொண்ணூறுகளில் தமிழீழத் தேசியக் கொடியின் வண்ணங்களான மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நாநிறங்களை முக்கிய கவனமெடுத்து மாவீரர் நாள் போஸ்ரர்களில் பயன்படுத்தும் வழமை தோன்றியது. மஞ்சள் எமது விடுதலைப்போரின் நியாயப்பாட்டையும், சிவப்பு எமது சமுதாயத்தில் செய்யப்படவேண்டிய புரட்சிகர மாற்றங்களையும், கறுப்பு விடுதலை இலட்சியத்தில் எமது உறுதிப்பாட்டையும், வெள்ளை எமது அமைப்பு, எமது போராட்டம் ஆகியவற்றின் தூய்மையையும் காட்டுகின்றன.

முதலாவது போஸ்ரரில் கல்லறைகள் வரையப்பட்டுள்ளன. சில கல்லறைகள் திறந்தபடி விடப்பட்டு அதில் சீருடைதரித்த மாவீரர் உறங்கும் மெய்சிலிர்க்கும் காட்சி சித்திரமாக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் தீபங்கள் எரிகின்றன. போஸ்ரரின் அடிப்பகுதியில் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்று தொடங்கும் பாடல் வரிகள் அச்சிடப்பட்டுள்ளன. இரண்டாவது போஸ்ரரில் நான்கு கல்லறைகள், ஏழு தீபங்கள், சீருடை தரியாத ஒரு ஆண் ஒரு பெண் இளவயதினர், உயர்த்திப் பிடித்த தீப்பந்தங்கள் என்பன கூட்டாக வரையப்பட்டுள்ளன. இப்போஸ்ரரில் பின்வரும் பாடல்வரிகள் பதிவாகியுள்ளன:

**"அதிர்வோடு மணியோசை நள்ளிரவு கேட்கும்,**
**தீச்சுடர்கள் உயர்ந்து உங்கள்**
**இலட்சியத்தைக் காட்டும்,**
**கனவோடு சென்றவரே உங்கள் வழி**
**தொடர – புதுக்**
**கால்கள் வந்தெங்கள் அணியுடன்**
**சேரும்."**

மார்க் தோபி (MARK TOBEY) என்ற கலை விமர்சகர் கூறுவது போல் ஒரு ஓவியத்தின் உட்பொருள் காலம், இடம், வரலாறு என்பனவோடு பிணைந்துள்ளது. அது மனித குலத்தின் உள்ளார்ந்த நம்பிக்கைகளோடு தொடர்புபட்டது. புலிகளுடைய மாவீரர் நாள் போஸ்ரர்கள் இவ்வுண்மைகளை உணர்த்துகின்றன. அவை எமது இனத்தின் வரலாறாகவும், சமூகச் சித்திரமாகவும் இடம் பெறுகின்றன. எளிமையும் அத்தியாவசியங்களுக்குள் சுரக்கப்பட்ட சிக்கனமும் கொண்டவையாக அசாதாரண கலையுணர்வோடு அவைமிளர்கின்றன. அவற்றின் கற்பனைகளும் உருவங்களும், குறியீடுகளும் எமது விடுதலைப் போரில் இருந்தே பெறப்பட்டன. அவற்றைப் போரியல் ஆவணமாகக் கருதுவதில் தவறில்லை.

**தமது இத்தகைய வெளியீடுகள் மூலம் தமிழீழத்தில் புதியதொரு மரபை புலிகள் உருவாக்கியுள்ளனர். ஒவ்வொரு மரபும் ஒரு காலகட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பொதுத் தேவைக்காகவே உருவாக்கப்படுகின்றது. கலைப்படைப்புக்களும் இந்த நியதிக்கு உட்படுகின்றன. சுருங்கக் கூறுவதாயின் ஈழத்தமிழினத்தின் பொதுத் தேவைக்காகப் புலிகள் அவற்றை உருவாக்கியுள்ளனர். இதை THE COLLECTIVE EXPRESSION OF A PEOPLE DURING A PARTICU-LAR PERIOD IN HISTORY என்று ஆய்வாளர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் ஒரு மக்கள் இனத்தின் வெளிப்பாடாக அவை இடம்பெறுகின்றன.**

ஒரே செய்தியைச்சொல்லும் மூன்று போஸ்ரர்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை 1994இல் வெளியிட்டுள்ளது. முதலாவது போஸ்ரரின் வலது மேற்பகுதியில் ஒலிக்கும் மணியின் படமும், இடது மூலையில் தமிழீழ வரைபடமும், நடுப்பகுதியில் ஒரு தொகுதி தீபங்களும், தீபச்சுவாலையில் மாவீரர் முகங்களும் காணக் கூடியதாக இருக்கிறது. இதில் பின்வரும் பாடல் பொறிக்கப்பட் டுள்ளது:

**"விடியும் வரையும் விடியும்**
**வரையும் தொடரும்**
**எங்கள் பயணம்**
**சுடரில் தெரியும் முகங்கள்**
**நினைவில் இரவில்**
**மணிகள் அசையும்"**

இரண்டாவது போஸ்ரரில் மலர்தூவிய ஒற்றைக் கல்லறையும், முன்னேறிச் செல்லும் பள்ளிச்சிறுவர்களும், தமிழீழ வரைபடமும் தீட்டப்பட்டுள்ளன. பின்வரும் வரிகள் சிவப்பு எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. "ஒளிகள் சுடரும் வழியில் இனியும் பயணம் தொடரும், விடியும் பொழுதில் இளைஞர் உலகம் சரிதம் எழுதும் எழுதும்." மூன்றாவது மிகப்பிரமாண்டமான போஸ்ரராக இடம்பெறுகிறது. திறந்த கல்லறையில் சீருடையுடன் உறங்கும் புலி வீரர் படமும், குத்தியதுவக்கும் அதன் மேல் தொப்பியும், கரம் உயர்த்திய உருவங்களும், தீபங்களும் இதில் காணப்படுகின்றன. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்று தொடங்கும் பாடல் அதில் பிரசுரமாகியுள்ளது.

1995ஆம் ஆண்டிற்குப்பின் தமிழீழ வரலாறு புதிய திருப்பம் காண்கிறது. இடப்பெயர்வும் போர் அனர்த்தங்களும் எம்மை வாட்டுகின்றன. என்றாலும் நாம் உறுதி தளரவில்லை. இதை 1996ஆம் ஆண்டின் மாவீரர் நாள் போஸ்ரர் எடுத்துக் காட்டுகிறது. மஞ்சள் வட்டத்திற்குள் வானுயர்ந்து நிற்கும் எமது தேசியக் கொடியின் படம் இதில் கண்ணைக் கவருகிறது. போஸ்ரரின் நடுப்பகுதியில் கல்லறைகளும், எழும்பி நிற்கும் மனிதக்கரங்களும், எரியும் தீபங்களும் காட்சி தருகின்றன. கீழ்ப்பகுதியில் புலி இலட்சினை பொறிக்கப்பட்டுள்ளது. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் இதில் மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 1996 தொடக்கம் எமது தேசியப் பத்திரிகையான ஈழநாம் மாவீரா் நாளைச் சிறப்பிக்கும் விதத்தில் பத்திரிகை இணைப்புக்களாக சிறிய போஸ்ரர்களை வெளியிடுகின்றன.

1998 இல் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் இரு வெளியீடுகள் தோன்றின. பிரகாசமான பல வண்ணங்களின் கலவையில் தீட்டப்பட்ட ஒரு வித்தியாசமான போஸ்ரரை மட்டு - அம்பாறை அரசில்துறை வெளியிட்டது. இதில் தடித்த நீலம், பச்சை, கறுப்பு, மஞ்சள் வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலே பறக்கும் புலிக்கொடி, தமிழீழ வரைபடம், நடுவே கல்லறைகள், குத்திய துவக்கின்மேல் தொப்பி, கீழே "மாவீரர்களின் இரத்தத்தால் எமது வரலாறு எழுதப்படுகின்றது" என்ற பெரிய சிவப்பு எழுத்துக்களும் காணப்படுகின்றன. இரண்டாவது 1998 ஆண்டுப் போஸ்ரரின் நடுவே பச்சை நிறத்தில் ஒரு மாபெரும் விருட்சமும் அதில் தமிழீழ வரை படமும் இடம்பெறுகின்றன. கறுப்பு வெள்ளை வண்ணத்தில் மாவீரர் கல்லறைகளும், தீபங்களும், கல்லறைகள் மீது சிவப்பு மலர்களும் போஸ்ரரின் நடுப்பகுதியில் தீட்டப்பட்டுள்ளன. புலி இலச்சினையுடன் பின்வரும் வரிகள் கீழே காணப்படுகின்றன:

**"வேராக விழுதாக விடுதலைப் போர்**
**தாங்கும் – மாவீரர்**
**உம் கனவுகள் விரைவில்**
**நிறைவேறும்"**

தமிழீழ விடுதலைப்புலிகள் 1999 ஆம் ஆண்டின் மாவீரர் நாளுக்காக வெளியிட்ட போஸ்ரர் நாம் விமானப்படைப் பலத்தை பெறும் கட்டத்தை நெருங்கும் செய்தியைக் கூறுகிறது. நீல வானத்தில் பறக்கும் விமானத்தில் இருந்து இரு புலிப் போராளிகள், ஒரு பெண் ஒரு ஆண், மாவீரர் கல்லறைகள் மீது பூச்சொரியும் காட்சி இதில் வரையப்பட்டுள்ளது. கல்லறைக்கு இரு பக்கமும் ஆயுதம் தரித்த இரு போராளிகள், ஒரு ஆண், ஒலு பெண் காவல் நிற்கின்றனா். கல்லறைகள் தமிழீழ வரைபடத்தின் மீது எழுப்பப்பட்டுள்ளது. தீபங்கள் பிரகாசமாக எரிகின்றன. "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடல் வரிகள் இதில் அச்சிடப் பட்டுள்ளன.

**"நெய் விளக்கு ஏற்றி**
**நினைவுக்குப் பூச்சொரிந்து**
**கைகூப்பித் தொழுது**
**கல்லறையில் தாழ் பணிவோம்"**

என்று கூறி நிறைவு செய்கிறோம். வளப்பற்றாக்குறையாலும் போஸ்ரர்கள் வரையப்பட்ட கடதாசியின் தரக்குறைவாலும் எமது வெளியீடுகள் பல சிதையும் தறுவாயில் இருக்கின்றன. எமது வரலாற்றுச் சான்றுகளை இவற்றை நுண்படப் பிரதிகளாக்கிப் பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பு.

-விடுதலைப்புலிகள் - கார்த்திகை 2004




# மாவீரர் நாள் 2024

## ரொரான்ரோ

The Interantional Centre
6900 Airport Road
Mississauga

27.11.2024 புதன் கிழமை

1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்பு: மாலை 6:00 மணி

Mirage Banquet & Convention Centre
1917 Albion Rd,
Etobicoke ON M9W 5S8
(HWY 27 & Albion Rd)

27.11.2024 புதன் கிழமை

நிகழ்பு: மாலை 6:00 மணி

## மொன்றியல்

Le Château Royal
3500 Bd du Souvenir, Laval, QC H7V 1X2
27.11.2024 புதன் கிழமை
மாலை 5:30 மணி

## ஒட்டாவா

Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON, K2G1W2
27.11.2024 புதன் கிழமை
மாலை 5:30 மணி

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**